


303
303 4.65
SCRUTINY OFFICER
30 OCT 1965
INFORMATION AND PUBLICITY DEPAR
MADRAS ... OFFICE
TB 031(9) N65 89963

# செந்தமிழ் மாலை

## ஒன்பதாம் வகுப்பு

[1965 ஆம் ஆண்டு வெளிவந்துள்ள
புதிய பாடத்திட்டப்படி தொகுக்கப்பெற்றது]

சென்னை, பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி
தலைமைத் தமிழாசிரியர்
வித்துவான் அம்பை இரா. சங்கரன் அவர்களும்
சென்னை, சர். எம். சிடி. முத்தையாச் செட்டியார் உயர்நிலைப்பள்ளி
தலைமைத் தமிழாசிரியர்
வித்துவான் பி. சொ. சண்முகம் பிள்ளை அவர்களும்
தொகுத்தது

MADRAS RECORD OFFICE
MADRAS

H. O. Phone: 4206

வி. சூ. சுவாமிநாதன்
பிரசுரகர்த்தர்
14, மேலக்கோபுரத் தெரு, மதுரை–1
3/2 பிராட்வே, சென்னை–1 | 128, வி. எச். ரோடு, கோயமுத்தூர்–1

பதிப்புரிமை] [விலை ரூ. 2–00

முதற் பதிப்பு—அக்டோபர், 1965

TB
031(9)
N65

[Paper used : 3·2 k.g. D/Demy White Printing]

89963
சென்னை-600 008.

Kabeer Printing Works, Madras (294)

# முன்னுரை

1965இல் சென்னை அரசின் கல்வித் துறையினரால் வெளியிடப்பெற்ற திருத்தமமைந்த செகண்டரி கல்வித் தமிழ்ப் பாடத் திட்டத்திற்கு இணங்க இந்நூல் ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கெனத் தொகுக்கப்பட்டுள்ளது.

பாடத் திட்டத்தில் குறிப்பிட்டவாறே செய்யுட் பகுதியை வாழ்த்து, அறவுரை, தொடர்நிலைச் செய்யுள், பல்சுவை என்ற தலைப்புகளில் அமைத்துக் கொடுத்துள்ளோம். அறவுரைப் பகுதியில் திருக்குறளில் அரசியலாரால் தேர்ந்தெடுக்கப்பெற்ற 80 குறள்களிலும் பொறுக்கு மணிகளாக 50 குறள்கள் இங்கு இடம் பெற்றுள்ளன. பாடத் திட்டத்தில் கொடுக்கப் பெற்ற நூல்களிலிருந்தும், பிற நூல்களிலிருந்தும் மாணவர்கள் விரும்பிக் கற்கக் கூடிய சுவை மிக்க செய்யுட்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்துள்ளோம். செய்யுள் அடிக் கணக்கும் திட்டத்தில் கண்டவாறு கொடுக்கப்பெற்றுள்ளது. மாணவர்கள் மனப்பாடம் செய்வதற்கு ஏற்ற செய்யுட்களை (*) உடுக்குறியில் காட்டியுள்ளோம்.

உரைநடைப் பகுதியில் நூற்றுக்கு ஐம்பது விழுக்காடு இலக்கியத் தொடர்பான கட்டுரைகளும், எஞ்சியவை பிற கட்டுரைகளுமாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. பல் துறைகளிலும் சிறந்த பெருமக்களைக் கொண்டு எழுதப்பெற்ற தலைசிறந்த கட்டுரைகளே இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இவைகள் மாணவர்களின் மொழி அறிவு, கலையறிவாகியவற்றை மேம்படச் செய்யும் என்பது ஒருதலை. செய்யுட் பகுதி, உரைநடைப் பகுதி ஆகிய இரண்டிலும் மாணவர்களுக்கு உறுதுணையாயிருக்க வேண்டி ஆசிரியர்களைப் பற்றிய குறிப்புரைகள், அருஞ்சொற்பொருள்கள், வினாக்கள், பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

கிரௌன் அளவில் நூலை அச்சிட்டால் செய்யுள் அடிகள் பெரும்பாலும் உடைபட்டு, ஒவ்வோர் அடியும் இரண்டு வரிகளாகும். இவ்வாறு செய்யுள் அடிகள் உடைபடாமலிருக்க டெமி அளவில் இந்நூலைப் பதிப்பித்துள்ளோம். எனவே 150 கிரௌன் பக்கங்களுக்குச் சமமான 120 டெமி பக்கங்களுக்குக் குறையாமல் உரைநடையை அமைத்துள்ளோம்.

உரிமை பெற்ற கட்டுரைகளையும் செய்யுட்களையும் இந்நூலில் சேர்த்துக்கொள்ள இசைவளித்த அவற்றின் உரிமையாளர்களுக் கெல்லாம் எம் நன்றி உரித்தாகுக.

இந்நூலினை ஏற்று மாணவருலகத்துக்குப் பயன்படுத்தி எங் களையும் இத்துறையில் ஊக்கமளிக்குமாறு பள்ளித் தலைமை யாசிரியர்களையும் தமிழாசிரியர்களையும் வேண்டுகின்றோம்.

இன்னணம்,
தொகுப்பாளர்கள்

## மனப்பாடத்திற்கு உரியன

(அந்தந்தச் செய்யுட்களில் உடுக்குறி (*) இட்டுக் காட்டப் பெற்றுள்ளன.)

| | | | |
|---|---|---|---|
| கடவுள் வாழ்த்து | ... | 4 | வரிகள் |
| திருக்குறள் | ... | 40 | ,, |
| ஏலாதி | ... | 4 | ,, |
| சிறு பஞ்சமூலம் | ... | 4 | ,, |
| வில்லிபாரதம் | ... | 16 | ,, |
| பெரிய புராணம் | ... | 8 | ,, |
| பாஞ்சாலி சபதம் | ... | 8 | ,, |
| இரட்டுற மொழிதல் | ... | 4 | ,, |
| மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் | ... | 8 | ,, |
| வழிபாட்டுப் பாடல்கள் | .. | 8 | ,, |
| | | 104 | ,, |

# பொருளடக்கம்

## செய்யுள்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| **I வாழ்த்துப் பகுதி** | | | |
| 1. | கடவுள் வாழ்த்து | ... | 1 |
| 2. | தமிழ்மொழி வாழ்த்து | ... | 2 |
| 3. | நாட்டு வாழ்த்து | ... | 3 |
| **II அறவுரைப் பகுதி** | | | |
| 1. | திருக்குறள் | ... | 4 |
| 2. | ஏலாதி | ... | 16 |
| 3. | சிறுபஞ்சமூலம் | ... | 18 |
| 4. | திருமந்திரம் | ... | 21 |
| **III தொடர்நிலைச் செய்யுட் பகுதி** | | | |
| 1. | மணிமேகலை | ... | 23 |
| 2. | பெருங் கதை | ... | 28 |
| 3. | வில்லி பாரதம் | ... | 33 |
| 4. | பெரிய புராணம் | ... | 40 |
| 5. | பாஞ்சாலி சபதம் | ... | 46 |
| 6. | ஆசிய ஜோதி | ... | 50 |
| **IV பல்சுவைப் பகுதி** | | | |
| அ. | வருணனை | | |
| 1. | மருத நிலம் | ... | 55 |
| 2. | தென்றல் | ... | 56 |
| 3. | முகில் | ... | 56 |
| 4. | ஞாயிறு | ... | 58 |

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆ. | சீட்டுக்கவி | ... | 59 |
| இ. | இரட்டுற மொழிதல் | ... | 61 |
| ஈ. | சிற்றிலக்கியங்கள் | | |
| | 1. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் | ... | 62 |
| | 2. திருக்குற்றாலக் குறவஞ்சி | ... | 65 |
| | 3. நால்வர் நான்மணிமாலை | ... | 66 |
| | 4. சிங்கை உலகம்மை கலித்துறை யந்தாதி | ... | 67 |
| உ. | வழிபாட்டுப் பாடல்கள் | | |
| | 1. தேவாரம் | ... | 68 |
| | 2. திருப்போரூர்ச் சந்நிதி முறை | ... | 69 |
| | 3. வேதநாயகம்பிள்ளை பாடல் | ... | 70 |
| | 4. விண்ணப்பம் | ... | 70 |

## உரைநடை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | பழந் தமிழ்ப் புலவர் சிறப்பியல்புகள் ...<br>—டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், எம்.ஏ., பி.எச்டி., எம்.எல்.சி. | 72 |
| 2. | பேராசிரியர் சுந்தரம்பிள்ளை ...<br>—வித்துவான் எஸ். ஆறுமுக முதலியார், எம். ஏ., பி. ஓ. எல்., எல். டி. | 76 |
| 3. | எனது இலங்கைச் செலவு ...<br>—திரு. வி. கலியாணசுந்தர முதலியார் | 81 |
| 4. | தமிழ் வளர்ச்சி ...<br>—மகா வித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை | 89 |
| 5. | கரிப்புகையிற் கற்பகம் ...<br>—ஈ. த. இராசேசுவரி அம்மையார், எம். ஏ., எல். டி. | 95 |
| 6. | வரதுங்கராம பாண்டியன் ...<br>—வித்துவான் அம்பை இரா. சங்கரன் | 102 |
| 7. | யாழ் நூலாசிரியர் விபுலானந்தஅடிகளார்...<br>—வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனர் | 108 |
| 8. | நாகப்பட்டினம் ...<br>—டாக்டர் மா. இராசமாணிக்கனர், எம். ஏ., எம். ஓ. எல்., பி. எச்டி. | 116 |
| 9. | ஆண்மையும் அருளும் ...<br>—பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல். | 123 |
| 10. | பொதியப் பொருநை ...<br>—வித்துவான் பி. சொ. சண்முகம் பிள்ளை | 130 |

| எண் | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| 11. | தேசியச் சேமிப்புத் திட்டம் ... | 135 |
| | திரு. இரா. அண்ணுமலே, எம். ஏ. பி. டி. | |
| 12. | வள்ளல் ஆய்–அண்டிரன் (நாடகம்) ... | 151 |
| | —வித்துவான் சிவ. குப்புசாமிப் பிள்ளை | |
| 13. | குடும்பக் கலே ... | 158 |
| | —திருமதி. தே. தியாகராஜன், எம். ஏ., மதுரை. | |
| 14. | சமுதாய நலத்திட்டம் ... | 163 |
| | —வித்துவான் மு. இராமகிருட்டிணன், பி. ஏ., பி. டி., மதுரை. | |
| 15. | பழம்பெருந் தீவு (ஆஸ்திரேலியா) ... | 169 |
| | —கவிஞர் அமுதநீலன், மதுரை. | |
| 16. | கடிதம் ... | 177 |
| | —வித்துவான் திரு. அடிகளாசிரியர், கரந்தை. | |
| 17. | அதியமானும் ஔவையாரும் (உரையாடல்). | 181 |
| | —வித்துவான் வீ. ப. நடராசன், பசுமலே. | |
| 18. | இசைக்கருவிகள் ... | 187 |
| | —பேராசிரியர், நா. பாலுசாமி, எம். ஏ., மதுரை. | |

நன்றியுரை

இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ள கட்டுரைகளிலும் செய்யுட்களிலும் உரிமையுள்ளவை அவற்றின் ஆசிரியர் அல்லது உரிமையாளர் இசை பெற்றுச் சேர்க்கப்பட்டுள்ளன.

அன்னவர்களுக்கெல்லாம் என் மனமார்ந்த நன்றி.

பிரசுரகர்த்தர்

# நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா,
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா,
விந்த்ய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா,
தவ சுப நாமே ஜாகே,
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா,
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா,
ஜயஹே ! ஜயஹே ! ஜயஹே !
ஜய ஜய ஜய, ஜய ஹே !

—ரவீந்திரநாத தாகூர்

# பொருள்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிருய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும், சிந்துவையும்
குஜராத்தையும், மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது ;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது ;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன ;
நின் புகழைப் பாடுகின்றன ;

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு

வெற்றி, வெற்றி, வெற்றி.

---

Correct Version used. Vide R. C. No. 33/TBC/56 dated 12-7-'56.

## உறுதி மொழி

என்னுடைய தாய்நாடு இந்தியா, இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள்.

என் தாய்த் திருநாட்டை நான் உளமார நேசிக்கிறேன். வளமும், வேறுபாடும், நிறைந்த அதன் மரபினை எண்ணி இறும்பூதடைகின்றேன். அன்னதின் புகழுக்கேற்பத் தகுதியுடை நன்மகனாய் விளங்க நான் என்றும் முயல்வேன்.

அன்புடன் என்னை ஈன்ற அன்னை, ஆருயிர்த் தந்தை, ஆசிரியப் பெருந்தகை, ஆன்ற முதியோர் அனைவரையும் வணங்குவேன். மாண்புடை அன்னவர் அனைவரையும் நன்னயம் துலங்க நடத்துவேன்.

என் நாட்டிற்கும், என் மக்களுக்கும் என் வந்தனை என்றும் உரியது. என் நாட்டவர் வாழ்வின் நலமும் வளமுமே என் போற்றரும் இன்பம் என்று உளம் பூரிப்பேன்.

# தமிழ்

## ஒன்பதாம் வகுப்பு

## செய்யுள் பகுதி

## I வாழ்த்துப் பகுதி

### 1. கடவுள் வாழ்த்து

கடவுள் வாழ்த்தாக அமைந்திருக்கும் பின்வரும் செய்யுள், கம்பராமாயணத்தின் முதல் செய்யுளாகும். கம்பராமாயணத்தின் ஆசிரியரான கம்பர், உலக மகா கவிகளில் ஒருவர். இவரது வாழ்க்கை வரலாறு பற்றி உறுதியாக ஏதும் கூறத்தக்க சான்றுகளில்லை. இவர் பிறந்த ஊர் திருவழுந்தூர். சடையப்ப வள்ளல் என்பவரால் ஆதரிக்கப்பட்ட இவர் பெரும் புலவராகி, தம் காலத்துச் சோழ அரசரால் சிறப்பிக்கப்பட்டார் என்று அறிகிறோம்.

*உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசரண் நாங்களே.

—கம்பர்

#### குறிப்புரை

உளவாக்கல் - படைத்தல். நிலைபெறுத்தல் - காத்தல். நீக்கல் - அழித்தல். எல்லா உலகங்களையும், படைத்துக் காத்து அழிக்கும் வல்லமையுடையவர் கடவுள். நீங்கலா - இடையறாத. அலகு - அளவு. விளையாட்டு - லீலை. மேற்கூறிய முத்தொழில்களும் கடவுளுக்கு விளையாட்டுப் போன்றவை. இந்த வாழ்த்து பொதுப்படையாக இருப்பதால், எச்சமயத்தவரும் ஏற்றுக் கொள்ளும்படி அமைந்துள்ளது. அலகிலா - அலகு + இல்லா. இலா என்பது இடைக்குறை; இல்லாத என்ற பெயரெச்சம் ஈறுகெட்டு இல்லா என்றாகி, இடை குறைந்து இலா என்றாயிற்று.

ஆக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலும்—எண்ணும்மைகள்.

## 2. தமிழ்மொழி வாழ்த்து

இச் செய்யுளின் ஆசிரியரான கரந்தைக் கவியரசு இரா. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை முறையாகப் பயின்ற பெரும்புலவர். கரந்தைத் தமிழ்ச் சங்கத் 'தமிழ்ப் பொழிலி'ல் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதினர். விரைந்து கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தார்.

வானூர்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே !
மன்னியமூ வேந்தர்கள்தம் மடிவளர்ந்த மகளே !
தேனூர்ந்த தீஞ்சுனைசால் திருமாலின் குன்றம்
தென்குமரி ஆயிடைநற் செங்கோல்கொள் செல்வீ !
கானூர்ந்த தேனே !கற் கண்டே !நற் கனியே
கண்ணே!கண் மணியே!அக் கட்புலஞ்சேர் தேவீ !
ஆனாத நூற்கடலை அளித்தருளும் அமிழ்தே !
அம்மே!நின் சீர்முழுதும் அறைதலியார்க் கெளிதே !

—கரந்தைக் கவியரசு இரா. வேங்கடாசலம் பிள்ளை

### குறிப்புரை

தமிழ்த்தாயைப் பலவாறு புகழ்ந்து கூறுகிறார். பொதியின் மிசை - பொதிய மலையின்மீது. மதியே - சந்திரன் போன்றவளே ! மூவேந்தர் - சேர, சோழ, பாண்டியர். திருமாலின் குன்றம் - வேங்கடமலை. தென் குமரி - குமரிமுனை. ஆயிடை - இவ்வெல்லைகளுக்கு இடைப்பட்ட. கண்புலம் - கண்ணின் காட்சி. ஆனாத - குறைவில்லாத. சீர் - சிறப்பு ; பெருமை. அறைதல் - சொல்லுதல். யார்க்கு எளிதே - எவர்க்கு எளிதாகும்? (எளிதன்று.) மதியே, மகளே, செல்வீ, தேனே, கற்கண்டே, கனியே, கண்ணே, கண்மணியே, தேவீ, அமிழ்தே, அம்மே, நின் சீர்முழுதும் அறைதல் யார்க்கு எளிது, என்று முடிக்க.

## 3. நாட்டு வாழ்த்து

இச்செய்யுளின் ஆசிரியரான உயர் திருவாளர் கார்மேகக் கோனார் அவர்கள் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராய்த் திகழ்ந்தவர். சில ஆண்டுகளுக்குமுன் இவ்வுலகினின்றும் மறைந்தார். இவர் பல சிறந்த ஆராய்ச்சி நூல்களையும் செய்யுள்களையும் எழுதியுள்ளார். இப்பா நம் செந்தமிழ் நாட்டின் சிறப்பைப் பலவாறு பரக்கப் போற்றுகின்றது.

கைத்தொழிலும் வாணிபமும் கதித்துவளர் நாடு
கவின்கலையும் உழுதொழிலும் கனிந்துமிளிர் நாடு
முத்தமிழின் இனிமையெலாம் முழுதுணர்ந்த நாடு
மூவேந்தர் குடைநிழலில் முன்பமர்ந்த நாடு
வைத்தநிதி வறியவர்க்கே வழங்குவண்மை நாடு
வானவரும் தானவரும் வந்திறைஞ்சும் நாடு
எத்திறத்தும் உவமையிலா திலங்குதமிழ் நாடு
எத்திசையும் இசைமணக்க இருந்தளங்கள் நாடே.

—கார்மேகக் கோனார்.

## குறிப்புரை

கதித்து - விரைவாக. கவின்கலை - சிற்பம், சித்திரம் போன்ற அழகுக் கலைகள். கனிந்து - சிறந்து. மிளிர் - விளங்குகின்ற. தானவர் - அசுரர். இறைஞ்சும் - துதிக்கும். இசை - புகழ்.

## வினாக்கள்

1. கடவுளின் திருவிளையாடல்கள் யாவை ?
2. "மூவேந்தர் தம் மடிவளர்ந்த மகள்"—இத் தொடர் யாரைக் குறிக்கிறது ? இதன் கருத்தினை விளக்குக.
3. தமிழ்த்தாய் செங்கோல் செலுத்தும் எல்லைகள் யாவை ?
4. தமிழ் நாடு எவ்வாற்றான் உவமையிலா நாடாகத் திகழ்ந்தது ?

## பயிற்சி

1. பொருள் கூறுக :-நீக்கல் ; அலகு ; ஆனாத ; கதித்து ; கவின் ; தானவர் ; இசை.
2. சொற்களைப் பிரித்தெழுதுக :—அலகிலா ; தென்குமரி ; நற்கனி ; கட்புலம் ; அறைதலியார்க் கெளிது ; முத்தமிழ் ; வந்திறைஞ்சும்.
3. இலக்கணக் குறிப்பு வரைக :—இலா ; செங்கோல் ; கொள் செல்வீ ; கண்மணி ; கட்புலம் ; உழுதொழில் ; இலங்கு தமிழ்.

# II. அறவுரைப் பகுதி

## 1. திருக்குறள்

தமிழ் மொழியில் தோன்றிய அறநூல்களில் தெய்வப் புலமைத் திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறள் தலை சிறந்தது. இது கடைச்சங்க காலத்தைச் சேர்ந்தது. இஃது அறத்துப் பால், பொருட் பால், இன்பத்துப் பால் என்ற முப் பிரிவுகளையுடையது; 133 அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வொரு அதிகாரத்திற்கும் பத்து வீதம் 1330 குறட் பாக்களை யுடையது. இந்த நூலுக்கு ஒப்பாகவோ மேலாகவோ வெறொரு நூல் இல்லையென்றே கூறலாம். இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.

இந் நூலாசிரியர் திருவள்ளுவர் பிறப்புப்பற்றி ஒன்றும் அறுதியிட்டுக் கூற முடியவில்லை. இவர் ஏறக்குறைய இற்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் என்று கூறலாம். இவர் நூலுக்குப் பதின்மர் உரை எழுதியுள்ளனர். அவைகளுள் பரிமேலழகர் உரையே கற்றோர்கள் மெச்சும் நிலையிலுள்ளது.

### கடவுள் வாழ்த்து

வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில. (1)

### வான் சிறப்பு

விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது. (2)

### நீத்தார் பெருமை

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. (3)

### அறன்வலியுறுத்தல்

சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு ? (4)

### இல் வாழ்க்கை

அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன் ? (5)

### வாழ்க்கைத் துணைநலம்

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின் ? (6)

### புதல்வரைப் பெறுதல்

தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது. (7)

### அன்புடைமை

*அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை. (8)

### விருந்தோம்பல்

இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. (9)

### இனியவை கூறல்

*இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். (10)

### செய்ந்நன்றி யறிதல்

*செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது. (11)

### நடுவுநிலைமை

கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின். (12)

### அடக்கமுடைமை

எல்லார்க்கு நன்றும் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. (13)

### பொறையுடைமை

*ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. (14)

### அழுக்காறாமை

அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து. (15)

**வெஃகாமை**

*அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். (16)

**ஒப்புரவறிதல்**

*ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து. (17)

**ஈகை**

*வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. (18)

**புகழ்**

ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில். (19)

**புலான் மறுத்தல்**

*தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள்? (20)

**தவம்**

வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும். (21)

**வாய்மை**

*வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல். (22)

**வெகுளாமை**

*தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம். (23)

**இன்னா செய்யாமை**

*நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். (24)

**நிலையாமை**

*நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. (25)

ஊழ்

நன்றுங்கா னல்லவாக் காண்பவ ரன்றுங்கா
லல்லற் படுவ தெவன் ? (26)

இறைமாட்சி

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம். (27)

கல்வி

*உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில். (28)

கல்லாமை

*விலங்கொடு மக்களனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். (29)

கேள்வி

நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது. (30)

அறிவுடைமை

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (31)

பெரியாரைத் துணைக்கோடல்

*இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும். (32)

தெரிந்து செயல் வகை

*ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார். (33)

வலியறிதல்

*ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை. (34)

காலமறிதல்

*அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின். (35)

### இடனறிதல்

அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின். (36)

### தெரிந்து வினையாடல்

அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு
நன்குடையான் கட்டே தெளிவு. (37)

### சுற்றந்தழால்

பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள. (38)

### பொச்சாவாமை

அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. (39)

### செங்கோன்மை

*கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். (40)

### கண்ணோட்டம்

கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை. (41)

### ஊக்கமுடைமை

உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு. (42)

### ஆள்வினையுடைமை

தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு. (43)

### அமைச்சு

அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன். (44)

### வினைத்தூய்மை

ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. (45)

### குறிப்பறிதல்

*அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம். (46)

### படைச் செருக்கு

விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை யெடுத்து. (47)

### நட்பு

நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு. (48)

### சான்றாண்மை

இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு? (49)

### உழவு

இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி
னிலமென்னு நல்லா ணகும். (50)

## குறிப்புரை

1. **கடவுள் வாழ்த்து** - கடவுளை வாழ்த்துதல். வேண்டுதல் - விரும்புதல். வேண்டாமை - வெறுத்தல். யாண்டும் - எக்காலத்தும். இடும்பை - பிறவித் துன்பங்கள்.

2. **வான்சிறப்பு** - மழையினது சிறப்புக் [கூறுதல். விசும்பு - மேகம். விசும்பு ஆகுபெயர். பசும்புல் தலை - பசுமையான புல்லினது தலையையும். காண்பு - காண்டல், பார்த்தல். மேகத்தின் துளியாகிய மழை வீழாதாயின் ஓரறிவுயிராகிய புல்லையும் பார்த்தல் அரிது என்பது கருத்து. மற்று, வினைமாற்றுப் பொருளில் வந்தது.

3. **நீத்தார் பெருமை** - முற்றும் துறந்த முனிவரது பெருமை கூறுதல். இருமை - பிறப்பின் துன்பமும் வீட்டின் இன்பமும். ஈண்டு - இப்பிறப்பின்கண். அறம் - துறவறம். உலகு - உலகின்கண். பிறங்கிற்று - உயர்ந்தது.

4. **அறன் வலியுறுத்தல்** - பொருள் இன்பங்களினும் அறம் வலிமையுடையது என்பது கூறுதல். சிறப்பு - வீடுபேறு. ஈனும் - தரும். ஊங்கு - மிக்க. ஆக்கம் - மேன்மேல் உயர்தல்; 'உயர்வு தருவது. எவன் - யாது? உயிர்க்கு - மக்களுக்கு. அறத்தின்மிக்க உறுதி இல்லை என்பது கருத்து.

5. **இல்வாழ்க்கை** - இல்லாளோடு கூடி வாழ்தல். அறத்தாற்றின் - அறத்தின் வழியே. ஆற்றின் - செலுத்துவனாயின். புறத்தாற்றின் - (இல்வாழ்க்கைக்குப்) புறமாகிய வழியில். எவன் - யாது? புறத்தாறு - இல்வாழ்க்கையைத் துறந்து வனஞ்செல்லல்.

6. **வாழ்க்கைத் துணைநலம்** - இல்வாழ்க்கைக்குத் துணையாகிய இல்லாளது நன்மை. பெண்ணின் - இல்லாளின். பெருந்தக்க - மேம்பட்ட. யா - யாவை. திண்மை - கலங்காநிலை, உறுதி.

7. **புதல்வரைப் பெறுதல்** - நன்மக்களைப் பெறுதல். மாநிலம் - பெரியபூமி. மன் உயிர்க்கு - நிலைபெற்ற உயிர்களுக்கு; அறிவுடையார்க்கு. தம்மின் இனிது - தம்மைக்காட்டிலும் இனிதாகும்.

8. **அன்புடைமை** - மனைவி மக்கள் போன்ற உறவினர்களிடத்து அன்புடையராதல். சார்பு - துணை. மறத்திற்கும் - பகைமைக்கும். மறத்திற்கும் அஃதே துணை - மறத்தை நீக்குதற்கும் அன்பே துணையாகும். பகைவரிடம் அன்பு செய்தால் பகைமை நீங்கும் என்பது கருத்து.

9. **விருந்தோம்பல்** - விருந்தினரைப் பேணுதல். இல் இருந்து ஓம்பி - இல்லின்கண் இருந்து பொருள்களைப் போற்றி. விருந்து ஓம்பி- விருந்தினரைப் பேணி. வேளாண்மை - உபகாரம்.

10. **இனியவைகூறல்** - இனிய சொற்களைச் சொல்லுதல். ஈரம் அளைஇ - அன்பொடு கலந்த. படிறு இலவாம் - வஞ்சனையில்லாமலிருக்கின்ற. செம்பொருள் கண்டார் - அறத்தினை உணர்ந்தவர். ஆல் அசைநிலை. அறத்தினை உணர்ந்தவர் வாயில் தீய சொற்கள் பயில மாட்டா என்பதை உணர்த்த 'வாய்ச்சொல்' என்றார்.

11. **செய்ந்நன்றி யறிதல்** - பிறர் செய்த நன்மையை மறவாமை. செய்யாமல் செய்த உதவி - பிறர் தனக்கு உதவி செய்யாதிருக்கும் பொழுதும் ஒருவன் பிறர்க்குச் செய்த உதவி. வையகம் - மண்ணுலகம். வானகம் - விண்ணுலகம். ஆற்றல் - ஈடாதல்.

12. **நடுவு நிலைமை** - அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமை. நடுவு ஒரீஇ - நடுவு நிற்றலை ஒழிந்து. அல்ல செயின் - நடுவல்லவற்றைச் செய்ய நினைக்குமாயின். கெடுவல் - கெடுவேன்.

13. **அடக்கமுடைமை** - அடங்குதலுடையனாதல். செல்வம் தகைத்து - (வேறொரு) செல்வம் ஆகும் சிறப்பினையுடைத்து.

14. **பொறையுடைமை** - பிறர் செய்யும் தீங்கையும் பொறுத்தல். ஒறுத்தாரை - பிறர் தமக்குத் தீங்கு செய்தவழிப் பொறாது அவரைத் தண்டித்தாரை. ஒன்றாக - ஒரு பொருளாக. வையார் - மனத்திற் கருதார். பொதிந்து வைப்பர் - இடைவிடாது நினைப்பர்.

15. **அழுக்காறாமை** - பொறாமையின்மை. அழுக்காற்றின் - பொறாமை காரணமாக. அல்லவை - அறனல்லவை. இழுக்காற்றின் - தீநெறியால். ஏதம் - துன்பம். படுபாக்கு - வருதல்.

16. **வெஃகாமை** - பிறர் பொருளைக் கவரக் கருதாமை. அஃகாமை- குறையாமைக் காரணம். வேண்டும் - விரும்பும். வெஃகாமை - விரும் பாமை.

17. **ஒப்புரவறிதல்** - உலக நடையினை அறிந்து செய்தல். கேடு - பொருள் கேடு. விற்றுக் கோட்டக்கது உடைத்து - தன்னை விற்றுயி னும் கொள்ளும் தகுதியுடையது.

18. **ஈகை** - வறியார்க்குக் கொடுத்தல். வறியார் - ஒரு பொருளு மில்லாதார். ஒன்று - ஒரு பொருள். குறி யெதிர்ப்பை - அளவு குறித்து வாங்கி அவ்வளவே எதிர் கொடுப்பது. நீரது - தன்மையது; 'அது' பகுதிப் பொருள் விகுதி.

19. **புகழ்** - ஈதல் முதலியன பற்றி வரும் கீர்த்தி. ஒன்று - இணை யில்லாமல். பொன்றுது - இறவாது.

20. **புலான் மறுத்தல்** - ஊன் உண்ணுதலை ஒழித்தல். தன் ஊன் - தன் உடம்பை. பிறிது ஊன் - பிறிதோர் உயிரின் உடம்பை. எங்ங னம் அருள் ஆளும் - எவ்வாறு அருளினை நடத்தும்! அருளினை ஆளான் என்பது கருத்து.

21. **தவம்** - தம்முயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்து, பிற உயிர்களை ஓம்புதல். வேண்டிய - விரும்பிய பொருள்கள். வேண்டி யாங்கு - விரும்பியவாறே. எய்தலால் - பெறப்படுதலால். ஈண்டு - இம்மைக்கண்.

22. **வாய்மை** - மெய்யினது தன்மை. எனின் - என்று வினவின். 'தீமை யாதொன்றும் இலாத' என்று இயைத்துப் பொருள் கூறுக. சொலல் - சொல்லுதல்.

23. **வெகுளாமை** - சினம் செய்தற்குக் காரணமிருந்தும் சினம் செய்யாமை. தன்னைத்தான் காக்கின் - துன்பம் எய்தாமல் தன்னைக் காக்க நினைத்தானாயின். சினம் காக்க - சினம் வாராமல் காத்தல் வேண்டும். காவாக்கால் - காவானாயின். கொல்லும் - மிக்க துன்பங் களைச் செய்யும்.

24. **இன்னா செய்யாமை** - ஓர் உயிர்க்கு இன்னாதவற்றைச் செய் யாமை. நோய் செய்தார் - பிறிதோருயிர்க்கும் இன்னாதன செய்தார். மேலவாம் - மீது வந்தடைவனவாம். 'வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்பது கருத்து. இக்குறள் சொற்பொருள் பின்வரு நிலையணி.

25. **நிலையாமை** - பொருள்களின் நிலையற்ற தன்மை. நெருநல் - நேற்று. பெருமை - நிலையாமை மிகுதி.

26. **ஊழ்** - விதி. ஆங்கால் - ஆகுங்கால்; விளையும்பொழுது. நல்லவாக் காண்பவர் - (இவை) நல்லவென்று விரும்பி அனுபவிப்பவர். அன்று ஆங்கால் - தீவினை விளையும்பொழுது. அல்லற்படுவது - துன்

புறுவது. எவன் - எதற்காக. நல்வினையின் பயனை அனுபவிப்பது போலவே தீவினைப்பயனையும் அனுபவித்தல்வேண்டும் என்பது கருத்து.

27. இறைமாட்சி - அரசனுடைய நற்குண நற்செய்கைகள். காட்சிக்கு எளியன் - சென்று காண்பதற்கு எளியவன். நிலம் - (மன்னனது) நாடு. மீக்கூறும் - (உலகம்) உயர்வாகக் கூறும்.

28. கல்வி - கற்றற்குரிய நூல்களைக் கற்றல். உவப்ப - (பிறர்) விரும்புமாறு. தலைக்கூடி - கூடிப் 'பேசி. உள்ள - நினைக்குமாறு. அனைத்து - அத்தன்மையுடையது.

29. கல்லாமை - கற்றலைச் செய்யாமையான் ஏற்படும் இழிவு. விலங்கு - மிருகம். இலங்கு நூல் - மேம்பட்ட நூல்கள். ஏனையவர் - (கல்லாத) பிறர்.

30. கேள்வி - நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக் கேட்டல். நுணங்கிய - நுட்பமாகிய. வணங்கிய வாயினர் - பணிந்த மொழியுடையர். வாய், ஆகுபெயர். பணிந்தமொழி என்பது பணிவைப் புலப்படுத்தும் மொழி.

31. அறிவுடைமை - உண்மையறிவுடையனுதல். மெய்ப்பொருள் - மெய்யான பயனை. காண்பது - காணவல்லது. சொல்வாரது இயல்பு நோக்காது, பொருளின் பயனை நோக்குதல் வேண்டுமென்பது கருத்து.

32. பெரியாரைத் துணைக்கோடல் - பேரறிவுடையாரைத் தனக்குத் துணையாகக் கொள்ளுதல். இடிப்பார் - குற்றங்குறைகளை எடுத்துக் கூறுபவர். ஏமரா - காவலற்ற. கெடுப்பார் - கெடுக்கும் பகைவர். கெடும் - தானே கெடும்.

33. தெரிந்து செயல்வகை - செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யும் திறம். ஆக்கம் - இனி வரவிருக்கும் ஊதியம். முதல் - கைவசம் உள்ள பொருள். ஊக்கார் - மேற்கொள்ளமாட்டார்.

34. வலியறிதல் - தன் வலி, மாற்றான் வலி போன்றவற்றை ஆராய்ந்தறிதல். ஆகு ஆறு - (பொருள்) வருகின்ற வழி. இட்டிது ஆயினும் - சிறிதாயிற்று என்றாலும். போகு ஆறு - (பொருள்) செலவாகின்ற வழி. அகலாக் கடை - பெருகாதவிடத்து.

35. காலமறிதல் - ஒரு காரியத்தில் ஈடுபடுமுன் அதற்கு ஏற்ற காலத்தினை அறிதல். அருவினை - செய்தற்கரிய காரியம். கருவியால் - (காரியத்தை முடித்தற்கு ஆகும்) கருவிகளால்.

36. இடனறிதல் - ஒரு காரியத்தினை முடித்தற்கு ஏற்ற இடத்தை அறிதல். எஞ்சாமை எண்ணி - (வினை செய்யும் திறங்களை எல்லாம்) ஒழியாமல் நினைத்து. இடத்தால் செயின் - ஏற்ற இடத்தொடு பொருந்த வினை செய்தால். அஞ்சாமை - மனத்திண்மை.

37. தெரிந்து வினையாடல் - வினை செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டவரை, அவர் செய்யவல்ல வினைகளை அறிந்து அவற்றின்கண்ணே ஆளும் திறம். அன்பு - அரசன் (அல்லது வினைமேல் ஒருவனை ஏவின

வன்) மீது அன்பு. தேற்றம் - வினை செய்யும்போது கலங்காமை. அவாவின்மை - கையுற்ற பொருள்மீது ஆசையில்லாமை. நன்குடையான் கட்டே - நிலைபெறவுடையவன் மேலதே. தெளிவு - வினையை ஒப்படைக்கும் தெளிவு.

38. சுற்றந்தழால் - கிளைஞரை நீக்காமல் அணைத்தல். பற்று அற்ற கண்ணும் - ஒருவன் செல்வம் தொலைந்து வறியனாய இடத்தும். பழைமை - பற்றறாக் காலத்துச் செய்த உபகாரம். பாராட்டுதல் - கொண்டாடுதல். சுற்றத்தார் - கிளைஞர். கண்ணும் என்பதிலுள்ள சிறப்பும்மை, வறியனாய இடத்தும் பாராட்டப்படாமை சுட்டி நின்றது. கண்ணே என்பதிலுள்ளது தேற்றேகாரம்.

39. பொச்சாவாமை - காரியங்களில் சோர்தல் செய்யாமை. அரண் - காடு, மலை முதலிய அரண். ஆங்கு - அதுபோல. நன்கு - செல்வம் முதலிய நன்மைகள். அச்சமுடையார் நின்ற அரண்கள் அழியும்; அதுபோல மறவியுடையாருடைய செல்வங்களும் அழியும்.

40. செங்கோன்மை - ஒருபால் கோடாது செவ்விய கோல்போல, அரசனால் செய்யப்படும் முறையினது தன்மை. வேந்து - அரசன். கொடியார் - குற்றவாளிகள். கொலையின் ஒறுத்தல் - கொலை செய்து தண்டித்தல். பைங்கூழ் - பசிய பயிர்கள். களைகட்டதனொடு - களையை நீக்குதலினோடு. நேர் - ஒப்பாகும்.

41. கண்ணோட்டம் - தன்னோடு பயின்றார் கூறியன மறுக்கமாட்டாமை. உலகியல் - உலக நடை; அதாவது, ஒப்புரவு செய்தல், பிழைத்தன பொறுத்தல் முதலியவை. உண்மை - உளராதல். நிலக்குப் பொறை - நிலத்திற்குப் பாரம்.

42. ஊக்கமுடைமை - வினைசெய்தற்கண் மனம் சோர்தலில்லாமல் கிளர்ச்சியுடைத்தாதல். 'உரம் - திண்ணிய அறிவு. உள்ள வெறுக்கை - ஊக்க மிகுதி. மக்களாதலே வேறு - மக்கள் வடிவாதலே வேற்றுமையாம்; பிறிதில்லை. சாதி மரங்களின் பயன்பாடும் இந்த மக்களாகிய மரங்களுக்கு இல்லை.

43. ஆள்வினையுடைமை - இடைவிடாத மெய்ம்முயற்சி யுடையனாதல். தாளாண்மை - முயற்சி. தகைமை - உயர் குணம். வேளாண்மை - எல்லார்க்கும் உபகாரம் செய்தல். செருக்கு - மேம்பாடு.

44. அமைச்சு - அமைச்சனது தன்மை. அறி - அறிவாளர் கூறும் அறிவு. கொன்று - அழித்து. அறியான் - தானும் அறியான். உழையிருந்தான் - (அருகிலுள்ள) அமைச்சன். 'அறி என்பது முதனிலைத் தொழிற் பெயர்.

45. வினைத்தூய்மை - செய்யப்படும் வினைகள் அறமும் புகழும் பயந்து நல்லவாதல். ஈன்றாள் - தாயினது. பசி காண்பான் - பசியைக் (வறுமை காரணமாக) காணும் நிலையிலுள்ளவன். சான்றோர் - அறிவுடையார். செய்யற்க - செய்யாதொழிக.

46. குறிப்பறிதல் - ஒருவர் கருதியதனை அவர் கூருமலே அறிதல். அடுத்தது - பக்கத்திலுள்ள பொருள். நெஞ்சம் - மனம். கடுத்தது - மிக்கது. கடுத்தது என்பது கடி என்னும் உரிச்சொல் அடியாக வந்த தொழிற் பெயர்.

47. படைச் செருக்கு - படையின் வீரமிகுதி. தன் நாளை எடுத்து - (ஒரு வீரன்) கழிந்த தன் நாள்களை எடுத்து எண்ணி. விழுப்புண் - முகத்திலும் மார்பிலும் பட்ட புண். வழுக்கு - வீண். வழுக்கினுள் வைக்கும் - பயன்படாத நாள்களினுள்ளே வைத்தெண்ணுவான்.

48. நட்பு - நண்பர்களின் தன்மை. தொடர்பு - நட்பு. பயில் தொறும் - செய்யும் பொழுதெல்லாம். நவில்தொறும் - கற்கும் பொழுதெல்லாம். நயம் போலும் - இன்பம் செய்தலைப் போலும்.

49. சான்ருண்மை - நற்குணங்கள் பல நிறைந்து அவற்றை ஆளும் தன்மை. இன்ன - தீங்குகள். இனியவே - நன்மைகளையே. செய்யாக் கால் - செய்யாராயின். என்ன பயத்தது - வேறு என்ன பயனுடைத்து? ஒரு பயனுமில்லை என்பது கருத்து.

50. உழவு - உழுதல் தொழில். இலம் என்று அசைஇ இருப்பார் - யாம் வறுமையுடையேம் என்று சோம்பலாக இருப்பவர். நிலம் என்னும் நல்லாள் - நிலமகள். நகும் - சிரிக்கும்.

## வினக்கள்

1. யாருக்கு எக்காலத்தும் பிறவித் துன்பங்கள் இல்லை?
2. மழையின் இன்றியமையாமையை எவ்வாறு வள்ளுவர் வற்புறுத்துகிருர்?
3. முனிவர்களின் சிறப்பு எவ்வாறு மேம்பட்டது?
4. அறம் உறுதி தரவல்லது எவ்வாறு? விளக்குக.
5. இல்லறம் சிறந்தது என்பதனைத் திருவள்ளுவர் எவ்வாறு அழகு படக் கூறுகிருர்?
6. இல்லாள் எத்தகைய நலம் பெற்றவளாயிருக்க வேண்டும்?
7. புதல்வர்கள் எந்நிலையினராயிருத்தல் நன்று?
8. மறத்திற்கும் அன்பு துணையாவது யாங்ஙனம்?
9. இல்வாழ்க்கை எதன் பொருட்டுச் செய்யத் தக்கது?
10. இன்சொல்லின் இலக்கணம் யாது?
11. செய்யாமற் செய்த உதவி என்ருல் என்ன? அதன் பெருமைகளை விவரி.
12. நடுவுநிலைமையை ஆசிரியர் ஏன் வலியுறுத்துகிருர்? காரணம் தருக.
13. செல்வர்க்குப் பணிவு ஏன் மிக இன்றியமையாதது?
14. பொறுமையுடையவர் எவ்வாறு மக்களால் போற்றப்பெறுவார்?
15. அழுக்காற்றினுல் மக்கள் அடையும் தீமைகள் யாவை?

16. ஒருவன் செல்வம் குறையாதிருக்க மேற்கொள்ளும் வழி யாது?
17. விற்றுக் கோட்டக்கது எது? ஏன்?
18. ஈகை எத்தகையதாயிருக்க வேண்டும்? ஏன்?
19. என்றும் நிலைபெற்றிருப்பது எது? எவ்வாறு?
20. அருளிலாதவர் யாவர்? காரணம் கூறுக.
21. தவம் செய்தலால் ஏற்படும் பயன் என்னை?
22. வாய்மை எனப்படுவது யாது?
23. சினத்தின் தன்மைகளை விளக்குக.
24. துன்பம் வாராதிருக்க ஒருவன் செய்யவேண்டுவது யாது? காரணம் தந்து விளக்குக.
25. உலகத்துக்குரிய பெருமையாக ஆசிரியர் எதனைக் கூறுகிறார்? அது எவ்வாறு பெருமை வாய்ந்தது?
26. ஊழ்பற்றித் திருவள்ளுவர் கருத்து யாது?
27. அரசன் எத்தகைய நிலையினனாயிருத்தல் நன்று?
28. புலவர் தொழில் யாது? எப்படி என விளக்குக.
29. கல்லாதவர் எதனை ஒப்பர்? காரணம் தருக.
30. "வணங்கிய வாயினர் ஆதல் அரிது"—யார்? ஏன்?
31. அறிவு எத்தகையது?
32. "கெடுப்பாரிலானும் கெடும்"—யார்? ஏன் என விளக்குக.
33. அறிவுடையார் எதை ஊக்கார்? விளக்குக.
34. "ஆகாறு" என்று தொடங்கும் செய்யுளை எழுதிப் பதவுரை தருக.
35. காலம் ஒருவனுக்குத் துணையாதல் யாங்ஙனம்?
36. 'இடனறிதல்' என்ற பகுதியில் திருவள்ளுவர் வற்புறுத்துவது யாது?
37. எக்குணங்கள் உள்ளவரிடம் ஒரு வினையை ஒப்படைக்க வேண்டும்?
38. சுற்றத்தார்களின் சிறப்பியல்புகள் யாவை?
39. பொச்சாப்புடையார்க்கு எது இல்லை? இதற்குரிய உவமையை ஆசிரியர் கூறியாங்கு விளக்கி வரைக.
40. "பைங்கூழ் களைகட்டதனொடு நேர்,"—எது? எவ்வாறு?
41. நிலக்குப்பொறை—யார்? விவரி.
42. ஊக்கமில்லாதவரைத் திருவள்ளுவர் எவ்வாறு இழித்துரைக்கிறார்? விளக்குக.
43. முயற்சியால் ஏற்படும் பயன் யாது?
44. அமைச்சனின் இயல்புகள் யாவை?
45. "வினைத்தூய்மை" எனும் அதிகாரத்து ஆசிரியர் வற்புறுத்துவது யாது?
46. பளிங்கின் தன்மை யாது? இதனை எதற்கு உவமையாக எடுத்தாளப்பட்டிருக்கிறது? விளக்குக.

47. வழுக்குற்ற நாள்கள் எவை? எவ்வாறு?

48. பண்புடையாளர் தொடர்பு எத்தகையது? விவரி.

49. சால்பின் இயல்பு யாது? விளக்குக.

50. பூமாதேவி யாரை எள்ளி நகையாடுவாள்? ஏன்?

51. திருக்குறள் பெருமை, திருவள்ளுவர் பெருமை பற்றித் தெரிந்ததை எழுதுக.

### பயிற்சி

1. பொருள் கூறுக:—பிறங்கிற்று, திண்மை, சார்பு, வேளாண்மை, ஈரம், அளைஇ, படிறு, ஒரீஇ, ஏதம், அஃகாமை, ஒப்புரவு, குறியெதிர்ப்பு, பொன்றுது, நோய், நெருநல், மீக்கூறும், ஏமரா, அளவிட்டிது, பொச்சாப்பு, களைகட்டல், உள்ள வெறுக்கை, கடுத்தது, விழுப்புண், சால்பு.

2. இலக்கணக் குறிப்பு எழுதுக:—விசும்பிற்றுளி, அறத்தினூஉங்கு, அளைஇ, வாய்ச்சொல், கெடுவல், படுபாக்கு, இலாத, சொலல், வணங்கிய வாய், ஏமரா, அளவிட்டிது, அருவினை, அறி, செய்யற்க, கடுத்தது, விழுப்புண்.

3. பகுதி கூறுக:—பிறங்கிற்று, அஃகாமை, பொன்றுது, உவப்ப, தலைக்கூடி, நுணங்கிய, எஞ்சாமை, அசைஇ.

4. பின்வரும் அணியை விளக்கி எடுத்துக்காட்டாகக் குறளும் தருக:—சொற்பொருள் பின்வரு நிலையணி.

## 2. ஏலாதி

ஏலாதி என்ற நூல் பதினெண்கீழ்க்கணக்கைச் சேர்ந்தது. இதன் ஆசிரியர் கணிமேதையார். இவர் சைன மதத்தினர். எட்டாம் நூற்றுண்டினர். 'ஏலாதி' என்பது ஏலம், இலவங்கம், சிறு நாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய ஆறு சரக்குகளால் செய்யப்பட்ட ஒரு மருந்தின் பெயர் ஆகும். ஏலாதி-ஏலம் + ஆதி; ஏலத்தை முதலாக உடையது என்பது பொருள். இம்மருந்து உடற் பிணிகளைப் போக்கி நலஞ் செய்வது போல், ஏலாதி என்ற இந்நூலும் மக்களின் அறியாமைப் பிணியைப் போக்கக் கூடியது. ஒவ்வொரு செய்யுளிலும் ஆறு அல்லது ஏழு உண்மைப் பொருள்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. இந்நூலில் மொத்தம் எண்பது செய்யுள்கள் உள்ளன.

### தாய் போன்றோர்

நிறையுடைமை நீர்மை உடைமை கொடையே
பொறையுடைமை பொய்மை புலாற்கண்—மறையுடைமை
வேயன்ன தோளாய்! இவையுடையான் பல்லுயிர்க்கும்
தாயன்னன் என்னத் தகும். (1)

### வீடு விரும்பக் காரணங்கள்

*இளமை கழியும்; பிணிமூப்(பு) இயையும்
வளமை வலிஇவை வாடும்—உளநாளால்
பாடே புரியாது, பால்போலும் சொல்லினாய்!
வீடே புரிதல் விதி. (2)

### அன்புடையோர்க்குள்ள குணங்கள்

சாதல் பொருள்கொடுத்தல் இன்சொல் புணர்வுவத்தல்
நோதல் பிரிவில் கவறலே—ஓதலின்
அன்புடையார்க் குள்ளன ஆறு குணமாக
மென்புடையார் வைத்தார் விரித்து. (3)

### குடிசிறந்து வாழ்வான்

களியான்கள் உண்ணான் களிப்பாரைக் காணான்
ஒளியான் விருந்திற் குலையான்—எளியாரை
எள்ளான்ஈத் துண்பானேல் ஏதமில் மண்ஆண்டு
கொள்வான் குடிவாழ்வான் கூர்ந்து. (4)

—கணிமேதையார்

### குறிப்புரை

1. நிறை - மன அடக்கம். நீர்மை - நல்லியல்பு. பொய்மை, புலால்கண் மறையுடைமை - பொய் கூறுதலிலும் புலால் உண்ணுதலிலும் மறுத்தல் உடைமை. தாய் அன்னன் - தாய் போன்றவன். வேயன்ன தோளாய் - மூங்கிலை ஒத்த தோள்களை உடையவளே! (மகடூஉ முன்னிலை.)

2. பிணி மூப்பு இயையும் - நோயும் கிழத்தனமும் வந்து சேரும். வலி - உடல் வலிமை. வாடும் - குறைந்து அழியும். பால் போலும் சொல்லினாய்! (மகடூஉ முன்னிலை.) பாடு புரியாது - உலக இன்பங்களுக்காக உழைக்காமல். வீடு புரிதல் - வீட்டு இன்பத்திற்காக உழைத்தல். விதி - கடமை.

3. சாதல் - (நண்பன் பொருட்டாக) இறத்தல். புணர்வு உவத்தல் - கூடி மகிழ்தல். பிரிவில் நோதல் - பிரியும் பொழுது வருந்துதல். கவறல் - கவலைப்படுதல். நண்பர்கள்பால் இந்த ஆறு இயல்புகளும் வேண்டப்படுவன.

4. களியான் - தற்பெருமை கொள்ளாதவனாகி. களிப்பார் - கள் குடித்து மகிழ்பவர். விருந்திற்கு ஒளியான் - விருந்தினர்க்கு இல்லை என்னாதவனாகி. உலையான் - ஒழுக்கம் கெடாதவனாகி. எள்ளான் - இகழாதவனாகி. ஈத்து - (பிறர்க்கும்) கொடுத்து. ஈத்து - (ஈ பகுதி) இறந்த கால வினையெச்சம். ஏதம் - குற்றம். மண் ஆண்டு கொள் வான் - இவ்வுலகை ஆள்வான். கூர்ந்து வாழ்வான் - சிறப்பாக வாழ்வான்.

### வினாக்கள்

1. ஏலாதி - பெயர்க்காரணம் தருக.
2. பல்லுயிர்க்கும் தாய் போன்றவனுடைய இயல்புகளை விவரி.
3. "இளமை கழியும்..." என்று தொடங்கும் செய்யுளை அடி பிறழாமல் எழுதிப் பதவுரையும் தருக.
4. அன்புடையார்க்கு உள்ள ஆறு குணங்கள் யாவை ?
5. குடிவாழ்வான் இவ்வுலகை ஆண்டு கொள்பவனாக ஆவதற்கு எவ்வாறிருக்க வேண்டும் ?

### பயிற்சி

1. **பொருள் கூறுக :** நிறையுடைமை, பொறை, மறையுடைமை, பாடுபுரிதல், வீடுபுரிதல், கவறல், எள்ளான், ஏதம், கூர்ந்து.
2. **பிரித்தெழுதுக :** நிறையுடைமை, இன்சொல், புணர்வுவத்தல், ஈத்துண்பான்.
3. **பகுதி கூறுக :** கொடை, பொறை, இயையும், புரிதல், சாதல், நோதல், கவறல், எள்ளான், உண்பான்.
4. மேற் செய்யுட்களில் வந்துள்ள மகடூஉ முன்னிலைகளை எடுத்தெழுதுக.

## 3. சிறுபஞ்சமூலம்

சிறுபஞ்ச மூலம் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதன் ஆசிரியர் காரியாசான் என்னும் புலவர் ஆவர். கண்டங்கத்திரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், பெருமல்லிவேர், நெருஞ்சிவேர் என்னும் ஐவகை வேர்களாலாய மருந்துக்குச் சிறு பஞ்சமூலம் என்பது பெயர் ஆகும். இது உடல் நோயை நீக்கு

வது போல இந்நூலிலுள்ள ஒவ்வொரு செய்யுளும் தன்னகத்து ஐந்து உண்மைகளைத் தாங்கி இந்நூலைப் படிப்போரின் உள நோயை நீக்கவல்லது. இந்நூலில் 97 செய்யுட்கள் உள்ளன. இந் நூலாசிரியர் சைன மதத்தினர். கி. பி. எட்டாம் நூற்றாண்டினர் என்று அறிஞர் கூறுவர்.

### வாழும் வகை

பிழைத்தல் பொறுத்தல் பெருமை சிறுமை
இழைத்ததீங் கெண்ணி இருத்தல்—இழைத்த
பகைகெட வாழ்வதும் பல்பொருளார் நல்லார்
நகைகெட வாழ்வதும் நன்று. 1

### நல்லுலகம் அடைவோர்

குளம்தொட்டு கோடு பதித்து வழிசீத்து
உளம்தொட்டு உழுவய லாக்கி—வளம்தொட்டுப்
பாகு படுகிணற்றோ டென்றிவ்வைம் பாற்படுத்தான்
ஏகும் சுவர்க்கத் தினிது. 2

### வனப்புகள்

கண்வனப்புக் கண்ணோட்டம் கால்வனப்புச் செல்லாமை
எண்வனப் பித்துணையாம்என்றுரைத்தல்—பண்வனப்புக்
கேட்டார்நன் றென்றல் கிளர்வேந்தன் தன்னாடு
வாட்டான்நன் றென்றல் வனப்பு. 3

### நகைப்புக் கிடமாவன

நாணிலான் சால்பும் நடையிலான் நல்நோன்பும்
ஊணிலான் செய்யும் உதாரதையும்—ஏணிலான்
சேவகமும் செந்தமிழ் தேறான் கவிசெயலும்
நாவகமே நாடின் நகை. 4

### • அறிவுடையோன் செயல்கள்

*நல்ல வெளிப்படுத்துத் தீய மறந்தொழிந்(து)
ஒல்லை யுயிர்க்கூற்றங் கோலாகி—ஒல்லுமேல்
மாயம் பிறர்பொருட்கண் மாற்றிமா மானத்தான்
ஆயின் அழிதல் அறிவு. 5

## குறிப்புரை

1. பிழைத்தல் - தவறு செய்தல். பல்பொருளார் - பலவகைச் செல்வமுடையவர்கள். நகை கெட - இகழ்ச்சி தீரவும்.

2. தொட்டு - தோண்டி; தொடு—பகுதி. கோடு - மரக்கொம்பு. பதித்து - (போய் வரும் வழிகளில்) நட்டு. சீத்து - செம்மைப் படுத்தி. வளம் தொட்டு - செழிப்பைத் தரும். பாகுபடும் கிணறு - வெல்லப்பாகு போன்ற இன்சுவையுடைய நீருள்ள கிணறு.

3. கண்ணோட்டம் - இரக்கப் பார்வை. செல்லாமை - பிறர்பால் யாசிக்கச் செல்லாதிருத்தல். எண் - ஆராய்தல். இத்துணை - இவ்வளவினது. வாட்டான் - வருத்தமாட்டான். நன்று என்றல் - இவனாட்சி நல்லது என்று பிறர் கூறுதல்.

4. சால்பு - அமைதி. நடை - நல்லொழுக்கம். உதாரதை - ஈகைத் தன்மை. ஏண் - வலிமை. சேவகம் - வீரத்தொழில். தேருன் - தெளியாதவன். நாடின் - ஆராய்ந்து பார்த்தால்.

5. நல்ல, தீய—பலவின்பால் வினையாலணையும்பெயர்கள். ஊற்றங் கோல் - ஊன்றுகோல். ஒல்லை - விரைவாக. மாயம் - வஞ்சனை. மாற்றி- போக்கி. மானத்தான் - பெருமையுள்ளவன். அழிதல் - உயிர்விடுதல்.

## வினாக்கள்

1. சிறுபஞ்ச மூலம் என்று பெயர்வரக் காரணம் யாது ?
2. எத்தகைய வாழ்வை மேற்கொளல் நன்றாகும் ?
3. சிறந்த அறச்செயல்கள் யாவை ?
4. சிறந்த அழகுகள் யாவை ?
5. பிறரால் இழித்துக் கூறப்படுவன யாவை ?
6. அறிவுடையோன் மேற்கொள்ளத்தக்கவை யாவை ?

## பயிற்சி

1. பொருள் தருக :—சீத்து, எண், சால்பு, உதாரதை, ஏண், மாயம்.

2. சிறுபஞ்ச மூலத்தில் கூறியுள்ள சிறந்த அறவுரைகளைத் தொகுத்து எழுதுக.

3. இலக்கணக் குறிப்புத் தருக :—உழுவயல், எண், தேருன், நல்ல, தீய, மா மானத்தான்.

4. பிரிக்க :—ஐம்பால், இத்துணை, நன்றென்றல், செந்தமிழ், ஊற்றங்கோல், பொருட்கண்.

## 4. திருமந்திரம்

திருமந்திரம் என்ற நூல் சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் பத்தாவதாகும். இது மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. இதன் ஆசிரியர் திருமூலர் ஆவர். அவர் புலமையில் மிக்க தெய்வக் கவிஞர்; யோக நெறியில் சிறந்தவர்; மேலான துறவி. இவர் கடைச்சங்க காலத்திற்கு முன் வாழ்ந்தவர் என்று அறிஞர்கள் கூறுவர். இதற்குத் "தமிழ் மூவாயிரம்" என மற்றொரு பெயருமுண்டு. இந்நூலில் சிறந்த கருத்துக்கள் அடங்கிய பல எளிய இனிய பாக்களுமுள்ளன.

### யாக்கை நிலையாமை

காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பாற்றுளி பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டுப் போனஇக் கூட்டையே 1

### உடலோம்பல்

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே 2

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே 3

### செய்ய வேண்டுவன

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே. 4

## குறிப்புரை

1. பால் + துளி - பாற்றுளி. பழிச்சில் என் - போற்றினுல் என்ன பயன்? தோல்பை - உடல். ஊட்டும் – காப்பாற்றும். கூத்தன் - இறைவன். கூடு - உடம்பு.

2. உடம்பார் - உடல். திடம்பட - உறுதியாக. மெய்ஞ்ஞானம் - உண்மையறிவு. உபாயம் - வழி.

3. இழுக்கு - குற்றம். உறுபொருள் - சிறந்த பொருள்; உரிச் சொற்றொடர்.

4. நமன் - இயமன். கதி - மேனிலை. சித்தம் - மனம். நின்று - தங்கி. உய்மின் - பிழைத்துக் கொள்ளுங்கள்.

## வினுக்கள்

1. திருமூலர் பற்றியும் திருமந்திரம் பற்றியும் அறிந்தவைகளை எழுதுக.

2. யாக்கை நிலையற்றது என்பதை ஆசிரியர் எவ்வாறு விளக்குகிருர்?

3. உடம்பு வளர்ப்பது எவ்வாறு உயிரை வளர்ப்பதாகும்? விவரி.

4. உடம்பு வளர்ப்பது பற்றி ஆசிரியர் கூறும் காரணங்களை விளக்குக.

5. திருமூலர் மக்களுக்குக் கூறும் உய்வழி யாது?

## பயிற்சி

1. உங்களுக்கு வந்துள திருமந்திரப் பகுதிகளிலிருந்து "திருமூலர் கொள்கைகள்" பற்றி நீவிர் அறிந்தவைகளை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

2. திருமூலர் வரலாறு பெரிய புராணத்துள் உள்ளது. விவரத்தை அதனைப் படித்து அறிந்து கொள்க.

3. தோற்பையுள்...இக் கூட்டையே :—இவ்வடிகளில் நீங்கள் இன்புறும் நயங்களை விளக்கி எழுதுக.

# III. தொடர்நிலைச் செய்யுட்பகுதி

## 1. மணிமேகலை

இந்நூலாசிரியரான, கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் கடைச்சங்கப் புலவருள் ஒருவர். 'தண்டமிழ்ச் சாத்தன்', 'நன்னூற் புலவன்' என்ற பெயர்களால், இவர் சிலப்பதிகார ஆசிரியரால் சிறப்பிக்கப் பெற்றிருப்பதிலிருந்து இவரது புலமையை உணரலாம். கண்ணகியின் சரிதையை இளங்கோவடிகள் ஒரு பெருங் காப்பியமாகப் பாடியுள்ளார்; மாதவியின் மகளாகிய மணிமேகலையின் கதை அக்கதையுடன் தொடர்புடையது. இதை நம் புலவர் இனிய செந்தமிழ்க் காப்பியமாக இயற்றி, பௌத்த சமயப் பெருமையை விளக்கியுள்ளார்.

காவிரிப்பூம்பட்டினத்தில் மாதவியுடன் வாழ்ந்த மணிமேகலை ஒரு நாள் தன் தோழி சுதமதியுடன் சக்கரவாளக்கோட்டம் சென்றாள். அவளைக் கண்ட இளவரசனான உதயகுமரன் அவளையடைய விரும்பித் தருணம் பார்த்திருந்தான். அப்பொழுது மணிமேகலா தெய்வம் அவர்கள்முன் தோன்றி சக்கரவாளக் கோட்டத்தைப் பற்றிக் கூறியது. அப்பொழுது சுதமதி துயிலத் தொடங்கினாள். மணிமேகலா தெய்வம் மணிமேகலையை எடுத்துக் கொண்டு ஆகாய வழியே சென்று கடல்சூழ்ந்த மணிபல்லவம் என்னும் தீவையடைந்து அங்கே அவளை வைத்தது. மணிபல்லவத்தில் மணிமேகலை உற்ற துயரை இக்காதை விளக்கிக் கூறுகின்றது.

### எட்டாவது

### மணிபல்லவத்துத் துயருற்ற காதை

ஈங்கிவ ளின்னண மாக விருங்கடல்
வாங்குதிரை யுடுத்த மணிபல் லவத்திடைத்
தத்துநீ ரடைகரைச் சங்குழு தொடுப்பின்
முத்துவிளை கழனி முரிசெம் பவளமொடு
விரைமர முருட்டுந் திரையுலாப் பரப்பின்
ஞாழ லோங்கிய தாழ்கண் ணசும்பின்
ஆம்பலுங் குவளையுந் தாம்புணர்ந்து மயங்கி

வண்டுண மலர்ந்த குண்டுநீ ரிலஞ்சி
முடக்காற் புன்னையு மடற்பூந் தாழையும்
வெயில்வர வொழித்த பயில்பூம் பந்தர்

அறல்விளங்கு நிலாமண னறுமலர்ப் பள்ளித்
துஞ்சுதுயி லெழூஉ மஞ்சி லோதி
காதற் சுற்ற மறந்து கடைகொள
வேறிடத்துப் பிறந்த வுயிரே போன்று
பண்டறி கிளையொடு பதியுங் காணாள்

கண்டறி யாதன கண்ணிற் காணா
நீல மாக்கட னெட்டிடை யன்றியும்
காலை ஞாயிறு கதிர்விரித்து முளைப்ப
உவவன மருங்கினி லோரிடங் கொல்லிது
சுதமதி யொளித்தாய் துயரஞ் செய்தனை

நனவோ கனவோ வென்பதை யறியேன்
மனநடுக் குறூஉ மாற்றந் தாராய்
வல்லிருள் கழிந்தது மாதவி மயங்கு
மெல்வளை வாராய் விட்டகன் றனையோ
விஞ்சையிற் றோன்றிய விளங்கிழை மடவாள்

வஞ்சஞ் செய்தனள் கொல்லோ வறியேன்
ஒருதனி யஞ்சுவென் றிருவே வாவெனத்
திரைதவழ் பறவையும் விரிசிறைப் பறவையும்
எழுந்துவீழ் சில்லையு மொடுங்குசிறை முழுவலும்
அன்னச் சேவ லரச னுகைப்

பன்னிறப் புள்ளினம் பரந்தொருங் கீண்டிப்
பாசறை மன்னர் பாடி போல
வீசுநீர்ப் பரப்பி னெதிரெதி ரிருக்கும்
துறையுந் துறைசூழ் நெடுமணற் குன்றமும்
யாங்கணுந் திரிவோள் பாங்கினங் காணாள்

குரற்றலைக் கூந்தல் குலைந்துபின் வீழ
அரற்றினள் கூஉ யழுதன ளேங்கி
வீழ்துய ரெய்திய விழுமக் கிளவியிற்

ருழ்துய ருறுவோ டந்தையை யுள்ளி
எம்மிதிற் படுத்தும் வெவ்வினை யுருப்பக்
கோற்றெடி மாதரொடு வேற்றுநா டடைந்து
வைவா ளுழந்த மணிப்பூ ணகலத்
தையா வோவென் றழுவோண் முன்னர்
விரிந்திலங் கவிரொளி சிறந்துகதிர் பரப்பி
உரைபெறு மும்முழ நிலமிசை யோங்கித்
திசைதொறு மொன்பான் முழநில மகன்று
விதிமா ணாடியின் வட்டங் குயின்று
பதும சதுர மீமிசை விளங்கி
அறவோற் கமைந்த வாசன மென்றே
நறுமல ரல்லது பிறமரஞ் சொரியாது
பறவையு முதிர்சிறை பாங்குசென் றதிராது
தேவர்கோ னிட்ட மாமணிப் பீடிகை
பிறப்புவிளங் கவிரொளி யறத்தகை யாசனம்
கீழ்நில மருங்கி னாகநா டாளும்
இருவர் மன்னவ ரொருவழித் தோன்றி
எமதீ தென்றே யெடுக்க லாற்றார்
தமபெரும் பற்று நீங்கலு நீங்கார்
செங்கண் சிவந்து நெஞ்சுபுகை யுயிர்த்துத்
தம்பெருஞ் சேனையொடு வெஞ்சமம் புரிநாள்
இருஞ்செரு வொழிமி னெமதீ தென்றே
பெருந்தவ முனிவ னிருந்தற முரைக்கும்
பொருவறு சிறப்பிற் புரையோ ரேத்தும்
தரும பீடிகை தோன்றிய தாங்கென்.

## குறிப்புரை

வரி

1. இவள் - சுதமதி.

5. விரைமரம் - சந்தனம், அகில் முதலியன.

6. ஞாழல் - புலிநகக் கொன்றை என்ற ஒரு மரம். அசும்பு - சேறு.

7. மயங்கி - கலந்து.

8. குண்டு நீர் இலஞ்சி - ஆழமான நீரையுடைய பொய்கை.

9. முடம் கால் - வளைந்த அடிமரம்.

10. வெயில் வரவொழித்த பந்தர் - வெயில் படாதபடி அமைந்த பந்தல்.

11. அறல் - நீர் ஓட்டத்தினுல் அலை அலையாக அமைந்தது. நிலா மணல் - வெள்ளிய மணல்.

12. எழூஉம் - எழுகின்ற. அஞ்சிலோதி - அழகிய சிலவாய மயிரினை யுடையாள்; அன்மொழித்தொகை. இங்கு மணிமேகலையைக் குறிக்கும்.

13. கடைகொள - முடிவுகொள்ள.

15. கிளை - உறவினர். பதி - ஊர்.

16. காணு - கண்டு.

17. நெட்டிடை - நெடிய இடம்.

19. "உவவனம் மருங்கினில்.........", என்பது முதல் "......திருவே வா", (27) என்பது வரை மணிமேகலை கூற்று.

22. நடுக்குறூஉம் - நடுங்கும். மாற்றம் - மறுமொழி.

23. மாதவி மயங்கும் - மாதவி மயங்குவாள்.

25. விஞ்சையில் தோன்றிய - வித்தையினுல் உண்டான.

27. ஒரு தனி அஞ்சுவென் - ஒப்பற்ற தனிமையை அஞ்சுகின்றேன்.

28—33. பலவகைப் பறவைகள் அன்னச் சேவலை அரசனுகக் கொண்டு (அரசர் பாடி போல்) எதிர் எதிர் இருக்கும் நீர்ப்பரப்பு.

35. மணிமேகலை சுதமதியை எங்கும் தேடியும் காணவில்லை.

36. குரல் தலைக் கூந்தல் - பூங்கொத்தையுடைய கூந்தல்.

37. அரற்றினள் - புலம்பி; முற்றெச்சம். கூஉய் - கூவி.

38. விழுமக்கிளவி - துன்பத்தைத் தெரிவிக்கும் சொற்கள்.

39. தந்தையை உள்ளி - கோவலனை நினைத்து.

40. எம்மிதிற்படுத்தும் வெவ்வினை - எம்மை இத்துன்பத்தில் அகப்படுத்திய கொடிய வினை. உருப்ப - கோபிக்க; முதிர்ச்சியடைய.

41. கோல்தொடி மாதர் - கண்ணகி. வேற்றுநாடு - பாண்டி நாடு.

42—43. வை வாள் உழந்த மணிப் பூண் அகலத்து ஐயா - கூரிய வாளினுல் வெட்டுண்டு வருந்திய அழகிய ஆபரணம் அணிந்த மார்பையுடைய தந்தையே!

43. அழுவோள் முன்னர் - அழுபவளாகிய மணிமேகலையின் எதிரே.

44—53. தரும பீடிகை என்ற புத்த பீடிகையின் வருணனை.

45—46. நிலமிசை மும்முழம் ஓங்கி - பூமியின்மீது மூன்று முழம் உயர்ந்து; திசைதொறும் ஒன்பான் முழம் அகன்று - பக்கவாட்டில் ஒன்பது முழம் அகலமுடையதாகி.

47. விதிமாண் ஆடியின் வட்டம் குயின்று - விதிப்படி சிறப்பான பளிங்கினுல் வட்டமாகச் செய்யப்பட்டு.

48. பதும சதுரம் - பதுமத்தையுடைய சதுரம்; அல்லது புத்தனுடைய பாதத்தையுடைய சதுரம்.

49. அறவோற்கு - புத்தனுக்கு.

50. மரம் நறுமலரை மட்டும் சொரியும்.

51. பறவை அதன் பக்கல் சென்று சிறகு அடித்து ஒலி செய்யாது.

52. தேவர்கோன் - இந்திரன்.

53. பிறப்பு விளங்கு அறத்தகை ஆசனம் - காண்போருடைய பழம் பிறப்புக்களை அறிவிக்கும் தரும பீடிகை.

54—61. கீழ்த்திசையில் நாகநாடு ஆளும் அரசர் இருவர் இந்தத் தரும பீடிகையைத் தம்முடையது என்று கூறிக்கொண்டு, அதை எடுத்துச் செல்ல வலிமையில்லாதவராகி, தம் விருப்பமும் நீங்காமல் தம்முள் போர் புரிந்தனர். அப்பொழுது புத்தன் தோன்றி, அவர்கள் போரை நிறுத்தி, இந்த ஆசனம் தனதெனக் கூறி, இதில் அமர்ந்து அறமுரைத்தான்.

62. புரையோர் - உயர்ந்தோர். ஏத்தும் - புகழும்.

43—63. அழுவோள் முன்னர்த் தருமபீடிகை தோன்றியது என முடிக்க.

## வினாக்கள்

1. மணிபல்லவத் தீவில் மணிமேகலை துயிலெழுந்த இடத்தைச் சாத்தனார் எவ்வாறு வருணிக்கின்றார்?

2. "வேறிடத்துப் பிறந்த உயிரே போன்று"—இது யாரைக் குறிக்கிறது? பொருத்தத்தை விளக்குக.

3. துயிலெழுந்த மணிமேகலை அவ்விடத்தைப் பற்றியும் சுதமதியைப் பற்றியும் என்ன நினைத்தாள்?

4. மணிபல்லவத்து நீர்த்துறைகளில் பறவைகள் எவ்வாறு அமர்ந்திருந்தன?

5. மணிமேகலை தன் தந்தையை நினைத்துக் கூறியதென்ன?

6. தருமபீடிகையை விவரிக்க.

7. தருமபீடிகையைக் குறித்துப் போரிட்டவர் யாவர்? முடிவு யாதாயிற்று?

## பயிற்சி

1. பொருள் கூறுக :—அறல்; அஞ்சிலோதி; மாற்றம்; விஞ்சை; ஒரு தனி அஞ்சுவென்; குரல்தலைக் கூந்தல்; கூஉய்; விழுமக்கிளவி; உள்ளி; உருப்ப; வைவாள்; வெஞ்சமம்; பொருவறு; புரையோர்.

2. இப்பகுதியில் வந்துள்ள (i) மலர்த்தாவரங்கள், (ii) பறவைகள் இவற்றின் பெயர்களை எடுத்தெழுதுக.

3. இப்பகுதியிலிருந்து (i) அளபெடை, (ii) ஆகுபெயர், (iii) அன்மொழித் தொகை இவற்றிற்கு உதாரணங்கள் தருக.

# 2. பெருங் கதை

இந்நூல் கொங்கு வேளிர் என்பவரால் இயற்றப்பெற்றது. அதனால் இதற்குக் கொங்குவேள் மாக்கதை என்ற மற்றொரு பெயருமுண்டு. உதயணனுடைய வரலாற்றைக் கூறுவதாதலின் உதயணன் கதை என்றும் கூறுவர். இது சைன சமயத்தைச் சார்ந்த நூல். இந்நூல் முழுவதாகக் கிடைக்காவிடினும் பெரும் பகுதி கிடைத்துள்ளது. இது ஒரு பழமையான நூல். இதில் உதயணன் வாசவதத்தையுடன் மருதநிலங் கடந்து கோசாம்பிக்குச் சென்ற பகுதி உங்களுக்குப் பாடமாக வந்துள்ளது.

## மருதநிலங் கடந்தது

(பிரச்சோதனன் படைவீரர் செயல்)

விழவணி விழுநகர் விலாவணை யெய்த
முழுவணி முன்றிலொடு முதுநகர் புல்லென
அழுகை யாகுலங் கழுமிய கங்குல்
மதியா மன்னனைப் பதிவயிற் றம்மென
வெல்போர் வேந்தன் விடுக்கப் பட்ட
பல்போர் மறவ ரொல்லென வுலம்பிப்

(குதிரைகள்)

புடைப்போர்ப் புளகத் துடப்புமறைப் பருமத்துத்
தீப்படு கரணத்துக் கணைவிடு விசைய
செய்வினைத் தச்சன் கைவினைப் பொலிந்த
வேற்றவ ரொல்லென வேற்றினன் பாய்த்துள
கண்டிரள் கலினமொடு பிண்டிகைக் கவ்வித்
திரைத்தலைப் பிதிர்வி னுரைக்கும் வாயின
கற்றோர்க் கமைந்த கருவி மாட்சிய
பொற்றா ருடுத்த பொங்குமயிர்ப் புரவி

(தேர்கள்)

புரவி பூண்ட பொன்னுகக் கொடுஞ்சிப்
பரவைத் தட்டிற் பன்மணிப் பலகை
அடிதொடைக் கமைந்த கிடுகுடைக் காப்பிற்
காழமை குழிசிக் கதிர்த்தவா ரத்துச்

சூழ்பொற் சூட்டிற் சுடர்மணிப் புளகத்
தாழாக் கடுஞ்செல லாழித் திண்டேர்

(யானைகள்)

திண்டேர்க் கமைந்த தண்டாக் காப்பிற்
குன்றுகண் டன்ன தோன்றல குன்றின்
அருவி யன்ன வுருவுகொ ளோடைய
ஓடைக் கமைந்த சூழிச் சுடர்நுதற்
கோடில வெழுதிய கோலக் கும்பத்
திடுபூந் தாம மிருங்கவு ளசைஇப்
படுவண் டோப்பும் பண்ணமை கோலத்து
விண்ணுரு மன்ன வெடிபடு சீற்றத்
தண்ணல் யானை யவையவை தோறும்

(படைவீரர் செயல்)

மேலாட் கமைந்த காலாட் காப்பிற்
கருவிப் பல்படை கடல்கிளர்ந் தெனவுறப்
பரவை யெழுச்சிப் பக்கமு முன்னும்
வெருவரத் தாக்கி வீழ நூறி
நற்றுணைத் தோழ ருற்றுழி யுதவ
அமிழ்தி னன்ன வஞ்சில் கிளவி
மதர்வை நோக்கின் மாதரைத் தழீஇ
ஓங்கிய தோற்றமொ டொருதா னாகி
நீங்கிய மன்னற்கு நிகழ்ந்தது கூறுவேன்.
சேரா மன்னனுஞ் சேனையம் பெரும்பதிக்
கோரிரு காவத மூரா மாத்திரம்

(சூரியன் அத்தமித்தல்)

விரிகதிர் பரப்பி வியலகம் விளக்கும்
பரிதி ஞாயிறு பல்லவர் காணின்
அற்றந் தருமென வருள்பெற் றதுபோற்
கொற்ற வெங்கதிர் குளிர்கொளச் சுருக்கிக்
குண்டகன் கிடக்கைக் குடகடற் குளிப்ப

(மாலை வருணனை)

வண்டகத் தடக்கிய வாய வாகிக்
கூலப் பொய்கையு ணீலமொடு மலர்ந்த
கோலக் கழுநீர்க் குழிவாய் நெய்தல்
எழுநீர்க் குவளையொ டின்னவை பிறவும்
தாமரை தலையாத் தன்னகர் வரைப்பகம்
ஏம மாகவிவ னெய்துவ னென்றுதம்
தூய்மை யுள்ளமொடு கோமகற் கூப்பும்
குறுந்தொடி மகளிர் குவிவிரல் கடுப்ப
நறுந்த ணுற்றம் பொதிந்த நன்மலர்த்
தடங்கயந் துறந்த தன்மைய வாகிக்
குடம்பை சேர்ந்து குரல்விளி பயிற்றிப்
புட்புலம் புறுத்த புன்கண் மாலை
கட்புல மருங்கிற் கலந்த ஞாயிற்று
வெப்ப நீக்கித் தட்பந் தான்செயக்

(பிடியின் நிலை)

கண்ணுறு பிறங்கற் கருவரை நுனித்தலை
வெண்ணிற வருவி வீழ்ச்சி யேய்ப்ப
மத்தக மருங்கின் மாலையொடு கிடந்த
நித்திலத் தாம நிலையின் வழாமை
வைத்த தலையிற் ருக வலிசிறந்து
வித்தகக் கோலத்து வீழ்ந்த கிழவற்குப்
பத்தினி யாகிய பைந்தொடிப் பணைத்தோட்
டத்தரி நெடுங்கட் டத்தை தம்மிறை
ஆணை யஞ்சிய வசைவுநன் கோம்பிக்
கோணை நீண்மதிற் கொடிக்கோ சம்பி
நகைத்துணை யாய மெதிர்கொள நாளைப்
புகுத்துவ லென்பது புரிந்தது போலப்
பறத்தரல் விசையினும் பண்ணினு மண்மிசை
உறப்புனைந் தாரு முதயணன் வலப்புறத்
தறியக் கூறிய செலவிற் ருகிக்
கோடுதல் செல்லாது கோமகன் குறிப்பறிந்

தோடுதல் புரிந்த வுறுபிடி மீமிசை
........................................
........................................
அம்மென் மருங்கு லசைந்தசைந் தாடப்
பொம்மென வுயிர்க்கும் பூநுதற் பாவையைக்
கைம்முதற் றழீஇக் காஞ்சனை யுரைக்கும்.

## குறிப்புரை

1. விழவு - நீர்விழா. விலாவணை - அழுகை.
2. முதுநகர் - உச்சயினி நகரம்.
3. ஆகுலம் - துன்பம். கழுமிய - நிறைந்த.
4. மதியா மன்னனை - மதிக்காத மன்னனாகிய உதயணனை.
6. ஒல்லென - விரைவின். உலம்பி - முழங்கி.
7. போர்ப்புளகத்து - இரட்டைக் கண்ணாடியாலும், போர்க்கிற போர்வையாலும். உடப்புமறை - உடம்பை மறைக்கின்ற. பருமம் - சேணம்.
8. கரணம் - செயல். இசைய - ஒத்த.
10. வேற்றவர் ஒல்லென - பகைவர் அஞ்ச. ஏற்றின் - சிங்கத்தைப் போன்ற. பாய்த்துள - பாய்தலையுடையனவாய.
11. கலினம் - கடிவாளம். பிண்டிகை - செம்பஞ்சிக் கூட்டம்.
14. தார் - கிண்கிணிமாலை.
15. நுகம் - நுகக்கால். கொடுஞ்சி - தேரின் ஒருறுப்பு.
16. பரவை - பரப்பான. தட்டு - தேரின் மற்றோர் உறுப்பு.
17. அடி - அடிவைத்தற்கும். தொடை - அம்புகளைத் தொடுத்தற்கும். கிடுகு - பகைவர் அம்பு படாதவாறு காக்கும் சட்டப் பலகை. காப்பு - காவலையுடைய.
18. குழிசி - உருளையின் குறடு, சக்கரத்தின் குடம். ஆரம் - ஆரக்கால்.
19. சூட்டு - ஆரக்காலைச் சூழ்ந்திருக்கும் வட்டை. புளகம் - கண்ணாடி.
20. கடுஞ்செலல் - விரைந்து செல்லுதலையுடைய.
21. தண்டா - குறையாத.
22. தோன்றல - காட்சியையுடையன.
23. ஓடைய - முகபடாத்தையுடைய.
24. சூழி - நெற்றிப்பட்டம், யானைமுகத்தணி.
25. இலவெழுதிய - இலவம்பூவை எழுதிய. கும்பம் - மத்தகம்.
26. கவுள் - கன்னங்கள்.
27. ஒப்பும் - ஓட்டுகின்ற. பண்ணமை - திருத்தம் அமைந்த.

28. உரும் - இடி.
30. மேலாள்- வாகனங்களின் மேலிருப்பவர்.
31. கருவி - தொகுதியான.
32. பரவை எழுச்சி - பரந்து எழுதலையுடையவாய்.
33. நூறி - அழித்து.
36. மதர்வை - களிப்புடைய.
39. சேராமன்னன் - பகைவன். உஞ்சேனை - உச்சயினி.
40. காவதம் - 16 கிலோ மீட்டர் என்று கூறுவர். ஊரா மாத்திரம் - செல்லுதற்கு முன்பே.
41. வியலகம் - பரந்த விடம்.
42. பரிதி - வட்டம். பல்லவர் - பலர்.
43. அற்றம் - சோர்வு. அருள் பெற்றது போல் - இரக்கம் கொண்டவன் போல். தற்குறிப்பேற்ற அணி.
44. குளிர்கொள - குளிர்ச்சி பெறும்படியாக.
45. குண்டு அகன் கிடக்கை - ஆழமும் அகலமு முடைய இடத்தைக்கொண்ட.
47. கூலம் - கரை.
48. குழிவாய் - குழிந்த வாயையுடைய.
49. எழுநீர் - நீர்எழு என்று மாற்றியமைக்க.
50. வரைப்பகம் - எல்லை.
51. ஏமம் - பாதுகாப்பு.
55. தடங்கயம் - பெருங்குளம்.
56. குடம்பை - கூடு. குரல் விளி - கூக்குரல்.
57. புலம்புறுத்த - தனித்த, துன்புறுத்திய. புன்கண் - துன்பம்.
59. தட்பம் - குளிர்ச்சி.
60. கண்ணுறு பிறங்கல் - கண்ணிற்கு நிறைந்து தோன்றுதலை யுடைய.
61. ஏய்ப்ப - போல.
63. வழாமை - வழுவாதபடி.
65. வித்தகக் கோலத்து - ஆசிரிய உருவில். வீழ்ந்த - விரும்பிய.
67. தத்து அரி-பரவிய கோடுகள் பொருந்திய. தத்தைதம் இறை - பிரச்சோதனன்.
68. அசைவு - வருத்தம். நன்கு ஓம்பி - நன்குக (ஆறுதல் கூறிப்) பாதுகாத்து.
69. கோணை - வலிமை.
72. பறத்தரல் விசை - பறப்பது போன்ற விசை.
75. கோடுதல் - மாறுபாடு.
79. மருங்குல் - இடை.
80. பொம்மென - விரைவுக்குறிப்பு.
81. காஞ்சனை - வாசவதத்தையின் தோழி.

### வினாக்கள்

1. பெருங்கதையின் வேறு பெயர்களும் காரணமும் தருக.
2. பிரச்சோதனன் படை வீரர் முழங்கக் காரணம் யாது?
3. குதிரைப் படையின் பெருமையினை விளக்குக.
4. தேர்ப்படை எவ்வாறு சிறப்புற்றிருந்தது?
5. யானைகளை ஆசிரியர் எவ்வாறு விளக்குகிறார்?
6. காலாட்படைச் செயல்களை விளக்குக.
7. உதயணன் எவ்வாறு படைவீரர்களை விலக்கினான்?
8. சூரியன் மறைதலை ஆசிரியர் எவ்வாறு விளக்குகிறார்?
9. உதயணன் வாசவதத்தையைக் கொண்டு சென்ற மாலைக்கால நிலையை விளக்குக.
10. உதயணன் வாசவதத்தையை எவ்வாறு கொண்டு சென்றான்?
11. வாசவதத்தையை யார் யார் எவ்வாறு தேற்றினர்?
12. தற்குறிப்பேற்றஅணி பற்றி விளக்கி அது உங்களுக்கு இப் பகுதியில் வந்துள்ள இடத்தையும் விளக்குக.

### பயிற்சி

1. உதயணன் வாசவதத்தையை எடுத்துக்கொண்டு சென்ற நிலை பற்றி ஒரு கட்டுரை வரைக.
2. வாசவதத்தையை எடுத்துச் சென்ற யானை, காஞ்சனை முதலியவர்களைப்பற்றி அறிந்து கொள்ளுங்கள்.
3. படைவீரர்கள், உதயணன் வாசவதத்தையை எடுத்துச்சென்ற விதம் பற்றியும், அவன் வலிமை பற்றியும், பிரச்சோதனனிடம் கூறுவதாக ஒரு கட்டுரை எழுதுங்கள்.
4. வாசவதத்தைக்கு உதயணன் கூறத்தக்க தேற்ற உரைகளையும் காஞ்சனை கூறத்தக்க தேற்ற உரைகளையும் எழுதுக.

## 3. வில்லி பாரதம்

இந்நூலை இயற்றியவர் வில்லிபுத்தூரர். அதனாலேயே இந் நூலுக்கு வில்லி பாரதம் என்னும் பெயர் ஏற்படலாயிற்று. இவ்வாசிரியர் தமிழ்ப் புலமை மிக்கவர். இவருடைய பாடல்கள் பல இன்னோசைகளுடன் கூடியதாய் அழகுடன் விளங்குவன. இவர் வரபதியாட்கொண்டான் என்ற அரசனின் வேண்டுகோட்படி இந்நூலை இயற்றினார் என்று கூறுவார்கள். இவரது காலம் இற்றைக்கு 500 ஆண்டுகட்கு முன் என்பர். உங்களுக்குப் பாடமாக வந்திருக்கும் பகுதி கன்ன பருவத்திலுள்ளது.

**கன்னபருவம்**

அத்தவெற் பிரண்டு விற்கிடை யெனப்போய்
ஆதவன் சாய்தல்கண் டருளி
முத்தருக் கெல்லா மூலமாய் வேத
முதற்கொழுந் தாகிய இறைவன்
சித்திரச் சிலைக்கை விசயனைச் செருநீ
யொழிகெனத் தேர்மிசை நிறுத்தி
மெய்த்தவப் படிவ வேதிய னாகி
வெயிலவன் புதல்வனை யடைந்தான். 1

தாண்டிய தரங்கக் கருங்கட லுடுத்த
தரணியில் தளர்ந்தவர் தமக்கு
வேண்டிய தருதி நீயெனக் கேட்டேன்
மேருவி னிடைத்தவம் பூண்டேன்
ஈண்டிய வறுமைப் பெருந்துய ருழந்தேன்
இயைந்ததொன் றிக்கணத் தளிப்பாய்
தூண்டிய கவனத் துரகதத் தடந்தேர்ச்
சுடர்தரத் தோன்றிய தோன்றல், 2

என்றுகொண் டந்த அந்தண னுரைப்ப
இருசெவிக் கமுதெனக் கேட்டு
வென்றிகொள் விசயன் விசயவெங் கணையால்
மெய்தளர்ந் திரதமேல் விழுவோன்
நன்றென நகைத்துத் தரத்தகு பொருணீ
நவில்கென நான்மறை யவனும்
ஒன்றிய படிநின் புண்ணிய மனைத்தும்
உதவுகென் றலுமுள மகிழ்ந்தான். 3

ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலா நயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையால்
ஓவிலா தியான்செய் புண்ணிய மனைத்தும்
உதவினேன் கொள்கநீ உனக்குப்
பூவில்வா ழயனு நிகரல னென்றாற்
புண்ணிய மிதனினும் பெரிதோ. 4

என்னமுன் மொழிந்து கரங்குவித் திறைஞ்ச
இறைஞ்சலர்க் கெழிலியே றனையான்
கன்னனை யுவகைக் கருத்தினு ணோக்கிக்
கைப்புன லுடன்தரு கென்ன
அன்னவ னிதயத் தம்பின்வா யம்பால்
அளித்தலு மங்கையா லேற்றான்
முன்னமோ ரவுணன் செங்கைநீ ரேற்று
மூவுல கமுமுடன் கவர்ந்தோன். 5

மல்லந் தொடையல் நிருபனை முனிவன்
மகிழ்ந்துநீ வேண்டிய வரங்கள்
சொல்லுக உனக்குத் தருதும்என் றுரைப்பச்
சூரன்மா மதலையுஞ் சொல்வான்
அல்லல்வெவ் வினையா லின்னமுற் பவமுண்
டாயினு மேழெழு பிறப்பும்
இல்லையென் றிரப்போர்க் கில்லையென் றுரையா
இதயநீ அளித்தருள் என்றான். 6

மைத்துனன் உரைத்த வாய்மைகேட் டையன்
மனமலர் உகந்துகந் தவனைக்
கைத்தல மலரால் மார்புறத் தழுவிக்
கண்மலர்க் கருணைநீ ராட்டி
எத்தனை பிறவி யெடுக்கினு மவற்றுள்
ஈகையுஞ் செல்வமு மெய்தி
முத்தியும் பெறுதி முடிவில்என் றுரைத்தான்
மூவரு மொருவனா மூர்த்தி. 7

போற்றிய கன்னன் கண்டுகண் களிப்பப்
புணரிமொண் டெழுந்தகார் முகிலை
மாற்றிய வடிவும் பஞ்சவா யுதமும்
வயங்குகைத் தலங்களு மாகிக்
கூற்றுறழ் கராவின் வாயினின் றழைத்த
குஞ்சர ராசன்மு னன்று
தோற்றிய படியே தோற்றினான் முடிவுந்
தோற்றமு மிலாதபைந் துளவோன். 8

அமரரா னவரும் அமரயோ னிகளும்
அமரருக் கதிபனு னவனும்
கமலநான் முகனும் முனிவருங் கண்டு
கனகநாண் மலர்கொடு பணிந்தார்
சமரமா முனையிற் றனஞ்சயன் கணையால்
சாய்ந்துயிர் வீடவும் செங்கண்
அமலநா ரணனைக் காணவும் பெற்றேன்
என்றுதன் னகமிக மகிழ்ந்தான். 9

அருந்தழன்மா மகம்புரிந்தும் கடவுட் கங்கை
ஆதியாம் புனல்படிந்து மனில யோகத்
திருந்துமணி மலர்தூவிப் பூசை நேர்ந்தும்
எங்குமா கியவுன்னை இதயத் துள்ளே
திருந்தநிலை பெறக்கண்டும் போக மெல்லாஞ்
சிறுகியனைத் துயிருக்குஞ் செய்ய வொண்ணுப்
பெருந்தவங்கள் மிகப்பயின்றும் பெறுதற் கெட்டாப்
பெரும்பயனின் றிருவருளாற் பெறப்பெற் றேனே. 10

நீலநெடுங் கிரியுமழை முகிலும் பவ்வ
நெடுநீருங் காயாவும் நிகர்க்கு மிந்தக்
கோலமும்வெங் கதைவாளஞ் சங்கு நேமி
கோதண்ட மெனும்படையுங் குழைந்த வாச
மாலைநறுந் துழாய்மார்பும் திரண்ட தோளும்
மணிக்கழுத்தும் செவ்விதழும் வாரி சாதக்
காலைமல ரெனமலர்ந்த முகமும் சோதிக்
கதிர்முடியு மிம்மையிலே கண்ணுற் றேனே. 11

*தருமன்மகன் முதலான அரிய காதல்
தம்பியரோ டமர்மலைந்து தறுக ணுண்மைச்
செருவிலென துயிரனைய தோழற் காகச்
செஞ்சோற்றுக் கடன்கழித்தேன் றேவர் கோவுக்
குரைபெறுநற் கவசகுண் டலமு மீந்தேன்
உற்றபெரு நல்வினைப்பே றுனக்கே தந்தேன்
மருதிடைமுன் றவழ்ந்தருளுஞ் செங்கண் மாலே
மாதவத்தால் ஒருதமியன் வாழ்ந்த வாறே. 12

*வான்பெற்ற நதிகமழ்தாள் வணங்கப் பெற்றேன்
மதிபெற்ற திருவுளத்தான் மதிக்கப் பெற்றேன்
தேன்பெற்ற துழாயலங்கற் களப மார்பும்
திருப்புயமுந் தைவந்து தீண்டப் பெற்றேன்
ஊன்பெற்ற பகழியினு லழிந்து வீழ்ந்தும்
உணர்வுடனின் றிருநாம முரைக்கப் பெற்றேன்
யான்பெற்ற பெருந்தவப்பே றென்னை யன்றி
இருநிலத்திற் பிறந்தோரில் யார்பெற் றுரே. 13

என்றுமகிழ் வுறவணங்கு மெல்லி மைந்தன்
இன்புறவண் புறவினிலா னிரையின் பின்போய்க்
கன்றுகொடு விளவெறிந்த கண்ணன் றுனும்
கன்னனுக்குக் கட்டுரைப்பான் கடவு ளுதன்
அன்றுனது கவசமுங்குண் டலமும் வாங்க
அழைத்தேனும் குந்தியைக்கொண் டரவ வாளி
ஒன்றெழியத் தொடாதவரங் கொள்வித் தேனும்
உற்பவத்தி னுண்மையுனக் குணர்வித்தேனும், 14

தக்ககன்றன் மகவான உரக வாளி
தனஞ்சயனைச் சதியாமற் சாய்வித் தேனும்
மெய்க்கருணை நின்பொருட்டால் யானே என்று
மீண்டும்போய்த் தேர்வலவன் விசயற் காஞன்
எக்கடலு மெக்கிரியு மெல்லா மண்ணும்
இமையோரு மானுடரு மெல்லா மாகி
மைக்கணிளங் கோவியர்நுண் டுகிலு நாணும்
வரிவளையு மடநெஞ்சும் வாங்கு மாலே. 15

பகலவன்றன் மதலையைநீ பகலோன் மேற்பாற்
பவ்வத்திற் படுவதன்முன் படுத்தி என்ன
இகல்விசய னுறுதியுற அஞ்ச ரீகம்
எனும்மம்பா லவனிதய மிலக்க மாக
அகலுலகில் வீரரெலா மதிக்க வெய்தான்
அந்தவா சுகமுருவி யப்பா லோடித்
தகலுடையார் மொழிபோலத் தரணி யூடு
தப்பாமற் குளித்ததவன் றுனும். வீழ்ந்தான். 16

## குறிப்புரை

1. அத்த வெற்பு - சூரியன் மறையக்கூடிய மலை. விற்கிடை - வில்லினம்பு விழும் தூரம். ஆதவன் - சூரியன். சித்திரம் - அழகு. விசயன் - அருச்சுனன். வேதியன் - மறையவன். வெயிலவன் - சூரியன்.

2. தரங்கம் - அலை. தரணி - பூமி. தளர்ந்தவர் - வறுமையுற்றவர். ஈண்டிய - நிறைந்த. உழந்தேன் - துன்புற்றேன். இயைந்தது - பொருந்தியது. கவனம் - வேகம். துரகதம் - குதிரை. சுடர் - சூரியன்.

3. நவில்க - கூறுவாயாக. ஒன்றியபடி-பொருந்தியபடி. உதவுக - தருவாயாக.

4. அகத்தது - உள்ளே யுள்ளது. புறத்தது - வெளியே யுள்ளது. நயக்கும் - விரும்பும். ஓவிலாது - குறைவின்றி. அயன் - பிரமன்.

5. இறைஞ்சலர் - பகைவர். எழிலிஏறு - இடியேறு. உவகை - மகிழ்ச்சி. கைப்புனல் - கையில் நீர் வார்த்து. அம்பின் வாய் அம்பு - அம்பு தைத்த இடத்துள்ள இரத்த நீர். அங்கை - உள்ளங்கை. அவுணன் - அசுரனாகிய மகாபலி.

6. மல்லல் - வளப்பம். தொடையல் - மாலை. சூரன் - சூரியன். உற்பவம் - பிறப்பு. இதயம் - நெஞ்சம்.

7. உகந்து - விரும்பி. கைத்தல மலர் - கையாகிய தாமரை.

8. புணரி - கடல். கார் - கரிய. பஞ்ச ஆயுதம் - திருமாலின் ஐந்து படைகள். (வில், வாள், தடி, சக்கரம், சங்கு என்பன). உறழ் - போன்ற. கரா - முதலை. குஞ்சர ராசன் - கஜேந்திரன் என்ற யானை.

9. அமரயோனி - தேவர்கள் பிரிவினர். கனகம் - பொன். சமரம் - செரு. வீடவும் - அழியவும்.

10. அனிலம் - காற்று. போகம் - இன்பம்.

11. பவ்வம் - கடல். காயா - காயாம்பூ. இம்மை - இப் பிறப்பு.

12. தருமன் - யமன். தருமன் மகன் - உதிட்டிரர். மருது - மருத மரம்.

13. களபம் - சந்தனம். தைவந்து - தடவி; தைவா - பகுதி. பகழி - அம்பு.

14. எல்லி - சூரியன். புறவு - காடு. ஆனிரை - பசுக்கூட்டம். கடவுள்நாதன் - தேவர்களுக்குத் தலைவனாகிய இந்திரன். அரவ வாளி - நாக அத்திரம். தொடாத - ஏவாத. உற்பவம் - பிறப்பு.

15. சதியாமல் - கொல்லாமல். தேர்வலவன் - தேர்ப்பாகன். கோவியர் - இடைப் பெண்கள்.

16. அஞ்சரிகம் - ஓர் அம்பின் பெயர். இலக்கமாக - குறியாக. ஆசுகம் - அம்பு. தகவுடையார் - தகுதியுள்ள பெரியோர். குளித்தது - அழுந்தியது.

## வினுக்கள்

1. வில்லிபுத்தூரார் பற்றிய குறிப்பினை வரைக.
2. கண்ணன் வேதியனுகி வரக் காரணம் யாது?
3. கண்ணன் கர்ணனிடம் வேண்டியது யாது? தன்னைப் பற்றி யாது கூறினுன்?
4. "தரத்தகு பொருள் நீ நவில்க," என்று கூறக் காரணம் யாது?
5. கர்ணன் கண்ணனிடம் புண்ணியத்தைக் கொடுக்கும்போது யாது கூறினுன்?
6. கர்ணன் எவ்வாறு தன் புண்ணியத்தைக் கண்ணனுக்குக் கொடுத்தான்?
7. கண்ணனிடம் கர்ணன் கேட்ட வரம் யாது?
8. கண்ணன் கர்ணனுக்கு எவ்வாறு வரம் அளித்தான்?
9. கண்ணன் கர்ணனுக்கு அளித்த காட்சி யாது?
10. கர்ணன் தன் கடைசிக் காலத்து அகம் மிக மகிழக் காரணம் யாது?
11. கர்ணன் அடைந்த பெரும் பயன்கள் யாவை?
12. கண்ணனுடைய தோற்றம் எவ்வாறு விளக்கப்பட்டிருக்கிறது?
13. கர்ணன் செய்த அரிய செயல்கள் யாவை?
14. கர்ணன் பெற்ற சிறந்த பேறுகள் யாவை?
15. திருமால் பாண்டவர்களுக்காகச் செய்த திருவிளையாடல்கள் யாவை?
16. கர்ணனுடைய முடிவினை விளக்குக.
17. தகலுடையார்.மொழிபோல் - உவமானத்தை உவமேயத்தோடு பொருத்திக் காட்டுக.

## பயிற்சி

1. கர்ணனுக்கும் கண்ணனுக்கும் நிகழ்ந்த பேச்சுக்களை ஓர் உரையாடலாக எழுதுக.
2. வில்லிபுத்தூரார் கண்ணனைப் பற்றிப் புகழும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
3. கர்ணன் தன் வாழ்வு சிறந்தது என்பதற்குக் கூறும் பல காரணங்களையும் விளக்கி எழுதுக.
4. கண்ணனின் தந்திரச் செயல்களில் நான்கினை விளக்கிக் கூறுக.
5. பாரதப் பகுதியில் காணும் கதைக் குறிப்புகளில் ஏதாவது இரண்டு குறிப்புகளை எழுதுக.

## 4. பெரிய புராணம்

இப்பெரிய புராணத்தைப் பாடியவர் சேக்கிழார் சுவாமிகள் ஆவர். இவருடைய இயற் பெயர் அருள்மொழித்தேவர் என்பதாகும். சேக்கிழார் என்பது குடிப்பெயர். இவர் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள குன்றத்தூரில் பிறந்தவர். அனபாய சோழனின் அமைச்சராக இருந்தவர். அவனுடைய வேண்டுகோளின்படி அறுபத்துமூன்று நாயன்மாருடைய வரலாறுகளையும் ஒரு சிறந்த நூலாகப் பாடினர். இது அடியவர்கள் வரலாற்றைக் கூறுவதாதலின் இதற்குப் பெரிய புராணம் என்ற பெயரேற்பட்டது. திருத்தொண்டர் புராணம் என்றும் இதற்கு மற்ரெரு பெயருண்டு. இவர் காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்ருண்டாகும்.

### இளையான்குடிமாறநாயனுர் புராணம்

ஏரின் மல்கு வளத்தி னுல்வரும்
எல்லை யில்லதொர் செல்வமும்
நீரின் மல்கிய வேணி யாரடி
யார்தி றத்து நிறைந்ததோர்
சீரின் மல்கிய அன்பின் மேன்மை
திருந்த மன்னிய சிந்தையும்
பாரின் மல்க விரும்பி மற்றவை
பெற்ற நீடு பயன் கொள்வார், 1

ஆரம் என்பு புனைந்த ஐயர்தம்
அன்பர் என்பதொர் தன்மையால்
நேர வந்தவர் யாவ ராயினும்
நித்த மாகிய பத்திமுன்
கூர வந்தெதிர் கொண்டு கைகள்
குவித்து நின்று செவிப்புலத்(து)
ஈர மென்மது ரப்ப தம்பரி
வெய்த முன்னுரை செய்தபின், 2

*கொண்டு வந்து மனைப்பு குந்து
குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆத னத்திடை
வைத்த ருச்சனை செய்தபின்

உண்டி நாலு விதத்தி லாறு
சுவைத்தி றத்தன ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையின்
அமுது செய்ய அளித்துளார். 3

ஆளும் நாயக ரன்ப ரானவர்
அளவி லாருள மகிழவே
நாளும் நாளும் நிறைந்து வந்து
நுகர்ந்த தன்மையின் நன்மையால்
நீளு மாநிதி யின்ப ரப்பு
நெருங்கு செல்வம் நிலாவிளண்
தோளி ஞரள கைக்கி ருத்திய
தோழ ஞரென வாழுநாள், 4

செல்வம் மேவிய நாளில் இச்செயல்
செய்வ தன்றியும் மெய்யினுல்
அல்லல் நல்குர வான போதிலும்
வல்லர் என்றறி விக்கவே
மல்லல் நீடிய செல்வம் மெல்ல
மறைந்து நாடொறு மாறிவந்
தொல்லை யில்வறு மைப்ப தம்புக
உன்னி ஞர்தில்லை மன்னினுர். 5

இன்ன வாறு வளஞ்சு ருங்கவும்
எம்பி ரான்இளை யான்குடி
மன்னன் மாறன் மனஞ்சு ருங்குதல்
இன்றி உள்ளன மாறியும்
தன்னை மாறி இறுக்க வுள்ள
கடன்கள் தக்கன கொண்டுபின்
முன்னை மாறில் திருப்ப ணிக்கண்
முதிர்ந்த கொள்கைய ராயினுர். 6

ஈர மேனியை நீக்கி இடங்கொடுத்
தார இன்னமு தூட்டுதற் காசையால்
தார மாதரை நோக்கித் தபோதனர்
தீர வேபசித் தார்செய்வ தென்என்று, 7

நமக்கு முன்பிங் குணவிலை யாயினும்
இமக்கு லக்கொடி பாகர்க் கினியவர்
தமக்கு நாம்இன் னடிசில் தகவுற
அமைக்கு மாறெங்ங னேஅணங் கேளன, 8

மாது கூறுவள் மற்றென்றுங் காண்கிலேன்
ஏதி லாரும் இனித்தரு வாரிலை
போதும் வைகிற்று போமிடம் வேறிலை
தீது செய்வினை யேற்கென் செயல்என்று, 9

செல்லல் நீங்கப் பகல்வித் தியசெந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக் கொடுவந்தால்
வல்ல வாறமு தாக்கலும் ஆகும்மற்
றல்ல தொன்றறி யேனென் றயர்வுற, 10

மற்றம் மாற்றம் மனைவியார் கூறமுன்
பெற்ற செல்வம் எனப்பெரி துண்மகிழ்ந்
துற்ற காதலி னல்ஒருப் பட்டனர்
சுற்று நீர்வயல் செல்லத் தொடங்குவார். 11

பெருகு வானம் பிறங்க மழைபொழிந்
தருகு நாப்பண் அறிவருங் கங்குல்தான்
கருகு மையிரு ளின்கணம் கட்டுவிட்
டுருகு கின்றது போன்ற துலகெலாம், 12

எண்ணும் இவ்வுலகத்தவர் யாவரும்
துண்ணெ னும்படி தோன்றிமுன் தோய்ந்திடில்
வண்ணம் நீடிய மைக்குழம் பாமென்று
நண்ணல் செய்யா நடுவிருள் யாமத்து, 13

உள்ளம் அன்புகொண் டூக்கவோர் பேரிடாக்
கொள்ள முன்கவித் துக்குறி யின்வழிப்
புள்ளு றங்கும் வயல்புகப் போயினர்
வள்ள லார்இளை யான்குடி மாறனர். 14

காலி னற்றட விச்சென்று கைகளால்
சாலி வெண்முளை நீர்வழிச் சார்ந்தன

கோலி வாரி இடாநிறை யக்கொண்டு
மேலெ டுத்துச் சுமந்தொல்லை மீண்டனர். 15

வந்தபின் மனைவி யாரும் வாய்தலி னின்று வாங்கிச்
சிந்தையில் விரும்பி நீரில் சேற்றினை அலம்பி ஊற்றி
வெந்தழல் அடுப்பின் மூட்ட விறகில்லை என்ன மேலோர்
அந்தமில் மனையில் நீடும் அலக்கினை அறுத்து வீழ்த்தார். 16

முறித்தவை அடுப்பின் மாட்டி முளைவித்துப் பதமுன் கொள்ள
வறுத்தபின் அரிசி யாக்கி வாக்கிய உலையிற் பெய்து
வெறுப்பிலின் னடிசி லாக்கி மேம்படு கற்பின் மிக்கார்
கறிக்கினி என்செய் கோம்என் றிறைஞ்சினர் கணவ னாரை. 17

வழிவரும் இளைப்பி னோடும் வருத்திய பசியி னாலே
அழிவுறும் ஐயன் என்னும் அன்பினிற் பொலிந்து சென்று
குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க. 18

மனைவியார் கொழுநர் தந்த மனமகிழ் கறிகள் ஆய்ந்து
புனலிடைக் கழுவித் தக்க புனிதபாத் திரத்துக் கைம்மை
வினையினில் வேறு வேறு கறியமு தாக்கிப் பண்டை
நினைவினால் குறையை நேர்ந்து திருவமு தமைத்து நின்று. 19

கணவனார் தம்மை நோக்கிக் கறியமு தான காட்டி
இணையிலா தாரை ஈண்ட அமுதுசெய் விப்போம் என்ன
உணர்வினால் உணர ஒண்ணா ஒருவரை உணர்த்த வேண்டி
அணையமுன் சென்று நின்றங் கவர்துயி லகற்ற லுற்றார். 20

அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய் ஈண்ட அமுதுசெய் தருள்க என்று
தொழும்பனார் உரைத்த போதில் சோதியா யெழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவியாரும் தொண்டரும் திகைத்து நின்றார். 21

*அன்பனே அன்பர் பூசை அளித்தநீ அணங்கி னோடும்
என்பெரும் உலகம் எய்தி இருநிதிக் கிழவன் றானே
முன்பெரு நிதிய மேந்தி மொழிவழி ஏவல் கேட்ப
இன்பமார்ந் திருக்க என்றே அருள்செய்தான் எவர்க்கும்
மிக்கான். 22

## குறிப்புரை

1. வேணி - சடை. மன்னிய - நிலைபெற்ற.

2. ஐயர் - தலைவர். கூர - அதிகமாக. மதுரப்பதம் - இன்சொல்.

3. குலாவு - விளங்குகின்ற. மண்டு காதல் - நிறைந்த அன்பு. அர்ச்சனை - வழிபாடு. நால்வகை உண்டி - உண்ணல், பருகல், கடித்தல், நக்கல் ஆகிய உணவுகள். ஆறு சுவை - தித்திப்பு, புளிப்பு, கார்ப்பு, காழ்ப்பு, கைப்பு, உவர்ப்பு என்பன. அண்டர் நாயகர் - தேவர்களின் தலைவர்.

4. நுகர்ந்த - உண்ட. எண்தோளினர் - எட்டுத் தோள்களையுடைய சிவபெருமான். அளகை - அளகாபுரி' என்பதன் மரூஉ மொழி. இது குபேரனுடைய நகரம்.

5. நல்குரவு - வறுமை. மல்லல் - வளப்பம். ஒல்லையில் - விரைவாக. மன்னினர் - நிலைபெற்றவர்.

6. மாறியும் - விற்றும். இறுக்க - கொடுக்கத்தக்க. கொள்கை - குறிக்கோள்.

7. ஆர - நிறைய. தாரம் - மனைவி. தபோதனர் - அடியவர். தீரவே - முற்றவே.

8. அடிசில் - உணவு. தகவுற - பொருத்தமுற. எங்ஙனே - எவ்விதம்.

9. ஏதிலார் - அயலார். வைகிற்று - கழிந்தது. தீதுசெய்வினையேற்கு - தீவினையேனுக்கு.

10. செல்லல் - துன்பம். வித்திய - விதைத்த. நீர்முளை - நீரிலுள்ள முளைகளை. அயர்வு - துன்பம்.

11. மாற்றம் - வார்த்தை. ஒருப்பட்டனர் - சம்மதித்தார்.

12. பிறங்க - விளங்க. நாப்பண் - நடுவிடம். கணம் - கூட்டம். கட்டு விட்டு - நெகிழ்ந்து.

13. வண்ணம் - நிறம். நீடிய - நிறைந்த. தோய்ந்திடின் - பொருந்தினல். நண்ணல் செய்யா - வெளிவராத.

14. ஊக்க - செலுத்த. இடா - இறை கூடை. கொள்ள - நெல்லை வாரிக்கொண்டு வர.

15. சாலி - நெல். கோலி - வளைத்து. ஒல்லே - விரைவாக.

16. வாய்தலின் - வாசலின். அலக்கு - வரிச்சு.

17. பதம் - பக்குவம். வாக்கிய - ஊற்றிய.

18. அழிவுறும் - துன்புறுவான். செய் - நிலம். முதல் - வேர்.

19. கைம்மை வினை - கைத்தொழில் திறமை. குறையை நேர்ந்து - முன்போலச் செய்யமுடியாத குறையை நினைத்து.

20. இணையில்லாதாரை - ஒப்பு அற்றவரை. ஈண்ட - விரைவில். ஒருவரை - ஒப்பற்ற பெருமானை.

21. தொழும்பனர் - தொண்டர்.

22. அன்பர் பூசை - அடியார் வழிபாடு. ஆர்ந்திருக்க - நிறைந்து அனுபவிப்பாயாக. இருநிதி - நிறைந்த செல்வம்.

### வினுக்கள்

1. சேக்கிழார் வரலாற்றுக் குறிப்பினை எழுதுக.
2. இளையான்குடிமாறர் பாரில் மல்க விரும்பியவை யாவை?
3. இளையான்குடிமாறர் மேற்கொண்ட தொண்டு யாது?
4. அடியாரை உபசரிக்கும் முறையை விளக்கி எழுதுக.
5. மாறனுருக்குச் செல்வம் பெருகக் காரணம் யாது?
6. மாறனுர் வறுமையடையக் காரணம் யாது?
7. இளையான்குடிமாறர் எவ்வாறு தம் தொண்டினை விடாது ஆற்றினுர்?
8. மாறனுர் தம் மனைவியிடம் அடியார்க்கு உணவளிப்பதுபற்றி என்ன கேட்டார்?
9. மாறனுர் மனைவி கூறிய பதில் யாது?
10. முன்பெற்ற செல்வம் என, பாசப்பழி முதல் பறிப்பார் போல— இவ்வுவமைகளை விளக்கி உவமேயங்களோடு பொருத்துக.
11. அடியவர் வந்த இருளின் தன்மையினை விளக்குக.
12. இளையான்குடிமாறர் எவ்வாறு வயலுக்குச் சென்று முளைவாரி வந்தார்?
13. மாறனுர் மனைவியின் அன்பின் பெருக்கை விளக்குக.
14. மாறனுர் மனைவி எவ்வாறு உணவு அமைத்தார்?
15. மாறனுர் அடியவரை எவ்வாறு உணவு உண்ண அழைத்தார்?
16. மாறனுர் திகைத்து நிற்கக் காரணம் யாது?
17. இறைவன் மாறனுருக்கு எவ்வாறு அருள் செய்தான்?
18. "தீது செய் வினையேற்கு என் செயல்?"—இடஞ் சுட்டி விளக்குக.

### பயிற்சி

1. இளையான்குடிமாறர் வரலாற்றை விளக்கி உரைநடையில் வரைக.
2. அடியவர் வழிபாடு செய்யும் முறையையும் அதன் மேன்மையையும் விளக்குக.
3. இளையான்குடிமாறர் மனைவிக்கும் அவருக்கும் நிகழ்ந்த உரையாடலை எழுதுக.
4. இறைவன் தன் தொண்டினைச் சோதித்ததை இளையான்குடி மாறரே சொல்வது போல எழுதுக.
5. குபேரனைப்பற்றி நீவிர் தெரிந்தவைகளை எழுதுக.

## 5. பாஞ்சாலி சபதம்

இந்நூல் தேசீயக் கவி சுப்பிரமணிய பாரதியாரால் இயற்றப்பட்டது. இவர் நாட்டுப் பற்று, மொழிப் பற்று மிக்கவர். இவர் பாடல்கள் அனைத்தும் எழுச்சியூட்டவல்லன. இவர் எளிய இனிய சொற்களைக் கொண்டு நெஞ்சைத் தொட வல்லதாய செய்யுட்களை இயற்றுவதில் வல்லவர். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எட்டையபுரத்தில் பிறந்தவர். தந்தையார் சின்னசாமி ஐயர், தாயார் இலக்குமி அம்மையார். தராசு, கண்ணன் பாட்டு, குயில் முதலிய பல நூற்களையும் பாடல்களையும் எழுதியவர்.

### சூதாடல்

மாயச் சூதினுக்கே—ஐயன்
மனமி ணங்கிவிட்டான்
தாயமு ருட்டலானுர்—ஆங்கே
சகுனி ஆர்ப்பரித்தான்.
நேயமுற் றவிதுரன்—போலே
நெறியு ளோர்களெல்லாம்
வாயை மூடிவிட்டார்—தங்கள்
மதிம யங்கிவிட்டார். (1)

அந்தவே ளையதனில்—ஐவர்க்
கதிபன் இஃதுரைப்பான்
பந்த யங்கள்சொல்வாய்—சகுனி
பரப ரத்திடாதே!
விந்தை யானசெல்வம்—கொண்ட
வேந்த ரோடுநீதான்
வந்தெ திர்த்துவிட்டாய்—எதிரே
வைக்க நிதியமுண்டோ? (2)

தருமன் வார்த்தை கேட்டே—துரியோ
தனனெ ழுந்துசொல்வான்
அருமை யானசெல்வம்—என்பால்
அளவி லாததுண்டு

ஒரும டங்குவைத்தால்—எதிரே
ஒன்ப தாகவைப்பேன்
பெருமை சொல்லவேண்டா—ஐயா
பின்ன டக்குகென்ருன். (3)

ஒருவனு டப்பணயம்—வேறே
ஒருவன் வைப்பதுண்டோ ?
தரும மாகுமோடா !—சொல்வாய்
தம்பி இந்தவார்த்தை ?
வரும மில்லைஐயா—இங்கு
மாமனு டப்பணயம்
மருகன் வைக்கொணுதோ—இதிலே
வந்த குற்றமேதோ ? (4)

பொழுது போக்குதற்கே—சூதுப்
போர்தொ டங்குகின்ருேம்
அழுத லேனிதற்கே ?—என்றே
அங்கர் கோனகைத்தான்
பழுதி ருப்பதெல்லாம்—இங்கே
பார்த்தி வர்க்குரைத்தேன்
முழுது மிங்கிதற்கே—பின்னர்
முடிவு காண்பீரென்ருன். (5)

ஒளிசிறந் தமணியின்—மாலை
ஒன்றை அங்குவைத்தான்
களிமிகுந் தபகைவன்—எதிரே
கனதனங் கள்சொன்ஞன்
விழிஇ மைக்குமுன்னே—மாமன்
வென்று தீர்த்துவிட்டான்
பழியி லாத்தருமன்—பின்னும்
பந்த யங்கள்சொல்வான். (6)

ஆயி ரங்குடம்பொன்—வைத்தே
ஆடு வோமிதென்ருன்
மாயம் வல்லமாமன்—அதனை
வசம தாக்கிவிட்டான்

பாயுமா வோரெட்டில்—செல்லும்
பார மானபொற்றேர்
தாயமு ருட்டலானூர்—அங்கே
சகுனி வென்றுவிட்டான். (7)

எண்ணி லாதகண்டீர்—புவியில்
இணையி லாதவாகும்
வண்ணமுள் ளபரிகள்—தம்மை
வைத்தி ழந்துவிட்டான்
நண்ணு பொற்கடாரம்—தம்மில்
நாலு கோடிவைத்தான்
கண்ணி ழப்பவன்போல்—அவையோர்
கணமி ழந்துவிட்டான். (8)

மாடி ழந்துவிட்டான்—தருமன்
மந்தை மந்தையாக
ஆடி ழந்துவிட்டான்—தருமன்
ஆளி ழந்துவிட்டான்
பீடிழந் தசகுனி—அங்கு
பின்னுஞ் சொல்லுகின்ருன்
நாடிழக் கவில்லை—தருமா
நாட்டை வைத்திடென்ருன். (9)

காயு ருட்டலானூர்—சூதுக்
களிதொ டங்கலானூர்
மாயமுள் ளசகுனி—பின்னும்
வார்த்தை சொல்லுகின்ருன்.
நீஅழித் ததெல்லாம்—பின்னும்
நின்னி டத்துமீளும்
ஒய்வ டைந்திடாதே—தருமா
ஊக்க மெய்துகென்ருன். • (10)

*கோயிற் பூசைசெய்வோர்—சிலையைக்
கொண்டு விற்றல்போலும்
வாயில் காத்துநிற்போன்—வீட்டை
வைத்தி ழத்தல்போலும்

ஆயி ரங்களான—நீதி
யவையுணர்ந் ததருமன்
தேயம் வைத்திழந்தான்—சிச்சீ
சிறியர் செய்கைசெய்தான். (11)

## குறிப்புரை

1. ஐயன் - தலைவனாகிய தருமன். தாயம் - சூதாடுகருவி, பகடை. ஆர்ப்பரித்தான் - இரைந்து பேசினான்.

2. ஐவர்க்கதிபன் - பஞ்சபாண்டவர்களில் தலைவனாகிய தருமன். பரபரத்திடாதே - அவசரப்படாதே. விந்தையான - வியக்கத்தக்க.

3. பின் அடக்குக - அடங்கியிருங்கள்.

4. பணயம் - பந்தயப் பொருள். வருமம் - வீம்பு. மருகன் - மருமகன்.

5. அங்கர்கோன் - அங்க நாட்டுத் தலைவனாகிய கர்ணன். பழுது - குற்றம். பார்த்திவர் - அரசர் (துரியோதனன்).

6. களி மிகுந்த பகைவன் - களிப்பு மிக்க பகைவனான துரியோதனன். கனதனம் - மிகுந்த செல்வம்.

7. வசமதாக்கி விட்டான் - கைப்பற்றிக் கொண்டான். பாயுமா - குதிரை.

8. வண்ணம் - நிறம். பரிகள் - குதிரைகள். கடாரம் - ஒரு வாய கன்ற பாத்திரம்.

9. பீடு - பெருமை. வைத்திடு -வைப்பாயாக.

10. களி - விளையாட்டு. மாயம் - வஞ்சனை. மீளும் - திரும்பிவரும். ஓய்வு - சோர்வு.

11. சிலை - கடவுளின் உருவச்சிலை. சிச்சீ - இகழ்ச்சிக் குறிப் புணர்த்தும் இடைச்சொல். சிறியர் - அற்பர்.

## வினாக்கள்

1. தருமனும் சகுனியும் எவ்வாறு சூதாட்டம் தொடங்கினர்?
2. சூதாட்டம் ஆடும்பொழுது வாயை மூடியவர்கள் யார்? ஏன்?
3. தருமன் சகுனியிடம் கேட்டவை யாவை?
4. "பெருமை சொல்ல வேண்டா ஐயா பின் அடக்குக" இடஞ் சுட்டி விளக்குக.
5. "இந்த வார்த்தை தருமமாகுமோடா?" எந்த வார்த்தை?
6. துரியோதனன் சகுனிக்காகத் தான் பணயம் வைத்தமைக்குக் கூறிய அமைதி என்ன?
7. அங்கர்கோன் நகைத்துக் கூறியவை யாவை?
8. தருமர் வைத்த பணயப் பொருள்கள் யாவை?

9. சகுனி எவ்வாறு தருமரைச் சூதாட்டத்தில் ஊக்கப் படுத்தினன்?

10. தருமர் தேயம் இழந்ததற்குப் புலவர் கூறும் உவமைகள் யாவை? அவைகளைப் பொருத்திக் கூறுக.

### பயிற்சி

1. தருமரைச் சகுனி பல சூழ்ச்சிகளால் சூதாட்டத்திற்கு அழைப்பதை ஓர் உரையாடல் மூலம் விளக்குக.

2. கடைசிப் பாட்டில் காணும் நயங்களையும் உவமைச் சிறப்புகளையும் எழுதுக. அப்பாட்டிலிருந்து ஆசிரியர் கருத்தினையும் விளக்குக.

3. தருமர் சூதாட்டத்தில் பிரியமுள்ளவர் என்பதை எப்படி நீ அறிவாய்? அகச்சான்று தந்து விளக்குக.

4. "சூதாட்டம் கொடிது" என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.

## 6. ஆசிய ஜோதி

ஆசிய ஜோதி என்ற நூலின் ஆசிரியரான கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள், தமிழின் மறுமலர்ச்சிக்குக் காரணமான பெரும்புலவர்களுள் ஒருவர். இவர் நாஞ்சில் நாட்டில் சுசீந்தரத்தை அடுத்த தேரூரில் பிறந்தவர். தந்தையார் சிவதாணுப் பிள்ளை; தாயார் ஆதிலட்சுமி அம்மாள் ஆவர். அண்மையில் இவ்வுலகை விட்டு மறைந்தார். இவர் மலரும் மாலையும், நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம் முதலிய பல நூல்களையும் எழுதியுள்ளார்.

ஆசிய ஜோதி என்ற நூல், புத்தர் பிரானது வரலாற்றுப் பகுதிகள் சிலவற்றை இனிய தமிழ்ப்பாடல்களால் எடுத்துரைக்கின்றது. அவற்றுள் இங்குத் தேர்ந்து எடுத்துள்ள பகுதி புத்தரும் ஏழைச் சிறுவனும் என்பதாகும்.

### புத்தரும் ஏழைச் சிறுவனும்

#### புத்தர் மயங்கி விழுதல்

புண்ணிய மூர்த்தி புத்தமா முனிவன்
உண்மையை உணர்ந்திவ் வுலகினி லென்றும்
அழியா வின்பம் அடையு மவாவினுல்
மன்னர் வாழ்வையும் மறுத்தவ னுகித்
தந்தையை மறந்து தனயனைத் துறந்து
மங்கை யசோதரை மதிமுகம் நீத்து

நள்ளிர வதனில் நன்னகர் நீங்கி
உண்ணும் உணவும் உறக்கமும் இன்றி
இரவும் பகலும் இடைவிடா தெங்கும்
நடந்து மெலிந்து நலிவுற் றொருநாள்
வேனில் வெயிலில் வெந்தெரி கானலில்
கைகால் தளர்ந்து கண்களும் மூடி
மூச்சும் அடங்கி முகமும் வெளிறி
உயிரும் உடம்பி லூச லாட
விஞ்சிய மயக்கால் வீழ்ந்து கிடந்தனன். 1

சிறுவன் புத்தரைக் காணல்

வேறு

ஆடுகள் மேய்த்துவரும் — ஒருவன்
ஆயர் குலச்சிறுவன்
வாடிக் கிடந்தவனைச் — செல்லும்
வழியின் மீதுகண்டான் 2

சிறுவன் செயல்

வையகம் வாழ்ந்திடவே — பிறந்த
மாதவச் செல்வன்முகம்
வெய்யிலில் வெந்திடாமல் — தழைகள்
வெட்டி அருகில்நட்டான் 3

தெய்வ குலத்திவனை — எளியேன்
தீண்டலும் ஆகாதினிச்
செய்வதும் யாதெனவே — சிறிது
சிந்தை தயங்கிநின்ருன். 4

உள்ளந் தெளிந்துடனே — வெள்ளாடு
ஒன்றை அழைத்துவந்து
வள்ளல் மயக்கொழிய — மடுவை
வாயில் கறந்துவிட்டான். 5

நட்ட தழைகள்எல்லாம் — வளர்ந்து
நாற்புற முங்கவிந்து
கட்டிய மாளிகைபோல் — வனத்தில்
காட்சி யளித்தஅம்மா ! 6

பூவொடு காய்கனியும் — தளிரும்
பொலிந்து நிரம்பியங்கே
மேவு பலமணிகள் — இழைத்த
விதானமும் ஆனஅம்மா ! 7

ஐயனை இவ்வுலகம் — காணுதற்(கு)
அரியவோர் தெய்வமெனக்
கைகள் தொழுதுநின்றான் — சிறுவன்
களங்கமி லாவுளத்தான். 8

புத்தர் எழுந்து பால் கேட்டல்

நிலத்திற் கிடந்தஐயன் — மெல்ல
நிமிர்ந்து தலைதூக்கிக்
"கலத்தினி லேகொஞ்சம் — பாலைக்
கறந்து தருவாய்" என்றான். 9

சிறுவன் மறுத்தல்

"ஐயையோ ! ஆகாது" என்றான் — சிறுவன்
"அண்ணலே ! யானும்உனைக்
கையினால் தீண்டவொண்ணா — இடையன்ஓர்
காட்டு மனி தன்" என்றான். 10

புத்தர் அறிவுரை

உலகம்பு கழ்பெரியோன் — இந்த
உரையினைக் கேட்டந்நாள்
அலகில் கருணையினால் — சொன்ன
அமுதமொ ழிஇதுவாம். 11

"இடர்வ ரும்போதும் — உள்ளம்
இரங்கி டும்போதும்
உடன்பி றந்தவர்போல் — மாந்தர்
உறவு கொள்வர், அப்பா ! 12

ஓடும் உதிரத்தில் — வடிந்(து)
ஒழுகுங் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் — சாதி
தெரிவ துண்டோஅப்பா ! 13

எவர்உ டம்பினிலும் — சிவப்பே
இரத்த நிறமப்பா !
எவர்வி ழிநீர்க்கும் — உவர்ப்பே
இயற்கைக் குணமப்பா ! 14

பிறப்பி னல்எவர்க்கும் — உலகில்
பெருமை வாராதப்பா !
சிறப்பு வேண்டுமெனில் — நல்ல
செய்கை வேண்டும்அப்பா ! 15

நன்மை செய்பவரே — உலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மை செய்பவரே — அண்டித்
தீண்ட வொண்ணுதார் '' 16

நிலத்து யர்ஞானி — இவை
நிகழ்த்தி, '' என்தம்பீ !
கலத்தினி லேகொஞ்சம் — பாலைக்
கறந்து தா''என்ருன். 17

ஆயர் சிறுவனும் — கலத்தில்
அளிக்க வாங்கியுண்டு
தாயி னும்இனியன் — கொண்ட
தளர்ச்சி நீங்கினனே. 18

## குறிப்புரை

1. மதிமுகம் - உவமைத் தொகை. வெளிறி - வெளுப்புற்று. விஞ்சிய - நிறைந்த.

4. சிந்தை - மனம். தயங்கி - குழம்பி.

5. மயக்கு - தளர்ச்சி.

6. கவிந்து - மூடி.

7. பொலிந்து - அழகுபெற்று. விதானம் - மேற்கட்டி

8. களங்கம் - குற்றம்.

## வினுக்கள்

1. புத்தர் மயங்கி விழக் காரணங்கள் யாவை ?

2. மயக்கமுற்று விழுந்த புத்தரைக்கண்ட இடைச்சிறுவன் செய்தவை யாவை ?

3. இடைச் சிறுவன் நட்ட தழைகள் என்ன ஆயின ?

4. இடைச் சிறுவன் புத்தருக்குப் பால் கொடுக்க மறுத்த காரணம் யாது ?

5. புத்தர் இடைச் சிறுவனுக்குக் கூறிய அமுத மொழிகள் யாவை?

6. "தாயினும் இனியன்" யார் ? எவ்வாறு ?

## பயிற்சி

1. "பிறப்பால் உயர்வு தாழ்வு கிடையாது" என்ற அடிப்படையில் ஒரு கட்டுரை, "புத்தரும் ஏழைச் சிறுவனும்" என்ற பகுதியின் கருத்தை மனத்துட்கொண்டு, எழுதுக.

2. புத்தருக்கும் ஏழைச் சிறுவனுக்கும் நிகழ்ந்த உரையாடல்களை "உரையாடல்" போன்று விளக்கி ஒரு கட்டுரை வரைக.

3. புத்தர் உலகத்திற்குச் செய்த சீர்திருத்தங்கள் யாவை ?

4. "தற்காலத்தில் பாமர மக்களிடையுள்ள மனப்போக்குக்கு ஏழைச் சிறுவன் ஒரு தக்க எடுத்துக் காட்டாவான்" எப்படி என்பதை விளக்குக.

# IV. பல்சுவைப் பகுதி

## அ. வருணனை

### 1. மருத நிலம்

இச் செய்யுள் கம்பரால் இயற்றப்பட்ட இராமாயணத்தில் உள்ளது. இவர் சோழ நாட்டில் திருவழுந்தூரில் உவச்சர் குலத்தில் தோன்றினர். வைணவ சமயத்தினர். கி. பி. 12ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர். இவரியற்றிய வேறு நூல்கள் ஏரெழுபது, சடகோபரந்தாதி முதலியன.

தண்டலை மயில்க ளாடத்
தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம்வீற் றிருக்கு மாதோ.

—கம்பர்.

#### குறிப்புரை

தண்டலை - சோலை. கொண்டல் - மேகம். முழவு - மத்தளம். திரை - அலை. எழினி - திரைச் சேலை. தேம்பிழி - தேனை யொத்த இனிய.

#### வினாக்கள்

1. மயில் ஆட்டத்திற்கு எவை துணை செய்தன ?
2. மருத நிலத்தில் காணப்படும் பொருள்கள் சிலவற்றைக் கூறுக.

#### பயிற்சி

1. இயற்கையைக் கண்டு இவ்வாறு வருணிப்பது போன்று நீங்களும் வருணிக்கப் பழகிக் கொள்ளல் நல்லது.

2. ஆற்றில் இருகரைகளும் நிரம்பி வெள்ளம் வருகின்றது. மலையிலிருந்து பல பொருள்களையும் நீர் அடித்துச் செல்கிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு ஒரு வருணனைக் கட்டுரை எழுதுக.

3. வானமண்டலம், தாமரைக்குளம், நிறைந்த மக்கட் பெருக்குள்ள கடைவீதி பற்றி வருணனைக் கட்டுரைகள் எழுதுக.

## 2. தென்றல்

இச்செய்யுள் திருவிளையாடற் புராணத்தில் உள்ளது. இதன் ஆசிரியர் பரஞ்சோதி முனிவர். இவர் சோழ நாட்டில் உள்ள திருமறைக் காட்டில் பிறந்தவர். சைவமதத்தினர். கி.பி. 16ஆம் நூற்றுண்டினர். இந்நூலிலுள்ள பாக்கள் மிக எளிமையும் இனிமையும் பக்திச் சுவையும் ஊட்டவல்லன.

பொங்கரின் நுழைந்து வாவிப்
புகுந்துபங் கயந்து ழாவிப்
பைங்கடி மயிலை முல்லை
மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணங்கூட் டுண்டு
குளிர்ந்துமெல் லென்று தென்றல்
அங்கங்கே கலைகள் தேரும்
அறிவன்போல் இயங்கும் அன்றே.

—பரஞ்சோதி முனிவர்

### குறிப்புரை

பொங்கர் - சோலை. வாவி - குளம். பங்கயம் - தாமரை. துழாவி - கலந்து.. பசுமை + கடி - பைங்கடி - நறு மணம்; கடி - உரிச்சொல். கொங்கு - மகரந்தப்பொடி. தேரும் - ஆராயும்.

### வினாக்கள்

1. தென்றற் காற்று எங்கெங்கு சென்று வருகின்றது ?
2. தென்றல் அறிவன் போல் இயங்குவது எவ்வாறு ?

### பயிற்சி

“மழை நிறையப் பெய்து வீதிகளைச் சுத்தம் செய்கிறது; ஆற்றை நிரப்புகிறது; வயல்களுக்கு நீர் நிறையக் கொடுக்கிறது; மற்றும் பல உதவிகளைச் செய்து கடைசியாகக் கடலைப் போய்ச் சேர்கிறது”—இதனை அடிப்படையாகக் கொண்டு ஒரு வருணனைக் கட்டுரை எழுதுக.

## 3. முகில்

இப்பாடலைப் பாடியவர் பரிதிமாற் கலைஞர் என்ற வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் ஆவர். இவர் கி. பி. 1871 முதல் 1903 வரை வாழ்ந்தவர். தமிழ்மொழி வரலாறு, தனித்தமிழ் இயக்கம் ஆகிய பல புதுத் தமிழ்த்துறைகளுக்கும் ஆக்கம்

தந்தவர். பல நாடக நூல்கள், வரலாறு, செய்யுள் நூல்கள் எழுதியவர். இயற்கையைக் கண்டுவப்பதோடன்றிப் பாட்டுருவில் எழுத வல்லவர். ஆங்கிலத்தில் அமைந்த செய்யுள்கள் (Sonnet) போலவே தமிழிலும் பல எழுதியுள்ளவர். இச்செய்யுள் "தனிப் பாசுரத் தொகை" என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

முகிலே! மைந்நிற முகிலே! கடல்மகள்
பயந்த மகவே! நயந்திவ் வுலகினைக்
குளிர்செய் ததனுயிர்க் குழுவினை என்றுங்
களிசெயும் செய்ய கருவியே! அறத்தினுக்கு
ஆக்கமே; பொருளிற் கரும்பெறல் துணையே!
போக்கரு வற்கடப் பொல்லா நோய்க்குநன்
மருந்தே! நீயெழுந் திருந்துவான் பொழிவது
தண்ணீர் என்கோ! தயைமீக் கூர்ந்திழி
கண்ணீர் என்கோ! கழைச்சா றென்கோ!
தீம்பால் என்கோ! தெள்ளமு தென்கோ!
ஏம்பலுற் றென்னுளம் இனைத்தென் றுணர்ந்தின்று;
அம்ம! நீ ஒப்புர வாற்றுமா றறிந்தேன்
எம்மையும் அஃதே என்கடன்
எனக்குறிக் கொண்டேன் எனக்குறு காட்டே.

—பரிதிமாற் கலைஞர்

## குறிப்புரை

முகில் - மேகம். மை - கறுப்பு. பயந்த - பெற்ற. நயந்து - விரும்பி. உயிர்க்குழு - உயிர்க்கூட்டம். செய்ய - சிறந்த. வற்கடம் - பஞ்சம். என்கோ - என்று சொல்வேனோ? இழி - சொட்டுகின்ற. கழை - கரும்பு. தீம்பால் - இனிமையாகிய பால். ஏம்பல் - மகிழ்ச்சி. இனைத்து-இத்தன்மையது. உணர்ந்தின்று - அறிந்ததில்லை. எம்மையும் - எப்பிறப்பினும். உறு காட்டு - சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். தீமை - இனிமை, கேடு என்ற இரு பொருளிலும் வரும். தீமை + பால் = தீம்பால் - இனியபால். தீமை + பால் = தீப்பால் - கெட்டபால் என்று வரும். தீங்காய், தீக்காய், தீஞ்சொல், தீச்சொல் முதலியன ஒர்க.

## வினாக்கள்

1. முகில் கடல்மகள் பயந்த மகவாதல் எங்ஙனம் பொருந்தும்?
2. முகில் உலகிற்குச் செய்யும் நன்மைகள் யாவை?

3. முகில் பொழி மழையை எவ்வாறு சிறப்பிக்கலாம் ?
4. முகிலிடமிருந்து நாம் மேற்கொள்ளத்தக்க நற்பழக்கம் யாது?
5. முகில் அறத்தினுக்கு ஆக்கமாதல் எவ்வாறு உண்மை ?

### பயிற்சி

1. ஆசிரியர் முகிலை எவ்வாறு விளக்குகிறாரோ அதுபோல் கடல், ஆறு, மலை இவைகளைப்பற்றிய இயற்கைக் காட்சிகளை எழுதுக.

2. பிரிக்க :—மைந்நிறம், அரும்பெறல், போக்கரு வற்கடம், தீம் பால், தெள்ளமுது.

3. இயற்கைப் பொருள்களிலிருந்து அறியும் உண்மைகள் சில வற்றைத் தொகுத்து எழுதுக.

## 4. ஞாயிறு

இச் செய்யுளை இயற்றிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் புதுவையில் வாழ்ந்து வந்தார். இவருடைய இயற் பெயர் கனக சுப்பு ரத்தினம் என்பதாம். இவர் தேசீயகவி சுப்பிரமணிய பாரதியாரின் தலைசிறந்த மாணவர்களுள் ஒருவ ராவர். அதனாலேயே பாரதிதாசனார் என்ற காரணப்பெயர் ஏற்பட லாயிற்று. எளியநடையில் உணர்ச்சி மிக்க கருத்துக்கள் அமைந்த பாடல்கள் பல பாடியுள்ளார். இயற்கைப் பொருள் களையும் அழகுறப் பாடுவதில் வல்லவர். எதிர்பாராத முத்தம், பாண்டியன்பரிசு, பாரதிதாசன் பாடல்கள் முதலிய பல நூல்களை எழுதியுள்ளார்.

இலகிய பனியின் முத்தை
　　இளங்கதிர்க் கையால் உண்பாய்
அலைஅலை யாய்உ மிழ்வாய்
　　அழகினை ஒளியை எல்லாம் !
இலைதொறும் ஈரங் காத்த
　　கறைபோக்கி இயல்பு காப்பாய் !
மலையெலாம் சோலை எல்லாம்
　　நனைக்கின்றாய் சுடர்ப்பொன் நீரால் !

—புரட்சிக் கவிஞர் பாரதி தாசன்

### குறிப்புரை

இலகிய - விளங்கிய. முத்தை - முத்துப் போன்ற துளியை. கதிர்க்கை - கிரணங்களாகிய கை. உமிழ்வாய் - வெளிவிடுவாய். கறை-

அழுக்கு. பொன் நீரால் - பொன்னாகிய நீரால்; ஒளி பொன்போன் றிருத்தலின் பொன் நீர் என்றார். கதிர்க்கை, பொன் நீர் என்பன உருவகங்கள்.

### வினாக்கள்

1. ஞாயிறு என்னென்ன வேலைகள் செய்கின்றது?

2. "இலைதொறும் ஈரம் காத்த கறை போக்கி இயல்பு காப்பாய்" —விளக்குக.

### பயிற்சி

1. இலக்கணக் குறிப்புத் தருக :—முத்து, இளங்கதிர், அலை அலை, சுடர்ப்பொன், பொன் நீர்.

2. இப்பாவிலுள்ள உருவக அணிகளை எடுத்தெழுதி விளக்கு.

3. ஞாயிறு இயல்பாய்ச் சில நன்மைகளை உலகத்திற்குச் செய் கின்றது. அதனைப் புலவர், விரும்பி உலகத்திற்கு அந்நன்மைகளைச் செய்வதாக ஞாயிற்றின் மேல் ஏற்றிக் கூறுகிறார். இது போன்று சந்திரன், ஆறு, மலை ஆகிய இவைகள் உலகிற்குச் செய்யும் நன்மை களை விரும்பிச் செய்வதாக விளக்கிக் கட்டுரை எழுதுக.

## ஆ. சீட்டுக்கவி

இச் செய்யுள் அந்தகக்கவி வீரராகவ முதலியாரால் பாடப் பட்டது. சந்திரவாணன் என்ற ஒரு கொடையாளிக்குச் செய்யுள் வடிவில் விடுக்கப்பட்ட ஒரு முடங்கல் ஆகும். இதனைச் சீட்டுக் கவி என்று கூறுதல் மரபு. வீரராகவ முதலியார் புறக்கண் இழந் தவர். ஆகவே அவருக்கு அந்தகக்கவி என்ற காரணப் பெயர் ஏற்பட்டது. இருப்பினும் நிறைந்த நூல்களை முதுகிலேயே எழுதச் செய்து படித்தவர். செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பொன் விளைந்த களத்தூருக்குப் பக்கத்திலுள்ள புதூரில் பிறந்த வர். இவர் தந்தையார் வடுகநாத முதலியாராவர். இலங்கைக் கும் சென்று பாடிப் பரிசு பெற்றவர். இவர் திருக்கழுக்குன்றப் புராணம், திருவாரூருலா, சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், சந்திர வாணன் கோவை முதலிய பல நூல்கள் எழுதியுள்ளார். இவர் காலம் கி. பி. 17ஆம் நூற்றாண்டாகும்.

மின்னு மாளிகை அநந்தை யாதிபதி
சந்த்ர வாணமகி பாலன்முன்
வீர ராகவன் விடுக்கும் ஓலைதன்
விருப்பி னல்வலிய வேயழைத்து

உன்னு காவிய மதிற்பெ ருத்ததொரு
கோவை யோதுகென ஓதினன்
ஓதி மாசமொரு மூன்று போகியொரு
நாலு மாசமள வாகவும்

இன்ன முந்தனது செவியில் ஏறவிலை
என்னில் என்னஉல கெண்ணுமோ
இராச ராசர்திறை கொள்ளும் என்கவிதை
இங்கு வந்துகுறை யாகுமோ

தன்னை என்சொலுவர் என்னை என்சொலுவர்
நான்த மிழ்க்குமணன் அல்லவோ
தன்பு கழ்க்குமிது நீதியோ கடிது
தானின் னேவருதல் வேணுமே.

—அந்தகக்கவி வீரராகவ முதலியார்

## குறிப்புரை

அநந்தை - அநந்தபுரம் என்பதன் மரூஉமொழி. இது தென்னார்க் காடு மாவட்டத்தில் விழுப்புரத்துக்கு அண்மையில் உள்ள ஓர் ஊர் ஆகும். கோவை என்பது சந்திரவாணன் கோவையைக் குறிக்கும். ஓதிமாசம்...அளவாகவும் - ஏழு மாதங்களாகியும். செவியில் ஏறவிலை - கேட்கவில்லை. உலகு - உலகோர்; இடவாகுபெயர். தமிழை வாரி வாரிக் கொடுத்தலால் தமிழ்க்குமணன் என்றார். இன்னே - இப் பொழுதே. குமணன் - பொருளை வாரி வாரிக் கொடுத்த முதலெழு வள்ளல்களுள் ஒருவன்.

## வினாக்கள்

1. சீட்டுக்கவி என்றால் என்ன?
2. வீரராகவ முதலியார் யாருக்கு எதைப்பற்றிச் சீட்டுக்கவி எழுதினார்?
3. சந்திரவாணனைப் பற்றித் தெரிந்ததை விளக்குக.
4. இராசராசர் திறை கொள்ளும் என் கவிதை, தன்னை என் சொலுவர் என்னை என் சொலுவர்—விளக்குக.

## பயிற்சி

1. தற்காலக் கடிதம் எழுதும் முறையில் இச்செய்யுளில் கண்ட பொருள்களை விளக்கி ஒரு முடங்கல் வரைக.

2. மரூஉ மொழி ஆறு எழுதிக் காட்டுக.

3. அந்தகக்கவி வீரராகவ' முதலியார் தம் பெருமைகளை எவ்வாறு விளக்கிக் கூறுகிறுர் என்பதை எழுதுக.

4. அந்தகக்கவி வீரராகவ முதலியார் சந்திரவாணனுக்குச் சீட்டுக் கவி பாடியதை மற்றொருவரிடம் கூறுவது போன்று விளக்கி எழுதுக.

## இ. இரட்டுற மொழிதல்

பின்வரும் பாடல்கள் காளமேகப் புலவரால் பாடப்பெற்றவை. இவர் சிலேடையாகப் பாக்களைப் பாடுவதில் வல்லவர். இரட்டுற மொழிதல் என்பது சிலேடையாகும். சிலேடை என்பது ஒரு சொல்லுக்கு அல்லது ஒரு சொற்றொடருக்கு இரண்டு அல்லது மூன்று பொருள்கள் பொருத்தமாய் அமையுமாறு பாடுவதாம். இவர் காலம் சற்றேக்குறைய 500 ஆண்டுகளுக்கு முன்.

### மதிக்கும் மலைக்கும் சிலேடை

நிலவாய் விளங்குதலால் நீள்வான் படிந்து
சிலபோ துலாவுதலாற் சென்று—தலைமேல்
உதித்து வரலால் உயர்மா மலையை
மதிக்குநிக ராக வழுத்து. 1

### மூத்த பிள்ளையாருக்கும் இளைய பிள்ளையாருக்கும் சிவபிரானுக்கும் சிலேடை

*சென்னிமுக மாறுளதால் சேர்கரமுன் னாலுகையால்
இந்நிலத்திற் கோடொன் றிருக்கையால்—மன்னுகுளக்
கண்ணுறுத லானும் கணபதியும் செவ்வேளும்
எண்ணரனும் நேராவ ரே. 2

—காளமேகப்புலவர்

### குறிப்புரை

1. மதி :-நிலவு - ஒளி. நீள்வான் - அகன்ற ஆகாயம். சிலபோது - சில சமயம். மலை:-நிலவாய் - பூமியில். நீள்வான் - மிகுந்த மேகம். சில போது - சிலவகைப் பூக்கள். தலைமேல் - மலையுச்சியின் மேல். வழுத்து - கூறு. இது இரு பொருள் சிலேடையாகும்.

2. மூத்த பிள்ளையார் :-சென்னி - தலை. முகம் மாறு உளது-முகம் மாறுபட்டிருக்கின்றது. நாலுகையால் - தொங்குதலால். கோடு - கொம்பு. குளக்கண் - குளக்கரையில்.

இளைய பிள்ளையார்:—ஆறு உளதால்-ஆறு இருத்தலால். முன்னுலு கை - பன்னிரண்டு கை. கோடு - மலை. இருக்கை - இருப்பு. குளக்கண் உறுதலான் - சரவணக் குளத்தில் தோன்றுதலான்.

சிவபிரான்:—சென்னிமுகம் - தலையில். ஆறு உளதால் - கங்கை யிருத்தலால். நாலு கை - நான்கு கைகள் இருத்தலால். ஒடு - பிச்சை எடுக்கும் ஓடு. மன்னு - நிலைபெற்ற. குளக்கண் - நெற்றிக்கண். எண் - மேலாகக் கருதத் தக்க. அரன் - சிவபிரான். நேர் - ஒப்பு.

### வினாக்கள்

1. மதியும் மலையும் எக்காரணங்களால் நிகராகும்?
2. சென்னி முகம்......கண்ணுறுதலான் - முப்பொருள்கள் தருக.
3. சிலேடை என்றால் என்ன? விளக்குக.

### பயிற்சி

1. இரு பொருள்கள் தருக:—நீள் வான், சில போது, குளக்கண், ஆறுளது, நாலுகை, கோடு.

2. ஒரு பொருள் தருக:—வான், போது, குளம், நாலுகை, அரண், வழுத்து.

3. சிலேடையணியைப்பற்றித் தெரிந்துகொண்டு அவ்வாறு வந் துள்ள பகுதியைத் தெரிந்து சுவை நயம் தெரிந்துகொள்ளப் பழகுங்கள்.

4. ''என் தலைவிதிவசம்,'' ''எண்ணெய் தேய்க்கப் பலகை வேண் டும்,'' இவற்றிலுள்ள சிலேடைகளையும் இவை போன்றவைகளையும் ஓர்ந்து தெரிந்து களி கூருங்கள்.

## ஈ. சிற்றிலக்கியங்கள்

### 1. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

இது மதுரையிலுள்ள மீனாட்சியம்மையைப் பிள்ளையாகக் கொண்டு காப்பு முதல் ஊசலிறுதியாகப் பத்துப் பருவங்கள் அமைய, பருவத்துக்குப் பப்பத்துப் பாக்கள் வீதம் நூறு பாக் களைக் கொண்டிலங்கும் நூல். இந்நூலாசிரியர் குமரகுருபரஅடிகள் ஆவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சீவைகுண்டம் என்னும் ஊரில் பிறந்தவர். ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர். நீதிநெறி விளக்கம், மதுரைக் கலம்பகம், மீனாட்சியம்மை குறம் முதலிய பல நூல்களைப் பாடியுள்ளார். இவர் இளமையிலேயே முருகன் திருவருள் கைவரப்பெற்ற ஒரு சிறந்த முனி புங்கவர் ஆவர். இவருடைய பாடல்கள் மிகவும் பத்திச் சுவை சொட்டும் தன்மையன.

## வருகைப் பருவம்

*பெருந்தேன் இறைக்கும் நறைக்கூந்தல்
பிடியே வருக! முழுஞானப்
பெருக்கே வருக ! பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்

விருந்தே வருக! மும்முதற்கும்
வித்தே வருக! வித்தின்றி
விளைந்த பரமா னந்தத்தின்
விளைவே வருக ! பழமறையின்

குருந்தே வருக! அருள்பழுத்த
கொம்பே வருக! திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்

மருந்தே வருக! பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

## அம்புலிப் பருவம்

குலத்தோடு தெய்வக் குழாம்பிழிந் தூற்றிக்
குடித்துச் சுவைத்துமிழ்ந்த
கோதென்றும் அழல்விடம் கொப்பளிக் கின்றவிரு
கோளினுச் சிட்டமென்றும்
கலைத்தோடு மூடிக் களங்கம் பொதிந்திட்ட
கயரோகி யென்றுமொருநாள்
கண்கொண்டு பார்க்கவும் கடவதன் றெனவும்
கடற்புவி யெடுத்திகழவிட்
புலத்தோடும் உடுமீன் கணத்தோடும் ஓடுநின்
போல்வார்க்கு மாபாதகம்
போக்குமித் தலமலது புகலில்லை காண்மிசைப்
பொங்குபுனல் கற்பகக்கா

டலேத்தோடு வைகைத் துறைப்படி மடப்பிடியொ
டம்புலீ யாடவாவே.
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ யாடவாவே.

—குமரகுருபரர்

## குறிப்புரை

1. இறைக்கும் - பிலிற்றும். நறை - மணம். பிடி - பெண் யானே ; இங்கு உவமையாகு பெயராய் மீனுட்சியைக் குறிக்கின்றது. பெருக்கு - வெள்ளம். மௌலி - முடி. முக்கண்சுடர் - மதி, ஞாயிறு, அனலென மூன்று கண்ணுகிய சுடர். குருந்து - குருத்து. கொழித்த - மேன் மேலும் சுரந்த. குடைவார் - நீர் ஆடுவார். மலயத்துவசன் - மீனுட்சி யம்மையின் தந்தை.

2. தெய்வக்குழாம் - தேவர் கூட்டம். கோது - சக்கை. இரு கோள் - இராகு, கேது என்ற கோள்கள். உச்சிட்டம் - எச்சில். கலேத் தோடு - கலேத்தொகுதி. களங்கம் - கறை. கயரோகி - தொழுநோ யாளன். ஒருநாள் - விநாயக சதுர்த்தி. உடுமீன் - நட்சத்திரம். ஆணிப்பொன்வில்லி - சிறந்த தங்கமயமான மகாமேரு மலேயை வில் லாக உடையவன்.

## வினுக்கள்

1. பிள்ளேத் தமிழ் பற்றி விளக்குக.
2. குமரகுருபரர் மீனுட்சியை எவ்வாறு பாராட்டி அழைக்கிருர்?
3. அம்புலி மக்களால் எவ்வாறு இகழப்படுகின்றது ?
4. மீனுட்சியுடன் அம்புலி விளேயாடினுல் ஏற்படும் பலன் யாது ?
5. வித்தின்றி விளேந்த பரமானந்தத்தின் விளேவே வருக, கருணேப் பெருவெள்ளம் குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கு ஓர் மருந்து—விளக்குக.

## பயிற்சி

1. குமரகுருபரர் மீனுட்சியம்மையைப் புகழும் விதத்தை விளக்கி எழுதுக.

2. அம்புலி மக்களால் இகழப்படும் விதங்களேயும் அவற்றின் கார ணங்களேயும் தெரிந்து கொள்க.

3. 'மதுரையின் பெருமை' பற்றி ஒரு விளக்கக் கட்டுரை வரைக.

4. மீனுட்சியம்மை மலேயத்துவச பாண்டியனுக்குத் திருமகளாகத் தோன்றியது, மீனுட்சி மதுரையாண்டது, மீனுட்சித் திருமணம் முதலிய வற்றை ஆசிரியர்பால் கேட்டுணர்க அல்லது திருவிளேயாடற் புராணத் தைப் படித்துத் தெரிந்துகொள்க.

## 2. திருக்குற்றாலக் குறவஞ்சி

இது பாண்டி நாட்டிலுள்ள திருக்குற்றாலத்தைப் பற்றிய நூல். இந் நூலில் குறத்தி திருக்குற்றாலப் பெருமைகள் யாவற்றையும் ஒருசேரப் புகழ்கிருள். இது எளிமை, இனிமை முதலிய பல சிறப்புகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இதனை இயற்றியவர் திரிகூட ராசப்பக் கவிராயர் என்பவராவர். இவர் குற்றாலத்திற் கருகிலுள்ள மேலகரம் என்ற ஊரினர். இவர் இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். திருக்குற்றாலத் தலபுராணம், திருக்குற்றாலக் குறவஞ்சி முதலிய திருக்குற்றால சம்பந்தமான பல நூல்களை இவர் பாடியுள்ளார்.

### நாடு

ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்
வாடக் காண்பது மின்னார் மருங்கு
வருந்தக் காண்பது சூலுளை சங்கு
போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறம் கீர்த்தி
திருக்குற் றாலர்தென் ஆரிய நாடே

—திரிகூடராசப்பக் கவிராயர்.

### குறிப்புரை

மின்னார் - பெண்கள். மருங்கு - இடுப்பு. சூல் – கரு. உளை - வருந்துகின்ற. புலம்ப - ஒலிக்க. கிண்கிணி - காலில் அணியும் ஒரு வகை அணி.

### வினாக்கள்

1. தென்னாரிய நாட்டில் ஓடவும், வாடவும், போடவும், தேடவும் காண்பன யாவை?

2. "ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்," "புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து"—விளக்குக.

### பயிற்சி

1. தென்னாரிய நாட்டின் பெருமையைப் புலவர் எவ்வாறு விளக்குகிறார் என்பதைக் கட்டுரையாய் எழுதுக.

2. உன் ஊர்ப்பெருமையைக் குற்றாலக் குறத்தி கூறுவதுபோன்று விளக்கி வரைக.

3. மதுரை, காஞ்சிபுரம், மகாபலிபுரம் போன்ற சிறப்புப் பெற்ற ஊர்களைப் பற்றிக் கட்டுரை வரையும்போது அவற்றின் செழிப்பு, பெருமை முதலியவைகளைக் குற்றாலக் குறத்தி கூறுவது போல அழகு தோன்றக் கூறிக் கட்டுரை வரைக.

## 3. நால்வர் நான்மணி மாலை

நான்கு வகை மணிகளை முறையாக மாறி மாறிக் கோத்துச் செய்யப்படுவது நான்மணி மாலையாகும். இது போல் நான்கு வகைப்பாக்களால் அந்தாதித் தொடை அமையும்படிப் பாடப் பெறும் ஒருவகைப் பிரபந்தம் நான்மணி மாலை எனப்பெயர் பெற்றது. பின்வரும் பாடல் மாணிக்கவாசகர் பெருமையையும் அவரியற்றிய திருவாசகப் பெருமையையும் கூறுவது. இந்த நூலின் ஆசிரியர் சிவப்பிரகாச சுவாமிகள் ஆவர். இவர் 17ஆம் நூற்றாண்டினர். பல கற்பனைகள் நிறைந்த பாக்கள் பாடுவதில் வல்லவர்.

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்தது என்குவீர் ஆயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்;
திருவா சகமிங் கொருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணல் கேணியின் சுரந்துநீர் பாய,
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையர் இலரே.

—சிவப்பிரகாச சுவாமிகள்

### குறிப்புரை

விளங்கு இழை - ஒளிரும் அணிகளையுடைய உமாதேவி. பகிர்ந்த - ஒரு பாதியைத் தானே எடுத்துக்கொண்ட. ஆரணமொழி - வேதம். ஆதி - முழுமுதற்கடவுள். நெக்குருகி - நெகிழ்ந்து இளகி. ஒருகால் -

ஒரு முறை. வாதவூர் அண்ணல் - மாணிக்கவாசகர். கேணியின் - கிணறுபோல். விதிர்விதிர்ப்பு - நடுங்குதல். மன்பதை - மக்கட்கூட்டம்.

### வினுக்கள்

1. "விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண் காரணன்"— இத்தொடருக்குப் பொருள் எழுதுக.

2. ஆரணமொழி, வாசகத் தேன்—இவைகள் யாவை ? இவற்றைக் குறிப்பிடக் காரணம் யாது ?

3. வேதம், திருவாசகம் ஆகியவற்றுள் எது சிறந்தது ? ஏன் ?

### பயிற்சி

1. பின்வருவனவற்றிற்குத் தொடரிலக்கணம் கூறுக :—

விளங்கிழை, மலர்வாய், வாசகத்தேன், கருங்கல், தொடுமணல், மணற்கேணி, நீர்பெருக்கி.

2. பகுதி கூறுக :—பகிர்ந்த, பரவும், கரைந்து, சுரந்து, பொடிப்ப, என்குவீர்.

## 4. சிங்கை உலகம்மை கலித்துறை யந்தாதி

சிங்கை பாண்டி நாட்டிலுள்ள அம்பாசமுத்திரத்திற் கடுத்த விக்கிரமசிங்கபுரம் ஆகும். பாவநாசம் இவ்வூரை அடுத்துள்ளதாதலின் அதனையும் சிங்கை யென்றே ஆன்ருேர் அழைப்பர். அப்பாவநாசத்தலத்தில் எழுந்தருளியுள்ள உலகம் மையைப் பற்றிக் கலித்துறைப் பாக்களால் அந்தாதித் தொடையாகப் பாடப்பெற்றதாதலின் இந்நூலுக்கு இப்பெயரா யிற்று. அந்தாதி என்பது முதற் செய்யுளின் இறுதிச் சீரோ, சொல்லோ, அசையோ, எழுத்தோ அடுத்த செய்யுளின் ஆதியாக வருமாறு நூல் முழுவதும் அமைத்துப்பாடும் முறை யாகும். இந் நூலாசிரியர் நமச்சிவாயக் கவிராயர் ஆவர். இவர் ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் ஆவர். இப்பாவநாசத்தலத்தைப் பற்றிய பல நூல்களையும் இவரே இயற்றியுள்ளார். இவர் மாதவச் சிவஞான சுவாமிகளின் சிறிய தந்தையார் ஆவர்.

பொழுது கழிந்தது வீணே யெனக்கென்ன புத்திஉன்னைத்
தொழுது பணிந்து துதித்தில னேயிதைச் சொல்லிச்சொல்லி
அழுது புலம்பில் விடுமோ யமனினி யாயினுமென்
பழுது களைந்து புரப்பாய் உலகம் படைப்பவளே.

—நமச்சிவாயக் கவிராயர்.

### குறிப்புரை

பழுது - குற்றம். களைந்து - நீக்கி. புரப்பாய் - காப்பாற்றுவாயாக.

### வினாக்கள்

1. நமச்சிவாயக் கவிராயர் பற்றி நீ அறிவன யாவை ?

2. நமச்சிவாயக் கவிராயர், காலத்தை வீணே கழித்தது பற்றி எவ்வாறு அம்மையிடம் முறையிடுகிறார் ?

### பயிற்சி

1. நீ இறைவனிடம் உன் பிழைகளைக் கூறி மன்னிக்குமாறு வேண்டுவது போன்று ஒரு கட்டுரை வரைக.

2. கடந்தகால நிகழ்ச்சிகள் வருங்கால வாழ்வுக்குரிய படிப்பினை என்பது எவ்வாறு உண்மை? இதனை விளக்குக.

# உ. வழிபாட்டுப் பாடல்கள்

## 1. தேவாரம்

இச்செய்யுள் சைவத் திருமுறைகளுள் ஒன்றான தேவாரத்தில் உள்ளது. தே+ஆரம்=தேவாரம் ; தெய்வத்திற்குச் சூட்டக் கூடிய பாமாலை என்பது இந்நூலின் பொருள் ஆகும். தேவாரம் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரா லும் பாடப்பெற்றது. அந்நூலிலுள்ள பாக்கள் மிகவும் பக்திச் சுவையுடன் இறை மணம் கமழப் பெற்றவை. அவைகளுள் இப்பாடல் திருநாவுக்கரசரால் பாடப்பெற்றது.

*வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே.

—திருநாவுக்கரசு சுவாமிகள்

### குறிப்புரை

மட நெஞ்சு - அறியாமையோடு கூடிய மனம். தாழ்த்த - வணங்க. சூழ்த்த - அன்று விரிந்த. வீழ்த்த - வீணாக்கிய.

### வினாக்கள்

1. தேவாரம் பற்றி நீங்கள் அறிபவை யாவை ?

2. திருநாவுக்கரசர், காலத்தை எவ்வாறு கழித்ததாகக் கூறு கிறார் ? விளக்குக.

### பயிற்சி

1. சைவசமயத்தில் 12 திருமுறைகளுள்ளன. அவைகள் யாவை என்று தெரிந்துகொள்ளுங்கள்.

2. தேவாரம் என்ற சமயநூல் பற்றி ஒரு விளக்கக் கட்டுரை வரைக.

## 2. திருப்போரூர்ச் சந்நிதி முறை

இச்செய்யுள் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருப்போரூரில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான்மீது பாடப்பட்டதாகும். இதன் ஆசிரியர் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் ஆவர். இவர் சிறந்த துறவி. இறைவன் திருவருள் பெற்றவர். இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். திருப்போரூர்ச் சந்நிதிமுறை மிகவும் உருக்கம் வாய்ந்த நூலாகும்.

*நாயேனுன் சீரடிக்கு நன்கல்ல செய்தாலும்
பேயேன் இழைத்த பெரும்பிழையை—நீயே
பொறுத்தாள்வ துன்கடனும் போரூரா என்னை
ஒறுத்தா லெனக்கார் உறவு.

—திருப்போரூர் சிதம்பர சுவாமிகள்

### குறிப்புரை

சீரடி - சிறந்த திருவடி. நன்கல்ல - வெறுக்கத்தக்க செயல்கள். இழைத்த - செய்த. ஒறுத்தால் - தண்டித்தால்.

### வினாக்கள்

1. திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் பற்றிய குறிப்பு தருக.

2. சிதம்பர சுவாமிகள் முருகனின் கடனாகக் கூறுவது யாது? எவ்வாறு?

### பயிற்சி

“இறைவன் தீமைகள் செய்த மக்களையும் ஆளுவது கடமையாகக் கொண்டவன்—தண்டிப்பதைக் கடமையாகக் கொண்டவன்” என்ற இருவேறு தலைப்பில் ஒரு உரையாடல் கட்டுரை எழுதுக.

## 3. வேதநாயகம்பிள்ளை பாடல்

வேதநாயகம்பிள்ளை அவர்கள் ஏறக்குறைய அறுபது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். திருச்சிக்கு அடுத்த குளத்தூரில் பிறந்தார். மாயூரம், சீர்காழி முதலிய ஊர்களில் மாவட்ட நியாயாதிபதி (முனிசீப்பு) அலுவல் பார்த்தார். மக்களுக்கு நீதியூட்டத்தக்க தமிழ்ப்பாடல்களை இயற்றுவதில் வல்லவராயிருந்தார். இவர் சமரச மனப்பான்மையுடையவர். இயேசு சமயத்தினர். நீதிநூல், பிரதாப முதலியார் சரித்திரம் முதலியன இவரியற்றியனவாகும்.

கதிரவன் கிரணக் கையால்
　　கடவுளைத் தொழுவான் ; புட்கள்
சுதியொடும் ஆடிப் பாடித்
　　துதிசெயும் ; தருக்க ளெல்லாம்
பொதிஅலர் தூவிப் போற்றும் ;
　　பூதம்தம் தொழில்செய் தேத்தும் ;
அதிர்கடல் ஒலியால் வாழ்த்தும் ;
　　அகமேநீ வாழ்த்தா தென்னே ?

—மாயூரம் வேதநாயகம் பிள்ளை

### குறிப்புரை

புட்கள் - பறவைகள். சுதி - இராகம். தரு - மரம். பூதம் - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்கள். அதிர் - ஒலிக்கின்ற. அகமே - மனமே.

### வினாக்கள்

1. இயற்கைப் பொருள்கள் இறைவனை எவ்வாறு போற்றுகின்றன ?

2. வேதநாயகம் பிள்ளை பற்றி நீ அறிவன யாவை ?

### பயிற்சி

" இயற்கைப் பொருள்கள் தத்தம் தொழில் செய்வது இறைவனைப் போற்றுவது போலிருக்கின்றது" என்பது போன்று நீயும் ஒரு கற்பனைக் கட்டுரை எழுதுக.

## 4. விண்ணப்பம்

இச்செய்யுள் 'மலரும் மாலையும்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இதன் ஆசிரியர் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் ஆவர். இவர் தந்தையார் சிவதாணுப்பிள்ளை,

தாயார் ஆதிலட்சுமி அம்மையார் ஆவர். இவர் பிறந்த ஊர் திருவாங்கூரிலுள்ள தேரூர் ஆகும். கி. பி. 1876 முதல் 1954 வரை வாழ்ந்தவர். எளிமையும் இனிமையும் கலந்த கவிகள் பாடுவதில் வல்லவராதலின் ‘கவி மணி’ என்ற பட்டத்தையும் பெற்ருர். ஆசியஜோதி போன்ற சிறந்த நூல்களை இயற்றியுள்ளார்.

பருவமழை பொய்யாது பெய்ய வேண்டும்
பயிர்களெல்லாம் செழித்தோங்கி வளர வேண்டும்
தருமநெறி தவருது தழைக்க வேண்டும்
சாதிமதச் சண்டையெல்லாம் ஒழிய வேண்டும்
திருமகளும் கலைமகளும் சிறக்க வேண்டும்
தேசாபி மானமெங்கும் திகழ வேண்டும்
கருமமெலாம் நற்கரும மாக வேண்டும்
காந்திமதி! நின்னடிகள் வாழ்த்தி னேனே.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

## குறிப்புரை

திருமகள் - செல்வச் செழிப்பு. கலைமகள் - கல்விவளம். தேசாபிமானம் - நாட்டுப்பற்று. கருமம் - செயல். திருநெல்வேலியிலுள்ள அம்மனுக்குக் காந்திமதி என்பது பெயர் ஆகும்.

## விளுக்கள்

1. தேசிக விநாயகம் பிள்ளை பற்றிச் சிறு குறிப்பு வரைக.
2. தேசிக விநாயகம் பிள்ளை காந்திமதியம்மனிடம் விண்ணப்பம் செய்வது யாது?

## பயிற்சி

1. இறைவனிடம் சென்று நாடு, மொழி முன்னேறவேண்டும் என்பது பற்றியுள்ள உன் ஆர்வத்தை 'விண்ணப்பம் செய்வதாக ஒரு கட்டுரை எழுதுக.

2. துன்பமுற்ற ஒருவன் அதைத் தீர்க்க வல்லவன் ஒருவனிடம் முறையிடும் முறையிலுள்ள விண்ணப்பம் ஒன்றினை வரைக.

3. தற்காலம் விண்ணப்பம் எழுதும் முறை மிகவும் இன்றியமையாது தெரிய வேண்டுவதாகும். பல அலுவலகங்களுக்கும் பல்வேறு நிலையிலுள்ள மக்களுக்கும் எவ்வெவ்வாறு விண்ணப்பம் எழுத வேண்டும் என்பதனைத் தெரிந்து கோடல் நன்று.

# 1. பழந் தமிழ்ப் புலவர் சிறப்பியல்புகள்

[டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார்,
எம். ஏ., பி. எச் டி., எம். எல். சி.]

1. பழந்தமிழ்ப் புலவர் மானமே பெரிதுடையவராய் வாழ்ந்தவர். அவர், இன்றியமையாச் சிறப்பினை நல்கும் பெற்றி வாய்ந்த பொருள்களாயினும், அவற்றை அடையப் பழிச்செயல் செய்யவேண்டுமெனின், அஞ்சி விடுப்பர். உலகினை ஒருங்கே பெறுவதாயினும், பழியொடு வருவதாயின், அதனைக் கொள்ளமாட்டார். ஈன்ற தாய் பசித்திருக்கக் காணுமளவு வறுமை உற்ற ஞான்றும், பழிச்செயல் ஒன்றுதானுஞ் செய்து அத்தாயையும் பாதுகாக்க நினையார். பின் மனைவி மக்களைப் பாதுகாக்கும் பொருட்டுப் பழிச்செயல் செய்ய இணங்குவரோ? நரம்புந் தோலுமாய்த்திரங்கி நரைத்து மூத்த தாய் தந்தையரோ, இளைய அழகிய மனைவியோ, பச்சிளங் குழவியோ பசியால் உயிர்விட வேண்டிய அளவு வறுமைவந்துற்ற போதிலும், இளிவந்த செயல் எதுவும் செய்து அவருயிரைப் பாதுகாக்க இசையார். காட்டாக, ஒன்று கூறுவேன்.

2. புலவர் ஒருவர் மிக்க வறுமையுற்று மனைவி மக்களொடு நாடு பெயர்ந்து போகின்றார். வீட்டிலுள்ள தட்டு முட்டுப் பொருள்களைத் தலையிலும் தோளிலுமாகச் சுமந்துகொண்டு அவர்கள் போகின்றார்கள். மெல்லியல் வாய்ந்த மனைவி நடக்கமாட்டாது தள்ளாடி அடியெடுத்து வருகிறவள், இடையே கிடக்கும் மலைமீது அடிவருந்தும்படி நெடிது நேரம் ஏறி வருகின்றாள். அந்நிலையில் ஒரு பொய் கூறுவாராயின், பெருஞ் செல்வம் கிடைக்கப் பெறுவர் என்பதை அவர் அறிகின்றார். ஆயினும், பொய்கூற அவர் மனம் ஒருப்படவில்லை. ஆனால் மேலே நடக்கின்றார். அப்பொழுது அப்புலவர்,

> "வாழ்தல் வேண்டிப்
> பொய் கூறேன்; மெய் கூறுவல்."

என்று கூறுகின்றார். அப்புலவர் பெயர் மருதனிள நாகனார்.

3. அக்காலப் புலவர்கள் திருப்தி யுடையவராய் வாழ்ந்தவர் என அறிகின்றோம்; எத்துணைப் பொருள் பெற்றாலும் மேலும் மேலும் திரட்டவேண்டும் என்னும் அவாவுடையாரைப் போன்றன்றிப் பெற்றதன் கண்ணே மகிழ்ந்து பிறர்க்கு வழங்கியும் வாழ்ந்தார் என அறிகின்றோம்.

"பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி"

வாழ்ந்தவர்கள் என அவர்கள் காணப்படுகிறார்கள். பொருளை நிரம்பப்பெற்ற புலவர் ஒருவர் தம் மனையாட்டியை நோக்கி, "நாம் நன்றாக வாழ வேண்டும் என்று நினைத்துப் பூட்டிவைக்காமல், யாருக்குக் கொடுக்கலாம் என்று என்னோடு கலந்து ஆலோசியாமல், நீயும் எல்லோருக்குங் கொடுப்பாயாக, நானும் கொடுப்பேன்," என்று கூறுகின்றார்.

"இன்னோர்க்(கு) என்னாது என்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லார்க்குங் கொடுமதி மனைகிழவோயே!"

எனப் பெருஞ்சித்திரனார் தம் மனைவியிடம் கூறியதாக ஒரு பாட்டுக் கூறும்.

4. அப்புலவர்கள்பாற் காணப்படும் இன்னொருசிறப்பியல்பு செய்ந்நன்றி யறிதல். தமக்கு உதவி செய்த ஒருவனது பரம்பரையில் வந்தவரைப் பெரிதும் விரும்பிப் பாராட்டும் இயல்புடையவராய்ப் பலர் வாழ்ந்தார்கள். காட்டாகப் பெருந்தலைச் சாத்தனாரைக் கூறலாம். அவர் முன்னொரு நாள் கண்டீரக்கோப் பெருநள்ளி வீட்டிற்குச் சென்றாராக, அவர் மனைவி அப்புலவர்க்கு யானைப்பிடியும் பொருளும் கொடுத்து உதவினாள். அதை நினைவு கூர்ந்து பெருநள்ளி மரபில் வந்த இளங்கண்டீரக்கோ என்பான் விளையாடிக் கொண்டிருந்தானை ஓடோடியும் தழுவி அணைத்துப் போற்றினார் அப்புலவர் எனின், அவர் நல்லியல்பு விளங்கும்.

5. அக்காலப் புலவரிற் பலர் முயற்சியுடையவராய் வாழவேண்டும் என்று நினைத்திருந்தார்கள் ; நன்முயற்சி செய்ய வேண்டும் என்ற உயரிய குறிக்கோள் இல்லா தாரை வெறுத்தார்கள். அதனால்தான் ஆலத்தூர்க் கிழார் என்னும் புலவர், "பூட்கையில்லோன் யாக்கை போல" என வெறுத்துரைத்தனர். நல்ல மேற்கோள் இல்லாதவனுடைய உடம்பு பொலிவற்றுப் புல்லென்று இருத்தலைப் போல் என உவமையாக வழங்க வேண்டும் என்றால், உயரிய குறிக்கோள் உடையராக மக்கள் இருக்கவேண்டும் என்ற எண்ணம் எத்துணைப் பெரிய அளவு புலவரிடம் குடிகொண்டிருத்தல் வேண்டும் !

6. புலவர் சிலர் வறியராய்ப் பேசப்படுதல் காரணமாகப் பண்டைத் தமிழ்ப் புலவர் அனைவரும் வறிஞர்என எண்ணுதல் ஆகாது. புலவர் பலர் வெவ்வேறு தொழில் இயற்றுவாராய்ப் பெரும்பொருள் படைத்திருந்தனர். கூல வாணிகன் சீத்தலைச்சாத்தனார், அறுவை வணிகன் நல் வேட்டனார், மருத்துவன் தாமோதரனார், கொல்லன் அழிசி, எழுத்தாளன் சேந்தன்பூதனார், கணக்காயர் தத்தனார் முதலிய புலவர் பெயர்களே அவரவர் தொழிற்றிறத்தைக் காட்டும்.

7. சோழன் நல்லுருத்திரன், பாண்டியன் நெடுஞ் செழியன், சேரமான் கணைக்கால் இரும்பொறை முதலான அரசர்கள் புலமை உடையராய் மிக்க மானமுடையவராய் வாழ்ந்த திறம் பலர் அறிந்தது.

8. இன்னோரன்ன பழந்தமிழ்ப் புலவருடைய சிறப்பியல்புகளை முழுதும் அறிய வேண்டுவோர், புறநானூற்றுப் பாடல்களை ஊன்றிப் படிப்பார்களாக !

### குறிப்புரை

டாக்டர் திரு. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் தற்பொழுது மதுரைத் தியாகராசர் கலைக் கல்லூரியிற் கல்லூரி முதல்வராகப் பணியாற்றி வருகின்றார்கள். ஆங்கிலத் தமிழ்ப் பேரகராதித் தொகுப்புத் தலைவராய்ப் பணியாற்றியுள்ளார். அண்ணமலைப் பல்கலைக் கழகத்திலேயே படித்து அங்கேயே தொண்டாற்றிச் சிலகாலம் அப்பல்கலைக் கழகத்தின் இடைக்காலத் துணை வேந்தராயும் பணியாற்றி யிருந்திருக்

கின்றார். ஆசிரியர்கள் சார்பில் சென்னை மேல் சட்டசபையில் உறுப்பினராகவும் இருக்கின்றார். மேனாட்டில் சுற்றுப் பயணம் செய்து கல்வி சார்பான அறிவினை நிரம்பப் பெற்றவர். யாவரிடமும் செவ்வையாய்ப் பழகும் தன்மை வாய்ந்தவர். இவரது தமிழ்த் தொண்டின் காரணமாகச் "செந்தமிழ்க் காவலர்" என்ற பட்டத்தை அறிஞர் பெருமக்கள் சூட்டியுள்ளனர்.

## அருஞ்சொற் பொருள்

திரங்கி - தோல் மடித்து, திரைத்து. பூட்கை - கொள்கை. கூம்பாது - மடித்து வைக்காமல்.

## வினாக்கள்

1. பழந்தமிழ்ப்புலவர் எவ்வாறு பெருமை குன்றாது வாழ்ந்தனர்?
2. "மருதனிள நாகனார் எந்நிலையிலும் தம் பெருமையைக் காத்துக்கொண்டவர்." எவ்வாறு?
3. புலவர்கள் போதுமென்ற மனம் படைத்தவர்கள் என்பதற்குச் சான்று தந்து விளக்குக.
4. பழங்காலப் புலவர்கள் செய்ந்நன்றி மறவாதவர்கள் என்பது எவ்வாறு உண்மை?
5. "பூட்கையில்லோன் யாக்கை போல"–இடஞ்சுட்டி விளக்குக.
6. புலவர்கள் பல்வேறு தொழில்கள் கொண்டனர் என்பது எப்படித் தெரிகிறது?
7. பண்டையரசர்கள் தமிழ்ப்புலவராயிருந்தமைக்கு மூன்று சான்றுகள் தருக.

## பயிற்சி

1. "பண்டைப் புலவர்களும் தற்காலப் புலவர்களும்" என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.
2. பெருஞ்சித்திரனாரைப்பற்றி மேலும் பல விவரங்களை ஆசிரியர் மூலமாயும் சுவடி நிலைய வாயிலாயும் தெரிந்து கொள்ளுங்கள். பெருஞ்சித்திரனார் தம் வரலாற்றைத் தாமே கூறுவது போல ஒரு சிறு கட்டுரை எழுதுங்கள்.
3. ஓம்பாது உண்டு, கூம்பாது வீசி, வல்லாங்கு வாழ்தும் - இச்சொற்றொடர்களை விளக்குவதுடன் வாக்கியங்களிலும் தனித்தனி அமைத்துக் காட்டுக.
4. புறநானூறு பற்றிய விவரங்களையும் அதில் கூறப்படும் செய்திகளையும் சுருக்கி வரைக.

## 2. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை

[வித்துவான் எஸ். ஆறுமுக முதலியார், எம்.ஏ., பி.ஓ.எல்., எல்.டி.]

அன்பர்களே! சென்ற நூற்ருண்டின் இடையிலும் இறுதியிலும் தமிழ்க் கல்விக்குப் புத்துயிரளிக்கும் பெரும் பணியில் ஈடுபட்ட பலருள்ளும், பல வகைகளிலும், பேராசிரியர் பிள்ளையவர்கள் மிகச் சிறந்தவராவர் என்பதற்குப் பல காரணங்கள் காட்டலாம். முதலாவதாக இவர் கல்லூரியில் மெய்யுணர்வு நூற் புலவராயிருந்தும், தம் தாய்மொழியாகிய தமிழ் மொழிக் கல்வியிலும், அதன் முன்னேற்றத்திலும் பெரிதும் ஈடுபட்டவராய்ச் சிறந்த புலவரானதோடு, பல துறைகளிலும் நூல்கள் யாத்தனர். தமிழ் மக்கள் எத்துறையில் ஈடுபட்டிருப்பினும், தாய் மொழி முன்னேற்றத்தை மறந்துவிடக்கூடாது என்பதை அறிவுறுத்த இக்கால மக்களுக்கு இவர் ஒரு சிறந்த எடுத்துக் காட்டன்ருே? மேலும், நாடகத் தமிழின் முன்னேற்றத்துக்குழைத்தவர், இயல் இசை நாடகம் ஆகிய மூன்று தமிழுக்கும் உழைத்தவராகாரோ? முத்தமிழ்த் துறைபோகிய புலவர்களே உத்தமப் புலவர்களென இத் தலத்துப் புகழப்படுகின்றனர். என்னை? இயற்றமிழும் இசைத்தமிழும் நாடகத்தமிழின் அடங்குதலானும், இயல் இசைகளுக்கில்லாத சில சிறப்பியல்புகள் நாடகத் தமிழுக் குள்ளனவாதலானும் என்க. பாலில் வெண்ணெய் திரண்டு வருவதுபோல இயல் இசையடியாகப் பிறக்கும் நாடகத்தமிழ் இவையிரண்டின் தெளிவும், முதிர்ந்த வளர்ச்சியும், பயனுமாகும். இவையிரண்டும் கூடிய வழியே நாடகம் பிறக்குமாதலின் அது கருதி அது ஈற்றில் வைக்கப்பட்டுள்ளது. கையில் நூலெடுத்துப் படிக்கத் தெரியாதோரும், படித்தற்குரிய காலமில்லாதோரும் நாடகத்தினுல் நல்லறிவு வாய்க்கப் பெறுவர்; உலக இயல்பையும், மக்களியற்கையையும் உள்ளபடியே படம் பிடித்து நாடகம் காட்டும்; இயல் இசைகளைப் போல் கேள்வி இன்பத்தோடு நின்றுவிடாது காட்சியின்பமும்

உடன் அளிக்கும். காட்சி இன்பமே காதால் கேட்பதை விட உள்ளத்தில் நன்ருய் அமைக்கப்படும். உலகத்தின் சாயலாக இருக்கும் நாடக மேடையில் மக்கள் ஒழுக்கத்தின் விழுப்பத்தை நேரிற் கண்டு கொள்ளலாம். நல்லதன் நலனும், தீயதன் தீமையும் கண்ணுக்கெதிரே நாடகத்தில் காணப்படுகின்றன. உழைத்த உள்ளத்துக்கு ஊக்கம் விளேத்து, மன எழுச்சிகளாகிய உளச் சுவைகளேப் பண்படுத்திக் கற்பனேயை வளமுறச் செய்து, சிந்தனே அனுமானங்களேயும் செம்மையாகப் பேசி, உரையாடும் ஆற்றல்களேயும் வளர்த்துப் பயன் விளேவிக்கும் இன்னேரன்ன இயல்புகளால் தலேசிறந்து விளங்கும் நாடகம்.

இச் சிறந்த கலே, கடைச்சங்க நாட்களுக்குப் பிறகு நம் தமிழ் மொழியில் வளர்ச்சியுருது போனதோடன்றி அதற்கு முன்னெழுந்த எண்ணிறந்த நாடக இலக்கியங்களும், அகத்தியம், பரதம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல், கூத்த நூல் முதலிய நாடக இலக்கணங்களும் அழிந்தொழிந்தன.

சென்ற நூற்ருண்டில் நாடகத் தமிழின் மறுமலர்ச்சிக்கு அடிகோலி நாடகத்துக்கே சிறந்த இலக்கியமாய் என்றும் விளங்கும்படி சிறந்த நாடக இயல்புகள் எல்லாம் செகப்பிரியர் நாடகங்களிற் போல் இடம் பெறவும், ஒன்பான் சுவைகளும் ஒருங்கே பொருந்தவும், பத்து வகை அழகுகளும் பாங்குடன் அமையவும் சிறந்த தலேவியை அமைத்து ஏற்ற உறுப்பினர்களேயும் சேர்த்துச் சிறந்த நாடகமாகிய ''மனேன்மணீயத்தை'' உலகிற்களித்த பெருமை பிள்ளேயவர்களுக்கே உரியது.

அன்றியும் பாயிரத்தில் அமைத்த தமிழ்த் தெய்வ வணக்கம் தமிழ் நாடெங்கும் இன்று ஒலித்துக் கொண்டிருப்பதோடு தமிழ் அன்னேயின் திருச் செவிகளிலும் திருவுள்ளத்திலும் இனிது ஒலித்துக் கொண்டிருக்கிறது. மணிவாசகப் பெருந்தகை, இறைவனே, முன்னேப்பழம் பொருளுக்கும் முன்னேப்பழம் பொருளாயும், பின்னேப்

புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியனையும் ஆக்கினர். முன்னைப் பழமொழிக்கு முன்னைப் பழமொழியாகவும், பின்னைப் புதுமொழிக்குப் பின்னைப் புதுமொழியாகவும் விளங்கும் நந்தம் செந்தமிழ் மொழி "உயர் தனிச்செம் மொழி" எனற்பாலது என்று கருதிய பிள்ளையவர்கள் அதற்குக் கடவுளையே உவமை கூறினர்.

> "பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினும்ஓர்
> எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி இருப்பதுபோல்
> கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா ளமுந்துளுவும்
> உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
> ஆரியம்போல் உலகவழக்கு அழிந்தொழிந்து சிதையாவுன்
> சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே,"

என்பது அவர் அருள்வாக்கு.

சிறந்த நாடகப் புலவராகிய இவர் இவ்வாழ்த்தின் வாயிலாய், மொழிநூற் புலவர்களுக்கெல்லாம் அறிவுறுத்தும் சிறந்த மொழிநூல் உண்மைக்காக தமிழ் மக்களாகிய நாம் கடமைப்பட்டுள்ளோம். "சதுமறை ஆரியம் வருமுன்" இந்திய நாடாகிய "பெருநிலவுலகின் இருநிலப்பரப்பையும்" திராவிட மொழியாம் தமிழ் ஆண்டு வந்தது என்னும் மொழிநூல் உண்மையையும், சிறப்பாகக் கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமுந் துளுவும் தமிழாகிய தாயினின்றும் தோன்றின என்னும் திராவிட மொழிநூல் உண்மையையும் எடுத்துக்காட்டி மொழிநூல் ஆராய்ச்சிக்கும் அடிகோலியுள்ளார் இவர்.

இன்னும் இவர் தமிழ் இலக்கிய ஆராய்ச்சியிலும் தமிழ் நாட்டு, திருவாங்கூர் நாட்டு வரலாற்று ஆராய்ச்சியிலும், "அறிவியல்களின் (Sciences) வகைகளும் அவற்றின் முக்கிய முறைமையும்பொருளும்" என்னும் அறிவியல் துறையிலும் சிறந்தவர் என்பதை இவர் எழுதிய பத்துப்பாட்டு ஆராய்ச்சி, திருஞானசம்பந்தர்கால ஆராய்ச்சி, திருவிதாங்கூர் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி, நூற்றொகை விளக்கங்கள் காட்டிக் கொண்டு நிற்கின்றன. இங்ஙனம் பல துறைகளிலும் சிறந்த இவர் இன்றையத் தமிழ் மக்கள்,

"தீங்கரும் பீன்ற திரள்கால் உளையலரி
தேங்கமழ் நாற்ற மிழந்தாஅங்—கோங்கும்
உயர்குடி யுட்பிறப்பி னென்னும் பெயர்பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை"

என்றதற் கிலக்காயிராமல், நம் பண்டைப் பெருமைகளை மட்டும் பேசி நின்றுவிடாமல், ஒவ்வொருவரும் தமிழ் மொழியின் நிலையையும் நாட்டின் நிலையையும் தம்மா லியன்ற அளவு உயர்த்த வேண்டும் என்றும் அறைகூவிய தோடு நில்லாமல் தாமே தொண்டாற்றிச் செயலிலும் காட்டியிருக்கிறார். இவர் பூதவுடம்பு அழியினும் "மன்னு வுலகத்து மன்னுதல் குறித்தோர் தம் புகழ் நிறீஇத்தா மாய்ந்தனரே" என்றதுபோல் இவர் புகழுடம்பு என்றும் நின்று நிலவும்.

## குறிப்புரை

இக் கட்டுரை ஆசிரியர் பேராசிரியர் வித்துவான் சரவண ஆறுமுக முதலியார் அவர்கள், சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியில் பல்லா யிரக்கணக்கான ஆசிரியர்களுக்குத் தமிழ்ப்பற்றை ஊட்டிய பெருமை கொண்டவர். எல்லாத் துறைகளிலும் பாடங்களிலும் தமிழே வாயிலா யிருக்க வேண்டுமென்பதைப் பல்லாண்டுகளுக்கு முன்னரே தெளி வாய்ப் பகர்ந்தவர். தற்பொழுது பழனி கீழ்த்திசைக் கல்லூரியில் முதல்வராய்ப் பணியாற்றி வருகின்றார். தனித்தமிழில் பேசியும் எழுதி யும் வருவதோடு தமிழ் மாணவர்களையும் சார்ந்ததன் வண்ணமாய்த் தமிழ்ச் சுவையில் ஈடுபடச் செய்யும் பேராற்றல் வாய்ந்தவர்.

## அருஞ்சொற் பொருள்

மெய்யுணர்வு - தத்துவம். விழுப்பம் - மேன்மை. பாயிரம் - முகவுரை. பெற்றியன் - தன்மையன். அளித்து - காப்பாற்றி. துடைக் கினும் - அழித்தாலும். கவின் - அழகு. உதரம் - வயிறு. மன்னு - நிலைபெறுத.

## வினாக்கள்

1. தமிழ்க் கல்விக்குப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் எவ்விதங்களில் பணியாற்றினர்?

2. நாடகத் தமிழை எக்காரணங்களால் சிறந்தது என்று கூறலாம்?

3. பண்டைக் காலத்திய நாடக நூல்கள் யாவை?

4. சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய நாடகம் எது? அது எச் சிறப்புக்கள் வாய்ந்தது ?

5. மனோன்மணீயத் தமிழ்த் தெய்வ வணக்கத்தில் காணும் சிறப்புகள் யாவை ?

6. சுந்தரம் பிள்ளையவர்கள் எவ்வாறு மொழி நூலாராய்ச்சிக்கு அடிகோலியுள்ளார் ?

7. சுந்தரம் பிள்ளையவர்களின் பல்துறைப் புலமைக்குச் சான்று கள் தருக.

8. சுந்தரம் பிள்ளையவர்கள் வரலாறு நமக்கு அறிவுறுத்துவது யாது ?

9. குலத்தால் மட்டும் பயனில்லையாயின் வேறு எதனால் பயன் உண்டாகும் ?

10. "மன்னுதல் குறித்தோர் தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந் தனரே" இடஞ்சுட்டி விளக்குக.

## பயிற்சி

1. மூவகைத் தமிழைப் பற்றியும் அவற்றின் சிறப்புகளைப் பற்றியும் ஒரு கட்டுரை வரைக.

2. பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள் தம் வரலாற்றைத் தாமே எழுதுவது போல ஒரு சுயசரிதைக் கட்டுரை வரைக.

3. ஒன்பான் சுவை, பத்து வகை அழகுகள் பற்றிக் குறிப்பிடுக.

4. மனோன்மணீயத் தமிழ்த் தெய்வ வணக்கத்தின் சிறப்பு இயல்பு கள் பற்றி விளக்கமுற எழுதுக.

# 3. எனது இலங்கைச் செலவு

[திரு. வி. கலியாணசுந்தர முதலியார்]

'இலங்கைச் செலவு' என்னும் தலைப்பை நோக்கியதும் சிலர் 'இலங்கைக்குச்சென்று திரும்பியதற்குநேர்ந்த செலவு போலும்' என்று நினைக்கலாம். ஈண்டுச் 'செலவு' என்னும் சொல்லைப் பொருட் செலவென்னும் பொருளில் பெய்தேனில்லை. தரை நீர்ச் செலவு என்னும் பொருளில் அச்சொல்லைப் பெய்தேன். இந்நாளில் செலவுஎன்றசொற்குப் பதிலாகப் பெரிதும் 'யாத்திரை' என்னுஞ் சொல் ஆட்சி பெற்றிருக்கிறது. பண்டைத் தமிழ் நூல்களில் செலவு என்னுஞ் சொல்லே ஆட்சி பெற்றிருத்தல் காணலாம். 'செங்கோன் தரைச்செலவு' என்ற பெயர் தாங்கிய ஒரு தமிழ் நூலுண்மையும் கவனிக்கற்பாலது.

நாங்கள் கப்பலினின்றும் இறங்கி இலங்கைப் புகை வண்டியில் ஏறினோம். வழிநெடுகப் பசுமை உமிழும் மலைகளின் செறிவும், சூழலும், நிரையும், அணியும் உள்ளத்தைக் கவர்கின்றன. முகிற் குழாங்கள் மூண்டெழுந்து படிப்படியே அசைந்தும் ஆடியும் ஓடியும் மலைமுகடுகளிற் சூழ்ந்து தவழ்ந்து பாகைபோல் பொலியுங் காட்சியும்—அம்மலைகளின் உடல்புலனாகாவாறு பசும்பட்டுப் போர்த்தாலெனப் பொழில்கள் துதைந்துள்ள அழகும்—புலன்களை ஒன்றச் செய்கின்றன. மலையுச்சியினின்றும் தரை வரை, நிரைநிரையாகச் சரிந்தும் செறிந்தும் நிற்கும் தெங்கின் பெருக்கும், அவ்வாறே தெங்கைவிட்டுப் பிரியாது அணித்தே புடைசூழ்ந்துநிற்கும் கமுகின் உயர்வும், அவைகளுடன் நீக்கமின்றி வாழ்க்கைத் துணையெனச் சுற்றிச் சுற்றிப் பின்னிக்கிடக்கும் கான் பரந்த செடி கொடிகளின் ஈட்டமும், வானுலகேறப் பச்சைப்படாம் விரித்த படிகளெனத் திகழ்கின்றனவோ என்றும் ஐயுறலாம். புகைவண்டி அப்பசுமை நிலத்தில் பறந்தோடுவதை நோக்குழி, அது பச்சை மரகத மலையைக் கிழித்தோடும் அம்பெனத் தோன்றுகிறது. பசுமைக் காட்சியில்

லாத இடனும் உண்டோ? கண்ணுக்கும் மனத்துக்கும் இனிமையூட்டும் பசுமையின் பெற்றியை என்னென்றுரைப்பேன்!

புகை வண்டியின் விரைவில், இடையிடையோடுஞ் சிற்றருவிகளின் தோற்றம், பசியவானில் மின்னொளி தோன்றி மறைவது போலப் புலப்படுகிறது. பச்சைப் பசுங்கடலில் சிறுசிறு தீவுகள் நிலவுவதை மான, கூரை வேய்ந்த சிறுசிறு குடில்கள் நிலவுகின்றன. அக்குடில்களின் நடுவண் ஆடவர், மகளிர், குழந்தைகள், காளே, மயில், கன்றுகளென நிற்கின்றனர். அவ்வீட்டமும் இக்கூட்டமும் இயற்கையோடியைந்த இன்பமாகப் பொலிகின்றன. ஆங்காங்கே சிற்சில இடங்களில் தற்கால நாகரிகக் கட்டடங்களும் புலனுகின்றன. அவைகளைக் காணுந்தோறும் காணுந்தோறும் பொல்லா அரக்கர் குழுவைப் பார்ப்பது போன்ற நிகழ்ச்சி யுள்ளத்துருமற் போகாது. கூரைவேய்ந்த வீடுகள் இயற்கையோடியைந்து இன்பூட்டுவது போலப் பெரும் பெரும் மாடிகள் இயற்கையோடியைந்து நிற்பினும் இன்பூட்டுவதில்லை.

இந்நிலையில், வண்டி குறித்தகாலத்துக்கு இரண்டரை மணி நேரங்கடந்து, நிலையம் சேர்ந்தது. சேர்ந்ததும், கொழும்பிலுள்ள 'இந்திய வாலிபச் சங்க' நேயர்கள், ஆண்டுப்போந்து, 'தென்னுடைய சிவனே போற்றி' என்று ஒருவர் முழங்க மற்றவர், "எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று எதிரொலிபோல் முழங்க, எங்களை வரவேற்றுர்கள். செயற்கை வெம்மையில் வீழ்ந்து வருந்திக் கொண்டிருந்த எனதுள்ளம் தமிழ்மறைமீது ஓடிற்று. தென்னுட்டவர்க்குச் சிவனுக விளங்குவோனே, எந்நாட்டவர்க்கும் இறைவனுக விளங்குகிருன் என்று எண்ணி எண்ணி, அம்மறை அருளிய மாணிக்கவாசகரை உள்ளத்தால் போற்றிப் போந்தேன். எனது எளிய வாழ்வுக்கும் எனது மனத்துக்கும் இனியதாய், வெளியில் போந்ததுங் கடற்காட்சி நல்கவல்லதாயுள்ள ஓர் இன்ப நிலையத்தில் வதியுமாறு அன்பர்கள் என்னையும் நண்பரையும் விடுத்தார்கள்.

கொழும்பிற் கணித்தாயுள்ள வெள்ளவத்தையில் நாங்கள் தங்கியிருந்தோம். நாங்கள் சென்ற காலம் ஆடி வேல் விழாக் காலம். கதிர்வேற் பெருமான் வெள்ளித் தேர்மீது இவர்ந்து, கொழும்பினின்றும் வெள்ளவத் தைக்கு எழுந்தருளி அடியவர்க்கருள் செய்கிருர்.

அவ்விழாவில் முருகப் பெருமானைப் போற்ருத குலத் தார் இல்லை. எல்லாச் சமயத்தாரும் சாதியாரும் காணிக்கை செலுத்தி நெற்றியில் திருநீறணிந்து செல்லு கின்றனர். 'முருகக் கடவுள் தமிழ்க் கடவுள்' என்பது அவ்விழாவில் நன்கு தெரிகிறது. பல சமயக் கொள்கை உடைய தமிழ் மக்கள் அனைவரும் முருகக் கடவுளை வழி படுதல் கருதத்தக்கது. நமது தென்ஞட்டில் வேறு மதம் புகுந்த தமிழ் மக்கள் முருகக் கடவுளை வழிபடுகிருர்க ளில்லை. இலங்கைத் தமிழ் மக்கள் முருகன் வழிபாட்டில் ஒன்றி நிற்கிருர்கள்.

கொழும்பு 'இந்திய வாலிபச் சங்க' த்தின் ஆண்டு விழாவில் தலைமை வகிக்கவே யான் அழைக்கப்பட்டேன். அவ்விழா அழகிய தொரு கொட்டகையில் நடைபெற்றது. எனக்குச் சங்கச் சார்பாக வழங்கப்பெற்ற நன்மொழியில் சங்கத்தார் என் மாட்டுள்ள முழு அன்பையும் காட்டி யிருக்கிருர். அவர்க்கு நன்றி கூறுமுகத்தான் அந்நன் மொழியைத் தழுவியே எனது முன்னுரைக் கடனுற்றி னேன். அம் முன்னுரைக்கண் இந்தியாவில் பல குறைகள் இருக்கின்றன என்றும் அவை, (1) பெண்ணை அடிமைப் படுத்தியிருத்தல், (2) மக்களுள் பிறப்பால் உயர்வு தாழ்வு கொண்டமை, (3) பிறப்பில் தீண்டாமை வகுத்தது, (4) கருத்து வேற்றுமைக்கு மதிப்புக் கொடாமை, (5) பொருமை என்பன என்றும் பேசி, அவைகளைப் பீடிகையாகக் கொண்டு சுமார் ஒன்றரை மணி நேரம் சொற்பொழிவு நிகழ்த்தினேன். இந்திய இளைஞர் உலகில் அவ்வைம் பெருங்குறைகள் இருத்தலாகாதென்றும், அக் குறைபாடுகள் உள்ளமட்டும் இந்தியா உரிமை பெறல் அரிதென்றும் அவைகளை அன்புவழி நின்று களைய இளை

ஞர்கள் முயலல் வேண்டுமென்றும் இளைஞர்களுக்கு விண்ணப்பம் செய்துகொண்டேன்.

இலங்கை வாசிகளில் பெரும்பான்மையோர் சிங்களவரே. அவருள் ஆங்கிலம் பயின்ற ஆண் மக்களும் பெண் மக்களும் ஐரோப்பிய நடை, உடை பாவனைகளைக் கொண்டிருத்தலால் அவர்களைப் பற்றி ஒன்றுங்கூறவேண்டுவதில்லை. ஐரோப்பிய நாகரிகத்தில் தோயாத சிங்களவ ஆண் மகன் மிக வலியனாய் கூரிய நோக்குடையனாய்க் காணப்படுகிறான். அவன் முகத்தில் சாந்தம் காணோம். அவன் எளிய உடையே அணிகிறான். பலர் மயிரைக் கோலிக்கட்டி, வளைந்த தந்தச் சீப்பைச் செருகியிருக்கின்றனர். பெண்மகள் மிகத் திண்ணமாயிருக்கிறாள். அறிவு விளக்கம் புலப்படவில்லை. அவள் தன் அரையில் நான்கு முழத் துண்டையும், மார்பு மறைய ஒரு கஞ்சுகத்தையும் அணிந்திருக்கிறாள். மற்ற மேலாடை ஒன்றுமில்லை.

கொழும்பினின்றும் கண்டிக்குப் புறப்பட்டோம். எங்களை வழிகூட்டி அனுப்பப் போந்த அன்பர்களோடு நாங்கள் பேசிக்கொண் டிருந்தமையால், எங்கட்குச் செயற்கை வெம்மை புலனாகாமலிருந்தது. வண்டி புறப்பட்டதும் அவ்வெம்மைக் கொடுமை வருத்தத் தொடங்கிற்று. சிறிது நேரத்துக்குள் இயற்கை அன்னை காட்சி வழங்கினாள். அவ்வழியின் இயற்கை வளத்தை என்னென்று சொல்லுவேன்! ஸ்ரீநகர், டார்ஜிலிங், ஆல்ப்ஸ் முதலிய இடங்களிலுள்ள இயற்கை வளங்களைப் பற்றிக் கேள்வியுற்றிருக்கிறேன்; நூல்கள் வாயிலாகப் படித்துமிருக்கிறேன்; அவைகளை நேரே கண்டதில்லை. கண்டிக்குச் செல்லும் வழி நெடுக இயற்கை அன்னையின் திருவோலக்க மன்றி வேறென்ன இருக்கிறது? எங்கணும் மலைகள்—மலைத்தொடர்கள்—மலைச்சூழல்கள்; எங்கணுஞ் சோலைகள்—சாலைகள்—செடிகள், கொடிகள், பைங்கூழ்கள்; எங்கணும் அருவிகள்—ஆறுகள்—நீர்நிலைகள்—இவை யாவும் ஒன்றோடொன்று கலந்து அளிக்கும் காட்சியன்றோ கடவுட் காட்சி? நூற்றுக்கணக்கான குற்றாலங்கள், நூற்றுக்கணக்கான பாபநாசங்கள்—ஆண்டுள்ளன!

மலைகள் எத்துணை விதமாகக் காட்சி வழங்குகின்றன? சில இடங்களில் மலைகள் படிப்படியாக இழிந்து இடை வெளியிட்டு இவர்ந்து நிற்குந் தோற்றம் இயற்கை ஊசல் போல் விளங்குகின்றது. சில இடங்களில் மலைகள் சிங்கம் எழுந்து நின்று பாயவரும் தோற்றத்தை வழங்கிக் கொண்டு நிற்கின்றன. சில இடங்களில் அவைகள் செய் கரைபோல் நேர்மையாக நிற்கின்றன. பசுமை நிலவாத மலைப்பாங்கரே காணேம். தெங்கும், கமுகும், இரப்பர் மரங்களும் ஒரு பெரும் பசுங்கடல் பொங்கி வருதல்போல் காணப்படுகின்றன. சில இடங்களில் நாலா பக்கங்களி லும் மலை சூழ்ந்து நிற்ப, அவைகளினின்றும் பொழியும் அருவியும் அவைகளினடியில் நீரரண் என ஓடித்திகழ, நடுவண் பச்சைப் பசேலென வான் பயிர் தலையசைத்து நிற்கும் அழகைக் கண்டு உவந்தேன். பசிய மலைச் சோலைகளைப் பார்க்குந்தோறும் பார்க்குந்தோறும் இயற்கை இன்பவாழ்வு உள்ளத்தில் தோற்றமுரு நிற்கும். இப்பொழுது ஐரோப்பியத் தோட்டக்காரரும் மற்றவரும் இப்பசுங் காடுகளைப் பண்படுத்திப் பொருளீட்டுந்துறை கண்டிருக்கின்றனர். நம் முன்னேர் அவ்வியற்கை நிலை யங்களிடை வதிந்து, இயற்கையின் வாயிலாக இறைவ னைக் காணும் எளிய வாழ்வு நடாத்தினர். பசுமை பொங் கும் மலைகளைப் பார்த்துக்கொண்டே கண்டி சேர்ந்தோம். நிலையத்தருகே கண்டித் தமிழ் மக்கள் அன்போடு எங்களை வரவேற்ருர்கள். நாங்கள் ‘ தமிழக ’ நிலையத்தில் தங்கி யிருந்தோம். ஆங்குச் ‘ சைவம் ’, ‘ தமிழ் வரலாறு ’ என் னும் இரண்டு சொற்பொழிவுகள் நடைபெற்றன. ஆங் குள்ள தமிழர், தமிழ் மனத்தோடு எங்களுடன் உறவா டினர் என்று சுருங்கச் சொல்லி மேலே செல்லுகிறேன்.

கண்டி, கண்டின்புறத்தக்க இடங்களில் ஒன்று. கண் டியை இயற்கைக் குடில் என்று கூறுவது மிகையாகாது. கண்டியிலுள்ள விவசாயக் கல்லூரித் தோட்டம் முதலிய வற்றைக் கண்டோம். அத்தோட்ட வனப்பை வருணிக்கப் புகுந்தால் இக்கட்டுரை வருணனை உரையாகவே முடியும். இயற்கை அரசியின் உறையுளெல்லாங் கண்டு, பின்னர்ப்

பௌத்த மடம், கலாசாலை, கோயில் முதலிய அறநிலையங்களுக்குச் சென்றோம். மடத்தில் பெரிய பௌத்த குருவைப் பார்த்து உரையாடப் போனேன். அவர்க்குத் தமிழுந் தெரியவில்லை; ஆங்கிலமும் தெரியவில்லை; அவர் ஆணைப்படி பௌத்தக் கல்வி நிலையம் போந்து, ஆண்டுள்ள ஓர் ஐரோப்பியர்பால் உரையாடினேன். அவர் பௌத்த நூல்களில் ஆராய்ச்சியுடையவர் என்பது, அவரது அன்பார்ந்த பேச்சால் தெரியவந்தது. பேச்சில் நாங்கள் ஒருமை முடிவே பெற்றோம்.

கண்டியின் பலதிறக் காட்சி கண்டு, அன்பர்பால் விடைபெற்று யாழ்ப்பாணம் நோக்கினோம். யாழ்ப்பாணத்தின் இயற்கைவளம் நமது தென்னாட்டு இயற்கை வளத்துக்கு அரண் செய்வது. இலங்கையின் மற்றப் பகுதியின் இயற்கைவளம் யாழ்ப்பாணத்தில் இல்லை. புகையிலைப் பெருக்கு குறிக்கத்தக்கது. கொழும்பு வழியிலும் கண்டி வழியிலும் தெங்கின் பசுமை கண்ணுக்கு விருந்தளித்தது. யாழ்ப்பாணத்திலோ அத் தென்னங் கீற்றுகளின் வேலிகள் கண்ணைக் கவர்ந்து நின்றன. யாழ்ப்பாணத்தில் சொற்பொழிவுகள் பல நிகழ்ந்தன. ஒரேநாள் நான்கு இடங்களில் சொற்பொழிவு நிகழ்த்தலும் நேர்ந்தது. பல கல்லூரிகளிலும் சொற்பொழிவுகள் நடைபெற்றன. கல்லூரிகளில் எனதுள்ளத்தை கவர்ந்தது ஸர். பொன்னம்பலம் இராமநாதன் பெண் மக்கள் கல்லூரி. அக்கல்லூரியைப் பெருஞ் சிதம்பரமாக மனத்தால் தொழுதேன். தமிழும் சைவமும் ஆண்டிருந்து புத்துயிர்பெறும் என்னும் உறுதியும் எனக்குத் தோன்றிற்று.

யாழ்ப்பாணக் குடிமக்கள் தமிழர்; வேளாளர், சைவர். அவர் நமது தமிழ் நாட்டினின்றும் அவண் குடிபுகுந்தவர். அவருடன் போந்த வேறு சிலருமிருக்கின்றனர். தாய்நாட்டின் நினைவு தோன்ற ஆண்டுள்ள தமிழ் மக்கள் சில இடங்களுக்குத் திருநெல்வேலி, பட்டுக்கோட்டை முதலிய பெயர்களைச் சூட்டியிருக்கிறார்கள். யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் எங்கள்பால் காட்டிய அன்பு என்றும் மறக்கற்பாலதன்று. தென்னாட்டுத் தமிழ் மக்க

ளுக்கும் தங்கட்கும் இடையருத் தொடர்பிருத்தல் வேண்டு மென்று கூருத அன்பர்கள் இல்லை.

## குறிப்புரை

திரு. வி. கலியாணசுந்தர முதலியார் என்ற இயற் பெயர் பெற்ற திரு. வி. க. அவர்கள் சிறந்த தொண்டுகளை நாட்டு விடுதலை இயக்கத்தில் சேர்ந்து ஆற்றியவர். பெண்கள் உரிமை, தொழிலாளர் முன்னேற்றம், சமூக உயர்வு, தாய்மொழி வளர்ச்சி ஆகியவைகளுக்கு உழைப்பதையே தம் உயிர்நாடியாகக் கொண்டிருந்தவர். இவர் எழுதிய தமிழ் நூல்களும் பேசிய பேச்சுக்களும் எளிமை, இனிமை, கவர்ச்சி, புது மலர்ச்சி முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டிலங்குவன. மனம், மொழி, மெய்களாலும் தூய தன்மையுற்றவர். ஏழை எளியவர்களுக்கு இரங்கிப் பல்லாற்ருனும் துணை புரியும் நெகிழ்ச்சியுள்ளத்தைக் கொண்டவர். சில ஆண்டுகளுக்கு முன்னரே (1953) காலம் சென்றுவிட்டார்.

## அருஞ்சொற் பொருள்

பெய்தேனில்லை - வைத்தேனில்லை. செறிவு - அடர்த்தி. சூழல் - சுற்றுப்புறம். நிரை - வரிசை. அணி - அழகு. முகிற் குழாம்-மேகக்கூட்டம். மலைமுகடு - மலையுச்சி. பாகை - தலைப்பாகை. துதைந்து - நெருங்கி. தெங்கு - தென்னை. கமுகு - பாக்கு மரம். ஈட்டம் - கூட்டம். படாம் - சேலை. பெற்றி - தன்மை. ஆண்டுப் போந்து - அங்கே சென்று. வதியுமாறு - வசிக்கும்படி. அணித்து - அருகிலுள்ளது. இவர்ந்து - ஏறி. ஒன்றி-கூடி. என்மாட்டுள்ள-என்மீது வைத்துள்ள. கஞ்சுகம்-சட்டை. திருவோலக்கம் - கொலுவீற்றிருத்தல். இழிந்து - இறங்கி. பாங்கர் - பக்கம். குடில் - குடிசை. பைங்கூழ் - பசுமை + கூழ்-பசுமையான பயிர்.

## வினுக்கள்

1. இலங்கைச் செலவு என்பதன் பொருள் யாது? அது எவ்வாறு பொருந்தும்?
2. ஆசிரியர் இலங்கைப் புகை வண்டியில் சென்றபொழுது கண்ட காட்சிகளை எழுதுக.
3. பொல்லா அரக்கர் குழுவை நினைவூட்டுவன யாவை?
4. திரு. வி. க. அவர்களுக்கு வரவேற்பு எம்முறையில் இலங்கையில் நிகழ்ந்தது?
5. முருகக் கடவுள் வழிபாட்டில் தமிழ் நாட்டிற்கும் இலங்கைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
6. திரு. வி. க. அவர்கள் இந்தியாவில் கண்ட குறைகள் யாவை?
7. சிங்கள மக்களின் நடை, உடைகளை விளக்குக.

8. கொழும்பிலிருந்து கண்டிக்குச் [செல்லும் வழியில் காணும் காட்சிகளை விளக்குக.

9. திரு. வி. க. அவர்கள் கண்டியில் கண்டவைகள் யாவை?

10. யாழ்ப்பாணம் பற்றி 15 வரிகளில் விளக்குக.

11. யாழ்ப்பாணத் தமிழர்கள் பற்றி நீ அறிவன யாவை?

## பயிற்சி

1. இயற்கை வனப்பமைந்த தோட்டம், மலை, யாறு முதலியவை களில் ஏதாவது ஒன்றினைப்பற்றி இவ் விலங்கைச் செலவில் கண்டவாறு நீ கண்ட காட்சிகளை விளக்கி எழுதுக.

2. நீ மேற்கொண்ட ஏதாவது ஓர் இன்பச் செலவு பற்றி இப் பாடப் பகுதி போன்றே கவர்ச்சியான முறையில் ஒரு கட்டுரை எழுதுக.

3. "நூற்றுக்கணக்கான குற்றுலங்கள், நூற்றுக்கணக்கான பாப நாசங்கள் ஆண்டுள்ளன." இத் தொடரை விளக்கமுறத் தெரிவதோ டன்றி இது போன்று வேறு தொடர்கள் நான்கினை எழுதுக.

4. பச்சைப் பசேலென, பசும் பட்டுப் போர்த்தாலென, வானுல கேறப் பச்சைப் படாம் விரித்த படிகளென - என மிகப் பசுமை வாய்ந்த இடத்தை விளக்கப் புக்க ஆசிரியர் கையாண்டுள்ள தொடர்களைக் காணுங்கள். இது போன்ற பிற தொடர்கள் சில எழுதுங்கள்.

# 4. தமிழ் வளர்ச்சி

[மகாவித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை]

"இருந் தமிழே! உன்னால் இருந்தேன்! இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்!"

(தமிழ் விடு தூது, 151)

"தமிழ் வாழ்க!" என்னும் இன்னொலி யாண்டும் ஒலித்துப் பேரின்பம் பயக்கும் இந்நாளில், தமிழ் வளர்ச்சியைப்பற்றி எண்ணுவதும் இயம்புவதும் தமிழ்த் தொண்டு புரிய விழையுந் தக்கார் பலருக்கும் இன்றியமையாக் கடனாகும். சங்க காலத்துத் தமிழ் நாட்டில் தனி யாட்சி செய்த தமிழனை, அயல் மொழிக்குத் தன் அரியணையை உரியதாக்கி அடிமை வாழ்வினை அடைந்திருந்தமைக்குக் காரணம், இந்நாட்டில் அயலார் ஆட்சி ஆணிவேர் ஊன்றி ஆக்கம் பெற்றமையே என்பது, அனைவரும் அறிந்த உண்மை.

தமிழர் – விண்ணவர் அளிக்கும் விருந்தினும் – அமிழ்தத்தினும்–தமிழ் மொழி இன்பம் பயப்பதில் – உயிர்க்கு உறுதி செய்வதில்–ஒப்பற்ற கருவியெனக் கருதிய தமிழர் –பண்டைத் தமிழர்–பல துறைகளிலும் தமிழை வளமுறச் செய்து வாழ்ந்தனர். இறைவனும் தமிழ் இசைக்கு இதயம் களித்தனன்–இன்பத் தொண்டு இயற்றினன் – எனத் தமிழ் நாட்டில் கேட்கப்பட்டுவரும் தெய்வீகக் கதைகள், அந் நாளில் வாழ்ந்த தண்டமிழ்வாணர் தமிழுக்கு அளித்த தனிப் பெரு மதிப்பை உணர்த்த எழுந்தனவேயாகும் எனக் கருதுதல் குற்றமுடைய செயலாகாது.

முடியுடைய மூவேந்தரும் முதன்மை தந்து வளர்த்த தமிழ்–பாவலன் பொருட்டுப் பச்சைப் பசுங்கொண்டலும் பின் தொடரச் செய்த செந்தமிழ்–பரவை மனை மீதில் அன்று ஒரு பொழுது தூது செல்லப் பரமனையும் பணி கொண்ட பைந்தமிழ்– தன்னால் வைதாரையும் இறைவன் வாழ வைத்தற்கு வாய்ப்புத் தந்த வண்டமிழ் – இறவாப் புகழ் பெற்ற எண்ணற்ற நூற்களை இயற்றித் தந்த இன்

றமிழ் – சித்தர் பலரைத் தோற்றுவித்த தீந்தமிழ் - இயல் இசை நாடகங்களால் இன்பம் விளைத்த எழிற்றமிழ் பின்னுளில் கண்ணிருந்தும் காணுமலும், செவியிருந்தும் கேளாமலும், வாய் இருந்தும் பேசாமலும்,குருடர்களாய்ச் செவிடர்களாய் ஊமைகளாய்த் தன் மக்கள் ஆளவந்த அயலார் மொழியின் மேற்கொண்ட அளவில்லாக் காதலால் மதியிழந்து மாறத் தானும் அஞ்ஞாத வாசத்தினை மேற்கொண்டு அல்லலுறுவதாயிற்று.

பழந்தமிழ் நூல்கள் பரண்மேலேறிப் பதுங்கின! எண்ணற்ற சுவடிகள் எரிக்கிரையாயின! பதினெட்டாம் பெருக்குப் பற்பல சுவடிகளைப் பௌவத்திற் கொண்டு போய்ச் சேர்த்தது. புரப்பார் இலராகவே, புலவரும் இலராயினர். காவியங்காணும் கவிஞரும், பாவலரும், நாவலரும் அருகினர்.

ஒண்ட வந்த மொழி, உலவாச் செந்தமிழ் மொழியை ஒளிமங்கச் செய்து, அடுப்பங்கரையிலும் ஆட்சிபுரிவதாயிற்று. ஆள வந்தவர்களின் மொழிக்கு அடிமைப் பணி பூண்டவரே, அருங்கலைவாணராகக் கருதப்பட்டனர். நாடெங்கும் ஆங்கில மொழியே ஆட்சி புரிவதாயிற்று. அறிஞர் பலரும் தமிழ் மொழியில் உரையாடுவதும் தம் மேன்மைக்கு ஊறு விளைக்குமெனக் கருதி, ஆங்கில உடை, ஆங்கில மொழி ஆகிய அயல்நாட்டுச் சரக்குகளுக்கே ஆக்கமளித்து வந்தனர். மேடைப்பேச்சாளர்களும் ஆங்கில மொழியை அரைகுறையாகக் கற்றவர்களும் - தங்களுக்குத் தமிழில் பேசத் தெரியாதென்பதைத் தனிப் பெரு மதிப்புடன் கூறி, அன்ன நடை கற்கப் போய்த் தன்னடையும் இழந்தாற்போல, கருத்தாழமற்ற-கண்ணியமற்ற – தங்கள் எண்ணங்களைக் குழறி வந்தார்கள்.

தமிழைத் தக்க ஆசிரியரிடம் பயின்று, மொழித் திறத்தின் முட்டறுத்து, பெரும் புலமை பெற்று, போயொருத்தர் வாய்க் கேட்க நூலின்றி மன்னு தமிழ்ப் புலவராய்த் தம்மை நாடிவந்து பலரும் கேட்க வீற்றிருந்த பெரும் புலவர்கள், ஒட்டிய வயிறும், கட்டிய பீற்றலுமாய்க் காட்சி

யளித்தனர். அயல்நாட்டு மொழியில் ஆர்வங்கொண்டு, வயிற்றுப் பெருமான் பொருட்டு வறட்டுப் பாட மோதி, வாய்வந்தன பேசித் திரிந்த பலர் அப் புலவர் பெருமக் களை இகழ்ந்து பேசுவதும், ஏளனம் செய்வதும் தம் அறிவுடைமைக்கு அழகெனக்கருதி, போற்றுதலறியாப் புல்லர் களாய், எங்கும் தூற்றுதலையே செய்து, அயலானுக்கு அடிபணிந்து வாழ்க்கை நடத்தி வந்தார்கள்.

இத்தகைய நெறி பிறழ்ந்த செயல்களால், தமிழ் கற்பாரும் நாளுக்குநாள் அருகினர். தமிழ் மக்களுட் பலர் தம் பெயரைப் பிழையின்றி எழுதவும் தெரியாத நிலையில் உயரிய பதவிகளில் அமர்ந்து, அடிமைத் தொண்டாற்றி மறைந்தனர். அவர் கற்ற கல்வி, நாட்டின் உரிமை யாட்சிக்கு அணுத்துணையும் ஆக்கந் தேடப் பயன் படாமற் புறஞ்சுவர்க் கோலஞ் செய்யவே துணை புரிந்தது.

கடல் கடந்து வாணிகஞ் செய்யக் கருதி இவ் வள நாடு புகுந்த வெள்ளையர்கள், கொள்ளையர்களாய் மாறி ஏமாளிகளாய்க் காட்சியளித்த இந் நாட்டவர் உதவி கொண்டே தம் நாட்டாட்சியை இந்நாட்டில் வேரூன்றச் செய்து விட்டார்கள்.

இது காரணமாக, இந்நாட்டவர் தந்நாட்டு மொழியின் ஏற்றத்தை அடியோடு மறந்தொழிந்தமையின்,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்!
பாமரராய் விலங்குகளாய்க் குருடர்களாய்ச்
செவிடர்களாய்ப் பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
சேமமுற வேண்டுமெனிற் றெருவெல்லாம்,
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!"

என உறங்கிய தமிழரை விழித்தெழப் பாடினர் நாட்டு மொழிப் பாட்டின் மூலம் மொழிப் பற்றும் நாட்டுப் பற்றும் தமிழருக்கு ஊட்டக் கருதிய 'பாரதியார்' என்னும் பழம் புதுக் கவிஞர்.

எங்கும் தமிழ் முழக்கம் கேட்கிறது ! 'வாழ்க தமிழ் !' என்று இளஞ்சிருரும் முழங்குகின்றனர். இது தமிழுக்கு மீண்டும் நற்காலம் பிறக்கிறது என்பதற்கு நல்லறிகுறி தான் என எண்ணி மகிழ்கிருேம் ! ஆனுல், கற்பாரின்றி— கற்பிப்பாரின்றி — போற்றுவாரின்றி — புனைவாரின்றித் தமிழ் எவ்வாறு தழைத்தோங்கும் ? ஒலியளவாய் உருக்கொண்ட தமிழர் நல்லெண்ணம், செயலளவில் உருக்கொள்ள வேண்டாவா ? விளம்பரப் பலகைகளெல் லாம் கொட்டை எழுத்தில் தமிழணங்கின் சிதைந்த சொற்களைத்தானே விளம்பரம் செய்கின்றன ! பட்டம் பெற்ற "அருணு ஜலங்களும், வெங்கிடா ஜலங்களும், றெங்க ஸ்வாமிகளும், திருவாங்கிடங்களும், பிரும் மணுள் ஹோட்டல்களும்" இன்னும் காட்சியளித் துக் கொண்டுதானே இருக்கின்றன ! தெருப் பெயர் திருத்தமறப் பொறிக்கப்பெற்ற பலகைகள் இன்னும் தமிழ்நாட்டில் திகழ்ந்துகொண்டுதானே வருகின்றன !

ஆயிரக் கணக்கில் அச்சுவாகனமேறி வெளிவரும் தமிழ்ச் சுவடிகளிலும், நாட் செய்தித் தாள்களிலும் இன்றும் அம்மைத் தழும்புகள் அகன்றபாடில்லையே ! பேச்சிலும் எழுத்திலும் பிழைபட்ட சொற்களல்லவா இன்றும் நாம் கேட்டுவருவனவும் பார்த்து வருவனவுமாய் உலவுகின்றன ? வெட்கம் ! வெட்கம் !

அருந்தமிழ் அன்னைக்கு ஆக்கமளிக்க விரும்பும் அன்பர்களே !

"ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்,"

என்னும் வள்ளுவர் வாய்மொழியை உள்ளத்திற்கொண்டு எங்கும் தமிழ்மொழி தழைத்தோங்கற்கான செயல்களில் அனைவரும் ஊக்கம் காட்டுங்கள். நகரின் பல இடங்களி லும் மாலை நேரப் பள்ளிகளமைத்து, தமிழ் கற்க வாய்ப் பிழந்தாருக்கு நல்லாசிரியர்களைக் கொண்டு தமிழைக் கற் பிக்க வழி கோலுங்கள். ஒவ்வொரு சிற்றூரிலும் நற் றமிழ்நூல் நிலையங்களை நிறுவிச் சிறுவர், சிறுமியர், இளைஞர், முதியர், பெண்டிர் ஆகிய அனைவரும் ஒவ்வொரு

நாளும் நூல் நிலையத்திலுள்ள நூல்களை வாங்கி ஓய்வு நேரத்திற் படித்துப் பயனடையும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். நாட்டின் நலங்கருதும் செல்வர்கள், தங்களால் இயலுமளவு பொருளுதவி செய்து, இவ்வாக்க வேலை இடையீடின்றி நடைபெறச் செய்வார்களாக.

கல்விக் கழகங்களில் தமிழ்த்தொண்டு மேற்கொண்டுள்ள தமிழாசிரியர்களின் மதிப்பைப் பலவகையாலும் உயர்த்த முயலுங்கள். பதிப்பகங்களில் நல்ல தமிழ்ப் பயிற்சி பெற்றுள்ள அறிஞர்களை அமர்த்தி, அச்சேறும் சிறு விளம்பரத் தாள் முதல் கலையாக்கங் கருதி வெளியிடும் நூல்கள் இறுதியாக, அனைத்தும், பிழையறப் பார்வையிடச் செய்து வெளியாக்குங்கள்.

இன்னும் அறிஞர்கள் எவ்வெத்துறைகளிலெல்லாம் தமிழுக்கு ஆக்கந்தேட இயலுமோ, அவ்வத்துறைகளிலெல்லாம் ஆக்கந் தேடுவதைத் தமது உயரிய கடமையாகக் கொண்டு பணியாற்றினாலன்றித் தமிழ் வளர வழியுண்டாகாது. **வாழ்க தமிழ் !**

## குறிப்புரை

திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள், மகாவித்துவான், சிந்தாமணிச் செல்வர் என்றெல்லாம் புலவர் பெருமக்களால் பாராட்டப் பெற்ற ஒரு முது பெரும்புலவர். தமிழாசிரியத் தொண்டாற்றி ஓய்வு பெற்றும், தமிழ்த் தாய்க்குரிய வழுவினைக் களைதலையே தம் தலைசிறந்த தொண்டெனக் கருதித் தமிழைப் பிழையறப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். செங்கற்பட்டு மாவட்டத் தமிழாசிரியர் கழகத் தலைவர் ஆவர். கச்சியம்பதியையும், சென்னைப் புரசைப்பாக்கத்தையும் தமக்குரிய இடமாகக் கொண்டு வாழ்ந்து வருபவர். செந்தமிழில் பேசவும் எழுதவும் வல்லவர். அடக்கமும் இன்சொல்லும் இயல்பாகப் பெற்ற பெரியார். இவர் பதிப்பித்த தமிழ் இலக்கியங்கள் அளப்பில. பல தமிழ்ப் புலவர் பெருமக்களையும் உருவாக்கிய பெருமை இவருக்குண்டு.

## அருஞ்சொற் பொருள்

பச்சைப் பசுங்கொண்டல் - நீல நிறமுடைய திருமால். கணிகண்ணன் பொருட்டுக் காஞ்சியில் திருமால் சென்ற வரலாறு கேட்டுத் தெளிக. அஞ்ஞாத வாசம் - மறைந்து வாழ்தல். அருகினர் - சுருங்கினர். உலவா - அழியா.

## வினாக்கள்

1. பண்டைத் தமிழர் தமிழுக்கு எவ்வாற்ருன் பெருமை அளித்தனர் ?

2. தமிழின் பெருமைகள் யாவை ?

3. தமிழ் அஞ்ஞாத வாசம் மேற்கொள்ளக் காரணம் யாது ?

4. தமிழ் ஒளி மங்கக் காரணங்கள் யாவை ?

5. தமிழ் கற்பார் குறையக் காரணம் யாது ?

6. தமிழ் நாடு அடிமை நாடாக ஏற்பட்ட சாதனம் யாது ?

7. பாரதியார் தமிழருக்குக் கூறிய விழிப்பூட்டும் உரைகள் யாவை ?

8. தமிழ்நாட்டில் தற்பொழுது காணும் குறைகள் யாவை ?

9. தமிழுக்கு ஆக்கம் அளிக்க மேற்கொள்ளத் தக்கன யாவை ?

10. அன்ன நடை கற்கப்போய்த் தன் நடையும் இழந்தாற் போல-இடஞ்சுட்டி விளக்குக.

## பயிற்சி

1. தமிழுக்காகப் பச்சைப் பசுங்கொண்டல் சென்ற வரலாறு, தமிழுக்காகச் சிவபெருமான் பரவையார் மனைக்குத் தூது சென்ற வரலாறு முதலியவற்றை ஆசிரியர் மூலமும் நூல் நிலையம் வாயிலாயும் தெரிந்து கொள்ளுங்கள்.

2. கீழ்க்காணும் சொற்றொடர்களை விளக்கி வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக—பதினெட்டாம் பெருக்கு, வறட்டுப் பாடம், அம்மைத் தழும்புகள், அஞ்ஞாத வாசம்.

3. 'தமிழ் வளர்ச்சிக்குரிய வழிகள்' என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.

4. "அன்ன நடை கற்கப் போய் தன் நடையும் இழந்தாற் போல்." இது போன்று நான்கு உவமைகள் பொருந்த ஒரு கட்டுரை எழுதுக. தலைப்பு உன் விருப்பம்போல் அமைத்துக்கொள்க.

# 5. கரிப்புகையிற் கற்பகம்

[ஈ. த. இராசேசுவரி அம்மையார், எம். ஏ., எல்.டி.]

"**புகை நாற்றம்** அடித்த பொருள்" என இனிய உணவையும் இகழ்கின்றோம். அவ்வளவு நுட்பமாய் இருக்கின்றது நம்முடைய சுவையுணர்வு! புகையோ பலவகை. அவ்வகைகளில் எல்லாம் ஈடுபட்ட பாவலர்களிடத்தே அவற்றின் அருமை பெருமையை அறிதல் வேண்டும். மேல் நோக்கி வளைந்து வளைந்து செல்லும் மெல்லிய புகை அழகியதொரு நீலக்கொடியாய் ஆடி அசைகிறது. **இளங்கோ அடிகள்** மதுரைமா நகரைப் பாடத்தொடங்குகிறார். கண்ணகியும் கோவலனும் மதுரையை நோக்கி வருகிறார்கள். அவர்களுக்குத் தொலைவில் காட்சியளிப்பது நறுமணம் ஊட்டி நல்வரவேற்கும் புகையேயாம். நாகரிகத்தின் நலனெல்லாங் கமழுந் தென்றற் காற்றோடு இணைந்து, அந்தப்புகை உலவுகிறது. புலவர் பெருமானார் நிமிர்ந்து ஓடும் புகையை நேரிற்கண்டு நெஞ்சு மகிழ்ந்தவர் போலும்! "அறம் பொருள் இன்பம் வீடு" என்ற நான்கு துறைகளிலும் செழித்து ஓங்கி வானகத்தை எட்டிப் பார்க்கின்றது; வீட்டினைத் தேடி வேள்வி செய்கின்ற போது எழுகின்ற வீட்டுப் புகை ஒரு புறம்; மனைவியும் மணாளனும் மணந்து வாழும்போது காதலி தன் கூந்தலுக்கு ஊட்டும் இன்பப் புகை ஒருபுறம்; பலரும்கூடி வாழும் பொருட்டுறையில் விலைக்கு விற்கும் அறுசுவையப் பழும் பிறவும் நறுமணம் கமழ்ந்து நாவில் நீர் ஊறவைக்கும் பொருட்புகை ஒருபுறம்; பசிப்பிணி நீக்கி உண்டி கொடுத்து உயிரை வளர்க்கும் அறப்பள்ளியின் அட்டிலில் எழும் அறப்புகை ஒருபுறம்; இந்த மணத்தாலேயே எதிரில் இருப்பது மதுரை என நகரை நோக்கி வருவார் அறிகின்றார்," என அடிகள் பாடுகின்றார்.

இளங்கோ அடிகளின் கண் இருந்தால் நாமும் இந்தக் காட்சி காணலாம். ஆனால் நாம் காணுங் காட்சி என்ன? பழைய காலத்தில் திடீரென உலகெங்கும் ஆனைப்பல்லி

கள் ஆனைப் பாம்புகள் என்று பலவகையான உயிர்ப் பொருள்கள் பூதங்கள் போலத் தோன்றினவாம். அது போல நம் உலகிலும் திடீரென இந்த எந்திர ஊழியில் பெரிய பெரிய தொழிற்சாலைகள் பழைய அரக்கர்போலப் பல்லாயிரந் தலையும் பல்லாயிரங் கையும், பளபளவென ஒளிவிடும் பல்லாயிரங் கண்ணுமாகத் தோன்றியுள்ளன. இவை கான்றுகொண்டே யிருக்கும் கரும்புகை காற்றின் வழியே காதங் காதமாகப் படலமிட்டோடி உலகைக் கரிய இருளில் கவிழ்த்து விடுகின்றன. 'பழைய பெருவிலங்கு கள்போல இவையும் அழிந்து ஒழியாவா!' என நம்மை யும் அறியாது ஓர் எண்ணம் பிறக்கிறது. புகைக் கூண்டு புகையைக் கக்கிக்கொண்டு வானளாவிப் பெரும் பூதமாகி ஓங்குவதனை யார் அறியார்? எங்கும் கரி! எங்கும் தூசி! வானமும் மூடுபனியாய்ப் புகை வெள்ளத்தில் புதை கிறது.

இது கரிய காளியின் கருங் கூத்து. இந்தக் காளி யின் களியாட்டத்தை அடக்கி ஆடும் விஞ்ஞான ஆண்ட வரின் இன்ப ஒளிக்கூத்தும் எதிரே எழுகின்றது. புகைக் காளி விஞ்ஞான நடராசன் முன்னே பொன்பூத்த பூங் கொடியாய்க் கொலையை மறந்து, பெண் தன்மை சிறந்த பேரழகியாய் விளங்குகிருள். புகை வளைந்து போவதனைக் கண்டு புகைக்கொடி என்று புகழ்கின்றோம். வானத்தின் மேலே இந்தப் புகைக்கொடி வளைந்து வளைந்து தவழ் கிறது. எந்த மரத்தை வளைந்து தவழ்கிறது? வானிலுள் ளது ஒரு மரமே; அதற்குக் கற்பகம் என்பது பெயர். அத னைச் சுற்றிக்கொள்ளுங் கொடிக்குக் கற்பகவல்லி என் பது பெயர். அம்மரம் நினைத்ததனைத் தந்துபொன்பூக்கும் பொன் மரம். அது எண்ணியதனைத் தந்து பொன்பூக்கும் பொற்கொடியாம். உண்மையில் புகைக்கொடியும் பொற் கொடியே. இம்மண்ணகத்தில் தரையில் கிடைக்காத பொருளெல்லாம் விண்ணகத்தில் புகையில் கிடைக்கும். இளங்கோ அடிகள் கண்ட அறமும் பொருளும் இன்பமும் வீடும் இன்றும் புகையில் பொலிகின்றன; காணத்தான் கண் வேண்டும்.

பல இருந்தாலும் உலகம் பார்க்க விரும்புவது பொருளைத்தான். "பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை" புகையில் பொன் கொழிப்பது உண்மையில் நடப்ப தொன்றே. ஆஸ்திரேலியாவில் பல பொற் சுரங்கங்கள் உண்டு. பொற் கட்டிகளை வெட்டி எடுத்துத் துரிசு போக்கித் தூய்மை செய்து உருக்கி வரும்போது பொற்று கள் பொறி பொறியாய்ப் பறக்குமாம். புகையோடு பொறிகளைக் கலந்து போகவிட்டால், அவை பாழா யன்றோ போகும்! மேலே பறந்து போகாமல் உருக்கிடத் துக்குள்ளே விழும்படி அப்பொற்றுகள்களை வளைத்து இழுத்து வருவதற்கெனப் பல விசிறிகள் அங்கே சுழன்று விசிறிக்கொண்டே இருக்குமாம். விசிறியினுல் துகள்கள் பறக்கும் என நினைக்கலாம். ஆனுல் அவை உறிஞ்சு விசிறிகள். நாம் உறிஞ்சும்போது பொருள்கள் வாய்க் குள் போவதுபோல, இந்த எந்திர விசிறிகள் இயங்கத் தொடங்கியதும் பொறிகள் வெளியேபோக வழியின்றி, உள்ளாக வாய்க்குள்ளே வந்துவிழும். இவ்வாறு புகைக் கூண்டிற்போகும் புகையிலிருந்து பொன்னைத் தெள்ளிக் கொழிக்கும் பெருமையை ஆஸ்திரேலியாவிலுள்ள கல் கூர்லி முதலிய இடங்களில் இன்றும் காணலாம்.

பொன்னினும் அரிய பொருள்கள் புகையிற் கிடைக் கின்றன. காலியம் என்பது அத்தகைய அரும்பொருள்க ளுள் ஒன்று. அரிசி எடையாகத்தான் அதனைப் பற்றிப் பேசுவது வழக்கம். லெக்காக்கு என்பவர் 1875இல் அந்தப் பொருளைத் தனியே பிரித்து எடுத்தார். 'காக்கு' என்பதற்கு ஆங்கிலத்தில் கோழி என்பது பொருள். கோழிக்கு லத்தீனில் 'கால்' என்பது பெயர். அப்பெரி யாரின் நினைவை நிலைநாட்டச் சுற்றி வளைத்த மொழி பெயர்ப்பாகிய 'காலியம்' என்றதனை அந்தப் பொரு ளுக்கு அறிஞருலகம் பேராக வைத்து வழங்கியது. கல்லும் மண்ணுமாய்க் கிடந்த துத்தநாகக் கட்டியை உருக்கி ஆராய்ந்தபோது, இந்தப் புதிய உலோகம் கிட்டி யது. இது நாகம் என்ற இனத்தைச் சேர்ந்ததே. இது வல்லென்று இராமல் மெல்லென்று இருக்கும்; கருநீலங்

கலந்த வெண்மைநிறங் கொண்டு ஒளிரும்; மிகக் குறைந்த சுடுநிலையிலே உருகிவிடும். எங்கும் தேடியலை யாதபடி புகைக் கூண்டில் எல்லாம் இந்த அரும்பொருள் எளிதில் கிடைக்கின்றதாம். ஆங்கிலத் துரைத்தனத்தார், தம் நாட்டில் டெட்டிங்டன் என்னும் இடத்தே வேதி யாராய்ச்சி செய்யுங் காட்சி நிலையம் ஒன்று அமைத் துள்ளனர். அந்தச் செய் காட்சி நிலையமே, இவ்வாறு காலியச் சுரங்கமாய் ஆங்கில நாட்டுப் புகைக்கூண்டுகள் அமைந்துள்ளன என்பதைக் கண்டுபிடித்துக் கூறியது.

இந்தக் காலியத்தின் பயனை அறிந்தால் மட்டுமே புகைக் கூண்டின் பெருமை விளங்கும். "ஓய்வெடுக்கப் பிறந்தவர் ஒரு சிலரே; ஏனையோர் உழைக்கப் பிறந்த வரே," என்ற காலமும் உண்டு. பாட்டும் கூத்தும் பழங் கால உலகில் செல்வர்களுக்கே உரியவை. ஆனல் இக்கால உலகிலோ, பாட்டும் கூத்தும் அனைவர்க்கும் என்பது உறுதியாய்விட்டது.இவ்வாறு எல்லாரும் அனுபவிப்பதும் இயல்பாகிவிட்டது. பேசும் படமும் வானொலியுமே இந்தப் பெரும் புரட்சியைச் செய்துவிட்டன. தொலைவில் பாடுவ தனை அப்பொழுதைக்கப்பொழுதே காணவும் விரும்பு கிறோம்; பேசும்படம் பார்க்கிறோம்; தொலைவில் பேசு கிறோம்; இன்னுஞ் சிலநாளில் இங்கிலாந்தில் நடப்பது இங்கு எதிரே தோன்றும். இதற்குத் **தொலைவில் காட்சி** என்பது பெயர்.

தொலைவில் பேசுவது எவ்வாறு கேட்கிறது? ஒலி, அலையலையாகப் பரவி விரைவில் வந்து நம்மை எட்ட முடி யாது. நம்மைக் கேட்பிக்குமாறு செய்ய எந்திரத்தின் உதவி வேண்டும். ஒலியலை எழுந்ததும் அதன் எதிரே கரித்துகளோ வேறென்றே அமைந்த பொறி ஒன்று இருக்கும். அந்தத் துகளை ஒலியலை அசைக்கும். ஒலி யலையும் அசைக்குமாறு அவ்வளவு நுட்பமாக அமைந்தது அந்தப் பொறி. அதில் மின்சாரம் ஓடுங் கம்பி கரித்துகளை ஒட்டிக் கிடக்கும். கரித்துகள் மேலும் கீழும் ஏற்றத்தாழ் வாய் அசையும்போது அந்தக் கம்பியின் மின்சார ஓட்டத் திலும் ஏற்றத்தாழ்வு நிகழும். ஒலியலை இவ்வாறு மின்

காந்த அலையாய் மாறி ஓடிவருகிறது. மின் காந்த அலை மிகப் பெரிய எல்லையையும் எட்டிப் பார்க்கும். வினடிக்கு 347 மீட்டர் ஓடும் ஒலியலைபோல அன்றி, விநாடிக்கு 2,76,600 கி.மீ. வேகத்தில் மின்காந்த அலை ஓடும். ஆகையால், பாடின பாட்டினை உடனுக்கு உடனே கேட்கிறோம். கேட்கும் நம் எதிரே மின்காந்த அலை திரும்பவும் ஒலியலையாய் மாறுகிறது. இந்த மாற்றத்தைச் செய்யுங் கருவியே வீடுதோறும் நாம் காணும் வானொலிப் பெட்டி. தொலைவில் நிகழும் காட்சியைக் காணவேண்டுமென எழும் ஆசையை நிறைவேற்றிக் கொள்ளும் வழியும் இங்கே தோன்றுகிறது. 'காட்சி' என்பது என்ன? அஃது ஒளியலை கண்ணில் தாக்குவதுதான். ஒளியலைகள் மிகவும் நுட்பமானவை. ஆதலின், அவற்றினையும் மிகப் பெரிய மின்காந்த அலைகளின்மேல் ஏற்றி, வானொலியில் அனுப்புவதுபோல, அனுப்பவேண்டும். ஒலியலையிலும் மிக நுண்ணிய ஒளியலைகள் உடன் அசைந்து மின்சார ஓட்டத்தில் ஏற்றத் தாழ்வினை உண்டுபண்ணக்கூடிய கருவி ஒன்றுவேண்டும். விஞ்ஞானப்புதுமை என்பது இந்தக்கருவிக்கே தகும். மிக நுண்ணிய ஒளி மாற்றத்தினையும் மிக விரைவில் அறிந்து இயங்கிக் காட்டும் இந்த மின்சாரப் பொறிக்கு **ஒளிமின்கலம்** என்பது பெயர். இத்தகைய ஒளிமின்கலத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுவது காலியமேயாம். செல்வர்க்குக்கிட்டாத செல்வமானாலும், குடியரசில் பொதுமக்களுக்கு உகந்த பொருள் இதுவேயாகும். ஆங்கில நாட்டில் ஓர் ஆண்டில் ஒன்றரைக் கோடி ரூபாய் விலையுள்ள காலியம் கரிப்புகையும் கருஞ்சாம்பலுமாகப் புகைக் கூண்டில் வீணாகின்றதாம். இதனைத் தடுத்துப் பயன்படுத்தினால் உலகெல்லாம் கலையுலகாகக் களித்துத் தழைக்கும் அன்றோ!

புகைக் கூண்டில் மற்றோர் அரும்பொருள் கிடைக்கின்றது; அதன் பெயர் ஜெர்மானியம். 1887 இல் விங்கிளர் என்பவர் இதனை முதன்முதல் பிரித்து எடுத்தார். இவர் ஜெர்மானியர் ஆதலின், இந்தப்பொருளும் ஜெர்மானியம் என்னும் பெயர் பெற்றது. ஜெர்மனியில் சாக்சனி என்ற

இடத்தில் கிடைக்கும் ஒரு பொருளை ஆராய்ந்து இந்தப் பொருளை இவர் பிரித்து எடுத்தார். உப்பாகும் முறை, கரைசலாகும் முறை முதலிய எல்லாம் இதற்குச் சிறப்பியல்பாய் விளங்கக் காண்கிறோம். இதனால் மருத்துவ ஆராய்ச்சி நிலையங்களுக்கு இது மிகவும் வேண்டுவதாகிறது. புகைக் கூண்டிலிருந்து இதனைப் பெற முடியுமானால், பலபல புது மருந்துகளையும் முறைகளையும் கண்டுபிடித்துச் சாவாது வாழும் பெருவாழ்வினை நிலைநாட்டக் கூடும். எனவே, கரிப்புகையில் கற்பகம் இருக்கக் காண்கின்றோம்.

## குறிப்புரை

ஈ. த. இராசேசுவரி அம்மையார் அவர்கள் சிறந்த தமிழறிஞர். M.A. பட்டம் பெற்ற அறிவியல் வல்லுநர். அறிவியற் கலைகளில் செறிந்த பொருள்களை எல்லாம் தூய தமிழ் நடையில் பல்லாண்டுகட்கு முன்பு தொட்டே எழுதி வந்தவர்கள். பெருமாட்டி வில்லிங்டன் கல்லூரியில் பௌதிகப் பேராசிரியராய் விளங்கியவர்கள். சூரியன், பரமாணுப் புராணம் முதலிய அறிவியல் நூல்கள் பலவற்றைத் தமிழில் எழுதியவர்கள். அண்மையில் நம்முலகத்தை விட்டுச் சென்றுவிட்டார்கள்.

## அருஞ்சொற் பொருள்

தொலைவு - தூரம். கமழும் - வாசனை வீசும். வேள்வி - யாகம். வீட்டுப்புகை - யாகத் தீயிலிருந்து தோன்றும் புகை. அறுசுவை - தித்திப்பு, புளிப்பு, கார்ப்பு, காழ்ப்பு, கைப்பு, துவர்ப்பு என்பன. அறப்பள்ளி - தரும சத்திரம். அட்டில்-சமையலறை. ஆனைப்பல்லி, ஆனைப் பாம்பு - மனிதன் தோன்றாக் காலத்தில் பூமியில் வாழ்ந்திருந்த மிகப் பெரிய ஊர்வன இனப் பிராணி வகைகள். ஊழி - யுகம். கான்று கொண்டு - வெளிவிட்டுக் கொண்டு. காதம் - 16 கி. மீட்டர் தூரம். துரிசு - குற்றம். துகள் - பொடி. பொன் + துகள் = பொற்றுகள். வேதியாராய்ச்சி - உலோகங்களைப் பிரித்தெடுக்கும் இரசாயன ஆராய்ச்சி. பொறி - எந்திரம். பொருள் + புகை = பொருட்புகை. கற்பகம் - தேவருலகத்திலுள்ள விரும்பியவற்றைத் தரவல்ல ஒரு வகை மரம்.

## வினாக்கள்

1. மதுரையில் கோவலன் கண்ட புகைக் காட்சிகள் யாவை?
2. த்ற்கால புகைக் காட்சிகளைப் பற்றி எழுதுக.
3. புகையைப் பற்றி மக்கள் கருத்து என்ன?

TB 031(9) N65

4. புகை கொடியாதல் எவ்வாறு? எக்கொடி?

5. புகைக் கொடி கற்பகக் கொடியாக ஆனது பொருந்துமாற்றை விளக்குக.

6. "காளியை அடக்கினுர் ஈசன் கூத்தால்"—இவ்வுண்மையை ஆசிரியர் புகைக் கொடிக்கும் எவ்வாறு பொருத்திக் காட்டுகிருர்?

7. புகையிலிருந்து பொன் பெறும் விதம் எவ்வாறு?

8. புகையிலிருந்து கிடைக்கும் சிறந்த பொருள்கள் யாவை?

9. காலியம் என்று பெயர் வரக் காரணம் என்ன?

10. காலியத்தின் தன்மைகள் யாவை?

11. காலியத்திஞல் ஏற்படும் பயன்கள் யாவை?

12. தொலேவில் பேசுவது எவ்வாறு கேட்கிறது?

13. ஒளி மின்கலத்தைப் பற்றித் தெரிந்ததை வரைக.

14. ஜெர்மானியம் பற்றி நீங்கள் அறிவன யாவை?

15. இளங்கோவடிகள் குறிப்பிட்ட காட்சியும் தற்பொழுதைய காட்சியும் எவ்வாறு ஒருமித்திருக்கிறது?

16. புகைபற்றி ஆராய்ந்துள்ளவர்கள் யாவர்?

17. "பழைய பெரு விலங்குகள் போல இவையும் அழிந்து ஒழி யாவா?" இடஞ்சுட்டி விளக்குக.

18. "கரிப்புகையில் கற்பகம்" என்ற சொற்ருெடரிலிருந்து நீ அறிவன யாவை?

19. இங்கிலாந்து கலேயுலகாகக் களித்துத் தழைக்க உள்ள வழி யாது?

20. ஒலியலே, ஒளியலே, மின்காந்த அலேகளேப்பற்றி விளக்குக.

## பயிற்சி

1. புகைப்போக்கியில் புகை போவதை ஆசிரியர் பலபட விளக்கிக் கூறுவதே போன்று ஆறு செல்வதை அழகாக (வர்ணித்து) விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.

2. "புகையும் பயனும்" என்பது பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

3. காலியம் தான் கண்டுபிடிக்கப்பட்ட விதத்தைப் பிறருக்கு எடுத்துக் கூறுவது போல் ஒரு 'தன் வரலாற்றுக் கட்டுரை' எழுதுக.

4. தொலே பேசி, தொலேக் காட்சிகளே விளக்கி ஒரு கட்டுரை வரைக.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
89963
சென்னை 600 008

# 6. வரதுங்கராம பாண்டியன்

[வித்துவான் அம்பை இரா. சங்கரன், தலைமைத் தமிழாசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, சென்னை.]

சித்திக்கு வித்தாகி விளங்கும் இச்செந்தமிழ் நாட்டில் ஆன்றோர்களால் போற்றப்பட்ட தொன்மை வாய்ந்த நாடு பாண்டி நாடாகும். அந்நாட்டைத் தமிழ்ப் பழங்குடிகளாய மூவேந்தர்களுள் ஒருவராய பாண்டிய மரபினர் நீதிநெறி வழுவாது ஆட்சி புரிந்து வந்தனர். மூவேந்தர்களும் தம்முள் ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொண்டதாலும், பிற நாட்டு அரசர்கள் படையெடுப்பாலும் பிற்காலத்துத் தங்கள் அரசின் பெருமையை மூவேந்தர்களும் இழந்தனர். அவ்வமயம் பாண்டிய மரபினரும் தாங்கள் வலி இழந்தவராய் முழு நாட்டையும் ஆள இயலாது சிறு சிறு பகுதிகளை மாத்திரம் ஆளலாயினர். அவ்வாறு திருநெல்வேலி மாவட்டத்தைச் சில பாண்டியச் சிற்றரசர்கள் ஆண்டனர். அவர்களுள் ஒருவனுய வரதுங்கராம பாண்டியனைப் பற்றிய சில விவரங்களைக் காண்போமாக.

திருநெல்வேலி மாவட்டத்திற்குத் தென் பாண்டி நாடு என்று பெயர் ஆகும். அந்நாட்டில் கரிவலம்வந்தநல்லூர் பக்கமுள்ள பகுதியை கி. பி. 1551 முதல் கி. பி. 1564 முடிய வீரபாண்டியன் அல்லது திருநெல்வேலிப் பாண்டியன் என்பான் அரசு செலுத்தி வந்தான். இவன் 'வல்லம்' என்ற ஊரை வென்று தன்னடிக் கீழ்ப்படுத்தினுன். அதனுல் 'காசிக்கலியன்' என்ற ஒரு புலவர் இவனைப் பற்றிப் புகழ்ந்து "வீர வெண்பா மாலை" என்ற ஒரு நூலையே இயற்றினுர் என்று தெரிகின்றது. அந்நூல் தற்பொழுது கிடைக்கவில்லை. இவ் வீரபாண்டியனுக்கு வரதுங்கராமன், அதிவீரராமன் என்ற இரு பிள்ளைகள் பிறந்தனர். வீரபாண்டியன் இவர்கள் இருவரையும் எல்லாக் கலைகளிலும் வல்லவர்களாக்கினன்.

அவ்வமயம் தென்காசியைத் தலைநகராகக் கொண்டு காசி கண்ட பராக்கிரம பாண்டியன் என்பான் ஆட்சி

புரிந்து வந்தான். அவனுக்குப் பிள்ளைப்பேறு இன்மையால் தன் தாயாதியான வீரபாண்டியனிடம் ஒரு மகனைத் தத்தாகத் தரும்படி கேட்டனன். அவ்வாறே வீரபாண்டியனும் இசைந்தான். தன் இளைய மகனான அதிவீரராம பாண்டியனைத் தத்தாகப் பராக்கிரம பாண்டியனுக்கு அளித்தான். இந்த அதிவீரராம பாண்டியன் காசி கண்ட பராக்கிரம பாண்டியனுக்குப் பின்னர் தென்காசியைத் தலைநகராகக் கொண்டு செவ்வனே ஆட்சி செலுத்தி வந்தான். இவனே "நைடதம் புலவர்க்கு ஔடதம்" என்று போற்றப்பெற்ற நூலை இயற்றிப் புலவருலகத்திலும் சிறந்த இடத்தைப் பெற்று விளங்கினவன் ஆவன்.

வீர பாண்டியனுக்குப் பின்னர் அவன் முதல் மகனான வரதுங்கராம பாண்டியன் கி. பி. 1565 முதல் கி. பி. 1580 முடிய ஆட்சிப் பீடத்தில் ஏறி அரசாட்சியைச் செலுத்தினான். இவ்வரதுங்கனும் பல்கலைக் குரிசிலாய் விளங்கினதோடு சிறந்த சிவபத்தியுள்ளவனாயும் திகழ்ந்தான். இவனுக்கு இல்லக்கிழத்தியாய் வாய்க்கப்பெற்றவள் சிவகாமசுந்தரி என்னும் மாது நல்லாள். கரிவலம்வந்த நல்லூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பெருமான் பால்வண்ணநாதரையும் உமாதேவியார் ஒப்பனையம்மையையும் இவர்கள் இருவரும் நாடோறும் வழிபட்டு வரலாயினர். வரதுங்கன் அக்கருவையிலுள்ள பெருமான் மீது அளவிறந்த பத்திப் பெருக்கால் பத்திச் சுவை ததும்பக்கூடிய பல பாக்களைப் பாடினன். அப்பாக்களைக் கொண்டவைகளே தற்பொழுது வெளி வந்துள்ள மூன்று நூல்களும். அவை திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி, திருக்கருவை வெண்பா அந்தாதி, திருக்கருவைக் கலித்துறையந்தாதி என்பனவாம்.

"திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பது ஒரு பழமொழி. இம் முதுமொழியிலிருந்தே மாணிக்கவாசக சுவாமிகள் இயற்றியருளிய திருவாசகம் மிகவும் உருக்கம் அமைந்த நூல் என்பது வெள்ளிடை மலை. இவ் வரதுங்கராம பாண்டியன் பாடிய மூன்று பத்தி நூல்களிலும் திருக்கருவைப் பதிற்றுப்

பத்தந்தாதி மிகவும் உருக்கம் அமைந்தது. அதனுல் இதற்குக் ‘ குட்டித் திருவாசகம் ’ என்றும் மற்றொரு பெயர் உண்டு. இப்பெயரிலிருந்தே இவன் பாடல்கள் எவ்வளவு உருக்கம் அமைந்தவை என்பதைத் தெள்ளிதின் உணரலாம். எடுத்துக்காட்டாக ஒரு செய்யுளை நோக்குமின் :—

முன்னைப் பிறவித் தவப்பயனே முழுதும் அறியா மூடனிவன்
என்னக் கருத்தில் இரங்கியோ யாதோ அறியேன் இரவுபகல்
கன்னல் பாகில் கோல்தேனில் கனியில் கனிந்த கவிபாட
வன்னதி தொகுதி வயல்கருவை ஆண்டான் என்னை ஆண்டதுவே.

ஒரு சமயம் அதிவீரராம பாண்டியன் தான் இயற்றிய நைடதத்தை வரதுங்கனுக்குப் பார்வையிடுவதற்காக ஒரு தூதன் மூலம் அனுப்பி வைத்தான். வரதுங்கன் அந் நைடத ஏட்டைப் பார்த்ததும் மிகவும் வருந்தினன். “ நம் தம்பி அதிவீரன் செத்துப் பிறக்கின்ற மனிதனைப் பற்றி வீணுய்ப்பாடித் தன் பிறப்பின் பெருமையையும் இழந்து விட்டானே,” என்று நினைத்தான். உடனே “ ஏடு நன்றுய் இருக்கின்றது,” என்று கூறிவிட்டு, தான் பாடிய திருக்கருவைக் கலித்துறை அந்தாதியிலுள்ள,

சங்கக் குழையனைத் தென்கரு வாபுரித் தாணுவைவான்
கங்கைச் சடையனைப் பாடல்செய் யாத கவிப்புலவீர்
அங்கச் சுமைகொண்டு எழுநான்கு கோடி அழிநரகப்
பங்கத்தில் வீழவன் றேபொன்று வார்தமைப் பாடுவதே.

என்ற செய்யுளையும் எழுதிக் கொடுத்தனுப்பினன். மேலும் பிற கருத்துக்களை எல்லாம் தன் மனைவியைச் சொல்லச் செய்தான். அந்த அம்மையார் சிறந்த தமிழ்ப் புலமை வாய்ந்தவர்கள். அந்நூலை முற்றிலும் படித்து முடித்த பின்னர், “ இந்நூல் நடை வேட்டைநாய் நடை போல் இருக்கிறது,” என்று தம் கருத்தைத் தெரிவித் தார்கள். வேட்டை நாய் முதலில் வேட்டைக்குச் செல் லும் பொழுது சுறுசுறுப்பாய்ச் செல்லும். பின்னர் வேட்டை முடிந்து திரும்பி வரும்பொழுது மிகவும் சோர் வாய் வரும். அதுபோன்றே நைடதத்தின் முதற்பகுதி மிடுக்காயும், வரவரச் சோர்வு தட்டும் நிலையிலும் உள்ளது என்பது இதன் குறிப்புப் பொருள். அண்ணன் அறி

வுரையையும் அண்ணியார் இழிவுரையையும் தெரிந்த அதி வீரராம பாண்டியன் பெரிதும் கவன்ருன். தன் தமைய னும் அண்ணியாரும் தன்னைப் பெரிதும் இகழ்ந்ததாகக் கருதி அவர்களுக்கு மாருகப் போர் தொடுக்க நினைத்து, படையெடுப்புக்கு வேண்டிய எல்லா ஆயத்தங்களையும் மேற்கொண்டான். தான் போரிட வரும் செய்தியை வரதுங்கனுக்கு ஒரு தூதுவன் மூலம் முன்னரே தெரிவித் தனன். அது தெரிந்த வரதுங்கன் தன் தம்பியின் அறி யாமை குறித்து மிக்க கவலையுள் ஆழ்ந்தான். "எல்லோ ருக்கும் சிறந்த தம்பிகள் கிடைப்பரோ?" என்று உன்னி அழுங்கினன். தம்பிக்கு மீண்டும் அறிவு கொளுத்தக் கருதி,

> செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
> பஞ்சவரில் பார்த்தனையும் பாராதே—மிஞ்சு
> விரதந் தனைக்கொண்டு மெய்யன்பு பூண்ட
> பரதனையும் ராமனையும் பார்.

என்ற செய்யுளை எழுதி அத்தூதன் மூலம் கொடுத்தனுப் பினன். இச்செய்யுளைக் கண்ணுற்ற அதிவீரராம பாண் டியனுக்கு உடனே அறியாமை இருள் நீங்கியது. "வாலி, சுக்கிரீவன்; இராவணன், விபீடணன்; அருச்சுனன், கர்ணன் ஆகிய இவர்களைப் போல் இராமல் பரதனையும் இராமனையும் போல் சகோதர வாஞ்சையுடையவனுக இருக்க வேண்டும்," என்ற அண்ணனின் அறிவுரை அதி வீரனுக்கு மிகவும் பயனளித்தது. தன் தவற்றினை உணர்ந்து மிகவும் கழிவிரக்கப்பட்டான். "தன் கையைக் கொண்டு தானே குத்திக் கொள்வது போன்று அன்ருே இருக்கின்றது என்செயல்," என எண்ணி வருந்தி அண்ணன் திருவடித் தாமரைகளில் வீழ்ந்து வணங்கித் தன் பிழையைப் பொறுத்தருள வேண்டினன். வரதுங்கன் அதிவீரராம பாண்டியன் பிழையைப் பொறுத்ததோடன்றி இறைவனைப்பற்றித் துதிக்குமாறு அறிவுரையும் புகன் றனன். பின்னரே காசிகாண்டம், கூர்மபுராணம் முதலிய பத்தி நூல்களையும், வெற்றிவேற்கை போன்ற நீதி நூல்

களையும், அதிவீரராம பாண்டியன் பாடினதாகத் தெரி கின்றது.

அப்பால் நீதி முறைப்படி வரதுங்கராம பாண்டியன் சில ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவனைப் பற்றிய பத்தி சம்பந்தமான வரலாறுகள் பல உள. அவைகளைப் படிக்குந்தோறும் கண்ணப்பர், சிறுத்தொண்டர் போன்றோர் வரிசையில் இவனும் ஒருவனுய் இருக்கத்தக்கவன் என்ற எண்ணம் எழும். இவனைப் பற்றிய பிற சிறப்புக் களை இன்றும் கரிவலம்வந்தநல்லூர் என்னும் கருவைமா நகரின் பகுதிகளில் சென்று கேட்கின் விரிவாய் உணர லாம்.

## குறிப்புரை

இக்கட்டுரை ஆசிரியர் திரு. இரா. சங்கரன் என்பவர் திருநெல் வேலி மாவட்டத்தில் தாம்பிரபரணிக் கரையில் உள்ள அம்பாசமுத் திரத்தில் பிறந்தவர் ஆவர். ஏழைக்குடியில் பிறந்தாலும் பல நல்லோரின் இணக்கம் பெற்று முன்னேற்றம் அடைந்தார். இன்று சென்னைப் பச்சையப்பன் உயர் நிலைப்பள்ளியில் தலைமைத் தமிழா சிரியராயிருக்கிருர். சென்னைத் தமிழாசிரியர் கழகம், மாநிலத்தமிழா சிரியர் கழகம், சைவ சித்தாந்த மகா சமாசம், மாணவர் மன்றம் முதலிய நிலையங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு ஒல்லும் வகையான் மொழித் தொண்டும் சமயத் தொண்டும் செய்து வருகிருர்.

## அருஞ்சொற் பொருள்

சித்தி - நற்பயன். வித்து - மூலகாரணம். தொன்மை - பழமை. தாயாதி - உறவினன். தத்து - சுவீகாரம், பிறர் பிள்ளையைத் தனக் கென்று கொள்ளுதல். ஔடதம் - அமிழ்து, சிறந்த மருந்து. குரிசில் - சிறந்தோன். கன்னல் - கரும்பு. கோல்தேன் - கொம்புத்தேன். வன்னம் - அழகு, நிறம். தாணு - நிலையுள்ள பெருமான். பங்கம் - சேறு. பொன்றுவார் - அழிபவர். மிடுக்கு - வீறு, உற்சாகம். வாஞ்சை - பிரியம்.

## வினுக்கள்

1. பாண்டிய மரபினர் நாடு சிறிதாகக் காரணம் யாது ?
2. வீரபாண்டியன் பற்றி நீ அறியும் செய்திகள் யாவை ?

3. அதிவீரராம பாண்டியன் தென்காசியில் ஆளக் காரணம் யாது?

4. வரதுங்கனின் பத்திப் பெருக்கைச் சுருக்கி வரைக.

5. அதிவீரராமனுக்கும் வரதுங்கனுக்கும் மாறுபாடு ஏற்படக் காரணம் யாது?

6. வரதுங்கன் அதிவீரராம பாண்டியனுக்கு எவ்வாறு அறிவு கொளுத்தினன்?

7. குட்டித் திருவாசகம், வேட்டை நாய் நடை—இவை பற்றி நீவிர் அறிந்தவை யாவை?

8. "பரதனையும் இராமனையும் பார்," இதிலிருந்து தெரிவதென்ன?

# 7. யாழ் நூலாசிரியர் விபுலானந்த அடிகளார்

[வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனர்]

'இசையோடு சிவணிய யாழின் நூல்' எனக்கொங்குவேளும், 'நரம்பின் மறை' எனத் தொல்காப்பியனுரும் குறிப்பிட்ட இசை நூலாகிய யாழ் நூல் இருந்த இடம் தெரியவில்லை. தமிழ்மொழிக்கே சிறப்பாக உரிய இயல் இசை நாடகம் என்னும் முத்திறங்களுள் இசை நாடகப் பகுதிகளை இடைக்காலத் தமிழர் கருத்தின்றி நெகிழவிட்டமையினுலே அவை பற்றிய தமிழ் நூல்களும் மறைந்தொழிந்தன. அதனுல் இக்காலத்தில் ஒருசிலர் தமிழர்க்கு இசை இல்லையெனத் தம்முட் கூறித் திரிவாராயினர். இந்நிலையிலே பண்டைத் தமிழ் நூல்களாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்பவற்றிலும், சேரமுனிவர் அருளிய முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்திலும் வந்துள்ள இசைநூற் பொருள்களை யெல்லாம் ஒரு சேரத் தொகுத்து ஆராய்ந்து இக்காலத்துக்குப் பயன்படும் வண்ணம் 'யாழ்நூல்' என்னும் பெயருடைய இசைத்தமிழ் முதல் நூலை வகுத்தருளிய பேராசிரியர், அருள்மிகு விபுலானந்த அடிகளாராவர்.

ஈழநாட்டின் கிழக்குப் பகுதியான மட்டக்களப்பினைச் சார்ந்த காரேறு மூதூரில் வேளாண் செல்வராகிய சாமித்தம்பியாருக்கும் அவர்தம் வாழ்க்கைத் துணைவியார் கண்ணம்மையாருக்கும் பெறலருந்தவப் புதல்வராக 1892 மார்ச்சு 29 (கர, பங்குனி கக)ஆம் நாளில், சுவாமி விபுலானந்தரவர்கள் தோன்றினர்கள். சுவாமிக்குத் தந்தையர் இட்டு வழங்கிய இளம்பருவப் பெயர் மயில்வாகனன் என்பதாகும். மயில்வாகனனர் தம் தந்தையாரிடத்திலும் தாய்மாமன்மாராகிய சிவகுருநாதப்பிள்ளை, வசந்தராசப்பிள்ளை என்பவர்களிடத்திலும், தமிழ் நூல்களை முறையாகப் பாடங்கேட்டு வந்தார். சிதம்பர தரிசனத்திற்குச் சென்று திரும்பிய சாமித்தம்பியாரவர்கள் தாம் வாங்கிவந்த நாவலர் சரித்திரம், நாவலர் இயற்றிய சைவ

நூல்கள் என்பவற்றைத் தம் மகனுருக்குக் கொடுத்தார். அந்நூல்களைப் படித்த மயில்வாகனனுர் ஆறுமுக நாவலரைத் தம் வாழ்க்கைக்கு வழிகாட்டும் முதல்வராக எண்ணினுர்.

ஆசிரியப் பயிற்சியில் தேர்ந்த மயில்வாகனனுர் 1913–14இல் மட்டக்களப்பு அர்ச்மைக்கேல் கலாசாலையில் ஆசிரியப்பணி மேற்கொண்டு மாணுக்கர்களுக்குக் கல்வி கற்பித்தார். 1914ஆம் ஆண்டில் தாயார் கண்ணம்மையார் சிவபதமடைந்தார். பின் 1915இல் அரசினர் பொறியியற் கல்லூரியிற் சேர்ந்து பேராசிரியர்கள் A. F. ஜோசப், M. W. N. ரே என்னும் இருவரிடத்திலும் விஞ்ஞானக் கலை பயின்று 1916இல் நடந்த தேர்வில் தேர்ந்து தகுதிச் சான்றும் பெற்ருர். இவ்வாண்டிலேயே மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதத் தேர்வுக்குச் சென்று தேர்ந்து தமிழ்த் துறையிலும் தகவுடைய பட்டம் பெற்றுப் பண்டித மயில் வாகனனுர் என அழைக்கப் பெற்ருர். இலங்கையிலிருந்து முதன்முதல் மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதத் தேர்வுக்கு எழுதித் தேர்ந்தவர் மயில்வாகனனுரே ஆவர்.

நில்லாத உலகியல்பு கண்ட பண்டித மயில்வாகனனுரவர்கள் நிலையா வாழ்க்கை அல்லலென்று அறத் துறந்து சமயங்களானவற்றின் நல்லாறு தெரிந்துணர நாடி 1922இல் சென்னையிலுள்ள இராம கிருட்டின சங்கத்தைச் சேர்ந்தார்கள். அக்காலத்து அவர்களுக்குத் திருமடத்தினர் வழங்கிய பிரமசரியப் பெயர் 'பிரபோத சைதன்யர்' என்பதாகும். பிரபோத சைதன்யர் சென்னையிலிருக்கும்பொழுது தமிழிதழாகிய ஸ்ரீராம கிருட்டின விஜயத்திற்கும், ஆங்கில இதழாகிய வேதாந்த கேசரிக்கும் ஆசிரியராய் அமர்ந்து சமயத் தொண்டாற்றினர். இக்காலத்தில், சென்னையிலிருந்து தமிழும் சமயமும் பொருளாக ஆற்றிய விரிவுரைகளும், எழுதிய கட்டுரைகளும் பலவாகும். மதுரையிலிருந்து வெளிவரும் 'செந்தமிழ்' என்னும் திங்களிதழில் அறிவியற்பொருள் பற்றிய கட்டுரைகளைத் திருந்திய தமிழில் வெளியிட்டுள்ளார். இவர்களது புலமை மாண்

பினையுணர்ந்த இலங்கை சர். பி. அருணுசலம் அவர்கள் அக்காலத்தில் நிறுவப்பட்ட கொழும்புப் பல்கலைக் கழகத்திற்குப் பேராசிரியராக வரும்படி அழைத்தார்கள். இந் நிலையில் பண்டித மயில்வாகனனுர் 1924இல் சித்திரைத் திங்கள் நிறைமதிநாளில் சுவாமி சர்வானந்தரது உதவியால் சுவாமி சிவானந்தரவர்கள்பால் தீக்கை பெற்றுத் துறவுநிலையெய்திச் சுவாமி விபுலானந்தர் என அழைக்கப் பெற்றுர். திருப்பாதிரிப்புலியூரில் ஞானியார் மடாலயத்தில் எழுந்தருளியிருந்த அருண்மிகு சிவசண்முக மெய்ஞ் ஞான சிவாச்சாரிய சுவாமிகள் நம் விபுலானந்த அடிகளாரை அழைத்து ஆண்டுவிழாவிற்குத் தலைமைதாங்கச் செய்தார்கள்.

1925 முதல் 1931 வரை இலங்கையிலிருந்து இராம கிருட்டின மடத்தின் ஆதரவில் மட்டக்களப்பு முதலிய இடங்களில் கல்வி நிலையங்களைத் தோற்றுவித்து அவற்றைப் புரந்து வந்ததுடன், திருக்கோணு மலையிலுள்ள இந்துக் கல்லூரியின் தலைமை ஆசிரியராகவும் பணிபுரிந்துள்ளார். செட்டி நாட்டரசர் திரு. அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் தாம் நிறுவிப் போற்றிவரும் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப்பகுதித் தலைவர் பதவியை ஏற்று நடத்த வேண்டுமென அருண்மிகு விபுலானந்த அடிகளாரை வேண்டிக் கொண்டார்கள். அவர்கள் வேண்டுகோளினை உவந்து ஏற்றுக்கொண்ட சுவாமிகள் 1931 முதல் 1933 வரை அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்து தமிழ் மொழிக்கும் பெருந்தொண்டாற்றினுர். இவ்வாறு தமிழ்நாட்டில் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராக முதன் முதல் விளங்கியவர் நம் சுவாமிகளேயாவர். அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியரான சுவாமிகள், கீழ்த்திசைக் கல்வி மேற்பார்வையாளராக விளங்கினமையால்இசைக்கல்லூரியினை மேற்பார்க்கும் பொறுப்பும் அவர்களைச் சேர்வதாயிற்று. அப்பொழுது இசைக்கல்லூரி ஆசிரியராய் விளங்கிய சங்கீத கலாநிதி பொன்னையாப் பிள்ளையவர்களிடம் கருநாடக சங்கீதத்தின் அமைப்பினை நன்

கறிந்து கொண்டார்கள். அதன்பின் தென்னுட்டு இசைக்கெல்லாம் அடிப்படையாகிய பழந்தமிழிசை யமைப்பினை ஆராயத் தொடங்கினுர்கள். அடிகளார் 1933 சனவரியில் நிகழ்ந்த கரந்தைத் தமிழ்ச்சங்க ஆண்டுவிழாவுக்குத் தலைமை தாங்கியபொழுது தம் ஆராய்ச்சியிற் கண்ட பழந்தமிழிசை நுட்பங்களைக் குறித்து அழகியதோர் விரிவுரையாற்றினுர்கள்.

அவர்களது அருமை மாணுக்கருள் ஒருவனுகி, பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பயிலும் வாய்ப்பு எனக்குக்கிடைத்தது. சுவாமிகளிடத்துப் பயின்ற மாணுக்கர் அனைவரும் தாய்மொழிப் பற்றும், நாட்டுப் பற்றும், சமூகச் சீர்திருத்த உணர்ச்சியும் பெற்றுர்கள். சுவாமிகள் இங்கிருந்த காலத்து சுவாமி கேதாரீசுவராநந்தர் அவர்களும் உடனிருந்து திருவேட்களத்தையடுத்த சேரிகளில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேண்டும் உதவிகளைச் செய்வதில் ஊக்கமூட்டி வந்தார்கள். சுவாமிகளின் விருப்பப்படி திருவேட்களச் சேரியில் இராப்பள்ளிக்கூடம் நிறுவிப் பல்கலைக்கழக மாணவர்கள் அங்குள்ள மக்களுக்குக் கற்பித்து வந்தார்கள். அவர்கள் இங்கிருக்குங்கால் தமிழகத்திற்கும், தமிழ்மொழிக்கும் நன்மதிப்பு வளரத்தக்க வகையில் உரிமையுணர்வோடும் உள்ளத்துறுதியோடும் நடுவுநிலையிற் பிறழாது தமிழ்ப் பேராசிரியர் பணி புரிந்தமை கண்டு, அறிஞர் பலரும் வியந்து போற்றினுர்கள்.

இந்நிலையில் இராமகிருட்டின மடத்தார் இலங்கையிலுள்ள பள்ளிக்கூடங்களை நடத்தும் பொறுப்பினைச் சுவாமிகளிடம் ஒப்படைத்தார்கள். சுவாமிகளும் பல்கலைக்கழகப் பணியை விடுத்து இலங்கைக்குச் சென்று சிவானந்த வித்யாலயத்தை உருவாக்கினுர்கள்.

1936 மாசித் திங்களிலே பழந்தமிழரின் இசை, சிற்பம், கலையறிவு என்னும் பொருள்கள் பற்றிச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆதரவிலே ஆறு விரிவுரைகள் செய்தார்கள். அவ்விரிவுரைகள் பல்கலைக்கழக மண்டபத்தில் ஆங்கில மொழியில் நிகழ்ந்தன. பிற மொழியாளர்களும் விரும்பி வந்து கேட்டார்கள். ஆங்கில இதழாகிய

இந்துச் செய்தித்தாளில் அவ்விரிவுரைகள் வெளிவந்தன. அவற்றைப்படித்து அறிஞர் பலர் அப்பொருளை ஆங்கிலத்தில் விரிவானதோர் நூலுருவாக்கித்தரும்படி அடிகளாரை வேண்டிக்கொண்டார்கள். இச் சொற்பொழிவுகளை நிகழ்த்துங்காலத்திலேதான் அடிகளார் ஆயிரம் ஆண்டுகளாக மறைந்துபோன யாழின் இயல்பினைச் சங்க இலக்கிய நூற்சான்று கொண்டு விளக்கிச் சகோட யாழினை ஓவிய உருவில் முதன் முதல் வெளிப்படுத்தினார்கள்.

1937இல் அடிகளாரவர்கள் கயிலாய நாதனைக் காணும் வேட்கையினால் வடநாடு சென்று திருக்கயிலாயத் திருமலையை யடைந்து மானசவாவியில் நீராடித் தூய்மை நிரம்பிய உள்ளத்தோடு வெள்ளி வெற்பின் மேல் மரகதக் கொடியுடன் விளங்கும் தெள்ளு பேரொளிப் பவள வெற்பாகத் திகழும் சிவபெருமானது திருக்கோலத்தை உயிராவணமிருந்து உற்றுநோக்கி உள்ளக்கிழியின் உருவெழுதித் தியானித்து மகிழ்ந்து தமிழகத்திற்கு வந்தார்கள். யாழ்நூலைப் பற்றி அடிகள் கூற நான் எழுதினேன்.

இக் காலத்தில் இலங்கைப் பல்கலைக் கழகம் நிறுவப் பெற்றது. அதற்கு அடிகளாரைத் தமிழ்ப் பேராசிரியராக அனுப்பி உதவும்படி இராமகிருட்டின சங்கத்தாரை இலங்கைத் தலைவர்கள் வேண்டிக் கொண்டார்கள். 1943இல் சங்கத்தார் உடன்பாடு பெற்று அடிகளார் இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியரானார். யாழ்நூல் அச்சிடுதற்குரிய தொகையைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு அளித்தும், ஆராய்ச்சியினாற் கண்ட இசைக் கருவிகள் சிலவற்றைச் செய்வித்தும் யாழ்நூல் அரங்கேற்றத்திற்கான எல்லா வசதிகளையும் தாமே செய்தும் பல்லாற்றானும் உதவியவர்கள் கோனூர் ஜமீன்தாரும், திருக்கொள்ளம்புதூர்த் திருப்பணிச் செல்வரும், கரந்தைத் தமிழ்ச்சங்கப் பேரன்பருமாகிய திருவாளர் பெ. ராம. ராம சிதம்பரஞ் செட்டியாரவர்களாவர். இவர்களுக்குரிய தாய்ப் புதுக்கோட்டையிலுள்ள இராமநிலையமே விபுலானந்த அடிகளாரின் தாய்வீடாக விளங்கியது. யாழ்நூல் எழில் மிக்க வடிவில் திருத்தமுற வெளிவருவதற்கு ஆக

வேண்டிய தொண்டுகளை யெல்லாம் கரந்தைத் தமிழ்ச் சங்கப் பேரன்பரும், பொழிற்றெண்டருமாகிய திருவாளர் அ. கணபதிப் பிள்ளையவர்கள் மேற்கொண்டு மனஞ்சலி யாது செய்து நிறைவேற்றினர்கள். இந்நூலினது அரங்கேற்று விழா சருவசித்து ஆண்டு மாசித் திங்கள் 22ஆம் நாள் (5-6-1947) தமிழ் விரகராகிய திருஞான சம்பந்தப் பிள்ளையார் இறைவனடி சேர்ந்து இன்புற்ற மூலநாளிலே திருக்கொள்ளம்புதூர்த் திருக்கோயிலிலே நல்லிசை ஞானசம்பந்தர் திருமுன்னிலையிலே சிறப்பாக நடைபெற்றது.

அடிகளார் இயற்றிய இசைத் தமிழ் நூலாகிய யாழ்நூலில் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடி கள் கண்டுணர்த்திய இசை நுட்பங்களும் அடிகள் காலத்து யாழ்க் கருவியின் அமைப்பும் அவர்களுக்கு நெடுங்காலத்திற்கு முன்னரே பழந்தமிழ்ப் பாணர்கள் கண்டுபாடிய இசைத் திறங்களின் இயல்பும் உலக இசை கள் எல்லாவற்றிற்கும் அடிப்படையா யமைந்த பழந் தமிழிசையின் மேன்மையும் இசை நூல் வரன் முறையும் இனிது விளக்கப் பெற்றுள்ளன. யாழ்நூலரங்கேற்று விழா தமிழ்நாட்டின் எதிர்காலத் தமிழ் வளர்ச்சியை இனிது புலப்படுத்தியது. யாழ்நூற்பொருளை ஆங்கிலத் தில் மொழி பெயர்த்து வெளியிட வேண்டுமெனத் தமிழ்ப் பெருமக்கள் அடிகளாரை வேண்டிக் கொண்டார்கள். அடிகளும் அவ்வேண்டுகோளை உளமுவந்து ஏற்றுக் கொண்டார்கள்.

யாழ்நூலாசிரியர் அரங்கேற்றுவிழா முடிந்தபின்னும் திருக்கொள்ளம்புதூரில் இரண்டு வாரம் தங்கியிருந்து மருந்துண்டு ஓரளவு உடல் நலம் பெற்றபின் அங்கிருந்து புறப்பட்டு 30-6-47இல் கொழும்பு நகரத்தையடைந்தார் கள். பாரிசவாயுவின் தொந்தரவாலும் நெடுந்தூரப் பயணத்தாலும் களைப்புற்ற அடிகளாரது உடல்நலங் குன் றியது. கவலைக்கிடமான நிலையில் இராமகிருட்டின மடத்தினரும் சுவாமிகளின் நண்பர்களும் மிகவும் கருத் தாக உடனிருந்து வேண்டும் மருத்துவங்களைச் செய்தார்

கள். எனினும் நோய் கடுமையுற்றது. 19-7-47 சனிக்கிழமை இரவு $1\frac{1}{2}$ மணிக்கு அருண்மிகு விபுலானந்த அடிகளார் தமது ஐம்பத்தைந்தாவது வயதில் தமிழறிஞர் உளங்கலங்க, இவ்வுலக வாழ்வை நீத்துக் கயிலாயப் பெருமான் திருவடிகளில் இரண்டறக் கலந்து இன்புற்ருர்கள். அடிகளார் மறைந்த செய்தி ஈழ நாட்டவரையும் தமிழ் நாட்டவரையும் துயரக் கடலில் ஆழ்த்தியது. என் செய்வது? காலவரம்பினைக் கடத்தல் எவ்வாறு முடியும்? யாழ் நூலாசிரியரது பெரும்பிரிவு தமிழர்க்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாய் முடிந்தது. அடிகளாரது புகமுடம்பு தமிழறிஞர் உள்ளங்கள்தோறும் என்றும் அழியாது நிலைபெற்றுத் திகழுமென்பது திண்ணம்.

## குறிப்புரை

இக் கட்டுரை ஆசிரியர் வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனுர் அவர்கள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழாராய்ச்சித் துறைப் பகுதியில் சிறந்த தொண்டு புரிந்து வருகிருர். மொழிப்பற்று, சமயப் பற்றுக்களில் சிறந்தவர். இவர் சொற்பொழிவாற்றும் திறனிலும் வல்லவர். சிறந்த நூல்கள் பலவற்றைத் தமிழ் மொழியின் முன்னேற்றம் குறித்தே வெளியிட்ட பெரியார். அமைதியே ஓர் உருவமாக உடையவர். சிறந்த குணங்களுடையவர். பழகுதற்கு இனிமை வாய்ந்தவர்.

## அருஞ்சொற் பொருள்

சிவணிய - பொருந்திய. நரம்பின் மறை - யாழ் நூல். நெகிழவிடுதல் - தவற விடுதல். வெள்ளிவெற்பு - கயிலாயமலை. தெள்ளு - தெளிந்த. வெற்பு - மலை. உயிராவணம் - மூச்சு விடா நிலையில். கிழி - துணி. விரகர் - மேலானவர். பெரும்பிரிவு - இறப்பு.

## வினுக்கள்

1. பண்டைய நூல்கள் யாழ்நூலுண்மையை எவ்வாறு தெளிவு படுத்துகின்றன?
2. விபுலானந்தர் யாழ்நூல் எழுதக் காரணங்கள் யாவை?
3. விபுலானந்தர் தோற்றம்பற்றி விவரி.
4. விபுலானந்தர் கல்வியில் எவ்வாறு முன்னேற்றம் அடைந்தார்?
5. விபுலானந்தர் செய்த தமிழ்த் தொண்டுகள் யாவை?
6. விபுலானந்தர் இசைத்தமிழுக்குத் தொண்டு செய்ய ஏற்பட்ட வாய்ப்பு யாது?

7. விபுலானந்தர் ஆற்றிய பிற தொண்டுகள் யாவை ?
8. விபுலானந்தர் கயிலைச் செலவுபற்றி விளக்குக.
9. யாழ்நூல் வெளிவந்த விதத்தினை விளக்குக.
10. அடிகளாரின் மறைவினைப் பற்றி எழுதுக.

பயிற்சி

1. "விபுலானந்தரின் தொண்டுகள்" என்பதுபற்றி ஒரு கட்டுரை வரைக.

2. கயிலைக்காட்சி, யாழ்நூல் அரங்கேற்றம், சிவசண்முக மெய்ஞ் ஞான சிவாச்சாரிய சுவாமிகள் பற்றிச் சிறு குறிப்புத் தருக.

3. "விபுலானந்தரும் அவர் தொண்டுகளுக்கு உதவியோரும்" பற்றி ஒரு விளக்கக் கட்டுரை வரைக.

4. நிறைமதிநாள், உயிராவணம், உள்ளக் கிழியின் உரு எழுதி—இத்தொடர்களை விளக்கி வாக்கியங்களில் அமைக்க.

# 8. நாகப்பட்டினம்

[டாக்டர் மா. இராசமாணிக்கனுர், எம்.ஏ., எம்.ஓ.எல்., பி.எச்.டி.,
சென்னைப் பல்கலைக் கழகம்.]

## சோழநாடு

"செவிலித்தாய் என்ன ஓம்பும் தீம்புனற் கன்னி", என்று புலவர்களால் ஏத்தெடுக்கப்பெற்ற காவிரியாறு தன் கிளையாறுகளுடன் பாய்வதால்,—"சோழவளநாடு சோறுடைத்து" என்று பாராட்டப் பெற்றது. சோழ நாடு என்பது தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களையும் வட வெள்ளாறுவரை உள்ள தென் ஆர்க்காட்டுப் பகுதியையும் தன் அகத்தே பெற்றது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த சோழநாடு சோழர் என்ற மரபரசரால் ஆளப்பட்டு வந்தது. சங்க காலத்தில் புகழ் பெற்ற காவிரிப்பூம்பட்டினம் தலைநகராகவும் துறைமுக நகரமாகவும் விளக்கமுற்றிருந்தது.

## தேவாரக் காலம்

மாதவியின் மகளான மணிமேகலையின் காலத்தில் (கி. பி. இரண்டாம் நூற்றுண்டில்) காவிரிப்பூம் பட்டினத்தின் பெரும் பகுதி கடல் கொந்தளிப்பால் அழிந்தது என்பதை மணிமேகலை என்னும் காப்பியம் விளக்கமுறக் கூறுகின்றது. சங்க காலத்திற்குப் பிறகு தமிழகத்தின் பெரும் பகுதி பல்லவர் ஆட்சிக்கு உட்பட்டது. அக் காலத்தில் சோழநாட்டில் சிறந்த துறைமுக நகரமாக இருந்தது "நாகப்பட்டினம்" என்பது தேவாரப் பாடல்களால் தெரிகிறது.

"வங்க - மலிகடல் நாகை" என்று கி. பி. ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த நாவுக்கரசர் குறித்துள்ளார். அதே நூற்றுண்டில் வாழ்ந்த சம்பந்தர், 'மலைபோல் உயர்ந்த கப்பல்கள் தங்கும் நாகை' என்று குறிப்பிட்டுள்ளார். துறைமுகப் பட்டினமாக இருந்தமையால் நகரம் செழிப்புற்றிருந்தது. இதனை 9ஆம் நூற்றுண்டினரான சுந்தரர்

" செல்வக் கடல் நாகை " என்று குறிப்பதிலிருந்து உணரலாம். நாகை " காண்பினரிய மணிமாடம் நிறைந்த நெடுவீதி"களைக் கொண்டது என்று சுந்தரர் பாடியுள்ளார்.

அந்நகரத்தில் கல்வி வளம் நன்னிலையில் இருந்தது என்பதைத் திருநாவுக்கரசர், " கற்றூர் பயில் நாகை " என்பதிலிருந்து நன்கறியலாம். நாகையில் சிவபெருமான் திருக்கோயில் ஒன்று பல்லவர் காலத்தில் (கி. பி. 300–900) இருந்தது. அதன் பெயர் " காரோணம் " என்பது. அக்கோவில் மேற்சொன்ன சமயகுரவர் காலங்களில் பக்திக்கு நிலைக்களமாக இருந்தது என்பதும், மிக்க செல்வ வளம் பெற்றிருந்தது என்பதும் திருமுறைப் பாடல்களால் தெரிகின்றன.

> " சுந்தரனே, கந்தமுத லாடையா பரணம்
> பண்டாரத் தேயெனக்குப் பணித்தருளல் வேண்டும் "

என்பது சுந்தரர் நாகைக் காரோணத்திற் பாடியபாடலின் ஒரு பகுதி. கோவிற் பண்டாரத்திலிருந்து, வாசனைப் பொருள்கள், ஆடைகள், ஆபரணங்கள் ஆகியவற்றைத் தமக்குத் தந்தருள வேண்டும் என்று சுந்தரர் சிவபெருமானை வேண்டியுள்ளார்.

### பெரிய புராணச் சான்று

கி. பி. 5 அல்லது 6ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த காரைக்கால் அம்மையாரது காலத்திலேயே நாகை செல்வத்திற் சிறந்த நகரமாகவும் துறைமுகப் பட்டினமாகவும் இருந்தது என்பது பெரிய புராணத்தால் தெரிகிறது. காரைக்காலிற் பிறந்து வளர்ந்த அம்மையார் நாகையில் கடல் வாணிகத்திற் சிறந்த வணிகன் மகனை மணந்து கொண்டார். கி. பி. 8ஆம் நூற்றுண்டினர் என்று மதிக்கத் தக்க அதிபத்த நாயனுர் காலத்தில் நாகை, " கப்பல் செல்வம் " பெற்றிருந்தது என்று சேக்கிழார் கூறியுள்ளார்.

**வரலாற்றுச் சான்று**

கி. பி. 720இல் நரசிம்ம பல்லவன் (இராஜசிம்ம பல்லவன்) சீனப் பேரரசை மதித்துப் பௌத்தர்கட்காக நாகையில் ஒரு கோவில் கட்டி, அதற்குப் பெயரிடுமாறு சீனப் பேரரசனை வேண்டினன். சீனப்பேரரசன் அங்ஙனமே செய்து பல பரிசுகளும் அனுப்பினன் என்பது சீனர் எழுதி வைத்திருந்த குறிப்புக்களிலிருந்து அறியலாம். சீனர்கள் பௌத்த சமயத்தினர்; கடல் வாணிகத்திற் சிறந்தவர். அவர்கள் நாகையில் தங்கிக் கடல் வாணிகம் செய்தனர். அவர்கள் வழிபாட்டிற்குப் புத்தர் கோவில் பல்லவனுல் கட்டப்பட்டது. பல்லவநாடு அக்காலத்திற் சீன நாட்டுடன் கடல் வாணிகம் செய்து வந்தது. சீனப் பேரரசனை மகிழ்விக்கவே பல்லவன் நாகையில் புத்தர் கோவிலைக் கட்டினன். இக்குறிப்புக்களாலும் நாகை சிறந்த கடற்றுறைப் பட்டினமாக இருந்ததென்பதை நன்கறியலாம்.

கி. பி. 8ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த திருமங்கையாழ்வார் நாகைப் பௌத்த விகாரத்தில் இருந்த—முழுவதும் பொன்னுல் செய்யப்பட்டிருந்த—புத்தர் உருவச் சிலையைக் கவர்ந்து சென்று, அப்பொன்னைக் கொண்டு திருவரங்கத்தில் திருமதில் எழுப்பித்தல் முதலிய திருத்தொண்டுகளைச் செய்தார் என்று வைணவ நூல்கள் கூறுகின்றன. இதிலிருந்து இராஜசிம்மன் கட்டிய பௌத்த விகாரத்தைப் பற்றி நன்கறியலாம் அன்ருே ?

**பிற்காலச் சோழர் காலத்தில்**

கி. பி. 985 முதல் 1014 வரை அரசாண்ட இராசராசன் காலத்தில் நாகையில் "ஸ்ரீ சைலேந்திர சூடாமணி விகாரை" என்னும் பௌத்தப்பள்ளி கட்டப்பட்டது. மலேயா, சுமத்திரா என்னும் பகுதிகளை ஆண்ட ஸ்ரீ மாற விஜயோத்துங்கவர்மன் என்ற அரசனது வேண்டுகோட்படி அந்த விகாரையை நாகையிற் கட்ட இராசராசன் இசைவு தந்தான். அந்த விகாரை ஸ்ரீ மாறவிஜயோத்துங்கன் தந்தையான சூடாமணிவர்மன் பெயரால்

கட்டப்பட்டது ; ஆதலின், " சூடாமணி விகாரை " எனப் பெயர் பெற்றது. இராசராசன் நாகையை அடுத்த ஆனைமங்கலம் முதலிய ஊர்களை அவ்விகாரைக்குப் பள்ளிச்சந்தமாக அளித்தான். ஆயினும் சாசனம் எழுதுவதற்குமுன் அவன் இறந்துவிட்டதால், அவன் செல்வ மைந்தனான இராசேந்திர சோழன் செப்புப் பட்டயத்தில் சாசனம் எழுதிக்கொடுத்தான்.

கி. பி. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார், " சோழ நாடு என்னும் கற்பகப் பூங்கொடியின் 'மலர்' என்று சொல்லத்தக்க முறையில் பல நலங்களையும் பெற்று விளங்கியது நாகப்பட்டினம் என்னும் திருநகரம்" என்று பாடியுள்ளார். இதிலிருந்து அந்நகரம், சோழப் பெருநாட்டில் மிகச் சிறந்த நகரமாக இருந்தது என்பதை உணரலாம்.

### விஜயநகர அரசர் காலத்தில்

பர்மாவில் பெரு என்ற நாட்டை ஆண்ட இராமாபதி அரசன் இலங்கைக்கு ஒரு தூதனையும் பௌத்த பிக்ஷுக்கள் பதினொருவரையும் அனுப்பினான். அவர்கள் இலங்கையில் தங்கள் வேலைகளை முடித்துக்கொண்டு கப்பலேறிச் சென்றனர். வழியில் அக்கப்பல் புயலிற் சிக்கி உடைந்தது. அவர்கள் உயிர் பிழைத்துக் கரையேறி நாகையை அடைந்தார்கள். அங்கிருந்த " படரிகாராமம் " என்னும் பௌத்தப்பள்ளியில் தங்கி இருந்தார்கள். அப்பள்ளிக்கு அருகே சீனப் பேரரசனால் குகை வடிவமாகக் கட்டப்பட்டிருந்த கோவிலில் புத்ததேவரை வணங்கினார்கள். இந்த நிகழ்ச்சி கி. பி. 1477இல் நடைபெற்றதாகப் பர்மா நாட்டுக் கலியாணி நகரத்துக் கல்வெட்டு கூறுகிறது.

### நாகையிற் காளமேகம்

திருநாவுக்கரசரால் சிறப்பித்துக் கூறப்பட்ட நாகை மக்களின் கல்விநிலை தொடர்ந்து உயரிய நிலையில் இருந்துவந்திருத்தல் வேண்டும் என்பது பின்வரும்

செவிவழிச் செய்தியால் அறியப்படும். கி. பி. 15ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த காளமேகப் புலவர் ஒருமுறை நாகை சென்ருர்; "சோறு விற்குமிடம் எது?" என்று, தெருவில் பாக்கு வைத்து விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களைக் கேட்டார்; அதற்கு அவர்கள் நகைத்து, "சோறு தொண்டையில் விக்கும்," என்று குறும்பாகப் பதில் கூறினுர்கள். அதனுல் வெகுண்ட காளமேகம் அருகில் கிடந்த அடுப்புக்கரி ஒன்றை எடுத்து, எதிரிலிருந்த ஒரு வீட்டுச் சுவர்மீது,

> "பாக்குத் தெறித்துவிளை யாடுசிறு பாலகர்க்கு
> நாக்கு.........................................."

என்பதுவரை எழுதி, பசி கடுகியதால், உண்டுவந்து பிறகு பிள்ளைகளைச் சபித்து எழுதவேண்டும் என்று, இரண்டாம் வரியை அப்படியே விட்டுவிட்டுச் சென்ருர். அவர் செயலைக் கவனித்துக்கொண்டிருந்த பிள்ளைகள், அவர் சென்றபின் சுவர் அருகே சென்று, அவர் எழுதி விட்டுச் சென்றதைப் பார்த்தனர். வாக்கியம் குறைவாக இருத்தலைப் பார்த்து, ஒரு கரித்துண்டை எடுத்து,

> "நாக்குத் தமிழ்விளங்க நாகேசா"

என்று இரண்டாம் வரியை முடித்துவிட்டு, வழக்கம்போல் விளையாடிக் கொண்டிருந்தனர்.

> "நாக்குத் தெறித்து விழ நாகேசா"

என்று முடிக்கவேண்டும் என்று திரும்பிவந்த காளமேகம் தாம் விட்டுச் சென்றது நிறைவாக்கப்பட்டிருப்பதைக் கண்டார். அது பிள்ளைகள் செயல் என்பதை அறிந்தார்; அவர்தம் தமிழறிவிற்கு வியந்தார்; அப்பிள்ளைகளை அருகழைத்து ஆசீர்வதித்துச் சென்ருர்.

## ஆங்கிலேயர் காலத்தில்

கி. பி. 1725ஆம் ஆண்டில் "சீன கோவில்" என்ற பெயருடன் ஒரு கோவில் நாகையில் இருந்த தென்று **வாலெண்டின்** என்பவர் குறித்துள்ளார். அதே கோவிலைத் தாம் 1846இல் பார்த்ததாக **சர் வால்டர்**

**எலியட்** என்பவர் எழுதியுள்ளார். டச்சுக்காரர், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் வாணிகம் நடத்திய 18, 19ஆம் நூற்ருண்டுகளிலும் நாகை கடல் வாணிகத்திற் சிறந்திருந்தது ; கிறித்துவப் பாதிரிமார்கள் அங்கிருந்துகொண்டு, தங்கள் சமயத்தையும் கல்வியையும் பரப்பி வந்தார்கள். இவை அனைத்தையும் நோக்க, கடல் நாகை, பல்லவர் காலமுதல் வெள்ளையர் காலம் வரை வாணிகத்திலும் கல்வியிலும் சிறந்திருந்தது என்பதை ஐயமற உணரலாம் அல்லவா !

**மகாவித்துவான் பிள்ளையவர்கள்**

கி. பி. 7ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த அப்பரும் சம்பந்தரும், நாகையில், கற்றவரும் சிவநெறிச் செல்வரும் தம் காலத்தில் வாழ்ந்திருந்தனர் என்று குறிப்பிட்டுள்ளனர். நாகையில், கற்றவர் நீண்டகாலமாக இருந்துவந்தனர் என்பது முன்னரே குறிக்கப்பட்டது. சிவநெறிச் செல்வர்களும் அவ்வாறே இருந்திருத்தல் வேண்டும் என்று ஊகிப்பதில் தவறில்லை. கி. பி. 19ஆம் நூற்ருண்டில் 'தேவாரத் திருக்கூட்டம்' என்ற சிவபக்தர் சங்கம் நாகையில் இருந்தது. அதனைச் சேர்ந்த சீரியர் வேண்டுகோளின்படி மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், "திருநாகைக் காரோணப் புராணம்" என்னும் அரிய நூலை 1868இல் பாடினுர் ; ஓராண்டு முழுவதும் நாகையில் தங்கி அவ்வரிய நூலைப் படித்து அரங்கேற்றம் செய்தார். அப்பெரியாருடைய அரங்கேற்ற வைபவத்தைப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களின் சமய குருவாகிய **சுந்தரசுவாமிகளும்** நேரிற் கண்டு களித்தார். சிவநெறிச் செல்வர்கள் புராணத்தைப் பாராட்டிப் பிள்ளையவர்கட்குப் பெருஞ்சிறப்புச் செய்தனர்.

இங்ஙனம் நாகை கல்வி, செல்வம், சமயம் என்னும் முத்துறைகளிலும் பல்லவர் காலமுதல் மேம்பட்டுவந்தது.

## குறிப்புரை

இக்கட்டுரையாசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனுர் அவர்கள் சென்னையில் வண்ணை, முத்தியாலுபேட்டை உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியத் தொண்டு புரிந்தார். மதுரைத் தியாகராயர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராய் இருந்தார். தற்போது சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துணைப் பேராசிரியராய்த் திகழ்ந்து வருகிறுர். தாமே முயன்று அயராது படித்து இலக்கிய வல்லுனர் என்ற பட்டம் வரை பெற்ற வித்தகர் ஆவார். மாணவர் உளங்கொள நூல்கள் எழுதுவதில் வல்லவர். இவர் கல்வெட்டு, ஆராய்ச்சி நூல்கள் எழுதுவதில் தனிப் பெருமை வாய்ந்தவராவார்.

## அருஞ்சொற்பொருள்

ஓம்பும் - பாதுகாக்கும். 'ஏத்தெடுக்கப்பெற்ற - புகழப்பெற்ற. மரபு - வமிசம். வங்க மலி கடல் - கப்பல்கள் நெருங்கிச் செல்லும் கடல். காண்பினரிய - காண்பதற்கு அருமையான. நிலைக்களம் - இருப்பிடம். பண்டாரம் - பொக்கிஷம். வழிபாடு - தொழுகை. விகாரம், விகாரை - பௌத்தக் கோவில். இசைவு - சம்மதித்தல். பள்ளிச் சந்தம் - பௌத்தர் கோவிலுக்கு விடப்பட்ட மானியம். செவிவழிச் செய்தி - கர்ண பரம்பரைச் செய்தி. வெகுண்ட - கோபித்த. கடுகியதால் - மிகுந்ததால். ஆசீர்வதித்து - வாழ்த்தி. சீரியர் - மேலோர். வைபவம் - விழா, கொண்டாட்டம்.

## வினுக்கள்

1. பல்லவர் காலத்தில் நாகப்பட்டினம் எந்நிலையிலிருந்தது?
2. நாகையிலிருந்த சிவபெருமான் திருக்கோவிலைப் பற்றிக் குறிப்பு எழுதுக.
3. நாகையில் புத்தர் கோவிலைக் கட்டிய பல்லவ அரசன் யார்? அவன் அக்கோவிலை ஏன் கட்டினுன்?
4. 'சூடாமணி விகாரை'யைப் பற்றிக் குறிப்பு எழுதுக.
5. பர்மா நாட்டுக் கலியாணி நகரத்துக் கல்வெட்டு கூறுவது என்ன?
6. 'திருநாகைக் காரோணப் புராணம்.' அரங்கேற்றத்தைப் பற்றிச் சுமார் பத்து வரிகளில் ஒரு பத்தி (பாரா) எழுதுக.

## பயிற்சி

1. பிரித்துக் காட்டுக : மரபரசர்; காண்பினரிய; நன்னிலை; நன்கறியலாம்; பெருஞ்சிறப்பு.
2. நும் சொந்த வாக்கியங்களில் அமைத்தெழுதுக : பண்டாரம்; வழிபாடு; இசைவு; வெகுண்ட.
3. நாகையை வர்ணிக்கும் சொற்ருெடர்களைத் தொகுத்தெழுதுக.

# 9. ஆண்மையும் அருளும்

[பேராசிரியர் டாக்டர், ரா. பி. சேதுப்பிள்ளை, பி.ஏ., பி.எல்.]

நினைப்பிற்கு எட்டாத நெடுங்காலமாக இம் மாநிலத்தில் மண்ணுலும் பெண்ணுலும் மறப்போர் நிகழ்ந்து வருகின்றது. உலகிலுள்ள மக்கள் ஒரு வயிற்றுப் பிறந்தாற்போல் ஒற்றுமையாக வாழத் தலைப்பட்டால், போர் ஒடுங்குமென்று மும்மையும் உணர்ந்த மூதறிஞர்கள் கருதுகின்ருர்கள். ஆறறிவுடைய மாந்தர் அமர்க்களம் புகுந்து, அடுபோர் புரிந்து, குருதி சொரிவதை நினைக்கும் போது அறிஞர் நெஞ்சம் குலைவது இயல்பேயன்ரே? இதனுலேயே, இந்நாட்டில், முறைதிறம்பாது அரசாண்ட மன்னர்கள் மற்றைய அரசரொடு மலைய நேர்ந்தக்கால் அறநெறி விலகாது அமர் விளைத்தார்கள்.

அருளும் ஆண்மையும் இனிதமைந்த பண்டை அரசர், மாற்ருரோடு போர் தொடங்குமுன்னே, மதிநலம் வாய்ந்த தூதுவரை அவர் பால் அனுப்பி நீதிபெற முயன்ருர்கள். இவ்வாறு வெம்போர் விலக்கும் விழுமிய கருத்துடன் வேற்றரசரிடம் தூது செல்லும் அறிஞரை அவமதிப்பதும் துன்புறுத்துவதும் ஆகாதென்று அரசநீதி முறையிடுகின்றது. அயோத்தி மன்னனுடைய தூதனுய் இலங்கைமா நகருக்குச் சென்ற அனுமன்மீது சீற்றமுற்று அவனைச் சிதைக்கக் கருதிய அரக்க மன்னனை நோக்கி, அறிவு வாய்ந்த வீடணன்,

"மாதரைக் கோறலும் மறத்து நீங்கிய
ஆதரைக் கோறலும் அழிவு செய்யினும்
தூதரைக் கோறலும் தூய்தன் ருமென
ஏதுவிற் சிறந்தன எடுத்துக் காட்டினுன்,"

என்று நெறிமுறை கூறுமாற்ருல், தூதரைக் கொல்லும் பாவம், மாதரைக் கொல்லும் மாபெரும் பாவத்தை ஒப்பதாகும் என்பது நன்கு விளங்குகின்றது. இவ்வாறு தூது போக்கியும் நேர்மை எய்தாத நிலையிலேயே, அருள்

நிறைந்த அரசர், வேறு வகையின்றி வெம்போர் புரிவா ராயினர்.

மாற்றரசர், செந்நெறி விலகி, சீர்முறை தவறிப் புன்மையே புரியினும், அவரது சிறுமையைப் பொறுத்து ஒல்லும் வகையால் போரை விலக்க முயல்வதே அறம் திறம்பாத அரசர் செயலாகும். இத்தகைய பெருமை, அயோத்தி அண்ணலாகிய இராமனிடமும், குருகுல முதல்வனுகிய தருமனிடமும் தலைசிறந்து விளங்கிற்று. தாயின் மொழியைத் தலைக்கொண்டு நாடு துறந்து காடு புகுந்த இராமனுடைய காதல் மனையாளை, இலங்கை வேந்தன் வஞ்சனையால் கவர்ந்து அசோக வனத்தில் வைத்தான். மங்கையைப் பிரிந்த மன்னன் மலையும் காடும் அலைந்து திரிந்து மதங்க வனத்தில் வானரத் தலைவனைத் துணைக்கொண்டு, கடல் சூழ்ந்த இலங்கையில் தன் காதலி சிறையிருந்ததை அறிந்து, கருங்கடலைக் கடத்தற்குக் கல்லாம் அணை அமைத்து, வானரசேனை யோடு இலங்கையின் நகர்ப்புறம் எய்தினன். ஆயினும், தனக்குத் தவறிழைத்த இலங்கை வேந்தன்மீது போர் தொடங்குமுன்னே, அம்மன்னன் திருமகளை விடுவானோ என்று அறியுமாறு அங்கதனை இலங்கைக்குத் தூதனுப்பக் கருதினன். இவ்வாறே சூதினல் அரசிழந்து, பன்னீ ராண்டு படர் கானகத்தில் துயர் உழந்து, அப்பால் ஓராண்டு ஒருவருமறியாது ஊர்நடுவே கரந்துறைந்து முடிந்த பின்னும், வழிக்குவாராத வணங்காமுடி மன்னன் மீது படையெடுக்கு முன்னமே குருகுல மன்னன் கண்ணனைத் தூது அனுப்பிக் கடும்போர் விலக்கக் கருதினன்.

விதிக்கும் விதியாகும் வில்லைத் தாங்கிய இலக்கு வனைத் துணைக்கொண்ட இணையற்ற இராம வீரன், இலங்கை நாதனுடைய புயவலியும் படைவலியும் கண்டு பயந்து அவன்பால் தூதனுப்பினன் அல்லன். அவ்வாறே, தண்டேந்திய வீமனையும், தனுவேந்திய விசயனையும் துணையாகக் கொண்ட தருமன், நூற்றுவராய் விளங்கிய மாற்றார் படைவலி கண்டு மயங்கிக் கண்ணனைத் தூதனுப்

பினுன் அல்லன். கடும்போரால் விளையும் கொடுமையையும் கொலையையும் விலக்கக் கருதிய சிறந்த அருளாலேயே இருவரும் மானமும் கருதாது தூது போக்கினுர் என்பது இனிது விளங்கும்.

இத்தகைய கரையிறந்த கருணையையும், வரையிறந்த பொறுமையையும் கண்ட வலிமை சான்ற தம்பியர் சில வேளைகளில் வருத்தமுற்றுக் கோபத்தாற் கொதித்தார்கள். மாற்ருர் படையைக் கண்டு கலங்காத இளையோர், மூத்தோர் பண்பாட்டைக் கண்டு கலங்கினுர்கள். மானத்தால் மனமிடிந்த தம்பியர், மாற்றரசரிடம் வில்லாட இசைந்தனரே யன்றிச் சொல்லாட இசைந்தாரல்லர். "தேவியை விடுகின்ருனு? அன்றி, ஆவியை விடுகின்ருனு?" என்று அறிந்து வருமாறு இராமன் தூதனுப்பத் துணிந்தபோது, எவர்க்கும் இளையாத இலக்குவன் தமையனை நோக்கி, "ஐயனே! இலங்கை அரக்கன் உன் தேவியைச் சிறையில் வைத்தான்; தேவரை இடுக்கண் செய்தான்; அந்தணரை அலற வைத்தான்; இந்திரனுக்கு இடர் விளைவித்தான்; மாயத்தால் சீதையைக் கவர்ந்து மயங்க வைத்தான்; சஞ்சலத்தால் நைந்த மங்கைக்கு 'அஞ்சேல்' என்று அபயமளித்த கழுகின் வேந்தனைக் கருணையின்றிக் கொன்ருன். இத்தகைய பாவியின் ஆவியைப் போக்காது அருள் காட்டலாகுமோ?" என்று வெகுண்டுரைத்தான். அவ்வுரையை அமையக் கேட்ட அயோத்தி அண்ணல் புன்னகை பூத்து, "புயவலி அமைந்திருப்பினும் பொறுமையோடும் பொருந்தி வாழ்வதே ஏற்றதாகும்; அதுவே அறமுமாகும்," என்று பதில் உரைத்தான்.

இவ்வண்ணமே வம்பு செறிந்த வணங்காமுடி மன்னன்பால் கண்ணனைத் தூதனுப்பத் துணிந்தபோது, தண்டேந்திய வீமன் தருமனை நோக்கி, "ஐயனே! பன்னலம் திகழும் பாஞ்சாலி பாவியர் கைப்பட்டு,

'ஆருகி இருதடங்கண் அஞ்சனவெம்
புனல்சோர அளகம் சோர,
வேருன துகில் தகைந்த கைசோர
மெய்சோர வேருேர் சொல்லும்

கூறுமல் கோவிந்தா ! கோவிந்தா !
என்றுஅரற்றிக் குளிர்ந்து நாவில்
ஊறுத அமிழ்தூற உடல்புளகித்(து)
உள்ளமெலாம் உருகி னுளே.'

அந்நிலையில் தலைகவிழ்ந்து பொறுத்திருந்து நமக்கும் நம் மரபினுக்கும் என்றும் தீராத வசை தந்தீர்; அப்பால், பதின்மூன்ருண்டு காட்டிலும் நாட்டிலும் கழித்த பின்னரும் அமர் புரிந்து, மாற்றரசர் உடலம் துணித்து உலகாளத் துணியாது, இன்னும் தூதனுப்பிப் பணிந்து இரந்து புவிபெற்று உண்டு இருப்பதற்குத் துணிகின்றீரே! அந்தோ! அரவுயர்த்தோன் கொடுமையினும், முரசுயர்த்தோய்! உமது அருளுக்கு அஞ்சினேன். ஐயோ!

' மலைகண்ட தெனஎன்கை மறத்தண்டின்
வலிகண்டும் மகவான் மைந்தன்
சிலைகண்டும் இருவர்பொருந் திறல்கண்டும்
எமக்காகத் திருமால் நின்ற
நிலைகண்டும் இவள்விரித்த குழல்கண்டும்
இமைப்பொழுதில் நேரார் தம்மைக்
கொலைகண்டு மகிழாமல் அவன்குடைக்கீழ்
உயிர்வாழக் குறிக்கின் ருயே.'

என்று கொதித்துக் கூறினுன். அப்போது, "அறநெறியுணர்ந்த தருமனது உரைவழி நிற்றலே தக்கதாகும்," என்று கண்ணன் எடுத்துரைக்க, வீமனும் அடங்கி நின்ருன்.

அப்பால், போர் நிகழ்ந்த காலத்தில் மானத்தால் மனங்கொதித்த தம்பியைத் துணைக்கொண்டு அயோத்தி மன்னன் இலங்கை வேந்தனை வென்ருன். செம்மை தவறிய சுயோதனன் செயல்கண்டு சிந்தை யழிந்த தம்பியரைத் துணைக்கொண்டு, குருகுல வேந்தனும் மாற்ருரை வென்ருன். வாடுகின்ற மடப்பாவை வரம் முடித்தான்; இளையவர் கூறிய வஞ்சினம் முடித்தான். அறம் திறம்பாத இவ்வரசர் இருவரும் பொறுமையென்னும் பெருமைக்கோர் இருப்பிடமாய் இலங்கினர்; மாற்ருர் சிறுமை செய்யினும் அச்சிறுமையைத் தம் பெருமையாற் பொறுத்து அறநெறியில் தலை

நின்றனர்; பகைவரது மிகையால் போர் செய்ய நேர்ந்த போதும் அறம் திறம்பாத முறையில் அமர் நிகழ்த்தினர்கள்.

படைக்கல மிழந்து எளியராய் எதிர்ப்படும் பகைவரை அருள் வாய்ந்த அரசர், எஞ்ஞான்றும் தமது படைக்கலத்தால் நலிவதில்லை. வெள்ளிமாமலையெடுத்த இராவணன் படைக்கலமிழந்து எளியனாய்த் தனக்கு எதிரே போர்க்களத்தில் நிற்கக் கண்ட கோசல நாட்டு வள்ளல், அருள் அளாவிய ஆண்மையோடு,

> " ஆளை யாஉனக் கமைந்தன மாருத மறைந்த
> பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
> நாளை வாவென நல்கினன் "

என்று கவியரசர் கூறுமாறு பகையரசனுக்கு விடை கொடுத்தனுப்பினான்.

அவ்வாறே, வில்லாண்மையில் தலைசிறந்து விளங்கிய விசயன், படைக்கலம் இழந்து எளியனாய் நின்ற கர்ணனது நிலைகண்டு தளர்ந்து, அந்நிலையில் அவன்மீது அம்பெய்தலைத் தவிர்த்த ஆண்மை இராமனது உயரிய அருளை நிகர்ப்பதாகும்.

> " அன்று போர்புரி சேனை யின்பதி யான வீரனை 'நீ
> இன்று போய்இனி நாளை வா' என இனிதி யம்பினனால்
> வென்றி கூர்வரி வின்மை யால்அடல் வெவ்வ ரக்கரைமுன்
> கொன்ற காளையை ஒத்த பேரிசை கொண்ட ஆண்மையினான்."

என்று வில்லி விசயனது பெருமையைப் போற்றிப் புகழ்ந்தார்.

இவ்வாறு இம் மாநிலத்தில் அறநெறி மறநெறியோடு மாறுபடும் பொழுது இறுதியில் அறமே வெல்லும் என்பது ஒருதலை. "பொறுத்தார் பூமியாள்வார்" என்னும் பெய்யாமொழிக்குக் கோசல நாட்டு வீரனும் குருகுலக் குரிசிலும் இணையற்ற சான்றுவார்.

> 'ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
> பொன்றும் துணையும் புகழ்'

## குறிப்புரை

பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் திருநெல்வேலியில் பிறந்தார். வழக்கறிஞர் பட்டம் பெற்றும் தமிழ்த் தொண்டுக்காகத் தம் வாழ்நாளைத் தியாகம் செய்தார். இனிய தமிழ்நடையில் எழுதுவதிலும் பேசுவதிலும் மிகவும் சதுரப்பாடுடையவர். இவர் எழுதிய பல இனிய நூல்களுள் தமிழின்பம், ஊரும் பேரும் முதலியன தலையாயனவாம். அண்ணாமலை, சென்னைப் பல்கலைக் கழகங்களில் தமிழ்த்துறையில் தொண்டாற்றினார். அண்மையில் இவ்வுலக வாழ்வை விட்டகன்றார்.

## அருஞ்சொற் பொருள்

மும்மை - இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற முக்காலங்கள். அமர்க்களம் - போர்க்களம். அடுபோர் - கொலை நிகழும் போர். குருதி - இரத்தம். முறை திறம்பாது - நீதிநெறி தவறாது. விழுமிய - உயர்ந்த. சிதைக்க - அழிக்க. கோறல் - கொல்லல். ஆதர் - அறிவிலிகள்.

வெம்போர் - கொடிய போர். ஒல்லும் வகை - முடிந்த வழி. அண்ணல் - பெருமையுடையவன். தலைக்கொண்டு - சிறந்ததாக ஏற்றுக்கொண்டு. உழந்து - அனுபவித்து. கரந்துறைந்து - மறைந்து வாழ்ந்து. வணங்காமுடிமன்னன் - துரியோதனன். தனு - வில். பண்பாடு - நேர்மை, கருணை முதலிய நற்குணங்கள் நிறைந்த தன்மை. வில்லாட - விற்போர் புரிய. இடுக்கண் - துன்பம். மாற்றம் - மறுமொழி. அஞ்சன வெம்புனல் - கண்ணின் கரிய மை கலந்துவரும் நீர். அளகம் - கூந்தல். அரவுயர்த்தோன் - பாம்புக் கொடியினை உயர்த்திய துரியோதனன். முரசு உயர்த்தோன் - முரசுக் கொடியுடைய தருமன். தண்டு - கதாயுதம். மகவான் மைந்தன் - இந்திரன் மகனாகிய அருச்சுனன். திருமால் - கண்ணன். குழல் - கூந்தல். நேரார் - பகைவர். சுயோதனன் - துரியோதனன். மிகை - மிக்க தீங்கு. நலிவது - துன்புறுத்தல். வெள்ளி மாமலை - கைலைமலை. விசயன் - அருச்சுனன். அரக்கரை முன் கொன்ற காளை - இராமன். வில்லி - வில்லிபுத்தூரர். ஒருதலை - நிச்சயம். பொன்றும் துணையும் - உலகம் அழியுமளவும்.

## வினாக்கள்

1. பண்டை அரசர், மாற்றாருடன் போர் தொடங்கு முன் யாது செய்தனர்?

2. தூதனைக் கொல்லல் எத்தகைய பாவச் செயல் என்று வீடணன் இராவணனுக்குக் கூறினான்?

3. இராமன் அங்கதனை இராவணன்பால் தூதனுப்பியது ஏன்?

4. தருமன் கண்ணனைத் துரியோதனனிடம் தூதனுப்பிய காரணமென்ன ?

5. இராவணனிடம் அங்கதனைத் தூதனுப்ப இராமன் கருதிய பொழுது இலக்குவன் வெகுண்டு கூறியது யாது ? அதற்கு இராமனது மறுமொழி என்ன ?

6. தருமன் கண்ணனைத் துரியோதனனிடம் தூதனுப்பக் கருதிய பொழுது வீமன் என்ன கூறிச் சினந்தான் ?

7. படைக்கலமிழந்து நின்ற கர்ணனிடம் அருச்சுனன் என்ன கூறினான் ? அருச்சுனன் இராமனுக்கு நிகரானது எவ்வாறு ?

8. " ஒறுத்தார்க்கு ஒரு நாளை...புகழ் "—இக்குறளின் பொருளை விளக்குக.

## பயிற்சி

I நயங் கூறி விளக்குக :

1. எவர்க்கும் இளையாத இலக்குவன் தமையனை நோக்கிக் கூறுவான்.

2. விதிக்கும் விதியான வில்.

II சந்தி பிரித்துப் பொருள் தருக :

பன்னலம், புன்னகை, வானகம்.

III 1. ' இன்று போய் நாளை வா '.

(அ) இக்கூற்று யாரால் யாருக்குச் சொல்லப்பட்டது ?

(ஆ) சொல்லப்பட்ட சந்தர்ப்பம் யாது ?

(இ) ' நாளை ' நடந்ததென்ன ?

(ஈ) இக்கூற்றைப் பிற்காலத்தில் பின்பற்றிய வீரன் யார் ? எந்தச் சூழ்நிலையில் ?

2. ' இவள் விரித்த குழல் '.

(அ) குழல் விரித்தது யார் ?

(ஆ) எந்தச் சூழ்நிலையில் ?

(இ) குழல் முடித்தது எப்போது ?

IV எதிர்ப்பதம் தருக : வசை, எளியன்.

# 10. பொதியப் பொருநை

**[வித்துவான் பி. சொ. சண்முகம் பிள்ளை, தலைமைத் தமிழாசிரியர், சர் எம். சி. டி. முத்தையா செட்டியார் உயர்நிலைப்பள்ளி, சென்னை]**

திருநெல்வேலி மாவட்டத்திற்கு மேற்குப்பக்க எல்லை யாக விருப்பது மேற்குத் தொடர்ச்சி மலையாகும். இம் மலை விட்டுவிட்டுத் தொடர்ந்து சங்கிலி கோத்தாற்போல் செல்கிறது. இடை இடையே தென்காசி, பாவநாசம் முதலியவிடங்களில் சிறிது உயரக் குறைவாகக் காணப் படுகிறது. முடிவில் இம்மலை குமரிமுனை நோக்கிச் செல் கிறது. இம்மலையை இம்மாவட்டத்தில் எந்தப் பாகத்தி லிருந்தும் காணலாம். இது ஆகாயத்தைத் தொட்டுக் கொண்டு நீளமாக விருப்பதுபோல் கண்ணுக்குப் புலப் படும். இம்மலைக் காட்சி, இயற்கையான எழிலை நுகர் வோர்க்கு ஒரு விருந்தாம்.

இம்மலையில் 1524 மீட்டர்களுக்கு மேற்பட்ட உயரத்தையுடைய சிகரங்கள் பலவுள்ளன. இச்சிகரங் களுள் தலையாயது அகத்தியமலைச் சிகரமேயாகும். பொதுவாக மேற்குத் தொடர்ச்சி மலையென அம்மலைத் தொடருக்குப் பெயராயினும் அம்மலை மிக நீண்டி ருப்பதால் அவ்வவ்விடங்களிலுள்ள மக்கள் அங்கங்கு அதனை வெவ்வேறு பெயரிட்டழைக்கலாயினர். அவ் வாறே பாவநாசத்துக்கு அருகிலுள்ள மலைக்கு **அகத் திய மலை** என்ற பெயர் ஏற்பட்டது. அங்குள்ள சிகரத்திற்கும் அகத்தியமலைச் சிகரம் என்ற பெயர் ஏற்படலாயிற்று. பாவநாசம் அருகில்தான் இம்மலை மிகவும் அகலமாகவும் உறுதியாகவும் காணப்படுகிறது. இவ்வகத்திய மலைக்கே பொதியமலை யென்றும் வேறொரு பெயருண்டு. இப்பொதியத்தில்தான் அகத்திய முனிவர் என்ற ஒரு பெரியார் உறைந்து வந்தனர் என்பதும், அவருடைய தெய்வீக ஆற்றல்கள் தற்பொழுதும் அங்கு பரிமளித்துக் கொண்டிருக்கின்றன என்பதும் ஆன்றோர் கொள்கை. இப்பொதிகையிலிருந்தே அகத்தியர் தமிழ் இலக்கிய இலக்கணங்கள், மருத்துவம் முதலியவைகளைப்

பற்றி ஆராய்ந்தார் என்று பல நூல்கள் கூறுகின்றன. அவ்வகத்தியரே உயிர்கள்மேல் வைத்த இரக்கம் காரணமாகத் 'தாமிரவன்னி' என்ற தெய்வ நதியையும் ஓடும் படி அருளினுர் என்று பல நூல்கள் கூறுகின்றன.

இத்தாமிரவன்னி பொதியமலைச் சிகரத்தில் உற்பத்தியாகிறது. இச்சிகரம் கடல் மட்டத்திலிருந்து 1867 மீட்டர் உயரத்திலிருக்கிறது. இச்சிகரம் கூருருளை (Cone) வடிவமாக உயர்ந்து காணப்படுகிறது. திருவாங்கூரிலிருந்தாவது திருநெல்வேலிப் பக்கங்களிலிருந்தாவது இம்மலைப் பகுதியைக் காண்போர் இணையிலா மகிழ்ச்சியெய்துவர். இம்மலையில் வடமேற்குப் பருவக்காற்று மூலமாகவும் தென்கிழக்குப் பருவக் காற்று மூலமாகவும் மழை பெய்வதால்தான் இங்கிருந்து செல்லும் தாமிரவன்னிக்கு ஆண்டு முழுவதும் நீர் கிடைக்கிறது. அதனுல் இது ஓர் உயிர் நதியாகும். இந்தச் சிகரத்திற்குப் பக்கத்தில் ஐந்தலைப் பொதிகை என்று ஐந்து உயரமான சிகரங்கள் தென்படும். இம்மேற்கு மலைத் தொடரிலிருந்து நெல்லை மாவட்டத்தில் பாயும் நதிகளில் தாமிரவன்னியே மிகப் பெரியது.

தென்பாண்டி நாட்டில் உள்ள ஊர்களைப்பற்றிய புராணங்கள் யாவும் இத்தாமிரவன்னியைப்பற்றிப் போற்ருது போகா. "ஆதியிலுதயமானது அம்மையாம் பொருநை மாது," "இனிய நீரால் நிறை செல்வம் எவர்க்கு முண்டாம்," என்றெல்லாம் அப்புராணங்கள் பலபடப் போற்ருநிற்கின்றன. "தாமிரவன்னி மகாத்மியம்," என்றே இவ்யாற்றின் சிறப்பைப்பற்றிப் பலநூல்கள் எழுந்துள்ளன. இந்த ஆறு பாய்ந்து வரும் பொதியமலை, நிறைந்த பல மூலிகைகளையுடையது. அம்மூலிகைகளிலடிபட்டு அச்சாற்றினைத் தன்னேடீர்த்து வரலால் இந்நீரில் மூழ்கியவர்கள் குட்டநோய் போன்ற தொழுநோய்களையும் போக்கடிக்கும் நிலையெய்துகின்றனரெனின் இவ்யாற்று நீரின் பெருமையைப்பற்றி வேறு என்னென்று கூறிப்புகழ்வது ?

பொன்சத்துள்ளதால் காவிரிக்குப் "பொன்னி" என்ற பெயர் ஏற்பட்டது போல், தாமிரச்சத்துள்ளதால்

இந்நதிக்குத் 'தாமிரவன்னி' என்ற பெயர் ஏற்பட லாயிற்று என்றும் பெயர்க் காரணம் கூறுவர் ஆன்றோர். மேலும் இதற்குப் பொருநை, பொருந்தம், பொருநலாறு, தாம்பரையாறு, தாம்பிர பரணி, தாமிரவர்ணி முதலான பல பெயர்களும் வழங்கப்படுகின்றன.

இத்தாமிரவன்னி பாவநாசம் என்ற இடத்தில் சம வெளியில் பாய ஆரம்பிக்கிறது. அம்பாசமுத்திரம், திருநெல்வேலி வட்டங்களின் வழியாய் இந்நதிபாய்ந்து சீவைகுண்டம் வட்டத்தில் சென்று திருச்செந்தூர் அருகில் கடலோடு கலக்கின்றது. இது தன்பால் பாசன வசதிக்கென எட்டணைகளைக் கொண்டிலங்குகின்றது. மேலும் அண்மையில் பாவநாசத்தில் இந்நதியிலிருந்து மின்சார ஆற்றலை எடுக்கும் ஒரு மின்சார நிலையத்தையும் கட்டியுள்ளனர். இங்கு உற்பத்தியாகும் மின்சாரம் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களுக் குப் பயன்படுகின்றது. மேலும் மேட்டூர் மின்சாரத் திட்டத்துடனும் இத்திட்டம் இணைக்கப்பட்டிருக்கின்றது.

இந்நதியின் மொத்த நீளம் 120 கி. மீட்டர்கள். இது சிறு நதியேயாயினும் புனிதத்தன்மையில் கங்கை, காவிரி போன்றவைகளுக்கு ஒப்பிடும் தன்மையுள்ளது. "காவிரி, தென்பெண்ணை, பாலாறு—தமிழ், கண்டதோர் வையை, பொருநை நதி," என தேசியக்கவி சுப்ரமணிய பாரதியார் அவர்களாலும் இந்நதி போற்றப்பட்டுள்ளது.

இந்நதியின் கரையோரங்களில் மிகவும் சிறந்த ஊர் கள் அமைந்துள்ளன. பாவநாசம், அம்பாசமுத்திரம், திருப்புடைமருதூர், சேரன்மாதேவி, சீவலப்பேரி, திரு நெல்வேலி, செப்பறை, சீவைகுண்டம், ஆழ்வார் திரு நகரி முதலியன இந்நதிக் கரையிலுள்ள சில சிறந்த ஊர்களாம். இந்நதி பாயும் இடங்களில் எல்லாம் விளையும் நன்செய்ப் பயிர்கள் மக்களுக்குப் பொருளாதாரத் துறை யில் மேம்பாடு அடைய ஏதுவாயுள்ளன.

இந்நதிக்குச் சிற்றாறு, மணிமுத்தாறு, கருணை யாறு முதலிய பல உபநதிகளுள்ளன. இவைகளில் சிற்றாறு குற்றாலமலையில் உற்பத்தியாகிக் குற்றாலத்தில்

நீர்வீழ்ச்சியாக விழுந்து, பின்னர்ச் சமவெளியில் சென்று சீவலப்பேரிக் கருகில் தாமிரவன்னியுடன் கலக்கிறது. மணிமுத்தாறு ஒரு சிறந்த உபநதி. அதில்தான் தற்பொழுது அரசியலார் ஒரு பேரணை கட்டியிருக்கின்றனர். இதனுல் பல்லாயிரக்கணக்கான ஹெக்டேர் நிலம் சாகுபடிக்குப் பயன்படுத்தப்படலாம்.

ஒரு நாட்டின் பொருளாதாரத் துறையைச் சிறப்பிக்கவல்ல பல சாதனங்களுள் ஆறும் ஒன்ருகும். அதனுற்ருன் நம் பண்டைய மக்கள் ஆற்றினைத் தெய்விகத் தன்மை, தூய்மைத் தன்மை முதலியனவுடைய தாகக் கருதினர். ஆகவே "ஆறில்லா வூருக்கழகு பாழ்" என்ற முதுமொழியும் ஏற்படலாயிற்று. மக்கள் நாகரிகமும் ஆற்ருேடேயே அமைந்து வந்துள்ளது. மக்கள் வாழத்தொடங்கிய இடமும் ஆற்றையடுத்த பகுதியேயாம்.

மேற்கூறிய வாற்ருன் நம் தமிழ்நாடு சிறந்த நாகரிகத்துக்குரிய பெருமையை அடைய முக்கிய காரணமாயிருந்த நதிகளுள் பொருநையும் ஒன்று என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. இன்னும் அப்பொருநையின் சிறப்பு, இலக்கியத்தில் இது போற்றப்படும் விதம் முதலியன பற்றி விரிக்கப் புகின் மிக விரியுமாதலின் இத்துடனமைவோம். இப்பொருநை தமிழ் நாட்டின் சிறந்த நதி; மிக்க தெய்விக ஆற்றல் நிரம்பியது; தமிழ் நாட்டின் பொருளாதாரத்திற்கு உயிர்நிலை போன்றது. பண்டைத் தமிழகத்தின் பெரு மலையாய பொதியங்காலும் பொருநலாற்றின் சிறப்பினை என்னென்று புகல்வது!

### குறிப்புரை

புலவர் பி. சொ. சண்முகம் பிள்ளையவர்கள் சென்னைப் புரசைப் பாக்கத்திலுள்ள சர். எம். சிடி. முத்தையாச் செட்டியார் உயர் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராய்ப் பணி செய்து வருகின்ருர்கள். அடக்கமே ஓர் உருவமாய் அமைந்தவர்; சென்னை மாணவர் மன்றம், சென்னைத் தமிழாசிரியர் கழகம், மாநிலத் தமிழாசிரியர் கழகம், புரசைத் திருவள்ளுவர் கழகம் முதலிய தமிழ்ப் பணி குறித்த பொது நிலையங்கள் பலவற்றுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டவர்; மாணவர்க்குக் கொள்வகையறிந்து பாடம் கற்பிக்கும் ஆற்றல் வாய்ந்தவர் ஆவார்.

## அருஞ்சொற் பொருள்

நுகர்வோர் - அனுபவிப்போர். பரிமளித்து - மணம் வீசி, புகழ் பரவி. மூலிகை - மருந்துச் செடி. எட்டுணை - எள் + துணை, மிகச் சிறிதளவு. பொதியம் காலும் - பொதிய மலை உமிழும்; பொதியமலையிலிருந்து உற்பத்தியாகும்.

## வினாக்கள்

1. திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை எவ்வாறு காட்சியளிக்கிறது?
2. பொதியமலை பற்றிக் குறிப்பெழுதுக.
3. தாமிரவன்னிக்கு 'உயிர்நதி' என்ற பெயர் எவ்வாறு பொருந்தும்?
4. தாமிரவன்னியின் சிறப்புகள் எவை?
5. தாமிரவன்னி எங்கு உற்பத்தியாகிறது? எவ்வழியே பாய்ந்து கடலுடன் கலக்கிறது?
6. பாவநாசத்திலுள்ள மின்சார நிலையம் எந்த மாவட்டங்களுக்குப் பயன்படுகிறது?
7. தாமிரவன்னியின் உபநதிகள் யாவை? குற்றால நீர்வீழ்ச்சி எந்த ஆற்றில் உள்ளது?
8. மணிமுத்தாறு எவ்வாறு பயன்படுத்தப் பெறுகிறது?

# 11. தேசியச் சேமிப்புத் திட்டம்

[திரு. இரா. அண்ணுமலை, எம். ஏ., பி. டி.,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.]

"இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு"—குறள்.

பொருளற்ருரை எல்லோரும் இகழ்வர்; செல்வரை எல்லோரும் செய்வர் சிறப்பு என்பது இதனுல் பெறப்படுகிறது. "இல்லானை இல்லாளும் வேண்டாள்; ஈன்றெடுத்த தாய் வேண்டாள்" என்பது ஆன்ருேர் வாக்கு.

பொருளைத்தான் உலகவழக்கில் பணம் என்கிருேம். "பணம் என்ருல் பிணமும் வாய்திறக்கும்" என்ற முதுமொழியிலிருந்து பணத்தின் அருமையை அறியலாம். நாம் அன்ருடத் தேவைகளை, பணத்தைக் கொடுத்து வாங்கி மகிழ்கிருேம். பணம் இல்லையேல் வாழ்க்கை சுவையற்றதாகி விடுகிறது. எனவே, பணம் நம் வாழ்வுக்கு இன்றியமையாததாகும்.

ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன்னர் பணமோ, ரூபாய் நோட்டுகளோ அல்லது நாணயங்களோ இல்லை. அக்காலத்தில் மக்கள் பொருள்களை மாற்றிக்கொண்டு வாழ்ந்தார்கள். எடுத்துக்காட்டாக, மக்கள் மான்தோலை உடையாக உடுத்துவந்தார்கள். மான்தோலை வைத்திருப்பவன் உணவுப் பொருளுக்கு, உணவுப் பொருள் வைத்திருப்போனை நாடுவான். அவனுக்கு உடை வேண்டுமன்ருே? இருவரும் தத்தம் பொருளை மாற்றிக் கொள்வார்கள். இம்முறைக்குத்தான் பண்டமாற்று என்பது பெயர் ஆகும்.

பொருள்கள் பல்கிப் பெருகவே, வாணிபம் வளரலாயிற்று. வாணிபம் பண்டமாற்று முறையால் சரிவர நடப்பது இயலாதபோது, நாணயங்கள் கண்டுபிடிக்கப் பெற்றன. நாணயங்கள் தங்கம், வெள்ளி, செம்பு போன்ற உலோகங்களால் செய்யப்பெற்றன. தோல் நாணயங்களும் சிலவிடங்களில் பயன்படுத்தப் பெற்றன. இக்காலத்தில் நாம் உலோக நாணயங்களைப் பயன்

படுத்துகிறோம். அத்துடன் காகித நாணயங்களான ரூபாய் நோட்டுகளையும் வெகுவாகப் பயன்படுத்துகிறோம். காகித ரூபாய் நோட்டுகளுக்கு உண்மையில் மதிப்புக் குறைவுதான். இருப்பினும், அரசாங்க முத்திரையுடன் அதன் உத்தரவாதம் இருப்பதால்தான் காகித ரூபாய் நோட்டுக்கள் வழக்கத்தில் இருக்கின்றன.

ஒரு பொருளின் விலையை உறுதி செய்யப் பொதுவான மதிப்பீடாக அமைக்கப் பெற்றுள்ள சாதனமே பணமாகும். பண மதிப்பீடு இல்லையெனில் பொருள்களின் விலையை எப்படி உறுதி செய்வது? கடினமன்றோ! எடுத்துக் காட்டாக, நாம் விலைக்கு வாங்கும் தேங்காயை எடுத்துக் கொள்வோம். எத்தனை தேங்காய்களுக்கு மாற்றாக ஒரு பாத்திரம் கிடைக்கும்; அல்லது எத்தனை லிட்டர் நெல்லுக்கு மாற்றாக ஒரு சட்டை கிடைக்கும் என்று நம்மால் கூற முடியாது. ஆனால் ஒரு ரூபாய்க்கு மூன்று தேங்காய்கள் என்றோ, பத்து ரூபாய்க்கு ஒரு சட்டை என்றோ நம்மால் வாங்க முடியும்.

தனிமனிதன் பண்டங்களையோ பொருள்களையோ உற்பத்தி செய்து பணம் சம்பாதிக்கிறான்; அல்லது அவன் தன் உழைப்பைப் பணத்திற்கு மாற்றாகக் கொடுத்துப் பணம் தேடுகிறான். நெல்லை உற்பத்தி செய்யும் குடியானவன் அதைச் சந்தையில் விற்கிறான். அலுவலகத்திலோ அல்லது தொழிற்சாலையிலோ பணியாற்றும் தொழிலாளி தன்னுடைய உடல் உழைப்பையோ அல்லது உள்ள உழைப்பையோ பணத்திற்காகச் செலவழிக்கிறான்.

இவ்வகையில் தேடப்பெறும் பணத்தைக்கொண்டு மனிதன் தனக்கோ, தன் குடும்பத்திற்கோ தேவையான பொருள்களைப் பெற்று மகிழ்கிறான். நகரத்திலிருப்போருக்கும், நாட்டுப் புறங்களில் வாழ்வோருக்கும் இன்றியமையாத தேவையாக இருப்பது பணம் தான். பணம் எப்போதும் செலாவணியில் இருப்பதால் அது ஓரிடத்தில் நிற்பதில்லை. பணம் சென்று கொண்டிருப்பதன் காரணமாகத்தான் அதைச் 'செல்வம்' என்கிறார்கள். பணம் வாழ்க்கைக்கு இன்றியமையாததென்பதால் அதைத்

தேடுவதிலும், செலவழிப்பதிலும் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமன்றே?

## 2

'பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை' என்பார்கள். ஊதியம் குறைந்தவன் வாழ்க்கையின் அன்ருடத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்துகொள்ள முடியாதவனுய் அல்லலுறுகிருன். தேவைப்பட்டஞான்று அவனுல் வேண்டும் பொருளை வாங்க முடிவதில்லை. அவனுக்கு வசதிகள் நிறைந்த வீட்டில் வாழ வாய்ப்பிருப்பதில்லை. இருப்பினும், அவனும் அவனைச் சார்ந்தோரும் வயிருர உண்ணவும், தேவையான துணிமணிகளை உடுக்கவும் வேண்டுமன்றே? அவன்தன் வருவாய்க்குத்தக செலவழிக்கக் கடமைப் பட்டுள்ளான். அவனும் பணத்தைச் செலவழிப்பதில் கவனம் செலுத்தவேண்டும்.

பணத்தை நிறையச் சம்பாதிப்பவர்களும் அதனைச் செலவழிப்பதில் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். எல்லா வசதிகளையும் பெற்று அவன் நல்வாழ்வு வாழலாம். ஆனல் அவனும் அளவுக்கு மீறிச் செலவழிக்கும் கெட்ட பழக்கத்தால் பீடிக்கப் படுவானுயின், அவனையும் துன்பம் தொடர்கிறது. அளவுக்கு மீறிச் செலவு செய்வோர் கடன் வாங்கித் துன்பப்படுகிருர்கள். 'ஆன முதலில் அதிகம் செலவானுல், மானம் அழிந்து மதிகெட்டுப் போன திசை எல்லார்க்கும் கள்ளனுய் ஏழ்பிறப்பினும் தீயனுய் நல்லார்க்கும் பொல்லனுய், வாழும் இழிநிலை ஏற்படும் அன்றே!

தேடிய பொருளை நாம் வரன்முறையின்றிச் செலவழிப்பதால் சமூகமும் பாதிக்கப் பெறுகிறது. எவ்வாறெனில், பணத்தை ஆக்கப் பணிகளுக்கும் அழிவுப் பணிகளுக்கும் பயன்படுத்தலாம். கல்வி போன்ற ஆக்கப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பெறும் பணம் வீணுவதில்லை. ஆனுல் குடி போன்ற கெட்ட பழக்கங்களால் எத்துணைக் குடும்பங்கள் சீரழிந்தன. அஃது சமூக நலனையும் சீரழிக்கும் என்பதனைக் கூறவும் வேண்டுமோ?

குடும்பத்திற்குப் பணம் தேவைப்படுகிறது. தேவைகள் உடனடியானவை, பொறுத்து வருபவை, எதிர்பாராது வருபவை என மூவகைப்படும். குடும்பப் பாதுகாப்புக்கு ஆகும் பணம் உடனடித் தேவையைச் சார்ந்ததாம். நம் பிள்ளைகளுக்கு வருங்காலத்தில் திருமணம் போன்ற விழாக்களைச் செய்ய வேண்டப்பெறும் பணம் பொறுத்துவரும் தேவையாகும். திருமணம் 10 ஆண்டுகள் கழித்து வர இருக்கலாம். அதற்கும் பணம் வேண்டுமன்றோ? நாம் எதிர்பாராத காலத்தில் வீட்டில் குழந்தைகள் நோய்வாய்ப்பட்டபோது செலவாகும் பணத்தேவை எதிர்பாராது வரும் தேவையின்பாற்படும்.

மேற்கூறிய அனைத்திற்கும் பணம் தேவைப்படுகிறது. எனவே நாம் எதிர்பாரா நிலையில் வருங்காலத்தில் ஆகும் செலவுப் பணத்தை ஆயத்தப்படுத்திக் கொள்வது இன்றியமையாததாகும். இல்லையேல், எதிர்பாராது வரும் செலவுகளைச் செய்யமுடியாமல் நாம் வருந்த வேண்டி நேரிடும்.

பணத்தை வரவுக்கு மீறிச் செலவழிக்கக் கூடாது என்பது இதனுல் புலப்படுகின்றது. வரவுக்கு விஞ்சிச் செலவு செய்யக் கூடாது என்ற படிப்பினையைக் கையாளும் எவருக்கும் கடன் வாங்க வேண்டிய அவசியமோ, அல்லது எதிர்காலத்தில் வரும் செலவுகளைச் சமாளிக்க முடியாத அவல நிலையோ ஏற்படுவதில்லை. தன் வருவாயில் எவ்வளவைச் செலவழிக்க வேண்டும் என்று திட்டமிடுகிறவனே அறிவாளியாவான். அன்றுடத் தேவைகளுக்காகும் பணத்தை அவன் செலவழித்தேயாக வேண்டும். செலவழித்தது போக எஞ்சியுள்ளதையும் அவன் வேண்டுமென்ருல் செலவழிக்கலாம். ஆனுல் வருங்காலத் தேவையைக் கருத்திற்கொண்டு அவன் தன் வருவாயில் ஒரு பகுதியைச் சேமித்து வைக்க வேண்டும்.

பொருளைப் புத்திசாலித்தனமாக செலவழிக்க வேண்டுவது அவசியமாகும். நம் நலனுக்கு உதவும் இன்றியமையாத பொருள்களுக்குப் பணத்தைச் செலவழிப்பது நெறியாகும். தனிமனித நலனே சமூக நல

ளுகும். ஆனால் பயனற்ற பொருள்களுக்குப் பணத்தைச் செலவிட்டு விரயமாக்கக் கூடாது. நாம் செலவழிக்கும் பொருள்கள் ஒவ்வொன்றின் உண்மை மதிப்பையும் உணர்ந்து கொள்பவனே அனுபவ ஞானமுள்ளவனாகக் கருதப் பெறுவான்.

பணத்தைச் சேமித்து வைப்பதோர் நற்குணமாம். சேமிக்கும் பழக்கம் நம் மனத்தைக் கட்டுப்பாடுடன் கூடிய ஒழுக்க நெறியில் நடாத்திச் செல்கிறது. எவ்வாறு? பணத்தைச் சேமித்து வைக்க வேண்டும் என்னும் மனத் திட்பம் நம் ஆசை உணர்ச்சிகளை மட்டுப் படுத்திச் செல வழிக்கும் பழக்கத்தைக் குறைக்கின்றது. சேமிப்புச் செயல் நம் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கவைக்கும் படிப்பினையை ஏற்படுத்துகின்றது. அதனால் நம் வாழ்வு மகிழ்ச்சி நிரம்பியதாகிறது. மேலும் பணத்தைச் சேமிப் பவன் நாட்டின் முன்னேற்றத்திற்கும் வழிவகை செய்கிறான்.

குடும்பத்தை நடத்துவதற்கு நமக்குப் பணம் எவ் வாறு தேவைப்படுகின்றதோ அவ்வாறே அது சமூகப் பொது நலன்களுக்கும் தேவைப்படுகிறது. எடுத்துக் காட்டாக, பள்ளிகளையும், கல்லூரிகளையும் கட்டவும், சாலைகள், மருத்துவ மனைகள் முதலியவற்றை அமைக்க வும், சுகாதாரப் பணிகள், மின்சார வசதிகள், குடிநீர், புகை வண்டிகள் போன்றவைகளுக்கும், நாட்டுப் பாது காப்புப் படைகள், இன்பப் பூங்காக்கள் போன்றவை களுக்கும் பணம் தேவையாகிறது. மேற்கூறியவை தனிப்பட்ட மனிதனுக்கு மட்டுமன்றி, நம்மனைவருக்கும் பயன்படுவனவாம். புகைவண்டிப் பெட்டியையோ அல்லது புகை வண்டிப் போக்குவரத்தையோ நடாத்தும் பணவசதி தனிமனிதனிடம் எதிர்பார்க்கமுடியாது. அல்லது ஆயிரக்கணக்கான கற்கள் நீண்டுசெல்லும் நெடுவழிச் சாலைகளை அமைக்க அவனிடம் பணம் இருக்கமுடியாது. பணம்பெற்றுள்ளோராயினும் அவர் கள் புகை வண்டித் தொடருக்கோ, நெடுவழிச் சாலை களுக்கோ பணத்தை ஏன் செலவழிக்கப் போகிறார்கள்?

செலவழிக்க மாட்டார்கள். ஏனெனில் அவை அவனுக்கு மட்டும் பயன்படுவதில்லையன்றோ? அவை பொதுப்பணித் துறைகளாம்; மக்கள் அனைவருக்கும் பயன்படுவனவாம். எனவே, நகராட்சி மன்றங்கள் போன்ற பொதுத்துறை நிறுவனங்கள், மருத்துவ மனைகள், சாலைகள் முதலான வற்றைத் தத்தம் எல்லைக்குள் அமைக்க முற்படுவது சாலப் பொருந்துவதாகும்; மக்களுக்கு மின்சார வசதி களையும், சுகாதாரப்பணிகளையும் அமைத்துத் தருவது இன்றியமையாததாகும். அதைப்போன்றே, அதைவிடப் பெரியதொரு நிறுவனமான அரசாங்கம் பெருவழிச் சாலை கள், புகை வண்டித் தொடர்கள், மருத்துவ மனைகள், தபால் தந்தித் துறைகள், அணைக்கட்டுகள் மூலம் குடி நீர் வசதிகளைப் பெருக்குதல், நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி, அவற்றின் மூலம் நீர் மின் திட்டங்களை அமைத்துத் தருதல், கனிவளங்களைக் களைந்தெடுத்து புத்தம்புதுத் தொழிற்சாலைகளை அமைத்தல் போன்ற சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். மேற் கூறிய பொதுப்பணிகளை மக்களுக்காகச் செய்வது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும்.

அந்நியப் படையெடுப்புகளிலிருந்து மக்களைப் பாது காத்துப் புரப்பதும் அரசாங்கத்தின் தவிர்க்க முடியாத தொரு பெரும் பொறுப்பாகும். அதன் பொருட்டு, அரசாங்கம், காலாட் படைகளையும் கப்பற் படைகளையும் விமானப் படைகளையும் வைத்திருப்பது அவசியமன்றோ? துப்பாக்கிகள், வெடிமருந்துகள், டாங்கிகள், வான ஊர்தி கள், போர்க் கப்பல்கள் முதலியனவற்றை அமைப்பதும் தேவையன்றோ?

தனி மனிதன் தன் தேவைகளுக்கென எவ்வாறு பணத்தைச் செலவு செய்கிறானோ, அதே போன்று நகராட்சி மன்றம், அரசாங்கம் போன்ற பெரு நிறுவனங் களுக்கும் பொது மக்கள் நலன்களைப் பாதுகாக்கப் பொருள் தேவைப்படுகிறது. இப்பெரு நிறுவனங்கள் செலவு செய்யும் பொருள் அல்லது பணம் நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட மக்களிடத்திருந்தோ அல்லது

நாட்டுக் குடிமக்களிடமிருந்தோதான் வரவேண்டும். தாம் பெறும் இன்ப நுகர்ச்சிகளுக்குக் கைம்மாருக அவர்கள் வரிகளின் மூலமாக அரசாங்கத்திற்குப் பணம் கொடுக் கிருர்கள். மக்களிடமிருந்து கடன்கள் வாங்கியும் இத் தேவைகளை அவை பூர்த்தி செய்யலாம்.

தனி மனிதன் வைத்திருக்கும் பொருளுக்கும் அரசாங் கத்திடம் உள்ள பொதுப் பணத்திற்கும் வேறுபாடு உண்டு. தனி மனிதன் வைத்திருக்கும் பொருள் அவனுக்கோ, அல்லது அவன் குடும்பத்திற்கோ சொந்த மாகிறது. ஆனுல் பொதுப் பணம், அரசாங்கம் அல்லது நகராட்சி மன்றம் போன்றதொரு நிறுவனத்தின் பொதுச் சொத்தாகின்றது. கழனிகளில் வேலை செய்பவர் அல்லது ஆலைத் தொழிலில் ஈடுபட்டவரிடமிருந்தும் அலுவலகத்திலோ அல்லது வாணிபத்திலோ அன்றி தொழில் துறையிலோ ஈடுபட்டுள்ள பொது மக்களிட மிருந்துந்தான் தனி மனிதன் பணமும் பொதுப் பணமும் கிடைக்கின்றன. அதனுல்தான் மக்களுக்குத் தேவை யான பொருள்களை உற்பத்தி செய்யவும், பொதுப் பணி களை மேற்கொள்ளவும் முடிகின்றது. நாம் உற்பத்தி செய்யும் பொருள்களையும், பொதுப் பணிகளையும் விற்ரே அல்லது மாற்றியோதான் நாட்டின் செல்வம் பெருகுகின்றது. இத்தகைய செல்வத்திலிருந்துதான் தனி மனிதன் தன் மாதாந்தர ஊதியத்தையோ, கூலி யையோ அல்லது பெரு வருவாயையோ பெறுகிருன். தான் ஈட்டும் பொருளின் பெரும் பகுதியைத் தனக்கோ, தன் குடுபத்திற்கோ செலவு செய்வதைத் தவிர்த்து எஞ்சி நிற்கும் பணத்தில் ஒரு பகுதியை அரசாங்கத்திற்கு வரி களாகக் கொடுக்கிருன். இல்லையேல் அவன் சேமித்து வைக்கும் பணத்தை அரசாங்கத்திற்குக் கடன் மூலம் நேரிடையாகவோ அல்லது வங்கிகள், ஆயுள் இன்ஸ் சூரன்ஸ் கம்பெனி, (Provident fund) எய்ப்பில் வைப்பு அல்லது ஏனைய சேமிப்புச் சாதனங்கள் மூலமோ பணத் தைச் சேமித்துக் கொடுத்து உதவுகிருன்.

## 3

### ஐந்தாண்டுத் திட்டங்கள்

நம் நாட்டு மக்கள் அனைவருக்கும் நம் அரசியல் விதியமைப்பு சில உரிமைகளை வழங்குகிறது. செவ்வனே வாழ்வதற்கு ஏதுவான வழிகளை அரசாங்கம் முயலவேண்டியே அஃது வழிமுறைகளை வகுத்துக் கொடுக்கின்றது. மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசாங்கம் பணியாற்ற வேண்டுவது தன் தலையாய கடமையென்றும் உணர்த்துகின்றது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் 1951ஆம் ஆண்டில் தீட்டப் பெற்றது. இத்திட்டம் மேலே கூறப்பெற்றுள்ள அடிப்படைக் கொள்கைகளைப் பூர்த்தி செய்ய முயன்றது. நன்முறையில் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல் படுத்தியபின் இன்று மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் நாம் வாழ்கிறோம்.

### ஐந்தாண்டுத் திட்டங்கள் ஏன்?

தனி மனிதனோ அல்லது குடும்பமோ எங்ஙனம் தங்கள் மாதாந்தர வரவு செலவுக் கணக்கைத் திட்டமிடுவது அவசியமோ அதனைப் போல அரசாங்கமும் திட்ட மிட்டு, சமூக வளர்ச்சித் திட்டங்களில் முதலில் செய்ய வேண்டுவதையும், அதனையடுத்துச் செய்ய வேண்டுவதையும் திட்டமிடவேண்டும். அரசாங்கம் செயல்படுத்த நினைக்கும் பொதுப் பணிகளைத் திட்டமிட்டு வகைப்படுத்தி ஒவ்வொன்றிற்கும் முடிவெல்லைகளைத் தீர்மானித்து குறிப்பிட்ட கால எல்லைக்குள் திட்டத்தைச் செயல்படுத்த முனைகிறது. வேளாண்மையேபாரத மக்களின் அடித்தளமாக அமைந்திருப்பதால் அதற்கு முதலிடம் கொடுப்பது முறையாகும். அதனையடுத்துத் தொழில்களைப் பெருக்குவது அவசியமாகும். கல்வி, சுகாதாரப் பணிகளும் இன்றியமையாதவையாம்.

வேளாண்மையில் ஈடுபட்டுள்ளோரின் நலனைப் பெருக்க அரசாங்கம் அணைகள் கட்டி, நீர்ப்பாசனக் கால்வாய்கள் மூலம் அவர்தம் கழனிகளுக்குப் போது

மான நீர் வசதியைப் பெருக்க முயன்று வருகிறது. அண்மைக் காலம்வரை இருளால் போர்த்து மூடிக்கிடந்த கிராமங்கள் பல மின்சார வசதிகளைப் பெற்று ஒளியுடன் மிளிர்கின்றன. நம் நாட்டிற்குத் தேவைப்படும் இயந்திரக் கருவிகளின் பற்றுக்குறையைப் போக்க அரசாங்கம் பெரும் உருக்காலைகளை அமைத்து வருகின்றது. இவ்வாலைகளிலிருந்து உற்பத்தியாக்கப் பெறும் உருக்கைப் பயன்படுத்தி இன்று பல்வேறு தொழிற்சாலைகள் இயந்திரங்களை உற்பத்தி செய்கின்றன. இவ்வகையாக, இன்று நமக்குத் தேவையான புகை வண்டிப் பொறிகள், பெட்டிகள், இயந்திரங்கள், பிறர் தொழிலுக்குத் தேவையான கருவிகள் முதலானவற்றைப் பாரதமே உற்பத்தி செய்து வருவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். பட்டி தொட்டிகள் தோறும் பள்ளிகளமைத்து, பிணிபோக்கும் மருத்துவ மனைகள் கட்டிக் கிராமங்களைக் காப்பதன் மூலம் பிணிகளிலிருந்து மக்கள் காப்பாற்றப் பெறுகிறார்கள். இத்தகைய அருமையான முன்னேற்ற வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தையும் நாம் விடுதலை பெற்ற பிறகே நம் ஐந்தாண்டுத் திட்டங்களின் வாயிலாகச் செய்து முடித்துள்ளோம். நம் நாட்டு மக்கள் புதுவாழ்வைப் பெற்று மகிழ்ச்சியுறுகிறார்கள் எனில் அஃது மிகையாகாது. எண்ணற்றவர்கள் வேலை வாய்ப்புகளைப் பெற்று நல்வாழ்வுக்கு வழிவகுத்து வருகிறார்கள்.

ஐந்தாண்டுத் திட்டங்களைச் செயல் படுத்த நமக்குப் பெரும் பொருள் வேண்டுமன்றோ ? முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 3360 கோடியையும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் போது ரூ. 6750 கோடியையும் செலவழித்திருக்கிறோம். மூன்றாம் திட்டக் காலத்தில் செலவினம் ரூ. 11,600 கோடியாகப் பெறும் என்று மதிப்பீடு செய்திருக்கிறார்கள்.

அரசாங்கத்திற்கு இத்தகைய திட்டங்களைச் செயல் படுத்தச் செலவாகும் பெருந் தொகைகள் எங்கிருந்து கிடைத்தன ? வரிகள், பிற நாடுகளிடமிருந்து வாங்கும் கடன்கள், நம் நாட்டுப் பல் கோடி மக்கள் சேமித்து

வந்துள்ள பெரியதும் சிறியதுமான சேமிப்பு நிதிகள் ஆகியவற்றிலிருந்து தான் இப்பொருள்கள் கிடைத்தன. மக்கள் அவற்றைச் சேமித்து அரசாங்கத்திற்குக் கடனுகக் கொடுத்தார்கள். சிறு சேமிப்புகள் 25 காசுகளிலிருந்து தொடங்குவன. இவ்வகைச் சிறு சேமிப்புகளும் கூட அரசாங்கத்திற்கு உதவி செய்ய முன் வந்தமையாற்ருன் முன் கூறப்பெற்ற ஐந்தாண்டுத் திட்டங்கள் முற்றுப் பெற்றன. சிறு சேமிப்புகள் மூலம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த செலவின் நூற்றுக்குப் பதினெரு விகிதப் பணம் கிடைத்ததென்ருல் சிறு சேமிப்புகளின் அவசியத்தைக் கூற வேண்டுவதில்லையன்ரே ? நம் ஐந்தாண்டுத் திட்டங்களைச் செவ்வனே செயல்படுத்தி வெற்றியாக்கச் சிறு சேமிப்பு இயக்கங்கள் இன்றியமையாதனவாம். அவற்றின் மூலம் நம் நாட்டு மக்கள் மகிழ்ச்சி பொருந்திய எதிர்காலத்தைக் காண்பார்கள் என்பதில் ஐயமில்லை.

## 4

## சேமித்து வைக்கும் பணத்தை நாம் என்ன செய்ய வேண்டும் ?

வருங்காலத்திற்குப் பொருளைச் சேமித்து வைப்பது நம் தலையாய கடமை என்பதை முன்னரே தெரிந்துள்ளீர்கள். பாரதத்தின் செல்வ வளத்தைப் பெருக்கி, நம் மக்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கொடுத்துதவ அரசாங்கத்திற்கு எவ்வாறு பொருள் தேவைப்படுகின்றது என்பதைப் படித்திருப்பீர்கள்.

நாம் சேமித்து வைக்கும் பணத்தை நாமே வைத்துக் கொண்டால் அதன் மதிப்பீடு உயராது. அதை நாம் காலப்போக்கில் செலவழித்து விரயமாக்கியும் விடலாம். சில சமயங்களில் அவசியமற்ற பொருள்களை வாங்கத் தூண்டப் பெற்று நம் சேமிப்பைச் செலவழித்துவிட நேரிடலாம். எனவே, நாம் சேமிக்கும் பணத்தை அஞ்சலகச் சேமிப்பு வங்கியிலிட்டோ அல்லது சேமிப்புப் பத்திரங்களாகவோ அன்றி சேமிப்பு அஞ்சற்றலைகளை

வாங்கியோ பயன்படுத்த வேண்டும். நம் பொருள் அரசாங்கத்தினிடம் இருக்கும்போது அது பாதுகாப்பான இடத்தில் இருக்கிறதென்று பொருளாகும். மேலும், ஆண்டுதோறும் அது வளர்ந்து பெருகுகின்றது. ஏனெனில் அரசாங்கம் நம் சேமிப்புத் தொகைக்குக் கவர்ச்சியான வட்டியையும் கூட்டித் தருகின்றது. நம் நாட்டை முன்னேற்ற வழியில் வளர்ச்சியுறச் செய்யவும் பகைவரிடமிருந்து நம் நாட்டைப் பாதுகாக்கவும் அரசாங்கம் சேமிப்புகளைப் பயன்படுத்துகிறது.

நாட்டு மக்கள் பணத்தைச் சேமித்து வைத்து, அதனைப் பெருக்கும் வகையில் உதவுவான் பொருட்டு அரசாங்கம் பல்வேறு சேமிப்புத் திட்டங்களை வெளியிட்டுள்ளது. அவையாவன :—

**1. பன்னீராண்டு தேசியப் பாதுகாப்புப் பத்திரங்கள்:**

இப்பத்திரத்தைச் சேமிப்பு வங்கிப் பணியில் ஈடுபட்டுள்ள எல்லா அஞ்சலகங்களிலிருந்தும் விலைக்கு வாங்கலாம். ஐந்து ரூபாயில் தொடங்கி பலவகை தரங்களில் இவை கிடைக்கின்றன. இப்பத்திரத்திற்கு ஆண்டொன்றிற்கு நூற்றுக்கு ஆறே கால் ரூபாய் தனிவட்டியாகவும், நாலே முக்கால் ரூபாய் கூட்டு வட்டியாகவும் கிடைக்கிறது. இவ்வகையில் நாம் போடும் பத்து ரூபாய் பன்னீராண்டுகளுக்குப் பின்னர் பதினேழரை ரூபாயாக வளர்கிறது. பதினெட்டாண்டை எட்டாத சிறு (Minor) பையனோ அல்லது பெண்ணோ இத்தகைய பத்திரங்களை அவரவர் பெயரில் வாங்கலாம்.

**2. சேமிப்பு அஞ்சற்றலைகள் (Saving stamps):**

தமக்குக் கிடைக்கும் கைச்செலவுப் பணத்தில் குழந்தைகளும் சேமித்து வைக்க உதவுவதே சேமிப்பு அஞ்சற்றலைகளாம். 25 காசுகள், 50 காசுகள், ரூ. 1 ஆகிய மதிப்பீடுகளில் இத்தலைகள் எல்லா அஞ்சலகங்களிலும் கிடைக்கின்றன. இத்தலைகளை இலவசமாக அஞ்சலகங்களிலேயே கிடைக்கும் எழிலுறு அட்டைகளில் ஒட்டி வைத்துக் கொள்ளலாம். இவ்வண்ணம்

சேமித்து வைக்கும் அஞ்சற்றலேகள் ஐந்து அல்லது பத்து ரூபாய் மதிப்பைப் பெற்றதும் அதைத் தேசியப் பாதுகாப்புப் பத்திரமாகவோ அல்லது பிரிமியம் பரிசுப் பத்திரமாகவோ வாங்கிக் கொள்ளலாம்; அல்லது அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் புதிய கணக்கு வைத்துக் கொள்ளலாம்.

**3. நன்கொடை கூபன்கள் :**

திருமணம், பிறந்தநாள் முதலான சமயங்களில் நன் கொடைகள் வழங்குவதை மேற்கூறிய நன்கொடைக் கூபன்களாகக் கொடுக்கலாம். இவையும் அஞ்சலகங் களில் கிடைக்கின்றன. ஐந்து முதல் பத்து ரூபாய் மதிப்பீடுகளில் இவை வழங்கப் பெறுகின்றன. அழகாக அச்சிடப் பெற்ற உரையுடன் இக்கூபன்களே அஞ்சலகங் களில் வாங்கி அன்பளிப்பாகக் கொடுக்கலாம். இத்தகைய அன்பளிப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் இதைப் பன்னீராண்டு தேசியப் பாதுகாப்புப் பத்திரமாக அதே மதிப்பில் மாற்றிக் கொள்ளலாம்.

**4. கூடுகின்ற தவணேக் காலச்சேமிப்புத் திட்டம் :**

இஃது ஒவ்வொரு மாதமும் சிறுசிறு தொகைகளே ஐந்து, பத்து அல்லது பதினேந்தாண்டுகளுக்குச் சேமித்து வைத்து, சேமித்த எல்லாவற்றையும் மொத்த மாக வட்டியுடன் தவணேக்காலம் முடியும் தருணத்தில் வாங்கும் அழகான சேமிப்புத் திட்டமாகும். மாதமொன் றுக்கு ரூபாய் ஐந்து வீதம் ஐந்தாண்டுகள். சேமித்து வைத்தால், 25 ரூபாய் வட்டியும் சேர்த்து நாம் ரூ. 325 ஆகப்பெறலாம். இதைக்கொண்டு நல்ல மிதிவண் டியையோ அல்லது பிற பொருள்களேயோ வாங்கி மகிழலாம். சேமிப்பு வங்கிப் பணியில் ஈடுபட்டுள்ள எல்லா அஞ்சலகங்களிலும் வயது வராதவர்கள் கூட இத்தகைய கணக்கை வைத்துக்கொள்ளலாம். தவணேக் கால முடிவிற்குள் பணம் வேண்டுவோர் அவர் தம் இருப் பிலிருக்கும் தொகையில் பாதியைக் கடனுகப் பெறலாம்.

கடனுகப் பெற்ற இத்தொகையைப் பின்னர்த் திரும்பவும் கட்டிக் கொள்ளலாம்.

**5. அஞ்சலகச் சேமிப்பு வங்கி :**

இளம்பிள்ளைகளுக்கு (இருபாலார்க்கும்) அஞ்சலகச் சேமிப்பு வங்கிக் கணக்கு ஓர் அருமையான சேமிப்புச் சாதனமாம். தொடக்கத்தில் ரூபாய் இரண்டுடன் கட்டப் பெறும் இக்கணக்கில் குறைந்த பட்சத் தொகையாக ஒரு ரூபாயைக்கூடச் சேர்த்து வரலாம். இத்தகைய வங்கிக் கணக்கில் குறைந்த பட்சம் ஐந்து ரூபாயாவது இருப்புத் தொகையாக இருக்கவேண்டும். வயது வராத ஆண் பெண் இருபாலாரும் அவரவர் பெயரில் இத்தகைய சேமிப்புக் கணக்கைத் தொடங்கலாம். ஒரு ரூபாய்க்குக் குறைவாகச் சேமித்து வைக்க விழைவோர் சேமிப்பு அஞ்சற்றலைகளாக வாங்கி, அஞ்சலகத்தில் கொடுத்து அவரவர் கணக்கில் சேர்த்து வைத்துக் கொள்ளலாம். இவ்வகைக் கணக்கை வைத்துக் கொள்வோர் 'பாஸ் புத்தகம்' (Pass book) ஒன்றை இலவசமாகப் பெற்றுக் கொண்டு, அதில் பணத்தை வாங்குவதையும், சேர்க்கப் போடுவதையும் குறித்துவைத்துக் கொள்ளலாம். நம் கணக்கில் நிலுவையாக இருக்கும் தொகைக்கு ஆண்டொன்றுக்கு நூற்றுக்கு மூன்று விகிதப்படி வட்டியை அவர்கள் பெறுகிருர்கள்.

**6. பிரீமியம் பரிசுப் பத்திரங்கள் :**

இத்தகைய பத்திரங்களை எல்லா அஞ்சலகங்களிலும் பெறலாம். ஐந்து ரூபாய், நூறு ரூபாய் என இவை இரண்டு வகையில் கிடைக்கின்றன. இத்தகைய பத்திரங்களை வாங்குவோர் பரிசுத்திட்டங்களிலும் பங்கு கொள்ள உரிமை பெறுகிருர்கள். ஐந்து ரூபாய்ப் பரிசுப்பத்திரங்களுக்கான பரிசுத் தொகை பதினைந்தாயிரம் ரூபாயாகும்; நூறு ரூபாய்ப் பத்திரங்களுக்கு ஐம்பதினுயிரம் ரூபாய் பரிசுத் தொகையாகும். இதைத்தவிர ஐந்து ரூபாய்ப் பரிசுப் பத்திரங்களுக்கு மேலும் 567 பரிசுகளும், நூறு

ரூபாய்ப் பத்திரங்களுக்கு மேலும் 242 பரிசுகளும் கிடைக்கின்றன. பரிசுபெறும் வாய்ப்பினைப் பெருதவரும் ஐந்தாண்டுத் தவணைக்குப் பின்னர்ச் சிறிது வட்டியுடன் தாம் போட்ட பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இப்பத்திரத்தால் ஒருவர் போட்ட ஐந்து ரூபாய் $5\frac{1}{2}$ ரூபாயாகவும், நூறு ரூபாய் நூற்றுப் பத்தாகவும் பெருகி வளர்கிறது.

மேற்கூறிய சேமிப்பு வகைகளில் ஒன்றிலோ அல்லது பலவற்றிலோ நாம் தேர்ந்தெடுத்துச் சேர்ந்து கொள்ளலாம். நாம் எவ்வளவு சேர்க்கிறேம் என்பது முக்கியமன்று. 'சிறுகச் சேர்த்துப் பெருக வாழும்' சிக்கனப் பழக்கம் இன்றியமையாததென்பதே நாம் தெரிந்துகொள்ளும் படிப்பினையாகும். இதனுல் நாமும் பயன் பெற்று நாடும் நலமுற வாய்ப்பேற்படுகின்றது.

"சிக்கன வாழ்வே சீரான வாழ்வு
சேமிப்பு வழியே செவ்விய வழி."

## குறிப்புரை

இக்கட்டுரையின் ஆசிரியர் திரு. இரா. அண்ணுமலை எம்.ஏ., பி.டி. ஆவார். இவர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் வரலாற்றுத் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிருர். அமைதி, இன்சொல் கூறல் முதலிய நற்பண்புகள் யாவும் ஒருங்கே வாய்ந்தவர். மொழிப் பற்றும் சமயப்பற்றும் மிக்கவர். அவை குறித்த ஆக்க வேலைகள் பலவற்றை எப்போதும் செய்து கொண்டே யிருப்பார். அரசியலாரால் வெளியிடப்பட்ட தமிழாக்க நூல்களை உருவாக்கிய பெரியோர்களுள் இவரும் ஒருவர் ஆவார்.

## அருஞ்சொற் பொருள்

எள்ளுவர் - இகழ்வர். பல்கி - அதிகமாகி. உத்தரவாதம் - பொறுப்பு. அல்லல் - துன்பம். ஞான்று - சமயம். சீர் - சிறப்பு. விஞ்சி - அதிகமாக. எஞ்சி - மீதமாக. விரயம் - வீண். திட்பம் - உறுதி. எய்ப்பில் வைப்பு - பிராவிடண்ட் சேமிப்புநிதி. சாதனம் - வழி. செவ்விய - சிறந்த.

## வினுக்கள்

1. பணம் வாழ்வுக்கு இன்றியமையாதது என்பது எவ்வாறு பொருந்தும்?

2. பண்டைக் காலத்து மக்கள் விரும்பும் பொருள்களை எவ்வாறு பெற்றனர்?

3. நாணயங்கள், ரூபாய் நோட்டுகள் ஏன் வழக்கத்தில் வந்தன? விளக்குக.

4. செல்வம் எனப்பெயர் வரக் காரணம் யாது? அதனைத்தேடும் முறைகள் யாவை?

5. "பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை"—என்பது பொருந்து மாற்றை விளக்குக.

6. பணக்காரர்களும் பொருளை எவ்வாறு செலவிட வேண்டும்? ஏன்?

7. வரன்முறையின்றி ஒருவன் செலவு செய்வதால் வரும் இழுக்கு என்னை?

8. ஒரு குடும்பத்திற்குப் பணத் தேவைகள் எத்தனை வகைகளில் வரும்? விளக்குக.

9. வருவாயில் ஒரு பகுதியைச் சேமித்து வைக்க வேண்டிய இன்றியமையாமையை விளக்குக.

10. பணச் சேமிப்பால் ஒருவனுக்கு ஏற்படும் நற்குணங்கள் யாவை?

11. அரசாங்கம் மக்களுக்குரிய வசதிகளை ஏன் செய்ய வேண்டும்? ஏதாவது ஆறு வசதிகளைக் கூறுக.

12. அரசாங்கம் பொதுப் பணிகளை எவ்வாறு செய்ய முடியும்? அவ்வாறு செய்ய வருவாய் எப்படிக் கிடைக்கின்றது?

13. பாதுகாப்புத் துறை இன்றியமையாத செலவினத்தில் சேர்க்கப்படுவது ஏன்? விளக்குக.

14. பொதுப் பணிகளுக்குத் தனிமனிதன் ஏன் பணம் கொடுக்க வேண்டும்? ஆராய்க.

15. தனிமனிதன் பொருளுக்கும் அரசாங்கப் பொதுப் பணத்திற்கு முரிய வேறுபாடுகள் யாவை?

16. தனி மனிதன் அரசாங்கத்திற்கு எவ்வெவ் வகையாகப் பணம் கொடுத்து உதவலாம்?

17. ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டுவது ஏன்?

18. ஐந்தாண்டுத் திட்டங்களால் ஏற்படும் நன்மைகள் யாவை?

19. ஐந்தாண்டுத் திட்டங்களைச் செயற்படுத்த வருவாய் எப்படிக் கிடைக்கிறது?

20. சிறு சேமிப்பு எவ்வாறு முக்கிய இடத்தைப் பெறுகின்றது?

21. நம் சேமிப்புப் பணத்தை அரசாங்கத்திடம் ஏன் சேமிப்புக் காகக் கொடுக்க வேண்டும்?

22. சேமிப்புக்காக அரசாங்கம் மேற்கொள்ளும் சேமிப்புத் திட்டங் கள் எவை? ஏதாவது ஒன்றினை விளக்குக.

23. பன்னீராண்டு தேசியப் பாதுகாப்புப் பத்திரம் எப்படிப் பெற லாம்? அதன் முறைகளை விளக்குக.

24. சேமிப்பு அஞ்சற்றலேகள் எவ்வாறு சிறந்ததாகக் கருதப் படுகின்றன ?

25. நன்கொடை கூபன்கள் என்ருல் என்ன ?

26. கூடுகிற தவணைக்காலச் சேமிப்புத் திட்டத்தின் சிறப்புக்களே விளக்குக.

27. அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் பணம் சேர்க்கும் முறையினைத் தெளிவுற எழுதுக.

28. பிரீமியம் பரிசுப் பத்திரங்களால் ஏற்படும் நன்மைகளே எழுதுக.

29. "சிறுகச் சேர்த்துப் பெருக வாழ்," இது வாழ்க்கையில் எவ் வாறு சிறப்பைத் தருகிறது என்பதை விளக்கி வரைக.

## பயிற்சி

I கீழ்க்காணும் தலைப்புகள் பற்றிப் போட்டி உரைகளை எழுதிப் பழகுக :—

(1) சிக்கன வாழ்வு நல்லதா ? ஆடம்பர வாழ்வு நல்லதா ?

(2) பண்டமாற்று முறை நன்று ? தற்காலப் பணப் பழக்கமுறை நன்று ?

(3) தனி மனிதன் சேமிப்பு நன்று ? அரசாங்கத்திடம் சேமிப்பு நன்று ?

II கீழ்க்காணும் தலைப்புகள் பற்றி உரையாடல்கள் எழுதுக :—

(1) ஐந்தாண்டுத் திட்டங்களும் பயனும்.

(2) தேசியச் சேமிப்புத் திட்டங்களும் பயனும்.

III "ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை
போகா றகலாக் கடை"

இத் திருக்குறளை அடியொற்றி ஒரு கட்டுரை வரைக.

IV "சிக்கன வாழ்வு சீரான வாழ்வு" என்பது பற்றி ஒரு விளக்கக் கட்டுரை வரைக.

V சிக்கன வாழ்க்கை பற்றிய பழமொழிகளையும் ஆன்ருேர் வாக்கியங் களையும் தொகுத்தெழுதுக.

# 12. வள்ளல் ஆய் – அண்டிரன்

[வித்துவான் சிவ. குப்புசாமிப் பிள்ளை]

## (நாடகம்)

### இடம்–1 காட்சி–2

**இடம் :** கொங்கு வேந்தனது அவைக்களம்

**காலம் :** முற்பகல்

**உறுப்பினர் :** கொங்கு வேந்தன், பெருங்குடிலன், நல்லாயன், வீரநாதன், வச்சிர முடியான்.

**கொங்கு வேந்தன் தனது படையெடுப்பைப் பற்றி அமைச்சர், படைத்தலைவர் இவருடன் ஆய்தல்**

**கொங்கு வேந்தன் :** (அமைச்சரை நோக்கி) பெருங் குடில, எம் உள்ளம் ஆய்நாட்டுப் படையெடுப்பில் ஆழ்ந்து கவல்கின்றது. ஆய்மன்னன் அண்டிரன் தன் இளமை தொட்டுத் தக்கவரை அடுத்து, கல்வி கேள்வி களில் சிறந்து, உலகியல் முறைகளையும் போரியல் நுணுக் கங்களையும் செவ்வனே உணர்ந்துள்ளானும்! மேலும் அவன் என்றும் கற்றவர் புடைசூழ இருத்தலோடு, எவ ரும் எளிதில் கைக்கொள்ள முடியாதவாறு தனது அர சிருக்கையை நால்வகை அரணும் வாய்ந்த இடத்தில் அமைத்துள்ளானும்! இதைக் குறித்து நின் கருத்து என்ன ?

**பெருங்குடிலன் :** கொங்கின் கோவே, தாங்கள் கவலைதீர்க. நேற்றுத்தான் நம் ஒற்றரின் வாயிலாக அவன் நிலைகள் பலவும் உணர்ந்தேன். ஆய் அண்டிரனுக்குப் பொதியம் முழுவதும் கூட உரியதன்று. அவ்வரையின் ஒரு பாலுள்ள கவிரம் என்ற சிறு மலையும் அதைச் சார்ந்த நிலனும் நாடுமே அவனுக்குரியனவாம். மேலும் அண்டி ரனது அரசிருக்கையாகிய ஆய்குடி தக்க அரண்களும் படைகளும் உடையதேயாயினும், கூற்று மஞ்சக் கொடுஞ் சமர் புரியும் நம் படையின் முன் அவை யாவும் நீரால் அவியுறும் நெருப்புப் போல் அழிந்து ஒழியும்.

**நல்லாயன் :** அரசர் பெரும, நம் முதலமைச்சர் மொழிந்தன யாவும் இனியனவே. எனினும் எதையும் நாம் நன்கு எண்ணித் துணிதல் முறையாகும். போரிடத் துணியுமுன் நாம் நமது பொருள் வலி, படை வலி, துணை வலி இவற்றை நம் மாற்றான் பெற்றுள்ளவற்றோடு ஒத்து நோக்கவேண்டும். நாம் பெற்றவை மாற்றானுக்குரியவற்றினும் மிகுதியா யிருக்குமாயின், போருக்கெழுதல் அறிவுடைமையாகும். நேற்று இவண் போந்த ஒற்றனை யானும் சிறிது உசாவ நேர்ந்தது. அவன் கூறியவற்றுள் ஒரு சில என்னை மிகவும் அச்சுறுத்தின. ஆய்மன்னன் தென் பாண்டிய நாட்டின் ஒரு பகுதிக்கே தலைவன். தாங்கள் அந்நாட்டினும் நான்கு மடங்கு பரந்துள்ள இக் கொங்கு நாட்டின் இறைவர் என்பதில் ஐயமின்று. எனினும் நிலப்பரப்பு மட்டும் வெற்றிக்குப் பற்றுக்கோடாகாது. ஆய்நாடு நில அளவில் சுருங்கியதாயினும் பொருள் நிலை, படைத்திறன் இவற்றில் நம் நாட்டினும் மிக்கதென்பது வெள்ளிடை மலையென விளங்குகின்றது. இன்னும் வேள் ஆய் தன்னைப் பாடி வருவோருக்கு யானைகளை மற்றைப் பொருள்களினும் மிகுத்து வழங்குகின்றான் என்ற செய்தி யொன்றே அவன் நாட்டின் களிற்றுப் பெருக்கை உணர்த்துவதனால் அவன் வலிய யானைப்படையுடையவன் என்பது உய்த்துணரலாகும். ஆதலால், தாங்கள் எளியேனது புல்லுரையைச் சிறிது உளங்கொண்டு உன்ன வேண்டும்.

**பெருங்குடிலன் :** (அசட்டுச் சிரிப்புடன்) பெரும, இந்நல்லாயன் என்றும் முற்போக்கின் முட்டுக்கட்டை; ஆக்கத்திற்குரிய அறிவெழுச்சி அற்றவன்; ஆய்நாட்டுச் சிறந்த யானைப் படையும் ஏனைய படையும் நம் கொங்குக் கொடும்படைமுன் என்னவாகும் என்பதை இவன் சிறிதும் ஓர்ந்திலன். தாங்கள் ஆணை தரின் நம் படைத் தலைவன் வீரநாதனை ஈண்டு அழைக்கின்றேன். அவன் வாயிலாக நம் படையின் நிலைமையைத் தாங்கள் எளிதில் உணரலாகும்.

**கொங்குவேந்தன் :** நன்று முதலமைச்சரே. நம்

துணையமைச்சர் நல்லாயனுர் சற்று வேகமற்றவர்தாம். அவரது கருத்து ஈண்டுற்ற செயலுக்குப் பொருந்தாது என்பதே எமது துணிபு. நீவிர் அவ் வீரநாதனை இவண் விரைவிற் கொணர்க.

**பெருங்குடிலன் :** இறைவ, இதோ அழைக்கின் றேன். (பணியாளனை நோக்கி) காவல, நீ சென்று நம் தானைத் தலைவர் வீரநாதனை இங்குக் கடிதில் அழைத்து வா.

**பணியாளன் :** (வணங்கி) தங்கள் திருவுளப்படியே. (ஓடுகிருன்).

**வீரநாதன் :** (வணக்கத்துடன்) கொங்குப் பெரு வேந்தே, எளியேன் வணக்கம் தங்கள் திருவடிக்குரிய தாகும். அடியேனைத் தாங்கள் கருதிய தெதற்கோ, அறிகிலேன். பொறுத்தருளுக.

**கொங்குவேந்தன் :** வீரநாத, நம் படையெடுப்பின் ஏற்பாடு எவ்வாறுள்ளது? ஒரு கணமும் வீண் போக் காது நம் படைவலியைப் பெருக்கக் கருதினேமே! நம் பொரு படைகள் யாவும் இப்போது செவ்விதின் அணி வகுக்கப் பெற்றுள்ளனவா?

**வீரநாதன் :** பெரும, இதில் ஏன் தங்கட்கு ஐயம்? வீரநாதன் இருக்குமளவும் காலம் வீணுகுமா? நம் நாற் படைகளும் தாங்கள் இதுபோது கருதின், உழுந்து கண் ணுடியில் உருளுமுன் இவண் கூடும். இங்கு நிற்கும் நம் அணித்தலைவன் வச்சிரமுடியான் நம் படைகளுக்கு ஓயாமல் அல்லும் பகலும் அளித்திருக்கும் பயிற்சி சொல் லுந் தரத்ததன்று. சுருங்கக் கூறின், நம் படையின் கிளர்ச்சி கண்டு முடியுடை மூவேந்தருள் ஒருவராய சேர மானே தளர்ச்சியுற்ருர் எனில், இக்குறுநிலக் கிழவனுகிய ஆய் எம்மாத்திரமாவான்?

**பெருங்குடிலன் :** வீரநாத, நன்று கழறினுய். (மன்னனை நோக்கி) பெரும, இப்போதாயினும் தங்கள் ஐயப்பாடு தெளிவுறலாகுமென்று நம்புகிறேன். நம் படைத் தலைவன் வீரநாதனும் அணித் தலைவன் வச்சிர முடியானும் ஒரு படைக்குத் தலைமை பூண்டால் வெற்றி

யும் புகழும் வேறு எங்கேதான் செல்லுதற்கியலும்? பெரும, நம் வச்சிரமுடியானின் வாய்மொழிக்கும் தாங்கள் அருளுடன் செவிசாய்த்திடுக.

**வச்சிரமுடியான்** : கொங்குவளநாட்டின் கோவே, எளியேன் அடி பணிகின்றேன். நம் நாற் படைகளும் தத்தம் நெறியில் குறைவிலாது பணியாற்ற அடியேன் இயன்ற வரையில் பயிற்சியளித்துள்ளேன். ஒவ்வொரு படையும் நம் நாட்டின் உயர்வுக்கும், தங்களது தகைமைக்கும், நம் குடிமக்களது வாழ்விற்கும் எத்தகைய குறைவும் வாராத வகையில், முன்வைத்த காலைப் பின்வைத்தலின்றிக் கடுஞ்சமர் புரியும் பேராற்றல் வாய்ந்தது. நம் காலாட் படைஞர் நான்கு திசைகளிலும் பருந்துகள் வட்டமிடுமாறு புலால் மணக்குங் கொடிய நெடிய வேற்படையைக் கையில் தாங்கியுளர். எமனது சிவந்த நாக்குப்போல நாளும் பகைவரது குருதியைக் குடிக்கும் வேட்கை தணியாது வெறிகொண்டுள்ள உடைவாளை அவர்கள் உறைகளிலிட்டு அசைக்கின்றனர்; காற்றினும் கடுகிச் செல்வனவும் காலன் பற்களிலும் கூரியனவுமாய அம்புகளை மிகுதியாகத் தங்கள் தூணிகளில் நிரப்பியுளர். அன்னார் தம் வல்வில்லின் நாணை இழுத்து இடியேறு போன்ற பேரொலியை எழுப்பி ஆர்ப்பரிக்கின்றனர். நம் குதிரைகள் யாவும் தம் இரும்புக் கடிவாளங்களைப் பற்களால் நெறித்துக்கொண்டு, கரிய குளம்புகளால் நிலத்தை உதைத்துப் புழுதியெழுப்பி, தலையசைத்துப் போருக்கு ஆயத்தமாயுள்ளன. முகிற் கூட்டம் போன்ற நம் யானைகள் தத்தம் நிழலையே பகைவராகக் கருதி, தமது புலால் வீசும் வளைந்த பிறைமதி போன்ற கொம்புகளை அசைத்துக் கொண்டு சினந்து நிற்கின்றன. பண்டொரு நாள் உக்கிரபாண்டியனுக்கு ஆற்றாது புறங்காட்டி ஓடி இந்திரனது கையில் சிக்கிக் கொள்ளாது, கடலுக்குள் மறைந்து நின்ற உயரிய மைந்நாகமலை எழுந்து வந்ததுபோல நம் அழகிய உயர்ந்த தேர்கள் தங்கள் பரந்த சிறகுகளை விரித்து, 'வீரப் பெருமக்களே! விரைவில் வாருங்கள். இம்மென்று கூறுவதற்குள் யாம் இந்திரனுலகம் செல்வோம்,'

எனக் கூறுவன போலத் தம் கொடிகளை அசைத்து நிற்கின்றன. பெரும, இவையாவும் தாங்கள் நேரிற் காணின் நன்கு விளங்கும்.

**கொங்குவேந்தன் :** போர்ப்படைத்தலைவரே! நாற்படையாளரே ! யாம் பெரிதும் மகிழ்ந்தோம். நும்போன்ற வீரர்களைப் பெற்ற எனக்கு இனி என்ன குறை உளது? நீங்கள் யாவரும் பெரும் பேறுடையவர்கள். உங்கள் கொங்குதேவி இக் குரை கடல்சூழ் ஞாலத்தைத் தன் ஒரு குடைக்கீழ் ஆளுதற்பொருட்டு, கொங்கு மக்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் செருக்களத்தில் கண்கள் தீப் பொறி சிதற, புருவங்கள் நெறிந்தேற, மீசைகள் துடிக்க, பற்கள் பொடிபடக் கடுஞ் சினத் தீயை யெழுப்பி வெம் போர் புரிவீர்களாதலால் நும்மினும் பெரும்புகழ் படைத்தார் யாவருளர்? நீங்களே கொங்குதேவி யீன்ற வீரக் குழந்தைகளாவீர் ! உங்கள் நலங் கருதி அவள் பவானியாகவும் அமராவதியாகவும் நம் நாட்டிடையே அசைந்து நடந்து, நமக்கு நல்லமுது சுரக்கின்ருள். கொங்குப் பெரும் படைத் தலைவரே ! உங்கள் வீரம் விளங்குக ! புகழ் பெருகுக !

**வீரநாதன் :** வாழிய பெரும! வணக்கம். தங்களது உப்பும் சோறும் உண்டு வளர்ந்த எங்களது உடல் தங்கட்கு உயர்வும் வாழ்வும் நிலைபெறத் தொழிற்படா தொழியின் அதனினும் கடைப்பட்ட வேறு ஒரு பொருளைக் காணக்கூடுமோ ? மேலும், இவ்வுடலுடன் பொருந்திய உயிர் மறுமையில் நன்றி கொன்றவர்க்குரிய துன்பத்துள் மூழ்கி உய்தியின்றி வாடுமே! நாங்கள் போர்முகத்துப் பெறும் புண்கள் அனைத்தும் புகழ் விளங்குங் கண்களெனக் கொள்வோம். போர்க்குறி தாங்கிய காயமே புகழ் மணக்குங் காயம் என்பதை எங்களில் ஒவ்வொருவரும் உணர்ந்து செருக்களத்தில் பணி செய்வோம். பெரும! புண்படாது உலகில் புகழ் பெறலாகுமோ? உலகத்தில் ஒவ்வொரு கணப்பொழுதிலும் எத்தனையோ நூருயிரங்கோடிப் பிறவிகள் தோன்றி மறைந்து ஒழிகின்றனவே ! அவை யாவும் கருதுதற்கு உரியனவோ !

ஆதலால், தங்கள் படைகள் யாவும் தம் உயிர்க்கண் அன்பின்றி, தாய் நாட்டின் பெருமைக்காக வருந்தி உழைத்து, அதனுல் பெறும் பேற்றையே மகிழ்ந்து போற் றுஞ் சிறப்புடையனவாகும். தலைவ! இதுபற்றி ஐயம் இங்கு எவர்க்கும் இனி வேண்டுவதில்லை. தாங்கள் அருள் கூர்ந்து இதுபோது நம் பாடிநகர்க்கு எழுந்தருளின் இவை யாவற்றையும் எளிதில் அறியலாகும்.

**பெருங்குடிலன் :** மன்னர் பெரும! அதுவே நன்று. தாங்கள் திருவுளம் இசையின் இன்றுமாலை அவண் சென்று நம் படைகளைப் பார்வையிடலாம்.

**கொங்கு வேந்தன் :** நன்று குடில! அதற்கு வேண் டுவன யாவும் இன்னே புரிக; இன்று மாலை யாம் படை யணி காண்போம்.

**பெருங்குடிலன் :** வீரநாத! நம் மன்னர் பெருந் தகை பாடிநகர்ச் சோதனைக்கு வருமுன்னர் வேண்டுவன யாவும் சிறப்பாக அமைக்கக் கடவீர். விரைந்து சென்று ஆவன புரிக.

**வீரநாதன் :** அவ்வாறே பெரும! (கும்பிட்டு நின்று) எளியேனுக்கு விடையருள வேண்டும்.

**பெருங்குடிலன் :** சென்று வருக.

**வீரநாதன் :** வணக்கம் (பணிந்து செல்கிறுன்).

## குறிப்புரை

வித்துவான் திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளையவர்கள் கரந்தைத் தமிழ்ச்சங்க நடுநிலைப் பள்ளியில் முதலில் தலைமையாசிரியராயிருந்தார் கள். பின்னர் ஆம்பூர், ஈரோடு உயர்நிலைப்பள்ளிகளில் ஆசிரியரா யிருந்து தமிழ்த்தொண்டு புரிந்தார்கள். இவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்க இதழாகிய 'தமிழ்ப் பொழில்' வாயிலாய்ப் பல சிறந்த தண்டமிழ் நாடகப் பகுதிகளை எழுதியுள்ளார்கள். அவைகளில் ஒன்றே இப்பாடப் பகுதியாகும். இப்பகுதியிலிருந்து ஆசிரியர் அவர்களின் தமிழ்ப்பற்று, கடவுட்பற்று, தண்டமிழில் மேலாந்தரத்தில் எழுதும் ஆற்றல் முதலிய பல பண்புகளையும் பரக்கக் காணலாம்.

## அருஞ்சொற் பொருள்

கூற்று - யமன். எண்ணி - ஆராய்ந்து. மாற்றுன் - பகைவன். உசாவ-விசாரிக்க. பற்றுக்கோடு - சார்பு. உன்ன-நினைக்க. ஓர்ந்திலன் -

ஆராய்ந்திலன். தூணி - அம்புப் புட்டில். ஆர்ப்பரிக்கின்றனர் - பேரொலி செய்கின்றனர். இன்னே - இப்பொழுதே.

## வினுக்கள்

1. கொங்குவேந்தன் ஆய்நாட்டின்மீது படையெடுப்புப் பற்றி முதலில் கொண்ட கவலே யாது?
2. பெருங்குடிலன் அரசனுக்கு எவ்வாறு உறுதி கூறினுன்?
3. நல்லாயன் கூறிய அறிவுரையினை விளக்குக.
4. பெருங்குடிலன் நல்லாயன் கூற்றை எவ்வாறு மறுத்தான்?
5. வீரநாதன் படையெடுப்பின் ஏற்பாடு பற்றிக் கூறியவை யாவை?
6. வச்சிரமுடியான் தங்கள் படைகளின் ஆற்றலே எவ்வாறு விளக்கினுன்?
7. கொங்குவேந்தன் எவ்வாறு தன் வீரர்களுக்கு வீரவுரை பகர்ந்தான்?
8. வீரநாதன் கொங்குவேந்தனுக்குக் கூறிய நன்றியுரையை விளக்குக.
9. "அவரது கருத்து ஈண்டுற்ற செயலுக்குப் பொருந்தாது"— இடஞ்சுட்டி விளக்குக.

## பயிற்சி

1. கொங்குவேந்தன் படைப்பெருமை பற்றிக் கூறியதைக் கொண்டு விளக்கி ஒரு கட்டுரை வரைக.
2. இங்கு வந்துள்ள நாடகப் பகுதி போன்று ஏதாவது ஒரு கதைப் பகுதியை எடுத்துக்கொண்டு நாடகமாக எழுதிப் பழகுங்கள். உங்கள் மாணவர் மன்ற விழா, பள்ளி ஆண்டு விழா முதலியவற்றில் நடித்துக் காட்டுங்கள்.
3. நல்லாயன், பெருங்குடிலன் ஆகிய இரு அமைச்சர்களுள் யார் சிறந்தவர்? காரணங்களேக் காட்டி விளக்குக.
4. வள்ளல் ஆய் அண்டிரன் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். அவனைப்பற்றி ஒரு கட்டுரை விளக்கி எழுதுங்கள்.

# 13. குடும்பக் கலை

[திருமதி. தே. தியாகராாசன், எம். ஏ., தமிழ்ப் பேராசிரியர்,
டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை.]

மனிதன் ஒரு சமூகப் பிராணி. அவனால் தனித்து வாழ முடியாது. எனவே அவன் மணம் செய்து கொண்டு, குழந்தைகளைப் பெற்றுக் குடும்பத்தோடு வாழ்கிறான். இப்படிப்பட்ட குடும்பத்தில் வீட்டை நன்றாக நடத்தவேண்டிய பொறுப்பு குடும்பத் தலைவிக்கு ஏற்படுகிறது. வீட்டின் தலைவன் தன் நேரத்தில் பெரும் பகுதியை வெளியே, தன் அலுவலிலே கழித்துப் பொருளீட்டுகிறான். மனைவி அவன் தரும் பொருளைக் கொண்டு வீட்டை நடத்த வேண்டும்.

இதுதான் தொன்றுதொட்டு நடந்து வருகிறதே, இதிலே புதிதாக என்ன இருக்கிறது, குடும்பக் கலை என்று அதற்குப் பெயர் ஏன், என்றெல்லாம் வினாக்கள் எழலாம். வீடுதான் வாழ்க்கைக்கு அடிப்படை. குடும்பம் தான் ஒருவனது நோக்கங்களுக்கு ஊக்க மூட்டும் தன்மை. எனவே வீட்டில் மகிழ்ச்சி நிலவக் குடும்பக்கலை அல்லது மனையியல் பற்றியும் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டும்.

உண்ணும் உணவு, உடுக்கும் உடை, தங்கும் வீடு இவை பற்றிய தெளிவான அறிவு நமக்குக் கொஞ்சம் வேண்டும். இது மிகவும் தேவைப்பட்டது. அதற்குமேல் வீடு, குழந்தை வளர்ப்பு, சமூக உறவுகள், வீட்டை அழகு படுத்தும் முறை முதலியனவும் தெரிதல் வேண்டும். முக்கியமாகப் பெண்களுக்கு இவை தெரியவேண்டும்.

முதலில் உணவுபற்றிப் பார்ப்போம். சிற்சில வீடுகள் தவிர, பெரும்பாலான வீடுகளில் சமையற் கலை பெண்களுக்கே உரித்தாயிருக்கிறது. இது அவர்கள் குலத் தொழில்; அதை அவர்கள் கல்லாமலேயே, பாதி வந்து விடும். மீதி எந்தப் பாதியை அவர்கள் கற்க

வேண்டும்? எதையும் பகுத்தறிவுக் கண்ணேடு இக்காலம் நோக்குகிறது. நம் மூதாதையர் கைக்கொண்ட நோன்பு, அல்லது பட்டினி கிடக்கும் வழக்கம் தற்போது சிலருக்கு மூடப் பழக்கமாக இருக்கிறது. அது சரியா? இதன் நோக்கமென்ன?

எப்பொழுதும் குடலுக்கும், செரிக்க வைக்கும் கருவி கட்கும் வேலைதரல் வேண்டாம். அவற்றிற்கும் ஓய்வு வேண்டும். எனவே நோன்பு வேண்டும். மேலும் இந்த நோன்பு மூலம் நாவடக்கமும், அதன்பின் படிப்படியாய் மனவடக்கமும் பெறமுடியும் என்ற கருத்துக்கள் தான் இப்பட்டினி கிடத்தலுக்கு அடிப்படை.

இனிச் சாப்பிடும் உணவைத் தயாரித்தல் எத்தனை வகை? அவை வறுத்தல், பொரித்தல், வாட்டல், வதக்கல், அவித்தல், புழுங்கவைத்தல் முதலியன. மேற்கூறிய முறைகளைக் கையாளும் போது உணவுப் பொருட்களின் சத்துக்கள் குறையாமல் காக்க வேண்டும். தேவையாஞல் சிலவற்றைச் சமைக்காமல் உயிர்ச் சத்து 'சி' வீணு காமல் உண்ணவேண்டும். வேகவைக்கும்போது சோடா உப்பு முதலியன சேர்க்கக் கூடாது. சோற்றில் கஞ்சி வடிக்காமல் பொங்கி உண்ண வேண்டும்.

பொருட்களைக் கெடாமல் பல நாட்கள் வைக்க ஊறு காய், 'ஜாம்,' 'ஜெல்லி,' போன்ற பக்குவங்களைக் கையாளலாம். மேலும் சமைப்பதற்குப் பயன்படுத்தும் அடுப்புகளும் பல. விறகு, கரி, மண்ணெண்ணெய், மின்சாரம் இவற்றைக் கொண்டு பலவகை அடுப்புகளை வைத்துக் கொள்ளலாம். செலவிலும் அதிக வேறுபாடிருக் காது. நேரமும் மிச்சமாகும்.

இனி ஆடையைப் பற்றி எடுத்துக் கொண்டால் பஞ்சு, பட்டு, உரோம ஆடைகள் எனப் பலவுண்டு. தற் போது போலிப் பட்டுக்களும், செயற்கைப்பட்டுக்களும் ஏராளம். இவற்றுள் கோடை, மழை, பனி முதலிய காலங் கட்கும், குழந்தை, இளைஞர், முதியோர் ஆகிய பருவத் தார்கட்கும் உரியன இவை என்று தேர்ந்தெடுக்க வேண்டும்.

விலைமிகுதியா குறைவா என்பது கூடப் பெரிதில்லை. எது அவருக்குப் பொருந்துகிறது, எந்த நிற உடை ஏற்றது, எப்படித் தைத்து அணிவித்தால் மிகக் கவர்ச்சியாக இருக்கும், என்பனவெல்லாம் கவனிக்க வேண்டும். இங்குத் தையல், வண்ணச் சேர்க்கை முதலிய கலைகட்கு இடமளிக்கப்படுகிறது.

அடுத்தபடியாக ஆடைகளைப் பேணும் விதம் தெரிய வேண்டும். எப்படித் துவைப்பது, உலர்த்துவது, பின் எப்படிப் பெட்டி போட்டு வைப்பது, துணிகட்குப் பூச்சி வாராமல் தடுப்பதெப்படி என்றெல்லாம் தெரிதல் வேண்டும். கந்தையானாலும் கசக்கி யல்லவா கட்ட வேண்டும்? கிழிசல்களைத் தைத்துக் கட்ட வேண்டும். இவற்றைக் கலையாகக் கற்க வேண்டும்.

இனி, தங்கும் வீட்டையெடுப்போம். வீடு காற்றோட்டம் உள்ளதாக வெளிச்சம் வரத்தக்கதாக அமைய வேண்டும். தரையும், சுவர்களும் கீறியோ வெடித்தோ இராமல் இருக்க வேண்டும். கீறலோ வெடிப்போயிருந்தால் பூச்சிகள் அங்குத் தங்கும். பொருளாதார நிலைக்கேற்ப மேசை நாற்காலிகள் வேண்டும். திரைகளும் தொங்கவிட இயலுமேல் நலமே. வீட்டை அலங்கரித்தலே ஒரு கலை. வீட்டையும் சுற்றுப்புறத்தையும் தூயதாக வைத்துக்கொள்ள வேண்டும்.

குழந்தைகளை வளர்த்தலும் ஒரு கலையே. அவர்களைப் பேணி வளர்க்க வேண்டும். நல்ல உணவளிக்க வேண்டும். நம் நாட்டில் குழந்தைகளைப்பற்றி அதிக அக்கறை யெடுப்பதில்லை. அவர்கள் வசதிபற்றிக் கவலை கொள்வதில்லை. அவர்கள் உணர்ச்சிகட்கு மதிப்புத் தருவதில்லை. ஆனால் மேனாடுகளில் அப்படியில்லை. சிறுவர் எண்ணங்கட்கும், உணர்ச்சிகட்கும் மதிப்புக் கொடுப்பார்கள். அந்தப் பிழையை இப்போது நாம் உணருகிறோம்.

சிறுவர்கட்கெனச் சிறிய மேசை, நாற்காலிகள், விளையாட்டுப் பொருள்கள், சிறுவர்க்கான திங்கள், வார வெளியீடுகள், இதழ்கள் முதலியன வெளியிடப்படுகின்

றன. அவற்றை அவர்கட்கு அளிக்கிறோம். நல்ல சூழ்நிலையில் குழந்தையை வளர்த்தால்தான் நல்ல பண்பு பெற முடியும். வெறும் பணத்தாலோ, கல்வியாலோ கூட வாங்கிவிட முடியாது நற்பண்புகளை. எனவே குழந்தைகளுக்கு மகிழ்ச்சியும் இன்பமும் வீட்டிலிருக்க வேண்டும். மனிதனை ஆக்கவும் அழிக்கவும் சூழ்நிலை பெருங் காரணம் என்பதை மறக்கக்கூடாது.

> ' ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
> சான்றோன் எனக்கேட்ட தாய் '

என்றார் வள்ளுவரும். மகன் சான்றோனாகப் பெற்றோரும் சூழ்நிலையும் உதவவேண்டுமல்லவா ?

குழந்தைக்கோ, அன்றி வீட்டில் ஒருவர்க்கோ உடல் நலமில்லாவிடில் அவர்கட்குப் படுக்கை தட்டிவிரித்தல், குளிப்பாட்டல், நோயாளிக்கேற்ற உணவு சமைத்தல், நோயாளி அறையைத் தூய்மையாகவும் அழகாகவும் எப்படி வைத்தல் என்றெல்லாம் ஒரு பெண் கட்டாயம் அறியவேண்டும். இதுவும் குடும்பக் கலையைச் சார்ந்ததே.

இவற்றையெல்லாம் கவனித்துக் காலம் மாறும்போது அறிவிற்கேற்ற ஒழுக்கங்குன்றா முறையில் ஒவ்வொருவரும் வீட்டையும், புகழையும் காக்கவேண்டும். அப்போது சமூகம் புதுமை யடையும். வீடு சிறக்கச் சமூகமும், பின் சிற்றூரும், பின் பேரூரும், அதன் பின் நாடுமே சிறப்புறும் என்பதில் ஐயமென்ன ? ஆகவே, நாட்டின் நலம் குடும்பக் கலையினைப் பெருமளவிற்குச் சார்ந்திருக்கிறது. வீடு உயரக் குடும்பம் உயரும். குடும்பம் உயர நாடு உயரும்.

## குறிப்புரை

திருமதி. தே. தியாகராசன் அவர்கள் மதுரை டோக் பெருமாட்டி கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்கள். இவர் தமிழகப் புலவர் குழுவில் ஓர் உறுப்பினர் ஆவார். இவர் மாணவியர் இந்தியா, இலங்கை, மலேயா முதலிய தேசங்களிலும் பணியாற்றி வருகின்றனர். சேவா சமாஜ மதுரைக்கிளை, கூட்டுறவு இயக்கங்கள் முதலியவற்றிலும் பங்கு கொண்டவர். எழுதுவதிலும், பேசுவதிலும் தலைசிறந்தவர்.

## அருஞ்சொற் பொருள்

அலுவல் - தொழில். நாவடக்கம் - பேச்சில் கட்டுப்பாடு. தூய தாக - சுத்தமாக. பண்பு - இயல்பு. பேரூர் - நகரம்.

## வினாக்கள்

1. குடும்பத்தலைவி கருத்திற் கொள்ள வேண்டுவன யாவை?
2. நம் மூதாதையர் மேற்கொண்ட நோன்புகள் எவ்வாறு உடலுக்கு நலம் செய்யக் கூடியன?
3. உணவு சமைத்தலில் குடும்பத்தலைவி கவனிக்க வேண்டுவன யாவை?
4. ஆடைகளைப் பேணுதல் எவ்வாறு?
5. குழந்தைகளை எவ்வாறு பராமரித்தல் வேண்டும்?

# 14. சமுதாய நலத்திட்டம்

[வித்துவான் மு. இராமகிருட்டினன், எம்.ஏ., எல்.டி., மதுரை]

நிலமுடையோர் யாவரும் நெல்லுடையோர் என்று கூறிவிட முடியாது. திருந்தாத வயலும், பாசனமில்லாத பேராறும், உழைப்பில்லாத மக்களும் இருந்தும் பயனில்லை. ஒரு நாட்டின் இயற்கை வளமும் மக்களாற்றலும் எத்துணைப்பெருக்கமுள்ளனவாயிருப்பினும், அவை தக்க முறையிலே பயன்படுத்தப்பட்டாலன்றி அந்தநாடு உண்மையிலேயே செழிப்புற்று விளங்க வியலாது. நம் இந்தியப் பெருநிலம் இயற்கை வளமும் மக்களாற்றலும் ஒருங்கே அமையப் பெற்றது; எனினும், அது பழங்காலந் தொட்டுப் பல்வேறு அரசின் கீழ்ப் பிளவுண்டு கிடந்து வெவ்வேறு நாடுகளாகக் கருதப்பட்டு வந்தது. ஆங்கில ஆட்சியின் கீழ் ஒரே நாடாக அமைக்கப்பட்டதெனினும், அது அந்நிய ஆட்சியாகையால், அரசியலில் தமக்குள்ள உரிமையையும், பொறுப்பையும் மக்கள் உணர வாய்ப்பில்லாதிருந்தனர். உலக அரசியல் சூழ்நிலையில் ஏற்பட்ட மாறுபாட்டாலும், நம்நாட்டு அரசியல் தொண்டர்களின் தன்னலங் கருதாத உழைப்பின் பயனுகவும் நாம் விடுதலை பெற்ருேம். அதன் பின்னரே நமக்கு நாட்டு நலத்தில் உரிமையும் பொறுப்பும் ஏற்படலாயின. நம் நாடு வறுமை நீங்கிச் செழித்தோங்க வேண்டுமாயின் நமது இயற்கை வளங்களையும் மக்களாற்றலையும் நல்ல முறையில் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். இந்நோக்கத்துடனேயே நம் அரசியலார் ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்துள்ளனர். சமுதாய நலத்திட்டமும் அவற்றின் ஒரு பகுதியேயாகும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் **சமுதாய நலத்திட்டம்** (Community Development) ஒரு செயன் முறையாகவும், **தேசீய நலப்பரப்புச் சேவைத் திட்டம்** (National Extension Service) ஒரு கருவியாகவும் ஒன்ருேடொன்று பொருந்த அமைக்கப்பட்டன. இத்திட்டங்

களின் முதல் நோக்கம் நாட்டுப்புறத்தின் உறவியல் வாழ்க்கையையும் பொருளியல் வாழ்க்கையையும் வளர்ச்சி முறையில் மாற்றியமைப்பதேயாகும். இவ்விரு திட்டங்களின் செயன்முறைப்பங்காக எடுத்துக் கொள்ளப்படுவதே சமுதாய நல வளர்ச்சி வட்டாரம்( Block Development) எனப்படும். ஒவ்வொரு சமுதாய நலவளர்ச்சி வட்டாரமும் 60,000 முதல் 70,000 வரையுள்ள மக்கட்டொகையைக் கொண்ட, 388 முதல் 440 சதுர கிலோ மீட்டர் அளவிற் பரந்து கிடக்கும், சராசரி 100 சிற்றூர்களைத் தன்னகத்தே கொண்டதாகும். இத்திட்டமானது 1952ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் தொடங்கி வைக்கப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 300 சமுதாய வளர்ச்சி வட்டாரங்களும், 900 தேசீயப் பரப்புச் சேவை வட்டாரங்களும் எடுத்துக் கொள்ளப்பட்டன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி 1961ஆம் ஆண்டிறுதிக்குள் 3,800 தேசீயப் பரப்புச் சேவை வட்டாரங்களும், 1,120 சமுதாய நலவளர்ச்சி வட்டாரங்களும் இயக்கம் பெற்றன. பின் மேற்கொண்ட ஐந்தாண்டுத் திட்டங்களிலும் சமுதாய நலத்திட்டத்திற்குச் சிறந்த இடமுண்டு.

சென்னை மாநிலத்தைப் பொறுத்த வரையில் இத்திட்டமானது பெருமளவில் வெற்றிபெற்று வருகிறது. இவ்வுண்மை, நமது மாநிலத்தின் நாட்டுப்புறங்கள் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னிருந்த நிலைமையையும் அவை இன்றுள்ள நிலைமையையும் நடுநிலையோடு சீர்தூக்கிப் பார்ப்பவர்க்கு இனிது புலனாகும். முதலாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் இந்த மாநிலத்தில் 4 சமுதாய நலத் திட்டங்களும், 24 சமுதாயநல வளர்ச்சி வட்டாரங்களும், 34 தேசீய நலப் பரப்புச் சேவை வட்டாரங்களும் இயக்கம் பெற்றுள்ளன. இந்த வட்டாரங்களின் பரப்பு மொத்தம் 38,220 சதுர கிலோ மீட்டர்கள். அதில் மொத்தம் 90 லட்சம் மக்கட்டொகையையுடைய 4,731 சிற்றூர்கள் அடங்கியுள்ளன.

மேற்கூறிய திட்டங்களால் இதுவரை விளைந்த பயன்

கள் யாவை என்று நீங்கள் வினவலாம்; ஆயின், அவற்றை ஈண்டுச் சுருக்கமாகக் காண்போம்.

வேளாண்மை நம் நாட்டின் பொருளியல் வாழ்விற்கு முதுகெலும்பென அமைந்திருப்பது யாவரும் அறிந்ததே. இஃது எத்துணைச் சிறப்புற நடைபெறுகின்றதோ அத்துணைச் சிறப்புடையதாகவே நமது நாட்டின் நன்னிலையும் அமையும். இக் கருத்தை உட்கொண்டே சமுதாய நலத்திட்டம் பயிர்த்தொழில் முன்னேற்றத்தை ஒரு சிறந்த கூறுகக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒவ்வொரு பயிர்த் தொழிற் செயன் முறையாளரை (Agricultural Demonstrator) இணைத்துள்ளனர். இவர்கள் பயிர்த் தொழிலுக்கு வேண்டிய ஆயிரக்கணக்கான ஏர், மண்வெட்டி முதலிய உழவுக் கருவிகளை வழங்குகின்றனர். அத்துடன் இப்புதுமுறைக் கருவிகளை எவ்வாறு பயன்படுத்தவேண்டுமெனச் செயன்முறை காட்டும் பண்ணைகளில் குடியானவர்களுக்குப் பயிற்சியளித்தும் வருகின்றனர். பயிர்கள் நன்கு வளர்ந்து பெரும்பயனளிக்கும் பொருட்டு இரசாயன உரங்களை வழங்குகின்றனர். சீமை அகத்தி, கொழுஞ்சி, சூரியகாந்திச் செடி போன்றவைகள் பயிரிடப்பட்டுத் தழையுரமாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆங்காங்கே குப்பை எருக்குழிகள் தோண்டிக் குப்பையுரம் சேகரிக்கின்றனர். சிற்றூர் விதைப் பண்ணைகளின் வாயிலாகப் பொறுக்கு விதைகளைப் பெருக்கவும் அவற்றைக் குடியானவர்களுக்குத் தேவைக்கேற்ப வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பற்பலவிடங்களில் பழவகைகளும் காய்கறிகளும் சாகுபடி செய்கின்றனர். இவையன்றிச் சாகுபடியில்லாது கிடந்த நிலங்களில் 13,355 ஹெக்டாருக்கு மேல் தரிசு நிலங்கள் பண்படுத்தப்பட்டுச் சாகுபடி செய்யப்படுகின்றன. பல்லாயிரக்கணக்கான ஹெக்டார் நிலம் புதிதாக நீர்ப்பாசனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

வளர்ச்சி பெற்றுவரும் வேளாண்மைக்கு இன்றியமையாத கால்நடைகள் நல்ல முறையில் பாதுகாக்கப்படவும், இனப் பெருக்கம் செய்யவும், அவற்றுக்குத் தொற்றுநோய்

பரவாமல் தடுப்பு ஊசி போடுதல் முதலியன செய்யவும், விலங்கு மருத்துவர் கால்நடை வளர்ப்பாளர்களுக்குத் தக்க பயிற்சியளிக்கின்றனர்.

மேற்போந்த செயன்முறைகளால் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள நாட்டுப்புறங்களில் விளைவு பெருகியுள்ளது. குடியானவர்கள் தமக்கு வேண்டிய விளைபொருள்களை வைத்துக்கொண்டு எஞ்சியவற்றை விற்பனை செய்ய முன் வருகின்றனர். இவ்வாறு கூலப் பொருள்களை விற்பனை செய்வதற்கும் பயிர்த்தொழிலின் பொருட்டுத் தமக்கு வேண்டும்பொழுது குறைந்த வட்டிக்குப் பணம் பெறுவதற்காகவும் கூட்டுறவு விரிவமைப்பாளர் (Co-operative Extension Officer) கூட்டுறவுக் கழகங்களை அமைத்துதவுகின்றனர். குடியானவர்கள் கூட்டுறவுக் கழகங்களின் வாயிலாகத் தமக்கு வேண்டிய பொருள்களை வாங்கவும் விற்கவும் செய்வதால் பெரும்பயனெய்துவர்; இடைநிலையாளரின் கொள்ளையினின்றும் தப்புவர்; பொருள்களைப் பயன்படுத்தும் பொதுமக்களும் நேர்மையான விலைக்குப் பொருள்களைப் பெறுவர். மேலும், கூட்டுறவுப் பயிர்த்தொழிற் பண்ணைகளமைக்கவும், குடிசைத்தொழில்களை வளர்க்கவும் கூட்டுறவாளர் உதவுகின்றனர். ஆடு, மாடு, கோழி, தேனீ முதலியன வளர்த்தற்கும், கூடை முடைதல், பால் பண்ணை நிறுவுதல், எண்ணெய்ச் செக்காட்டுதல், நூல் நூற்றல், நெசவு நெய்தல் முதலிய தொழில்கள் சிற்றூர்களில் சிறப்புற நடக்கவும் சமுதாய நலத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள கூட்டுறவலுவலர் ஆவன செய்கின்றனர்.

இத்தகைய வளர்ச்சித் திட்டங்கள் வெற்றிபெற வேண்டுமாயின், மக்களுடைய உடல்நலமும், கல்வி நலமும் நன்கு கவனிக்கப்படவேண்டும். இவற்றைக் கருத்துட்கொண்டே ஒவ்வொரு வட்டாரத்திலும், வட்டார மேலவரோடு (Block Development Officer) மருத்துவரும், சமுதாயக் கல்வி விரிவாளரும் (Social Education Extension Officer), திரைப்படங் காட்டுபவரும், கட்டடக் கலைஞரும் (Civil Engineer) இணைக்கப்பட்டுள்ள

னர். நாட்டுப்புறங்களில் சுற்றுப்புறச் சூழ்நிலை முன்னேறுவதற்கெனச் சாக்கடைக் குழிகள் வெட்டுதல், மலவறை கட்டுதல், வடிகால் அமைத்தல் முதலிய வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நோய்வாய்ப்பட்ட சிற்றூர் மக்களைச் சீர்ப்படுத்த மருத்துவர் மருந்து வழங்குகின்றனர். மக்களை அறியாமைப் பிணியினின்றும் விடுவிக்க முதியோர் கல்வி வளர்ச்சி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. சுற்றுச் செலவுச்சுவடி வையங்களால் சுவடிகள் வழங்கப்படுகின்றன. சமுதாயக் கல்வி விரிவாளர்கள் நாட்டுப்புற மக்களின் அறிவை விளக்கம் பெறச் செய்யவும், நல்ல முறையிலே தமது ஓய்வு நேரத்தைச் செலவிடவும் பயிற்சி அளிக்கின்றனர். இத்திட்டத்தை அவர்கள் நன்கு புரிந்து கொள்ளுமாறு திரைப்படங்களும் காட்டப்படுகின்றன. பெண்களின் முன்னேற்றத்தைக் கருதிப் பெண்டிர் கழகங்கள் அமைக்கப்பட்டு அவைகளின் வாயிலாக அவர்களுக்கு இல்லற வாழ்வியற் கல்வியும், குடும்பத்திட்டம் முதலியனவும் கற்பிக்கப்படுகின்றன.

சிற்றூர்களுக்கிடையே போக்குவரத்துச் சாலைகள் அமைத்தல், சிறுசிறு பாலங்கள் கட்டுதல், கிணறு வெட்டுதல் முதலிய வேலைகளைக் கட்டடக்கலைஞரின் மேற்பார்வையின் கீழ்ப் பொதுமக்களே செய்து வருகின்றனர்.

இவற்றையெல்லாம் நோக்கின், நம் நாடு உலகத்தின் சிறந்த நாடுகளில் ஒன்ருகத் திகழ்வதற்குத் தக்க அறிகுறிகள் காட்சியளிக்கின்றன. அரசியலார் எத்துணை முயற்சியோடு திட்டங்களமைத்தாலும் அவை வெற்றி பெறுவது பொது மக்களின் கூட்டுறவையும் திட்ட அலுவலரின் நல்லெண்ணத்தையும் கடமை யுணர்ச்சியையும் பொறுத்ததேயாகும். குடியானவர்களேயன்றித் தேசீயப் பாதுகாப்புப் படை (N. C. C., A. C. C.), சாரணர் (Scouts) முதலிய பள்ளிக் கழகங்களின் வாயிலாகவும், பாரத் சேவக் சமாஜ் முதலிய அகில இந்திய அமைப்புக்களின் வாயிலாகவும் மாணவரும் இளைஞரும் இத்திட்டங்கள் நிறைவேறப் பேருதவி செய்தல் வேண்டும்; அவ்

வாறு செய்தும் வருகின்றனர். 'ஊக்கமுடையவர்களிடத்து ஆக்கம் வழிகேட்டுச் செல்லும்' என்பதற்கிணங்கத் தமிழ்நாட்டு அரசியலாரும், இந்திய யூனியன் அரசியலாரும், பெருமளவிற் பணச் செலவு செய்து அமைத்துள்ள சமுதாய நலத்திட்டங்கள் வெற்றிபெற யாவரும் ஒத்துழைக்க முன்வந்து, தத்தம் கடப்பாட்டினை நிறைவேற்றுவோமாயின் நாடும் நலமுறும்; நாமும் சிறப்பினை எய்துவோம்.

## குறிப்புரை

இக்கட்டுரை ஆசிரியர் திரு. மு. இராம கிருட்டினன் ஆவார். இவர் தற்போது க. நடராச பிள்ளை நினைவு மதுரைப் பிள்ளைமார் சங்கம் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இவர் ஆங்கிலமும் உறவியலும் தமிழும் கற்பித்து வருகிறார். ஆங்கிலக் கவிதைகள் பலவற்றைத் தமிழிலே ஆக்கியுள்ளதோடு, வேறு பல தமிழ்ச் செய்யுட்களும், கட்டுரைகளும் எழுதியுள்ளார். தனித்தமிழ் எழுதுவதில் மிக்க ஆர்வமுடையவர். இசைப் பாட்டுக்களும் பல புனைந்துள்ளார். மாணுக்கர்கள் மகிழ்ந்தேற்குமாறு பாடமோதும் தன்மையுடையவர்.

## அருஞ்சொற் பொருள்

வாய்ப்பில்லாது - தக்க சூழ்நிலை இல்லாது. இயக்கம் பெறும் - செயலாற்றி வரும். கூறுக - பகுதியாக. கால் நடை - ஆடு மாடுகள். கூலப் பொருள் - தானியம். அலுவலர் - அதிகாரி. இடை நிலையாளர் - தரகர். மலவறை - கக்கூசு. சுற்றுச் செலவுச் சுவடிவையம் - வண்டியில் எடுத்துச் செல்லப்படும் நூல் நிலையம். கடப்பாடு - கடமை.

## வினுக்கள்

1. இதுகாறும் நம்நாடு செழிப்புறுமலிருந்தமைக்குக் காரணங்கள் யாவை?

2. ஒவ்வொரு சமுதாய நல வளர்ச்சி வட்டாரத்தின் பரப்பளவும் மக்கட்டொகையும் என்ன?

3. வேளாண்மை முன்னேற்றமடைய, சமுதாய நலத்திட்டம் எவ்வாறு உதவுகிறது?

4. கூட்டுறவுக் கழகங்கள் குடியானவர்கட்கு எவ்விதம் உதவுகின்றன?

5. வளர்ச்சித் திட்டங்கள் வெற்றி பெற உழைக்கும் வெவ்வேறு துறை அலுவலர்கள் யாவர்?

6. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் வெற்றிபெற மக்களின் ஒத்துழைப்பு எவ்வாறு இன்றியமையாதது?

# 15. பழம்பெருந் தீவு (ஆஸ்திரேலியா)

['கவிஞர் அமுதநீலன்' மதுரை]

உலகத்திலேயே பழமையும் பெருமையும் வாய்ந்த தீவு ஆஸ்திரேலியாவேயாகும். நாற்புறத்தும் கடலாற் சூழப்பெற்றதனுல் அதனைத் தீவு என்று அழைப்பது பொருந்துவதேயாயினும், அது 7,704,122 சதுர கி. மீ. பரப்பினையுடையதாய், நம் இந்தியத் துணைப்பெரு நிலத்தினும் ஒன்றரைப் பங்கு பெரிதாகவும், ஐக்கிய அமெரிக்காவோடு ஒத்த அளவினதாகவும் உள்ளதால், உலகின்கண் உள்ள ஆறு பெருநிலப் பரப்புக்களில் ஒன்ருகக் கருதப் படுகிறது. அப்பெருநிலப் பரப்புக்கள் யாவற்றினும் பரப்பில் சிறியதாக இருப்பதும், நில நடுக்கோட்டுக்குத் தென் பகுதியிலேயே அடங்கியிருப்பதும், உலகப் படத்தில் ஒரு தீவைப்போல் காட்சியளிப்பதும், இதனை உலகத்தின் பிற நிலப்பரப்புக்களினின்றும் தனியாக வேறுபடுத்திக் காட்டுகின்றன.

இப்பெரு நிலத்தின் மேற்பரப்பானது, பெரும் பகுதியில், 1,500 மில்லியன் ஆண்டுகளுக்கும் பழமையானதாக இருக்க வேண்டுமென்று நிலநூல் வல்லுநர்கள் கருதுகின்றனர். இப்பொழுது ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்கும் இடைப்பட்ட இந்துப் பெருங்கடலில் ஆங்காங்கு அமைந்திருக்கும் தீவுகள் பலவும், பன்னூருயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இவ்விரு பெருநிலப் பரப்பையும் ஒன்ருக இணைத்துக் கொண்டிருந்த பெரியதோர் நிலப்பரப்பின் கடல் கொண்டெஞ்சிய மேட்டு நிலங்களே என்று ஆராய்ச்சியாளர் சிலர் கூறுகின்றனர். ஆஸ்திரேலியப் பெருநிலத்தின் மேற்குப் பகுதியில் அமைந்திருக்கும் மேட்டு நிலத்தின் பழமையான மண்ணும், தென்னிந்திய மேட்டு நிலத்தின் பழமையோடு ஒத்திருப்பதும், இவ்விரு நிலப்பரப்பிலும் அமைந்துள்ள மலைத் தொடர்களும், மடிப்புமலைத் தொடராகிய இமயத்தைப் போலல்லாமல் பழமை வாய்ந்தன

வாக இருப்பதும் இக்கருத்தினை வலியுறுத்துகின்றன. மற்றும், மணிமேகலை முதலாய பழந்தமிழ் நூல்களிலே யும் தமிழ் மக்கள் அஞ்சுதரத்தக்க அலை எழுங் கடலில் கலன்பல செலுத்தி நிலன்பல கண்டனர் என்று கூறப் பட்டுள்ளது. மணிமேகலை மணி பல்லவத்தீவிற்குச் சென்றதும், சாதுவன் சாவக நாட்டிற்குச் சென்ற தும் பௌத்த சமயப் பழநூலார் கூற்றுக்களோடு இடைமிடைந்திருப்பினும், ஓரளவு உண்மை வரலாறும் கலந்திருக்கும் என்பது உறுதி.

இப்பொழுது ஆஸ்திரேலியாவிலுள்ள பழங்குடி மக் களின் முதல்தோற்றம் எவ்விடத்தது என்று அறுதி யிட்டுக் கூறமுடியாதெனினும், அவர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தென்னிந்தியாவிலிருந்தே சென்றிருக்கவேண்டும் என்று ஆஸ்திரேலியப் புதுக்குடி களாகிய வெள்ளையர்களே கூறுகின்றனர். பஃறுளியாறும் பன்மலையடுக்கமும் கடல் கொள்வதற்குமுன் சீரோங்கு செந்தமிழ் நாடு தெற்கே நெடுந்தொலைவு பரவியிருந்தது என்று ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனுர் எழுதிய தொல்காப்பிய மென்னும் இலக்கணப் பெருநூலுக்கு உரை கண்டாரும் பிறரும் குறிப்பிட்டுள்ளனர். ஆகவே 'இலமூரியா' என்று இந்நாட்களில் வரலாற்று நூலா சிரியர் குறிப்பிடும் நிலப்பரப்பில் வாழ்ந்த மக்களில் பலரும், கடற்கோளுக்குப் பின் ஆங்காங்குத் தங்கியிருந்த மக்களும் தென்னிந்தியப் பழங்குடிகளோடு தொடர் புடையவர்கள் என்பது பொருந்துவதே யாகும். வட இந்தியாவின் தோற்றத்திற்குப் பிறகு பல்வேறு புதிய இனத்தவர் இந்தியத் துணைப்பெரு நிலத்துள் புகுந்த தால், தென்னிந்தியப் பழங்குடிகளில் பலர் நெருக்கடி யைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு இலங்கை, மலேயா, இந்தோனேசியா, இறுதியாக ஆஸ்திரேலியா முதலிய நிலப்பகுதிகளில் குடியேறினர். அவ்வாறு மக்கட் கூட்டம் நகர்ந்து செல்லுங்கால் ஆங்காங்கே தங்கி வாழ்ந்தவரும் உண்டு. மேற்போந்தவற்றினின்றும், தென்னிந்தியாவில் மலையின்கண் வாழ்கின்ற பழங்குடிகளும், இலங்கை,

மலேயா முதலிய நாடுகளில் வாழ்கின்ற பழங்குடிகளும், ஆஸ்திரேலியப் பழங்குடிகளோடு ஒருவாறு தொடர்புள்ளவர் என்று கருதப்படுகிறது.

ஆஸ்திரேலியாவில் இந்நாட்களிலும் 47,000 பழங்குடி மக்கள் தனித்தன்மை யுடையவராய் வாழ்ந்து வருகின்றனர். மற்றும் பலர் பிற இனத்தவரோடு கலந்து நாகரிக வாழ்வும் பெற்றுள்ளனர். இப்பழங்குடி மக்கள் பிற நாட்டுப் பழங்குடி மக்களைப் போலவே வழிவழியாகச் சொல்லப்பட்டு வந்த மிகச் சிறப்பு வாய்ந்த பழங்கதைகள் உடையவராக இருக்கின்றனர். இவர்களுடைய முன்னோர்கள் வெளிநாடுகளிலிருந்து எந்நிலையில் வந்திருந்தாலும், ஆஸ்திரேலியப் பெருநிலத்தில் அவர்களுக்கு ஆடுமாடு மேய்த்தல், உழவுத் தொழில் செய்தல் ஆகியவற்றுக்குப் போதுமான வாய்ப்புக்களில்லை யாகலானும் நாகரிக வாழ்வை முன்னேறச் செய்வதற்குரிய கருப்பொருள்கள் எளிதில் கிடைக்கப்பெருததாலும், மீன் பிடித்தல், வேட்டையாடுதல், முதலியவற்றையே தமக்குத் தொழிலாகக் கொண்டனர். உலோகங்களின் பயனையும் அவர்கள் அறிந்து கொள்ள இயலவில்லை. ஆனால் வளைதடி போன்றதாகிய 'பூமராங்' என்னும் மர ஆயுதம் அவர்களுக்கு வேட்டையாடப் பயன்பட்டு வந்தது. அவர்கள் பெரும்பாலும் மரத்தடிகளையே தம் குடியிருப்பாகக் கொண்டனர். தமக்கு வேண்டிய இன்றியமையாத தேவைகளை மட்டும் நிறைவு செய்துகொண்டு வந்தனரேயல்லாமல் தமக்குள்ளோ, வெளி நாட்டினருடனோ, வணிகத்தையும் வளர்த்துக் கொள்ளவில்லை.

ஆஸ்திரேலியாவில் குடியேறிய ஆங்கில மக்கள் 1788இல் இருந்து வெறுமையுற்றுக் கிடந்த அந்நிலப் பகுதியை உழவு, ஆடுமாடு மேய்த்தல் முதலிய தொழில்களுக்குப் பயன்படுத்தினர். தொடக்கத்தில் முன்னேற்றம் அத்துணை விரைவாக இல்லையெனினும் 1851இல் அங்குப் பொற்கனிகள் கண்டுபிடிக்கப்பட்டபின் குடியேற்றம் மிக விரைவாக நடந்தது. முதலில் நாடுகடத்தப்பட்ட குற்றவாளிகள் மட்டுமே அங்கு வந்தனர். பின்னர் கடல்

கடந்தேனும் நல்வாழ்வு பெறவேண்டும் என்னும் தாளாண்மை மிக்கவர் பலரும் அங்குக் குடியேறினர். 1860ஆம் ஆண்டளவிலேயே அப்பெரு நிலத்தினும் அதனையடுத்துள்ள தாஸ்மேனியாவிலுமாக ஆறு குடியேற்ற நாடுகள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு குடியேற்ற நாடும் தத்தமக்குத் தலைநகரங்களை ஏற்படுத்திக்கொண்டது. நியூஸௌத் வேல்ஸ் என்னும் நாட்டிற்குச் சிட்னி என்பது தலைநகரமாகும். பத்தொன்பது இலட்சம் மக்கள் வாழ்கின்ற அப்பெரு நகரம் ஆஸ்திரேலியாவிலேயே மிகப் பெரிய நகரமாகும். அது நியூசௌத் வேல்ஸின் சிறந்த துறைமுகப்பட்டினமாக விளங்குவதோடு தொழில் துறையிலும் தனியிடம் பெற்றுத் திகழ்கிறது. ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா ஆகிய பிற பெரு நிலங்களினின்றும் போக்குவரவுடைய வானூர்திகள் தங்கும் தளமும் அங்குள்ளது. அத்துறைமுகத்திலுள்ள பாலம் பெருங்கப்பல்களும் யாதொரு தடையுமின்றிச் செல்லுமாறு அத்துணை உயரமாகவும் மின்னுற்றல் தொடர் வண்டியும், பல்வேறு உந்து வண்டிகளும் செல்லுவதற்கேற்ற சிறந்த பயனுடையதாகவும் அமைந்துள்ளது. மற்றும், விக்டோரியாவுக்கு மெல்போர்னும், குயின்ஸ்லாந்திற்கு பிரிஸ்பேனும், தென்னுஸ்திரேலியாவிற்கு அடெலேடும், மேற்கு ஆஸ்திரேலியாவிற்குப் பெர்த்தும், தாஸ்மேனியாவிற்கு ஹோபார்ட்டும் தலைநகரங்களாக அமைந்துள்ளன.

1901ஆம் ஆண்டில் மேற்போந்த குடியேற்ற நாடுகள் யாவும் ஒன்ருகச் சேர்ந்து ஆஸ்திரேலியப் பொது நல ஆட்சியை அமைத்துக்கொண்டன. 1927ஆம் ஆண்டில் பொது நல ஆட்சியின் தலைநகராகக் கான்பெரா என்னும் பெருநகரமும் கட்டப்பட்டது. ஆஸ்திரேலியாவின் உள்நாட்டுச் செயன் முறைகளும், பிற நாட்டுத் தொடர்புகளும் அதன் பொதுநலக் கூட்டாட்சியினுலேயே நடத்தப்படுகின்றன வெனினும் ஆங்கிலப் பேரரசின் கீழ் அமைந்துள்ள பொதுநல நாடுகளில் ஒன்ருக இணைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. ஆஸ்தி

ரேலியா உலக நாடுகளின் கூட்டமைப்பிலும் பெரும்பங்கு கொண்டு விளங்குகிறது.

ஆஸ்திரேலியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் மிகச் சிறந்த பொருட்கள் பல்வகை உணவுப் பொருட்களும் விலங்கு மயிர் முதலாயினவுமாகும்.

இன்று ஆஸ்திரேலியப் பெருநிலம் பிரிட்டிஷ் தீவுகளிலிருந்து வந்த வெள்ளையரின் நாடாகச் சிறந்து விளங்குகின்றதென்றாலும், அந்நிலத்தின் பழங்குடி மக்கள் முழுவதும் அழிந்துவிடவில்லை யென்பதை மேலே குறிப்பிட்டுள்ளோம். ஆங்கிலேயர்கள் தென்கிழக்குக் கடற்கரையோரமாகவும், மரே-டார்லிங் தாழ்நிலம் போன்ற பகுதிகளிலும் குடியேறவும், பழங்குடிமக்கள் அவ்வளமான பகுதிகளை வந்தவர்களுக்கு வாழ்விடமாக விட்டுவிட்டு வறண்ட பகுதிகளுக்குச் சென்றனர். அங்கும் அவர்கள் உயிர் வாழ்வதற்குத் தக்க இயற்கைநிலை இல்லாததால் மடிந்தவர் பலர். மற்றும் வெள்ளையர்களோடு சேர்ந்து வாழ்ந்தவர்களிலும் பெரும்பாலோர் அழிந்துகொண்டே வந்தனர். இவர்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைந்துவருவதை அங்குச் சமயத் தொண்டர்களாகச் சென்றவர்களில் சிலர் கண்டு, இவர்கள்மீது இரக்கம் கொண்டு இவர்களுக்குப் பாதுகாப்பளிக்க முயன்றனர். பிறகு அரசாங்கமும் இம்முயற்சியில் பங்குகொண்டு இப்பழங்குடிமக்களை ஆங்காங்குத் திரட்டி வெள்ளையர்கள் வாழ்வதற்குத் தகுதியில்லாத வெப்பப்பகுதிகளில் இவர்களுக்கு ஒதுக்கிடம் தந்தது. இத்தகைய ஒதுக்கிடங்களில் ஒன்று மிட்செல் ஆற்றருகேயுள்ளது. தற்போது பழங்குடிகளின் பாதுகாப்புச் சட்டப்படி அவர்களுக்குக் கல்வியும் தொழிலும் கற்பிக்கப்படுகின்றன. அவர்களிலும் பலர் கல்வி கற்றுக் குடியுரிமை பெற்று வருகின்றனர். எத்தகைய பிற்போக்குள்ள குடிகளாக இருந்தாலும் தக்க வாய்ப்புக்கள் அளிக்கப்படுமாயின் அவர்கள் முன்னேறுவது உறுதியென்பதை இது வலியுறுத்துகின்றது.

இதுகாறும் ஆஸ்திரேலியப் பழம் பெருந்தீவின் பழங்

குடிகளாகிய மக்களைப் பற்றிக் கூறினோம். இனி அதன் வியத்தகு விலங்குகளையும் பறவைகளையும் பற்றி ஒரு சிறிது கூறுவோம். உலகத்தின் வேறு பகுதிகளில் காண வியலாத நானூறு வகை விலங்குகளும் எழுநூறு வகைப் பறவைகளும் இங்கு வாழ்கின்றன. ஆஸ்திரேலியா என்று சொன்னவுடனேயே யாவருக்கும் கங்காரு நினைவிற்கு வருவது இயல்பு. ஆஸ்திரேலியர் தங்கள் நாணயம் ஒன்றில்கூட கங்காருவின் உருவத்தை அமைத்துள்ளனர். அது நிமிர்ந்து நிற்கும் பொழுது ஒரு மனிதனைவிட உயர்ந்ததாகவே காட்சி யளிக்கும். அது தன் வலிய வாலையும் பின்னங்கால் இரண்டையும் ஊன்றிக்கொண்டும் அளவிற் சிறியனவாகிய முன்னங்கால்கள் இரண்டையும் தூக்கிக் கொண்டும் நிற்கும்பொழுது அது ஒரு முக்காலி விலங்கோ என்று ஐயுற வேண்டியிருக்கும். இவ்வியத்தகு விலங்கு ஆறு முதல் ஒன்பதுமீட்டர் வரை தாவித் தாவி ஒரு மணிக்கு நாற்பதெட்டு கி. மீ. தொலைவில் நமது நகர உந்து வண்டிகளைவிட விரைவாகச் செல்லும். கங்காரு தன் வயிற்றினிடத்தமைந்துள்ள புறப்பையில் தன் குட்டியை அடக்கிக்கொண்டு செல்லும். இதனைப்போலவே வயிற்றில் புறப்பையுடைய விலங்கு **கோஹாலா** (பருகாதது) என்பதாகும். இதுவும் கங்காருவைப் போலவே தழையுணவு கொள்வதேனும் இது தனக்கு வேண்டிய நீரையெல்லாம் அத்தழைகளினின்றும் எடுத்துக்கொள்ளுமேயன்றித் தனியாக எவ்வகையான நீர்ப் பொருளையும் பருகுவதில்லை. இதனையே அந்நாட்டிலுள்ளோர் கரடி என்பர். **பிளாட்டிபஸ்** என்னும் உயிரினம் பறவையைப் போல முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து, விலங்கினைப் போலப் பால்கொடுக்கும் தன்மையது. இது ஒரு முழ நீளமுள்ளதாகவும், வாத்தினுடையது போன்றதோர் அலகினையும் வளைந்த நகங்களையும் உடம்பு முழுவதும் மெல்லிய மயிரையும் கொண்டுள்ளது. ஆனால் மீனினத்தைப் போல ஆறுகளிலும் பாறையின் இடுக்குகளிலும் வாழ்கிறது. பொதுவாக, ஆஸ்திரேலிய விலங்குகள் யாவும் புல், பூண்டு, தழை, பயிர் ஆகியவற்றையே உண

வாகக்கொள்வன. **டிங்கோ** என்னும் ஒருவகை நாய் மட்டும் ஆடு மாடுகளை அடித்துக் கொல்வதைத் தன் விருப்ப விளையாட்டாகக் கொண்டுள்ளது.

பறவைகளில் மிகப் பெரியதாகிய எமுவும், சிரிக்கும் கழுதையாகிய **கூக்கா பாரா**வும் குறிப்பிடத்தக்கனவாம். பல நிறங்களோடு பொலிவுற்று விளங்கும் கிளிகள் பலவும், **காக்காட்டு**வும் வீடுகளில் வளர்க்கப்பட்டுப் பேச்சுப் பயிற்றுவிக்கப்படுகின்றன.

மேற்போந்த பழங்குடிகளாகிய விலங்கும் பறவைகளுமன்றிப் புதுக் குடிகளாக வந்த ஆடு, மாடு, குதிரை முதலியனவும் ஆஸ்திரேலியப் பெருநிலத்தின் செல்வங்களாக விளங்குகின்றன. எல்லா விலங்குகளையும் விட மிகுதியான எண்ணிக்கையையுடைய விலங்கு முயலேயாகும். நம் நாட்டில் எலியை ஒழிப்பதற்கு வலை, மருந்து முதலியனவற்றைப் பயன்படுத்துவதுபோல் அங்குமுயலை ஒழிக்க இவற்றையும் துப்பாக்கியையும் பயன்படுத்துகின்றனர்.

இத்தகைய புதுமை பல பிறங்கும் பழமை மிகுந்த தீவின் பழங்குடிமக்களும் பழந்தமிழ் நாட்டோடு தொடர்புடையவரென்று எண்ணும்போது நமக்கெல்லாம் ஒன்றே குலம் என்னும் உண்மை உவகையளிக்குமன்றோ?

## குறிப்புரை

இக்கட்டுரை ஆசிரியர் கவிஞர் அமுதநிலன் ஆவர். இவரது இயற்பெயர் மு. இராமகிருட்டினன் என்பதாகும். இவர் தற்போது க. நடராச பிள்ளை நினைவு மதுரைப் பிள்ளைமார் சங்கம் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருக்கிருர். இவர் ஆங்கிலமும் உறவியலும் தமிழும் கற்பித்து வருகிருர். ஆங்கிலக் கவிதைகள் பலவற்றைத் தமிழிலே ஆக்கியுள்ளதோடு, வேறுபல தமிழ்ச் செய்யுட்களும், கட்டுரைகளும் எழுதியுள்ளார். தனித் தமிழ் எழுதுவதில் மிக்க ஆர்வமுடையவர். இசைப் பாட்டுக்களும் பல புனைந்துள்ளார். மாணுக்கர்கள் மகிழ்ந்தேற்குமாறு பாடமோதும் தன்மையுடையவர்.

## அருஞ்சொற் பொருள்

துணைப்பெருநிலம் - துணைக்கண்டம். அஞ்சுதரத்தக்க-பயப்படத் தக்க. கலன் - கப்பல். கனி - சுரங்கம். தாளாண்மை - முயற்சி. பிறங்கும் - விளங்கும்.

## வினாக்கள்

1. ஆஸ்திரேலியாவுக்குரிய தனிச் சிறப்புக்கள் யாவை ?

2. ஆஸ்திரேலியா, பழம் பெருந் தீவு என்பது எவ்வாறு பொருந்தும் ?

3. இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் ஏற்பட்டுள்ள தொடர்புகள் யாவை ?

4. ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் வந்த விதம்பற்றி நீ அறிவன யாவை ?

5. ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் தொழில், நாகரிகம் பற்றி விளக்குக.

6. ஆஸ்திரேலியாவில் மக்கள் கூட்டம் பெருகக் காரணங்கள் யாவை ?

7. சிட்னி பற்றி நீ அறிவன யாவை ?

8. ஆஸ்திரேலியாவின் ஆறு குடியேற்ற நாடுகளையும் அவற்றின் தலைநகர்களையும் குறிப்பிடுக.

9. ஆஸ்திரேலியா எவ்வாறு உலக நாடுகளால் மதிக்கப்படுகிறது?

10. ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் எவ்வாறு பாதுகாக்கப் பட்டனர் ?

11. ஆஸ்திரேலியாவிலுள்ள வியத்தகு விலங்குகள் யாவை ? இரண்டினைப் பற்றி விளக்கம் தருக.

12. பிளாட்டிபஸ், டிங்கோ பற்றி அறிந்ததை எழுதுக.

13. ஆஸ்திரேலியப் பறவைகள் பற்றி விளக்குக.

14. "ஒன்றே குலம்" என்னும் உண்மையை ஆஸ்திரேலியா எவ்வாறு உறுதிப்படுத்துகிறது ?

15. "எத்தகைய பிற்போக்குள்ள குடிகளாக இருந்தாலும் தக்க வாய்ப்புக்கள் அளிக்கப்படுமாயின் அவர்கள் முன்னேறுவது உறுதி"— இடஞ்சுட்டி விளக்குக.

## பயிற்சி

1. நாம் உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டைப் பற்றியும் மிக விரிவாகத் தெரிய முயற்சி செய்யாவிடினும் "ஆஸ்திரேலியாவைப் பற்றிய சுருக்கமான விளக்கங்கள்" இப்பாடத்திலுள்ளது போன்றுவது தெரிந்து கொளின் நலம். சீனு, ஜப்பான், தென்மார்க்கு முதலிய நாடுகளைப் பற்றிக் கட்டுரை எழுதுக.

2. "உலக வியப்புக்குரிய விலங்குகள், பறவைகள்" என்பது பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

3. "ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டுப் பழங்குடிமக்கள் எவ்வாறு துன்புறுத்தப்பட்டனர் ?" என்பதை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

4. "ஒன்றே குலம்" என்பது பற்றி ஒரு கட்டுரை தக்க சான்றுகள் காட்டி எழுதுக.

## 16. கடிதம்

**[வித்துவான் திரு. அடிகளாசிரியர், கரந்தை.]**

கரந்தை,
6—10—'65.

அன்புள்ள மகனுக்கு,

இறைவன் திருவருளால் கல்வியும் நல்லொழுக்கமும் உண்டாகும்படி வாழ்த்தி எழுதும் கடிதம்.

இங்கே யாவரும் நலம்; அங்கே உன்னுடைய நலங்களையும் உன் நண்பருடைய நலங்களையும் அறிய விரும்புகின்றேன். நிற்க,

உன் கடிதம் கிடைத்தது. அக்கடிதத்தில் நல்ல அறிவுரைகளை எழுதியனுப்பும்படி நீ கேட்டிருந்தாய். அதனைக் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். உலகியலில் ஆழ்ந்த பயிற்சியுள்ள பெரியோரின் அறிவுரைகளை இக்காலத்திய இளைஞர்கள் கேட்க விரும்புவதில்லை. அவ்விளைஞர் போக்கிற்கு மாருக 'அறிவுரைகள் வேண்டும்' என்று நீ எழுதியதை யான் மிகவும் பாராட்டுகிறேன்.

உன்னைக் காட்டிலும் யான் பல யாண்டுகட்கு மூத்துள்ளேன். பல இடங்களுக்குச் சென்றும் பல மக்களோடு பழகியும் உலகியலறிவை உன்னைக் காட்டிலும் பெற்றுள்ளேன். யான் தேடி வைத்த பொருள் உனக்குப் பயன்படுவது போலவே என்னுடைய அறிவுரையும் உனக்குப் பயன்படும் என்று கருதுகிறேன்.

இக்காலத்துப் பிள்ளைகளில் பலர் காலை ஏழு அல்லது எட்டுமணி வரை படுக்கையை விட்டு எழுந்திருப்பதேயில்லை. எழுந்தாலும் நண்பருடன் கூடிப் பயனில்லாத சொல்லைப் பாராட்டிப் பேசிக்கொண்டேயிருப்பர். அல்லது அவருடன் கூடிக்கொண்டு வீணே அலைந்து திரிவர். படிக்கும் மாணவருக்குக் காலைப் பொழுது மிகவும் பயன்படுகின்ற பொழுதாகும். அக்காலத்திலே

அறிவு மிகத் தெளிவாக இருக்கும். ஆதலின் படிப்பை விரும்புகின்ற நீ காலைப் பொழுதை வீணுக்காதே.

'பொழுதொடு சென்று வழிபடன் முனியான்' என்ற நன்னூல் நூற்பாவின்படி நீ உரிய காலத்திலே பள்ளிக் குப் போக வேண்டும். ஒவ்வொரு நாளும் முதன் முதல் உன் ஆசிரியரைக் கண்டபொழுது அன்போடு வணக்கஞ் செய்யவேண்டும். உன் ஆசிரியரைக் குறித்து யாரேனும் குறைவாகப் பேசினுல் அதற்குச் சிறிதும் செவி சாய்க்க வேண்டாம்.

சில மாணவர் ஆசிரியர் பாடஞ் சொல்லும் பொழுது அதனைச் சிறிதுங் கருதாமல் அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டும் வேறு மாணவருடன் பேசிக்கொண்டும் இருப் பர். நீ அங்ஙனம் இராதே. ஆசிரியர் சொல்வதைக் கருத்தாகக் கேட்டு, அவர் கேட்ட கேள்விக்குப் பிழை யில்லாமல் உடனே பதில் சொல்லு. நீ படிக்கும் பாடங் கள் அனைத்தும் உனக்கு நன்ருகப் புரிகின்றதா என்பதை அறிந்து படி. அவ்வாறு படிக்காமல் பொட்டை நெட்டு ருப் போடாதே. நீ படிக்கும் பொழுது கேட்கிறவருக்கு நன்ருய் விளங்கும்படியாகவும், அதைக் கேட்டு அவர் மகிழும்படியாகவும் படிக்கவேண்டும். அவ்வாறு படிப் பதற்குச் சில விதிகள் உண்டு. நிறுத்த வேண்டிய இடங் களில் நிறுத்தவேண்டும்; நிறுத்தக் கூடாத இடத்தில் நிறுத்தக் கூடாது. பேரிரைச்சல் செய்து படிக்கக் கூடாது. எங்கும் ஒரே ஓசையாகவும் படிக்கக்கூடாது. பொருளுணர்ச்சிக்குத் தக்கபடி சில இடங்களில் உயர்த்தி யும் சில இடங்களில் தாழ்த்தியும் படிக்கவேண்டும்.

மக்களுக்கு வெறும் கல்வி மட்டும் பயன் கொடுத்து விடாது. அக் கல்வியோடு நல்லொழுக்கமும் சேர்ந்த பொழுதுதான் அக் கல்வி சிறந்த பயனைத் தரும். ஆகை யால், நீ கல்வியோடு நல்லொழுக்கங்களையும் கற்றுக் கொள்.

அந் நல்லொழுக்கங்கள் பலவாகும். அவற்றுள் சில வற்றை மட்டும் இன்று குறிப்பிடுகின்றேன். நம் நாட்டு மக்களில் கற்றறிவில்லாத பலர் கண்ட கண்ட இடங்களி

லெல்லாம் காறிக்காறி எச்சிலை உமிழ்வர். அவ்வாறே சிறுநீரையும் மலங்களையும் கழிப்பர். இச்செயல்களால் நல்ல நல்ல இடங்களெல்லாம் தூய்மை யிழந்து கெடும். இவ்விடத்திலே படிந்து வீசும் காற்றும் தன் தூய்மை யிழந்து தீய நாற்றம் உடையதாகி மக்களிடத்தே சென்று தீமையைப் பயக்கும். ஆதலால் இப்பழக்கம் நாட்டிற்கு மிகவும் தீமை தரும் பழக்கமாகும். நீயும் உன் நண்பரும் இப் பழக்கங்களை அறவே விடவேண்டும். உன்னைத் தூய்மையாகவும் அழகாகவும் வைத்துக்கொள்ள விரும்பு வதைப் போலவே நீ வாழும் இடத்தையும் அவ்விடத்தின் சுற்றுப் புறத்தையும் தூய்மையாகவும் அழகாகவும் வைத் துக் கொள்ள நீ விரும்ப வேண்டாமா?

நம் நாட்டு அறிஞர் கல்விக்குரிய கடவுளாகிய கலை மகள் வெண்டாமரை மலரில் வீற்றிருக்கின்றாள் என்று கூறுகின்றனர். இப்படிக் கூறும் கருத்தென்ன என்பதை நீ கருதிப் பார்க்கவேண்டும். அறிஞர் எண்ணங்களெல் லாம் மலர்வதற்குக் காரணமாகிய மனத்தினை நெஞ்சத் தாமரை என்று கூறுவர். அம்மனம் காமம், சினம், அழுக்காறு முதலிய தீய பண்புகளோடு சேராமலிருந் தால் அது வெண்டாமரைக்கு நிகராகும். அத்தகைய மனத்தில்தான் கல்வி எழுந்தோங்கும். நீ கல்வியை விரும்பினால் உன்னுடைய மனத்தை மிகத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். இன்று இவ்வளவோடு என் கடிதத்தை நிறுத்திக் கொள்ளுகின்றேன். காலங் கிடைத்தபொழுது வேறு சில அறிவுரைகளை எழுதியனுப் புவேன்.

இங்ஙனம்

உன் நன்மையை விரும்பும் தந்தை

**திரு. அடிகளாசிரியன்**

குறிப்புரை

**திரு. அடிகளாசிரியர் அவர்கள் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த குகையூரில் பிறந்தவர்கள். தென்மொழி, வட மொழியில் புலமை மிக்கவர்கள். மயிலம் அருள்திரு சிவஞான பாலய சுவாமிகள்**

தமிழ்க் கல்லூரியின் தொடக்க முதற்கொண்டே ஆசிரியப் பணி பூண்டு பல தமிழாசிரியர்களைத் தமிழ்த்தொண்டுக்காயத்தப்படுத்தி உருவாக்கியவர்கள். தற்பொழுது தஞ்சையிலுள்ள கரந்தைத் தமிழ்ச் சங்கப் புலவர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருக்கிறார்கள். எங்களூர், வீரசைவப் பிரமாணம், சதமணி மாலை, சிவப்பிரகாச விகாசம், திருவரசிலிப் புராணம் முதலிய பல நூல்களை எழுதியும் வெளியிட்டும் தமிழ்த் தொண்டாற்றியவர்கள். ஆசிரிய உலகுக்கு ஓர் எடுத்துக்காட்டாய் அமைந்த பண்புடையாளர்.

## அருஞ்சொற் பொருள்

முனியான் - வெறுக்காதவனாய். நூற்பா - சூத்திரம். அழுக்காறு - பொறாமை.

## வினாக்கள்

1. மகன் அறிவுரை கேட்டதற்குத் தந்தை வியப்பு எய்தக் காரணம் யாது ?
2. பெரியோர்களின் அறிவுரை எவ்வாறு எதைப்போல இன்றியமையாதது ?
3. காலைப் பொழுதை ஏன் வீணாக்கக் கூடாது ?
4. ஆசிரியருக்கு எவ்வாறு பணிவு காட்டவேண்டும் ?
5. படிக்கும் முறைகள் யாவை ?
6. மகன் அறிந்து கொள்ள வேண்டிய நல்லொழுக்கங்கள் யாவை?
7. "கலைமகள் வெண்டாமரை மலரில் வீற்றிருக்கின்றாள்," என்று ஆன்றோர்கள் கூறியதன் உட்பொருள் யாது ?

## பயிற்சி

1. இது தந்தை மகனுக்கு எழுதும் அறிவுரைக் கடிதம். இது போன்று 'நீ உன் பள்ளித் தோழர்களுடன் போய் வந்த ஓர் இன்பச் செலவு' பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

2. பெரியோர்கள் சிறியோர்களுக்கு எழுதும் கடிதத்தில் வாழ்த்து முதலில் அமைதல் வேண்டும். சிறியோர்கள் பெரியோர்களுக்கு ஏதோ ஒரு பொருளைப் பற்றி வேண்டுவதாக ஒரு கடிதம் எழுதின் அதில் முதற்பகுதி எவ்வாறு அமைய வேண்டும்? (வாழ்த்தாக அமையாமல் வணக்கம் குறித்ததாக இருக்க வேண்டும்.)

3. கடிதத்தின் முடிவு பல முறைகளில் இருக்கலாம். யாருக்கு யார் எழுதும்பொழுது எவ்வெம் முடிவுகளைக் கொண்டிலங்கலாம் என்பதற்கு மூன்று எடுத்துக்காட்டுகள் தருக.

4. கடிதத்தின் அமைப்புகளை விளக்கி அதில் முகவரி எவ்வாறு அமைய வேண்டும் என்பதனையும் சான்றுடன் விளக்குக.

# 17. அதியமானும் ஔவையாரும்

[வித்துவான் வீ. ப. நடராசன், பசுமலை.]

## (உரையாடல்)

### காட்சி 1

**இடம் :** தகடூர் அரண்மனை.

**காலம் :** காலை.

**உரியோர் :** ஔவையார், பணிக்குழுவினர், அதியமான், வாயிற்காவலர்.

**ஔவையார் :** பணியாளரே! நமது இசைக்கருவிகளையும் மற்றப் பொருட்களையும் எடுமின்.

**பணியாளர் :** தாயே! ஒன்றும் புலப்படவில்லையே! ஏன் நம் பொருட்களை எடுக்க வேண்டும்?

**ஔவை :** இத்தகடூர் அரண்மனையை விடுத்து விரைவில் செல்லவேண்டும். இத்துணை நாட்கள் ஈங்கிருந்து அதியமானின் அவைக்களத்தை அழகு செய்து என்ன கண்டோம்?

**பணி :** அம்மையீர்! அவ்வாறு நவிலல் பொருந்தாது. மன்னர் தங்கள் புலமையைக் கண்டு இன்பக் கடலிலன்றோ ஆழ்ந்துள்ளார்?

**ஔவை :** ஆழ்ந்து யாது பயன்! பல நாட்கள் பாடி அறிவு விருந்தளித்தும் பரிசில் ஒன்றும் நமக்குக் கிட்டவிலையே. சரி, காலந்தாழ்த்தாது பொருட்களை யெடுமின்.

[பணியாளர் பொருட்களுடன் வர ஔவை வாயிலை யடைந்து,]

ஏ, வாயிற்காவல! நும் மன்னனிடம் யாம் செல்வதாக நவின்றுவிடு. பரிசில் அளிக்கும் மன்னனை நாடி யாம் செல்வதாகவும் கூறு.

[வாயிலோன் ஓடி அதியமானிடம் கூறல். அதியமான் ஓடோடி வருதல்.]

**அதியமான் :** அன்னையீர்! கல்விக்களஞ்சியமே! தாங்கள் இவ்வாறு கனன்றெழுந்து விடலாமா? பரிசில் அளிக்கின் விரைவில் என்னில்லம் விட்டகன்று விடுவீர்க

ளென்றன்றோ காலம் தாழ்த்தினேன். மன்னியுங்கள். அரண்மனை திரும்புங்கள்.

[அதியமானுடன் ஔவையார் திரும்ப வருதல்.]

அமைச்சரீர்! எம் தாய்க்குத் தக்க பரிசில்களைக் கொணர்க.

[பொன்னும் பொருளும் யானைமீதேற்றி வந்து நிற்கக் கண்ட ஔவை மனமுருகி நின்றார்.]

**ஔவை :** மழவர் ஏறே! மகிழ்ந்தேன். உன் அன்பின் ஆழத்தை அறியாமலிருந்தேனே என வருந்துகின்றேன். இனி எங்கும் செல்ல விருப்பமில்லை. உன் அவைக்களப் புலவராகவே வாழ்வேன். கவலற்க.

**அதிய :** பெரும்புலவோய், தங்கள் சொற் கேட்டுப் பேருவகை கொண்டேன். இனி தங்கள் விருப்பம் எது வாயினும் உடனுக்குடன் நிறைவேற்றுவேன். எனினும், தாங்கள் அளிக்கும் தமிழமுதுக்குத் தக்க கைம்மாறறியேன்! என்றென்றும் நன்றியோடிருத்தலே யான் இயற்றுதற்குரியது. [அதியமான் அகல்கிறான்.]

**ஔவை :** [தனியே இருந்து தம் எண்ணத்தை வெளியிடல்] நெஞ்சே! யானை, தேர், குதிரை, காலாள் ஆகிய நான்கு படை வன்மையையும் பெற்றுவிளங்கும் இத்தகடூர் மன்னனின் கொடைத்திறம் என்னே! பல நாட்கள், பலரோடு தங்கியிருந்தும் தலைநாளில் காட்டிய அன்பையே யன்றோ காட்டி வந்துள்ளான். அவன் இன்று கொடுத்துள்ள அப்பெரும் பரிசில்தான் கொஞ்சமோ? அவன் பரிசில் அளிக்கும் காலத்தை நீட்டினும் நீட்டாவிடினும், கவளம் கவளமாக உண்ணும் களிறு தன் கொம்புகளிடையே எடுத்து வைத்துள்ள சோற்றுருண்டை அதன் வயிற்றுள் போவது எவ்வாறு உறுதியோ, அது போல அவன் பரிசிலும் நம் கையில் என்றும் இருத்தல் போலன்றோ எண்ண வேண்டும். ஆகா... நாம் வருந்தியது தவறன்றோ! அதியமான் வாழ்க!

## காட்சி 2

**இடம் :** மலை நாடு.

**காலம் :** மாலை.

**உரியோர் :** அதியமான் நெடுமான் அஞ்சி, ஔவையார், அரண்மனை வேலையாட்கள்.

**வேலையாள் ஒருவன் :** நம் அரசர் இம்மலைக்குப் புறப்பட்டதன் கருத்து யாது. நீ அறிவாயா ?

**மற்றவன் :** ஆம், அறிவேன். அன்றொரு நாள் நம் அரசவைக்கு வந்திருந்த சான்றோரொருவர் நெல்லிக்கனி யொன்றினைப்பற்றி அரசரிடம் புகன்ற மொழிகளே அரசரை இங்கு ஈர்த்தது.

**முதலாமவன் :** ஒரு நெல்லிக்கனிக்காகவா அரசரே இங்கு வருதல் வேண்டும் ?

**மற்ற :** அவ்வாறன்று. அக்கனி எளிமையான கனி யன்று. பல ஆண்டுகட்கு ஒரு முறை மட்டும் அம் மரத்தில் அக்கனி காணலாம். மேலும் அக்கனி, உண் டோர்க்கு நெடிது நாள் வாழ்வளிக்கும் தன்மையது. ஆகவே, அக்கனியைத் தாமே கொய்ய வேண்டுமென விரும்பி நம் அரசர் வந்துள்ளார்.

**முதலா :** கனி பறிக்க வந்துள்ள நம் அரசர், ஔவைப் பெருமாட்டியையும் அழைத்து வந்து அம்மரத் தடியில் அமரச் செய்துள்ளாரே, காரணம் யாதோ ?

[அதியமான் மலைப்பிளவுக்குள் சென்றதைக் காணல்.]

**மற்ற :** அதோ பார், நம் அரசர் மலைப் பிளவினுள் செல்வதை !

**முதலா :** பிளவு மிகவும் செங்குத்தாயன்றோ உளது! சிறிது தவறிடினும் பெருந் தீங்கன்றோ வரும் ?

**மற்ற :** அவ்வாறுரையாதே. போர்க்களத்தே புலி போற் பாய்ந்து எதிரிகளைச் சின்னபின்னப்படுத்துவ தையும், அடுத்த கணம் தாவிப் பறந்து வருவதையும் கண்ட நீயா, இங்ஙனம் உரைப்பது ? வெற்றி ஒன்றையே காணும் வீரரல்லரோ நம் மன்னர் ?

[அதியமான், கனியுடன் பிளவினின்று ஏறிவருதல். ஔவையார் இருக்குமிடத்திற்கு விரைதல்.]

**வேலையாட்கள் :** ஆகா! நம் மன்னர் நெல்லிக் கனியுடன் வந்துவிட்டார். மன்னர் வாழ்க!

**அதிய :** தாயே! தாங்கள் இம்மலை நாட்டிற்கு நீண்ட தொலைவு நடந்து வந்துள்ளீர்கள். தாங்கள் இந் நெல்லிக்கனியை உண்ணுங்கள். தாகமும் சோர்வும் நீங்கும்.

**ஔவை :** அஞ்சி, நன்று. உள்ளக்கனிவோடு, கையிற் கனியும், அளிப்பதால் ஏற்றுக் கொள்கிறேன். [வாங்கி உண்டபின்] அதியமானே! இக்கனியின் சுவை மிக்க சிறப்புடையதாயுள்ளதே! இதுபோன்ற கனியை நான் இதுகாறும் உண்டதில்லை. இக்கனியை எங்கிருந்து கொணர்ந்தாய்?

**அதிய :** தமிழ்த் தாயே! சின்னாட்கள் முன்னர் சான்றோர் ஒருவர் என் அவைக்களம் வந்து இக் கனியின் பெருமையை எடுத்தியம்பினர். நீண்ட வாழ்வையளிக் கும் அக்கனியை எங்ஙனமாயினும் தங்களுக்கு அளிக்க விரும்பி இம்மலைப் பிளவினின்றும் கொணர்ந்தேன்.

**ஔவை :** ஏன், அதை நீ உண்ணலாகாதா?

**அதிய :** அன்னையீர், நான் உண்ணுவதைப் பார்க் கிலும் தாங்கள் உண்டால், தமிழ்த்தாய்க்கு இன்னும் சிறந்த தொண்டாற்றலாமே என்ற எண்ணத்தால் தங்க ளுக்கு அளித்தேன்.

**ஔவை :** நன்று. கோமகனே! வெற்றி யொன் றையே குறிக்கொண்டு வாளேந்திப் பகைவர் களம் புகுந்து போரியற்றும் வீர! நீ நெடிது வாழ நினையாமல் நான் நீண்டகாலம் வாழ வேண்டுமென விரும்பினையே! நஞ்சுண்டும் சாவாது, கறையுண்ட கண்டன் நிலைபெற் றிருத்தல் போல் நீயும் வாழ்வாயாக!

**அதிய :** அன்புடைத் தாயே! உமது வாழ்த்து என் உடலை ஊடுருவி உள்ளத்தில் இன்பவெள்ளத்தைப் பாய்ச்சுகின்றது. தாங்கள் என் அவைக்களத்தை அழகு

செய்யும் கல்விச் சிறப்புக்கு எதுவும் ஈடாகாதே! என்றும் நான் தங்கட்குக் கடமைப் பட்டுள்ளேன்.

**ஔவை:** நெடுமானஞ்சி! நான் உரைப்பனவெல்லாம் யாழ்தரும் இன்பத்தைத் தாரா. காலத்தொடு ஒட்டியதாயும் இரா. பொருள் அறியும் வகையிலும் இரா. எனினும் பெற்றோர்க்குத் தம் மக்கள் மழலை மொழி எவ்வாறோ அவ்வாறே என் சொற்களையும் நீ போற்றியுள்ளாய். நீ தந்தையனையாய். உன் அருள் தழைத்தோங்கட்டும்!

**அதிய:** தாயே! தங்களின் அமுத மொழிக்கிணையாக எதையும் சொல்லவியலாது. எனினும் தாங்கள் அடக்கமாகக் கூறியவற்றை உணர்கின்றேன். யாழ்தரும் இன்பத்தினும் விஞ்சியன உம் அறவுரைகள். அவை எக்காலத்திற்கும் பொருந்துவன. எல்லாப் பொருளும் தரத் தக்கன. தங்களை என் அவைக்களத்தில் வீற்றிருக்கப் பெற்ற யானே பேறுடையேன்.

**ஔவை:** அதியமான் நெடுமானஞ்சி! நீ வாழ்க! நின்னுடு வளமனைத்தும் பெற்று வயங்குக! ஓங்குக உலகனைத்தும் நின்புகழ்!

## குறிப்புரை

இக் கட்டுரை ஆசிரியர் வித்துவான் வீ. ப. நடராசன் அவர்கள் பசுமலை உயர்நிலைப் பள்ளியில் முதன்மைத் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகிறார். பல பாடநூல்கள் எழுதியும், கவிகள் இயற்றியும், பழந்தமிழ் நூற்களுக்கு உரை எழுதியும் தொண்டாற்றி வருகிறார். நல்ல சொற்பொழிவாற்றுந் திறனும் இவருக்குண்டு. தூய தமிழ்நடை நாட்டில் பரவவேண்டுமென்னும் விருப்புடையவராக இருப்பினும் வேற்று மொழிகள் எவற்றின்மீதும் வெறுப்பில்லா உளங்கொண்டவர். பண்டைய தமிழ் இலக்கியங்கள் பரவவேண்டும் என்பதும் இறைவன் மீது மக்கள் பற்றுக்கொண்டு வாழவேண்டுமென்பதும் இவரது அவா. அக்குறிக்கோள் கொண்டு உழைத்து வருகிறார்.

## அருஞ்சொற் பொருள்

களஞ்சியம் - சரக்கறை. கனன்று - கோபித்து. மழவர் - ஒருவகை வீர மரபினர். கனிவு - நெகிழ்ச்சி. ஈடு-ஒப்பு. விஞ்சியன-சிறந்தன. வயங்குக-விளங்குக.

## வினுக்கள்

1. ஔவையார் எக்காரணம் பற்றி அதியமானிடமிருந்து செல்ல நினைத்தார்?

2. அதியமான் ஔவையாருக்குப் பரிசில் கொடுக்காது காலம் நீட்டித்தமைக்குரிய காரணம் யாது?

3. அதியமான் ஔவையாருக்குப் பரிசில் கொடுத்துச் சிறப்பித்த முறையை விளக்குக.

4. அதியமானிடம் பரிசில்பெற்ற ஔவையார் எவ்வாறு அவனைப் புகழ்ந்தார்?

5. அதியமான் ஔவைக்குக் கொடுத்த நெல்லிக் கனியினது பெருமைகள் யாவை?

6. அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி கொடுக்கக் காரணம் யாது?

7. நெல்லிக்கனி உண்ட ஔவையார் அதியமானை எவ்வாறு போற்றினுர்?

8. ஔவையார் அதியமானிடம் எம்முறையில் பழகினுர்? அது எவ்வாறு தெரிகிறது?

9. "யாழ்தரும் இன்பத்தினும் விஞ்சியன உம் அறவுரைகள்." இடஞ்சுட்டி விளக்குக.

## பயிற்சி

1. ஔவையார் அதியமானின் பெருமைகள் பற்றிக் கூறுவதாக ஒரு கட்டுரை எழுதுக.

2. அதியமான் ஔவையாரின் புலமைச் சிறப்பைப் பற்றிக் கூறுவதாக ஒரு கட்டுரை எழுதுக.

3. இளங்குமணனும் பெருஞ் சித்திரனுரும் உரையாடல்; மூவேந்தரும் கபிலரும் பாரியின் சிறப்புப்பற்றி உரையாடல் முதலிய பல உரையாடல்களை எழுதிப் பழகுங்கள்.

4. தற்கால ஆட்சி முறைபற்றிய உரையாடல், ஐ. நா. அமைப்புப் பற்றிய உரையாடல் முதலியவைகளையும் எழுதிப் பழகின் நலம்.

# 18. இசைக்கருவிகள்

[பேராசிரியர், நா். பாலுசாமி, எம். ஏ.,
தியாகராாசர் கல்லூரி, மதுரை.]

பண்டைத் தமிழகம் கலைமயமாகக் காட்சி அளித்தது. பல்வேறு கலைகளின் வளர்ச்சிக்கும் தாய் மொழியாகிய தமிழ் கருவியாக அமைந்திருந்தது. தமிழர் இயல், இசை, கூத்து ஆகிய முத்துறைகளிலும் தமிழை வளர்த்தனர். அதனால் தமிழ் முத்தமிழ் எனப்படுவதாயிற்று. "சங்கத் தமிழ் மூன்றும் தா" என்ற ஔவையாரின் அருள் வாக்கு இதனை வலியுறுத்தும்.

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியையும் வளத்தையும் காட்டுவன மேலே கூறப்பட்ட முத்துறைகளாகும். இயல் மக்களது திட்பத்தையும், இசை அவர் தம் நுட்பத்தை யும், கூத்து ஒட்பத்தையும் காட்ட வல்லன. இயல், இசை, கூத்து என்ற மூன்றனுள்ளும் நடுவணதாகிய இசை தனிச் சிறப்பு வாய்ந்தது. இயலிலும் கூத்திலும் இசை கலந்திருப்பது வெளிப்படை. உரையாலும், பாட்டாலும் இயன்ற இயலில் சொற்கள் முறையே பொரு ளொடு புணர்ந்தும், அசை, சீர், தளை, அடி, தொடை, எதுகை, மோனை ஆகியவற்றால் இயன்றும் இசையின்பம் தருகின்றன. கூத்தின் சிறப்பை மிகுவிப்பதும், அதற்கு ஏற்ற பின்னணியும் இசையேயாகும். எனவே, இசையே ஏனைய இயல், கூத்துக்களிலும் சிறப்புடைத்தாம்.

உலக வாழ்க்கையில் யாவராலும் விரும்பப்படும் தன்மை வாய்ந்தது புகழ். "ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற்பதொன்றில்," என்றார் வள்ளுவனாரும். இத்தகைய புகழை இசை என்று வழங் கினர் தமிழர். "ஈதல் இசைபட வாழ்தல்" என்ற பொய்யாமொழித் தொடரே இதற்குப் போதிய சான்றா கும். இதிலிருந்து தமிழரது வாழ்க்கையில் இசைக்கலை எத்துணை இடம் பெற்றிருந்தது என்பது தெற்றெனப் புலப்படும்.

தமிழ் மொழியில் எண்ணற்ற இயற்றமிழ்க் கலைநூல்கள் எழுந்தமை போலவே இசைக்கலை நூல்களும், கூத்துக்கலை நூல்களும் பல தோன்றியிருந்தமை புலனாகின்றது. இசை நுணுக்கம், இசை மரபு முதலிய இசை நூல்களும், செயிற்றியம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல் முதலிய கூத்திலக்கண நூல்களும் பண்டு வழக்கில் இருந்தமை உரையாசிரியர்களின் குறிப்புக்களிலிருந்து தெரிய வருகிறது. இயற்கலை நூல்களுள் பல கடற்கோளுக்கு இரையாகி ஒழிந்தமை போலவே, இசை நூல்களும், கூத்து நூல்களும் எச்சமற்று இறந்தொழிந்தன. இது பெரிதும் வருந்துதற்குரியது.

பண்டைத் தமிழகத்தில், கவியரசரும், புவியரசரும், ஒருங்கு கூடிக் கழகம் நிறுவி, முத்தமிழ்க் கலைகளையும் நன்கு போற்றினர். இதுவே தமிழ்ச் சங்கம் என அழைக்கப் பெற்றது. இச் சங்கத்தில் இயற்புலவரும், இசைப் புலவரும், கூத்துநூற் புலவரும் தனித்தனி அமர்ந்து தத்தம் துறைகளில் சிறந்து விளங்கினர். இச் சங்கத்தின் நிலைக்களமாக விளங்கிய பெருமை பாண்டியர் கோநகரமாகிய மதுரையைச் சாரும். சேர நாட்டுப் புலவரும், சோழ நாட்டுப் புலவரும், பாண்டியர் தலைநகரத்தில் வீற்றிருந்தனர். இங்ஙனம் முத்தமிழுக்கும் தமிழ்ச் சங்கத்தில் தனித்தனித் துறைகள் அமைந்திருந்தமை,

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்
பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவா னுயர்மதிற் கூடலி
னுய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி
யேழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கொ
லாம்புகுந் தெய்தியதே."

என்ற மாணிக்க வாசகனாரது திருக்கோவைச் செய்யுளால் தெளியலாம். இப்பாட்டில் "ஒண் தீந்தமிழின் துறை" என்ற தொடர் அகப்புறத் துறைகளால் இயன்ற

இயற்றமிழ்ப் பகுதியையும் "ஏழிசைச் சூழல்" என்ற தொடர் இசைத் தமிழ்ப் பகுதியையும் குறிப்பனவாகும். மூன்றும் பகுதியாகிய கூத்து இப்பாட்டில் குறிக்கப்பட்டில தேனும் அஃது இருந்தது எனக்கோடல் இழுக்கின்றும்.

இங்ஙனம் சங்கத்திலே வளர்ந்த முத்தமிழ்ப் பாவை களுள் இசைத் தமிழ்ப் பாவையின் ஏற்றத்திற்கு உறு துணை புரிந்த இசைக் கருவிகளைப் பற்றி ஈண்டு ஆராய் வோம்.

**இசைக் கருவிகள் :**

இசை பிறத்தற்குரிய நிலைக்களங்கள் இரண்டாம். ஒன்று மிடறு. மற்றொன்று கருவி. இவ்விரண்டினின்றும் எழும் இசைப் பாடல்கள் முறையே மிடற்றுப் பாடல் (வாய்ப்பாட்டு), கருவிப் பாடல் எனப்படும். மிடற்றால் எழுப்பப்படும் இசைப் பாடலுக்கும் கருவிப் பாடல் உறு துணை புரிய வல்லது. இசைவாணர் ஒருவர் மிடற்றால் பாடுகின்றுழி அப்பாடலின் போக்கிற்கும் நோக்கிற்கும் ஏற்பப் பலவகைக் கருவிகளும் துணைநின்று இசைகூட்டு மேல் அது கேட்பாருக்கு எத்துணை இன்பம் பயக்கும்! இத்தகைய இசை நிகழ்ச்சி பல்லியம் (Orchestra) எனப் படும். இனி, இவ்விசைக் கருவிகளின் வகையும் தொகை யும் காண்போம்.

இசைக் கருவிகள் மூவகைப்படும். அவை தோற் கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி என்பன. இவற் றோடு கஞ்சக் கருவி என்றொரு வகை உண்டு. தோலால் போர்ப்புண்டு கையாலும் கடிப்பாலும் தட்ட இசை தரு வது தோற்கருவி. துளையிட்டு அதன் வழியாகக் காற்றை ஊதி இசை யெழுப்பப் பயன்படுவது துளைக் கருவி. நரம்புகளுக்கு முறுக்கிட்டு விரலால் தடவ இசை தருவது நரம்புக் கருவி. ஒன்றோடு ஒன்று மோதுறுதலால் இசை பிறப்பது கஞ்சக் கருவி.

**தோற்கருவிகள் :**

பண்டைக் காலத்தில் வழங்கிய தோற் கருவிகள் முப்பத்து ஒன்று என்பது சிலப்பதிகார உரையாசிரிய

ராகிய அடியார்க்கு நல்லார் காட்டும் மேற்கோளிலிருந்து தெரிகின்றது. அவை பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, குடமுழா, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, முழவு, முரசு, தகுனிச்சம், துடி முதலியன. இவை அகமுழவு, அகப்புறமுழவு, புறமுழவு, புறப்புறமுழவு, பண்ணமை முழவு, நாண்முழவு, காலைமுழவு என ஏழு வகைப்படும். மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை முதலியன அக முழாக்கள்; தண்ணுமை, தகுனிச்சம் முதலியன அகப் புற முழாக்கள்; கணப்பறை முதலியன புறமுழா; இங்குக் கூறப் பெருத நெய்தற்பறை முதலியன புறப்புற முழா; முரசு முதலியன பண்ணமை முழா; நாழிகைப் பறை நாண்முழா; துடி காலைமுழா; இவ்வாறு பகுத்துக் காட்டு வர் அடியார்க்கு நல்லார். இவற்றுள் காலத்தால் மிக்க தொன்மை வாய்ந்த தொல்காப்பியத்துள் பறை, துடி, முரசு ஆகிய மூன்று தோற் கருவிகளே குறிக்கப் பெற்றுள்ளன. இதனுல் இவற்றின் பழமையும், சிறப்பும் நன்கு புலப்படுகின்றன. பறை என்பது கருப்பொருள் களுள் ஒன்று என்று குறிக்கப்பட்டிருத்தலும், அது ஏறு கோட்பறை, தொண்டகப்பறை, நெல்லரிகிணை, மீன் கோட்பறை, சூறை கோட்பறை, என முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங் களுக்குரியதாகக் காட்டப்பட்டிருத்தலும், இப்பறை யினது சிறப்பையும், இது மக்கள் வாழ்க்கையில் பெற்றி ருந்த இடத்தையும் நன்கு காட்டுவனவாகும். பறை, சிறு பறை, பெரும்பறை, கிணைப்பறை, கணப்பறை எனப் பல வகைப்படும். சிறுபறை என்பது பிற்காலத்துப் பிரபந்தங் களுள் ஒன்ருன பிள்ளைத் தமிழில் ஆண்பாலுக்குரிய விளையாட்டுக் கருவியாகக் குறிக்கப்பட்டதாகும். பெரும் பறை என்பது ஆடல் மகளிர் ஆடும்போது அடிக்கப்படும் பறை. இது முழவுடன் சேர்ந்து ஒலிக்கப்படும். இதனை "உழவர் களிதூங்க, முழவு பணை முரல ஆடலறியா அரிவை போலவும்" எனவரும் பரிபாடல் விளக்கும். ஈண்டுப் "பணை" என்பது பெரும்பணையைக் குறிக்கும்.

கிணைப்பறை என்பது வீரர்கள் போர் புரியுங்கால் போர்க்களத்தே முழக்கப்படுவதொன்ருகும். இதனை "வெம்போர் மள்ளர் தெண்கிணை கறங்க" என்ற பதிற் றுப் பத்து அடி தெளிவுறுத்தும். அன்றியும், கூத்தரும், பொருநரும் ஆகிய பரிசில் வாழ்க்கையர் தமது இசைக் கருவியாகவும் இதனைப் பயன்படுத்தினர். இது "தெண் கண் மாக்கிணை தெளிர்ப்ப ஒற்றி, இருங்கலை ஓர்ப்ப இசைஇ" என்ற புறநானூற்று அடிகளால் விளங்கும். இப்பறை தடாரி எனவும் வழங்கப்பெறும். கணப்பறை என்பது புறமுழவு வகையைச் சார்ந்தது. இது அவ்வப் போது பொழுதினைப் புலப்படுத்த ஒலிக்கப்படும். இப் பறை அறைபவர் பறையர் எனப்படுவார்.

துடி என்பது வீரமறவர் தாம் உள்ளக் கிளர்ச்சிபெற வேண்டி முழக்கும் ஒரு பறையாகும். பகையரசரது நிரை கவர விரும்பும் வீரர் தமக்கு வெற்றி விளையுமாறு கொற் றவையைப் பரவுங்கால் துடி முழக்கி ஆர்ப்பரிப்பர். இதனை,

"மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே"

என்ற தொல்காப்பிய நூற்பாவாலும்,

"நித்திலஞ்செய் பட்டமும் நெற்றித் திலதமும்
ஒத்திலங்க மெய்பூசி யோர்ந்துடிஇத்—தத்தந்
துடியரோ டூர்ப்புறஞ் சூழ்ந்தார் மறவர்
குடிநிரை பாராட்டக் கொண்டு."

என்ற மேற்கோள் வெண்பாவாலும் அறியலாம்.

முரசு என்பது தோற்கருவிகளின் அரசெனத்தகும். இஃது அரசர்க்கே உரியது. இவ்வுண்மையை,

"படையுங் கொடியுங் குடையு முரசு
நடைநவில் புரவியுங் களிறுந் தேருந்
தாரு முடியு நேர்வன பிறவுந்
தெரிவுகொள் செங்கோ லரசர்க் குரிய,"

என்ற தொல்காப்பிய நூற்பா காட்டுகின்றது.

முரசு, படைமுரசு, கொடைமுரசு, மணமுரசு எனப் படும். படைமுரசு படையெழுச்சியின் போது கொட்டப்

பெறும். கொடைமுரசு அரசனது கொடை வளத்தை அறிவிக்க அறையப்படும். மணமுரசு அரசனது குடும்பத்தில் நிகழும் மணவினையின்போது அடிக்கப்படும். இவையன்றித் தெய்வ நிகழ்ச்சிகளுக்கும் முரசு அறையப் பட்டது. தமிழகத்தில் பல்வேறு தெய்வங்கட்கும் எழுப்பப் பட்ட கோயில்களில் முரசு இடம்பெற்றிருந்தது. தெய்வங் களுக்கு விழா நிகழ்த்துங்கால் அதனை மக்களுக்கு அறிவிக்க முதுகுடிப் பிறந்த வள்ளுவர் ஒருவர் யானை மீது இவர்ந்து முரசறைதல் வழக்கம். அன்றியும் மக்கள் தெய்வங்களுக்குப் பலியிடும் பொழுதும் முரசினை முழக்குதல் மரபு. இதனை வீரமுரசு என்பர். இது "மயிற்கண் முரசொடு வான்பலி யூட்டி" என்ற சிலப்பதிகார அடிகளால் அறியப்படும்.

முழவு என்பது இக்காலத்தில் மத்தளம் எனப்படும். இது இடை பருத்து, இருதலையும் சிறுத்து, உள்வாங்கி வாரினால் இறுகக் கட்டப்பட்டிருக்கும் இதற்கு இரண்டு கண்கள் உண்டு; இனிய ஓசை தருவது. இஃது இக் காலத்தில் இசை, நாடக அரங்குகளில் பெரிதும் பயன் படுத்தப்படுகின்றது. பறை, துடி, முரசு முதலிய பேரொலி தரும் கருவிகளைச் சோதனை செய்த பின்னர், இன்னிசை தருகின்ற முழவு இறுதியில் கண்டுபிடித்திருக் கப்பட வேண்டும். இது பலா அல்லது தேக்கில் குடையப் படுவது.

தண்ணுமை என்பது முழவைக் காட்டிலும் குளிர்ந்த இனிய ஓசையைத் தருவது. இது தோற்கருவி கள் எல்லாவற்றிலும் முதன்மையானது; பண்ணமைதி கொண்ட கருவி. அதனால் இதனை இளங்கோவடிகள், அரங்கேற்று காதையில் தண்ணுமை ஆசிரியர் அமைதி கூறுமுகத்தால் வியந்து கூறுகிறார்.

**துளைக் கருவிகள் :**

துளைக்கருவிகளுள் தொன்மை வாய்ந்தது குழல். இது வங்கியம் எனவும் படும். இது மூங்கில், வெண்கலம், கருங்காலி முதலியவற்றில் செய்யப்படும். ஆயின்

மூங்கிற் குழலே சிறந்தது. இது பொதுவாக இருபது விரல் நீளமும், நான்கரை விரல் சுற்றளவும் உள்ளதாகச் செய்யப்படும். இதில் ஏழு துளைகள் இடப்படும்.

திருவள்ளுவர் இசை இனிமைக்கு எடுத்துக்காட்டாகக் குழலையே முதலில் அமைத்துள்ளார். "குழலினிது யாழினிது," என்ற தொடர் இதனை விளக்கும். குழலின் சிறப்பைப் பரிபாடல் "ஏழ்புழை ஐம்புழை யாழிசை கேழ்த் தன்ன" எனப் பாராட்டுகின்றது. இவ்வடியின்கண் ஏழு துளைகளையும் ஐந்து துளைகளையும் உடைய குழல் முதலிடம் பெற்றிருப்பது கவனிக்கத் தக்கது. பண்டு போலவே இன்றும் இவ்விசைக்கருவி இசையரங்குகளில் பெருஞ்சிறப்புற்று வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். இக் காலத்தில் வழங்கும் நாதசுரம், மகுடி (பாம்பாட்டியின் இசைக்கருவி) முதலியனவும் துளைக்கருவிகளே.

**நரம்புக் கருவிகள் :**

நரம்புக் கருவிகளுள் யாழ் தலைசிறந்தது. இது பேரியாழ், மகரயாழ், செங்கோட்டியாழ், சகோடயாழ் என நால்வகைப்படும். இனி, யாழில் அமைந்துள்ள நரம்பு எண்ணிக்கையின் சிறுமை, பெருமை நோக்கிச் சீறியாழ், பேரியாழ் என இருவகையாகப் பகுப்பாரும் உளர். இவை தவிர வில்யாழ் என்பதும் பண்டைக் காலத்தில் இருந்ததாகத் தெரிகின்றது. பெரும்பாணாற்றுப் படையுள் இவ்யாழ் குறிக்கப்படுதலே இதற்குச் சான்று. சங்க இலக்கியங்களிலும், இடைக்கால இலக்கியங்களிலும் யாழைப் பற்றிய குறிப்புக்கள் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. பண்டைக் கால மக்களின் வாழ்க்கையில் யாழ் பேரிடம் பெற்றிருந்தது. இதன் பெருமையை விதந்து கூறும் விபுலானந்தர், "முன்னாளிலே பாணன் கையிலும், பாடினி கையிலுமிருந்த யாழ்க் கருவியானது, இளங்கோ வடிகள் காலத்திலே இசையாசிரியன் கையிலும் நாடக மகள் கையிலும் போய்ச் சேர்ந்துவிட்டது. ஆளுடைய பிள்ளையாருடைய காலத்திலே தெய்வமீந்த பொற்பலகை மீதேறி அன்பர் உள்ளத்தை உருக்கிய அருட் கவியா

யிற்று. கொங்கு வேளும், திருத்தக்க தேவரும் நூல் எழுதிய காலத்திலே, அரசிளங்குமரிகள் கையில் ஏறி அவர் மனம் விரும்பிய காதலரை அவருக்கு அளிக்குங் கருவியாயிற்று,'' என்றனர்.

இனி, இத்தகைய சிறப்பு வாய்ந்த இசைக்கருவி இன்று இறந்துபோயினமை பற்றி இரங்கியழுங்கும் அப் பெருமகனுர், ''சரித்திர கால எல்லைக்கு எட்டாத காலத்திலே வில்யாழ் எனப் பெயரிய குழவியாய் உதித்து, மழலைச் சொற்பேசி, இடையர் இடைச்சியரை மகிழ்வித்து, சீறியாழ் என்னும் பேதைப் பருவச் சிறுமியாகிப் பாணனேடும், பாடினியொடும் நாடெங்கும் திரிந்து, ஏழைகளும் இதயம் களிப்பெய்த இன்சொற்கூறி, பின்பு பேரியாழ் என்னும் பெயரொடு பெதும்பைப் பருவம் எய்திப் பெரும் பாணரொடு சென்று, குறுநில மன்னரும், முடி மன்னரும், தமிழ்ப் புலவரும், கொடை வள்ளல்களும் கேட்டு வியப்பெய்தும் வண்ணம் நயம்பட உரைபகர்ந்து, அதன்பின் மங்கைப் பருவம் எய்தி, அப்பருவத்திற் கேற்பப் புதிய ஆடையும் அணிகலனும் பூண்டு, நாடக அரங்கத்திலே திறமை காட்டி, மடந்தைப் பருவம் வந்து எய்துதலும் திருநீலகண்டப் பெரும்பாணரோடும் மதங்க சூளாமணியாரோடும் அம்மையப்பர் உறைகின்ற திருக் கோயில்கள் பலவற்றை வலம் வந்து, தெய்வ இசையினுலே அன்பர் உள்ளத்தினை உருக்கி, முத்தமிழ் விரகரால் பாராட்டப்பட்டு, அரிவைப் பருவம் வந்து எய்துதலும் அரசிளங்குமரிகளுக்கு இன்னுயிர்ப் பாங்கியாகி, அவர்க் கேற்ற தலைவரை அவர்பாற் சேர்த்திச் சீரும் சிறப்பும் எய்தி நின்ற யாழ் என்னும் மென்மொழி நங்கை இருந்த இடம் தெரியாது மறைந்து போயினுள்,'' எனக் கூறியுள்ளார்.

இனிச் சங்க நூல்களின் துணைகொண்டு யாழின் உறுப்புக்களைப் பற்றிச் சில கூறுவோம். பத்துப் பாட்டைச் சார்ந்த பொருநராற்றுப்படை ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார் யாழின் பல்வேறு உறுப்புக்களைப் பற்றிப் பின்வரும் விளக்கம் தந்துள்ளார்: ''மான் குளம்பு

அழுந்திய இடத்தையொத்த இரண்டருகும் தாழ்ந்து நடுஉயர்ந்த பத்தலினையும், விளக்கினது எரிகின்ற நிறத்தை உடைய விசித்துப் போர்த்தலுற்ற தோலினையும் இளஞ்சூலும் செந்நிறமும் உடையோளது அழகிய வயிற்றின் மயிர் ஒழுங்குபோல இரண்டு தலையும் கூடித்தைத்த மரத்தை மூடிய போர்வையினையும், நண்டின் கண்ணைக் கண்டால் ஒத்த முடுக்குதல் அமைந்த ஆணியினையும், எட்டாம் பிறை வடிவை உடைத்தாய் உள்நாக்கு இல்லாத வறிய வாயினையும், பாம்பு தலையெடுத்தால் ஒத்த ஓங்கிய கரிய தண்டினையும், கரிய நிறத்தை உடையோளுடைய முன்கைத் தொடியை ஒக்கும் வார்க்கட்டினையும், தினையரிசியில் குத்தலரிசியை ஒத்த விரலால் அசைக்கும் நரம்பின் தொடர்ச்சியினையும், மணமகளது கோலத்தையொத்த காட்சியினையும் உடைய யாழ்,'' இவ்வாறு யாழின் உறுப்புக்கள் பலவற்றையும் இயற்கைப் பொருட்களோடு பொருத்திக் காட்டியிருப்பது இன்பம் தருவதாகும். இங்ஙனமே பெரும்பாணாற்றுப் படை, சிறுபாணாற்றுப் படை, மலைபடுகடாம் ஆகிய பாட்டுக்களும் யாழின் உறுப்புக்களை விரித்துள்ளன.

யாழைப் பற்றித் தமிழ் நூல்களில் கூறப்படும் பல்வேறு செய்திகளையும் ஒருங்கு சேர்த்து ஆராய்ந்து இறந்துபோன யாழைச் சிறந்த துறையில் தமது மதிநுட்பத்தால் மீண்டும் செய்துகாட்டி யாழ்நூல் எனப் பெயரிய ஆராய்ச்சி நூலினை எழுதியருளிய காலஞ்சென்ற விபுலானந்த அடிகளாரின் தமிழ்க்கலைத் தொண்டினை என்னென்பேன்! அப்பெரியாரை இதுகாலை நினைத்தலே அவர்க்குத் தமிழகம் காட்டும் கைம்மாருகும்.

இறுதியாகக் கஞ்சக் கருவிகளைப் பற்றிச் சிறிது காண்போம். கஞ்சக் கருவி என்பது ஒன்றோடொன்று மோதுறுதலால் இசையெழுப்பும் கருவியாகும் என்பது கண்டோம். இக்காலத்தில் வழங்கும் தாளம், சாலரா, சப்பளாக்கட்டை முதலியன இவ்வகையைச் சார்ந்தவை. இதுகாறும் இசையின் தன்மையையும், இசைக்கருவிகளின் சிறப்புக்களையும் ஒருவாறு கண்டோம். இங்குக்

கூறப்படாத இசைக் கருவிகள் பல உள. விரிப்பிற் பெருகு மென்றஞ்சி அவை விடுக்கப்பட்டன. வாழ்க தமிழிசை ! வளர்க தமிழிசைக் கருவிகள் !

## குறிப்புரை

இக்கட்டுரை ஆசிரியர், திரு. நா. பாலுசாமி, எம். ஏ., அவர்கள் மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். பன்னூல் ஆசிரியர். எழுத்து வன்மையும் பேச்சு வன்மையும் நன்கு பெற்றவர்.

## அருஞ்சொற் பொருள்

திட்பம் - உறுதியான அறிவு. நுட்பம் - ஆழ்ந்த நுண்ணிய அறிவு. ஒட்பம் - அகன்று விளங்கிய அறிவு. பொன்றுது - அழியாது. எச்சம் - மிகுதி. கூடல் - மதுரை. மிடறு - கழுத்து. கடிப்பு - அடிக்கும் கோல். முரல - ஒலிக்க. கொற்றவை - காளி. 'இவர்ந்து - ஏறிச் சென்று. புழை - துளை. அழுங்கும் - வருந்தும். மதங்க சூளாமணியார் - கூத்தாடும் சிறந்த பெண்கள். விரகர் - சிறந்தவர். அருகு - பக்கம். விசித்து - இழுத்து.

## வினாக்கள்

1. முத்தமிழ் பற்றி விளக்குக.
2. இசைத் தமிழ் எவ்வாறு சிறந்ததாகக் கருதப்படுகின்றது ?
3. புகழுக்கு இசை என்று பெயர் வரக் காரணம் யாது ?
4. பண்டைய இசை நூல்கள், கூத்து நூல்கள் சிலவற்றின் பெயர் தருக.
5. மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் முத்தமிழுக்கும் தனித்துறைகள் அமைந்திருந்தன எனல் எவ்வாறு பொருந்தும் ?
6. இசை பிறக்கும் நிலைக்களங்கள் எத்தனை ? அவை யாவை ?
7. பல்லியம் பற்றி விளக்குக.
8. இசைக்கருவிகள் எத்தனை வகைப்படும் ? விளக்குக.
9. பண்டைக் காலத்து வழங்கிய தோற்கருவிகள் எத்தனை ? சான்றுக ஆறினைத் தருக.
10. முழவு எத்தனை வகைப்படும் ? வகைக்கொரு சான்று தருக.
11. ஐவகை நிலங்களுக்குரிய பறைகள் யாவை ?
12. பறை பற்றி அறியப்படும் செய்திகள் யாவை ?
13. துடி பற்றி அறியப்படுவன யாவை ?
14. முரசின் வகைகளையும் அவை பற்றிய விளக்கத்தையும் தருக.
15. முழவு, தண்ணுமை பற்றி அறியப்படுவன யாவை ?
16. குழல் பற்றி அறியப்படுவன யாவை ?

17. யாழ் எத்தனை வகைப்படும்? விளக்குக.

18. யாழ் வளர்ந்த விதத்தினை விபுலானந்தர் எவ்வாறு கூறுகிறார்?

19. யாழ் சிறப்புற்றுப் பின் மறைந்த விதத்தினை விபுலானந்தர் எவ்வாறு விளக்குகிறார்?

20. யாழின் உறுப்புக்களைப் பற்றிய விளக்கம் தருக.

21. விபுலானந்த அடிகளின் பெருந்தொண்டு யாது?

22. கஞ்சக் கருவி பற்றி விளக்கிச் சான்று தருக.

## பயிற்சி

1. விபுலானந்த அடிகளார் பற்றியும் அவர் இசைக் கலைக்குச் செய்த தொண்டுகள் பற்றியும் விரிவாய் எழுதுக.

2. அடியார்க்கு நல்லார் இசைத் தமிழுக்கு எவ்வாறு தொண்டு செய்துள்ளார் என்பதைச் சிலப்பதிகாரம் மூலம் தெரிந்து கொள்க.

3. குழல், யாழ் முதலிய இசைக் கருவிகளைச் செய்யும் முறையை விளக்கி எழுதுக.

4. ஏழிசைகள் யாவை? அவற்றின் தமிழ்ப் பெயர்களை அறிந்து கொள்க.

89963
சென்னை 600 008
TB
O31(Q)
N65

RTR/1290